# சென்னை மாகாணத்தில் பொது மக்கள் கருத்து வளர்ச்சி

THE HINDU

The Mail

தினத்தந்தி

தினமணி

INDIAN EXPRESS

D. சதாசிவன்

சென்னைப் பல்கலைக் கழகத்து ஒரு நூற்றாண்டின்
மேனிகழ் வெள்ளி விழா நினைவு வெளியீடு
1983

DOCTRINA VIM PROMOVET INSITAM

# சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்து வளர்ச்சி

**டாக்டர் து. சதாசிவன்**
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
பேராசிரியர் & துறைத்தலைவர்,
இதழியல் மற்றும் மக்கள் தொடர்புத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகத்து
ஒரு நூற்றாண்டின் மேனிகழ்
வெள்ளி விழா நினைவு வெளியீடு

1983

© சென்னைப் பல்கலைக் கழகம், 1983

விலை ரூ. 30-00

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்
சென்னை, 600 013.

ம. பொ. சிவஞானம்
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009
தேதி 11—7—1983

# அணிந்துரை

''சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்து வளர்ச்சி'' எனும் பெயருடைய இவ்வரிய நூலுக்கு அணிந்துரை தர வாய்ப்பு நேர்ந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இதன் ஆசிரியர் து. சதாசிவன், எம். ஏ.; எம். லிட்., பிஎச். டி., அவர்கள் மிகவும் அரும்பாடுபட்டு உழைத்து, எழுத்தாளர்களுக்கு அரிதில் கிடைக்க இயலாத நூல்களையும், அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்களையும் தேடிப்பிடித்து, தகவல்களைச் சேகரித்து இந் நூலை உருவாக்கியிருக்கின்றார்கள். இந்த உழைப்பிற்காக அவர் களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தமிழில் இப்படி ஒரு நூல் வெளிவருவது, ஆங்கில மொழியில் பெருமளவுக்குப் புலமை பெறாதவர்களும் சிறந்த உலகியல் அறிவைப் பெறுவதற்கு உதவி புரிவதாகும். இந்நூலாசிரியர், 'பொது மக்களுடைய கருத்து' என்பது எத்தகைய வலிமை வாய்ந்தது என் பதை நன்கு விளக்கியிருக்கின்றார்.

பாரதப் பெருநாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காலத் திலே பொது மக்களிடையே கருத்துப்புரட்சி ஆரம்பத்தில் ஏற்படாத நிலையினை எடுத்துக்காட்டி, பின்னர் பல்வேறு பொது அமைப்பு களும், இயக்கங்களும் தோன்றி தேவைப்படும் கருத்துப் புரட்சியை உருவாக்கி வளர்த்ததனைக் கூறியிருக்கின்றார்கள்.

அரசியல், சமூகம், சமயம், தொழில், பொருளாதாரம் ஆகிய பல் வேறு துறைகளில் பொதுமக்களுடைய கருத்து வெளிப்பட்ட முறை களையும், அவற்றுக்கு ஏற்பட்ட வெற்றி — தோல்விகளையும் தொகுத்தும் விரித்தும் கொடுத்துள்ளார்.

ஆசிரியர், பெரும்பாலும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும், அவர்கள் வெளியேறிய பின் சுதந்திர ஆட்சியிலும் ''பொதுமக்கள் கருத்து'' இயங்கி வந்த முறையைத்தான் விளக்கியிருக்கிறார் என்றா லும், தாம் கூறும் செய்திகளுக்குப் பழந்தமிழ் இலக்கியங்களி லிருந்தும் சான்றுகளைக் காட்டியுள்ளார். இதனால், இந்நூலைப் படிக்கின்றவர்கள் இலக்கிய ரீதியான சுவையையும் துய்க்க முடிகிறது. இலக்கியமும் ஒரு வகையில் வரலாறுதானே!

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், ''அரசு மதத்தில் தலையிடாது'' என்று பிரிட்டிஷ் மகாராணி

யாரின் உறுதிமொழி பிறந்தது. ஆனால், அது இந்து சமயத்திலே சீர்திருத்தங்கள் ஏற்படுத்துமாறு பொதுமக்கள் கோரியபோதெல்லாம் ஆளுவோரால் வேண்டுமென்றே தவறான முறையில் பயன்படுத்தப்பட்டது என்பதைக் தக்க சான்றுகளுடன் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

இந்து — இஸ்லாமிய மதங்களுக்குப் பாதுகாப்பாகப் பிரிட்டிஷ் ராணியார் மூலம் கிடைத்த உறுதி மொழியே, அந்த மதங்களில் சீர்திருத்தம் காண்பதற்கு எப்படி தடைக்கல்லாக அமைந்தது என்பதனையும் எடுத்துக் காட்டியுள்ளார். அந்தத் தடையைத் தகர்த்து, இந்து சமுதாயத்தில் சீர்திருத்தம் கண்ட ராம் மோகன்ராய், தயானந்தர் போன்ற பெரியார்களையும், அவர்கள் படைத்த பிரமசமாஜம், ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகளையும் விரிவான முறையில் ஆசிரியர் அறிமுகப்படுத்துகின்றார்.

இந்தியப் பெருநாட்டிலே, பொது மக்களிடையில் கருத்துப் புரட்சியை உருவாக்க பிரமசமாஜமும், ஆரியசமாஜமும், ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கமும் முயன்றன என்றாலும், இவ்வமைப்புகளுக்குப் பின் தோன்றிய, தேசிய காங்கிரஸ் மகாசபைதான், அனைத்து துறைகளோடும் தொடர்புடைய — முழு அளவிலான — கருத்துப் புரட்சியை ஏற்படுத்தியது என்பதை ஆசிரியர் கூறும் இடங்களில், இந்நூலை 'இந்திய விடுதலைப்போர்' வரலாறாகவும் படைத்திருக்கிறார். திலகர், வ. உ. சி., காந்தியார் போன்ற தேசியத் தலைவர்களை நல்ல முறையில் விமர்சிக்கிறார்.

வரலாற்றுச் செய்திகளை அறிந்துகொள்வதிலே மக்கள் — குறிப்பாக, உயர் கல்விக் கற்கும் மாணவர்கள் போதிய ஆர்வம் காட்டுகிறார்கள் என்று சொல்வதற்கு இல்லை. காரணம் ''வரலாறு'' என்பது பொது அறிவினை வளர்க்கும் ஒரு சாதனமாக இல்லாமல், பட்டப் படிப்பிற்குரிய ஒரு கட்டாயக் கல்வி முறையாக அமைந்துவிட்டது தான். இது, நாடு அடிமைப்பட்டிருந்த காலத்திலே இந்திய சமுதாயம் பெற்றுவிட்ட சாபம் என்று சொல்லலாம். அந்த சாபத்திலிருந்து நம் சமுதாயம் விடுதலைப் பெற இதுபோன்ற வரலாற்றுச் செய்திகளைக் கூறும் அறிவு நூல்கள் தமிழில் நிறைய தேவைப்படுகின்றன. ஒரு நாளைக்கு ஒரு நூல் பிறந்தாலும் நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன்.

இந்நூல் தமிழகத்திலுள்ள பொது நூலகங்களில் மட்டுமன்றி, தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய சரித்திர சாசனம் என்று சொல்லலாம்.

இந்நூலின் ஆசிரியரின் நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் பல்வேறு இடங்களில் அறிய முடிகிறது. வெறும் கல்விமானாக மட்டும் அல்லாமல், தேசபக்தி உடைய இந்தியர் என்ற நிலையில் இருந்தும் ஆசிரியர் டாக்டர் து. சதாசிவன் அவர்கள் இந்நூலை உருவாக்கியிருக்கிறார். அவருக்கு எனது பாராட்டுதலையும் வாழ்த்துதலையும் வழங்குகின்றேன்.

*ம. பொ. சிவஞானம்*

# நூன்முகம்

'சென்னை மாகாணத்தில் பொது மக்கள் கருத்து வளர்ச்சி' என்னும் இந்நூல் என்னுடைய ஆராய்ச்சி நூலான 'The growth of Public Opinion in the Madras Presidency' என்பதைத் தழுவி எழுதப் பட்டதாகும். 1974-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட ஆங்கில நூலில் இந்திய விடுதலைப் போராட்டத் தில் தமிழகத்தின் பங்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருப் பதை ஆராய்ச்சியாளர்களாலும் மற்றும் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டது. அத்தகைய நூல் தமிழில் இருந்தால் பெருமள வில் தமிழறிந்த மக்களுக்கு மிகச் சிறப்பான முறையில் தமிழகத்தின் பங்கை உயரச் செய்ய முடியும் என்ற எண்ணத்தைப் பலர் வலியுறுத் தியதின் விளைவே இந்நூல் ஆகும். இந்நூல் என்னுடைய ஆங்கில நூலைத் தழுவியிருந்தாலும்கூட, இது ஒரு மூல நூலாகும். ஏனென் றால் அந்நூலுக்குப் பிறகு கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு ஆங்கில நூலில் விடுபட்டுப்போன பல முக்கிய நிகழ்ச்சிகளையும் இந்நூலில் தொகுக்க முடிந்தது. ஆகவே இந்நூல் ஆங்கில நூலைவிட கால வட்டத்திலும், கருத்து வளர்ச்சியிலும் மாறுபட்டு இருப்பதனால் இதழியல், சமூகவியல், வரலாறு, மக்கள் தொடர்புத் துறை, ஆட்சி யியல் மற்றும் சமூக வளர்ச்சித் துறை போன்றவற்றுள் ஆராய்ச்சி செய்யும் பலருக்குப் பயன்படும் என்று கூறுவதில் பெருமைப்படு கின்றேன்.

இந்நூல் எழுதுவதற்குப் பல பெரியோர்கள் பலவிதங்களில் உதவிபுரிந்தனர். குறிப்பாக என்னுடைய மூல நூலை எழுதுவதற்கு காலஞ்சென்ற என்னுடையப் பேராசிரியர் திரு. டி. கே. வெங்கட்ட ராமன் (முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30) மற்றும் ஆவணக் காப்பக அதிகாரிகள் (Madras Archives), சென்னைப் பல்கலைக்கழகப் பொது நூலகர், கன்னிமரா பொது நூலகர் போன்றோர் எனக்கு அவ்வப்போது தக்க உதவிகள் செய்தனர்.

இத்தமிழ் நூலை எழுதுவதற்கு தூண்டுகோலாகவும் உறுதுணை யாகவும் இருந்து உதவிய 'கலைக்களஞ்சியம்' துணையாசிரியர் திரு. நடராஜன் அவர்களுக்கும், கைப்பிரதியை தட்டெழுத்தில் வடித்துத் தந்த திரு. த. வச்சிரவேலு அவர்களுக்கும், நான் எழுதியே தீரவேண்டும் என்று ஊக்கமளித்ததுடன் அட்டவணையும் (Index) தயாரித்தளித்த திரு. சிறுவை. மோகனசுந்தரம் (கலைக்களஞ்சிய

முன்னாள் அச்சக பொறுப்பாளர்), சென்னைப் பல்கலைக்கழக நூலகர் திரு. டாக்டர் பி. ஏ. மோகனராஜன் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரத்துறைத் தலைவர் டாக்டர் வே. சண்முகசுந்தரம் ஆகிய அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலிற்கு அணிந்துரை அளித்துப் பெருமையளித்த தமிழக சட்டமன்ற மேலவைத் தலைவர், டாக்டர் ம. பொ. சிவஞானம், (தலைவர், தமிழக சட்ட மன்ற மேலவை, தமிழ்நாடு) அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரித்தாகுக. இந்நூலைச் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டின் மேனிகழ் வெள்ளி விழாவில் வெளியிட்டுப் பெருமைபடுத்திய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். எம். சாந்தப்பா அவர்களுக்கும், பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்களுக்கும், பதிவாளர் திரு. சி.கே. குமாரசுவாமி அவர் களுக்கும் மற்றும் வெளியீட்டு குழுவிற்கும் என் நன்றி உரித்தாகுக. சிறப்பாக அச்சிட்டளித்த அவ்வை அச்சுக் கூடத்தாருக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை 600 005
ஜூலை 15, 1983

**து. சதாசிவன்**

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பொதுமக்கள் கருத்து என்றால் என்ன ? | 1 |
| பொதுமக்கள் கருத்தும் அரசியல் சீர்திருத்தமும் | 25 |
| மக்கள் மனக்குறைகளும் பொதுமக்கள் கருத்தும் | 98 |
| பொதுமக்கள் கருத்தும் பொருளியல் பிரச்சினைகளும் | 128 |
| பொதுமக்கள் கருத்தும் சமுதாயமும் | 154 |
| Select Bibiliography | 206 |
| சொல் அகராதி | 211 |

*அத்தியாயம் - 1*

# பொதுமக்கள் கருத்து என்றால் என்ன ?

இந்திய நாட்டின் வரலாற்றில் 1858 முதல் 1909 வரையிலான காலகட்டத்தைப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு சகாப்தமாகவே கருதலாம். ஏனெனில், இந்தக் காலத்தில்தான் இந்தியாவில் சுயாட்சி அரசு கோரி கிளர்ச்சி தொடங்கப்பெற்றது. தொன்று தொட்டே நம் நாட்டில் ''பொதுமக்கள் கருத்து'' (Public Opinion) என்னும் அரசியல் கோட்பாடு நிலவி வந்துள்ளதெனினும், அண்மைக்காலம் வரையில் ''பொதுமக்கள் கருத்தை'' வெளியிடுவதற்கு ஒழுங்கமைந்த முறை ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆங்கில ஆட்சி இந்தியாவில் நேரடியாக ஏற்படுத்தப்பட்ட 1858ஆம் ஆண்டில் தொடங்கி, 1909 ஆம் ஆண்டில் மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள் அடங்கிய சட்டம் இயற்றப்பட்ட காலத்திற்குள்தான் ஒரு குறிப்பிட்ட வடிவைப் பெற்றது எனத் துணிந்து கூறலாம். வளர்ச்சியைக் குறிப்பிடுமுன், 'பொதுமக்கள் கருத்து' என்ற சொற்றொடர் வெவ்வேறு ஆராய்ச்சியாளர்களால் எவ்வாறெல்லாம் பொருள் கொள்ளப்படுகிறது என்பதை சற்று கவனிப்போம்.

'பொதுமக்கள் கருத்து' என்னும் தொடரே அதன் பொருளையும் ஓரளவு உணர்த்தி நிற்கிறதாயினும், இத்தொடர் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்படாததாகவும், தெளிவற்றதாகவும், பலவகையான பொருள் விளக்கங்களுக்கு (Interpretations) உட்படுவதாகவும் அமைந்துள்ளது. எனவே

## *வால்ட்டர் லிப்மேன்*

பொதுமக்கள் கருத்து பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலருள், அண்மையில் காலஞ்சென்ற வால்ட்டர் லிப்மேன் (Walter Lippmann) சிறந்த முன்னோடியாவார். அவர் இத்தொடருக்குக் கூறிய பொருள் முதலில் கருதத்தக்கது: ''நமது புற உலகில் வாழும் பிற மனிதர்களின் நடைமுறைகளில் சில அம்சங்கள், நம்முடையவற்றினின்றும் மாறுபட்டனவாகவோ, நம்மைச் சார்ந்தனவாகவோ அல்லது சுவையுடையனவாகவோ இருக்குமெனின், அவற்றைப் பொதுவாகப் ''பொது விவகாரங்கள்'' (Public Affairs) எனலாம். இம்மனிதர்கள் தங்களைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும், மற்றும் தங்களுடைய தேவைகள், நோக்கங்கள், உறவுகள் குறித்தும்

எண்ணும் எண்ணங்கள் இவர்களுடைய "பொதுக் கருத்துகள்" எனப்படும். அந்த எண்ணங்களின் அடிப்படையில் மக்கள் குழுவினரின் நடவடிக்கைகளில் உண்டாகும் மாறுதல்கள் அல்லது குழுவினரின் சார்பாகத் தனிநபர்கள் மேற்கொள்ளும் செயல்கள் பெரிய எழுத்துகளில் 'பொதுக்கருத்து' எனப்படும்" என்று லிப்மேன் விளக்குகின்றார்.[1]

## *பிரைஸ் பிரபு*

இதைவிடச் சற்று விரிவானதொரு விளக்கத்தை பிரைஸ் பிரபு (Lord Bryce) கூறியுள்ளார். "சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய அல்லது சமூகத்தினரை கவரக்கூடிய விவகாரங்களைக் குறித்து மனிதர்கள் கொள்ளும் கருத்துகளின் ஒருங்கிணைந்த திரட்சியைக் குறிக்கவே பொது மக்கள் கருத்து என்னும் சொல் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, எல்லா வகையான முற்றிலும் முரண்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், மனப்போக்குகள், விருப்புவெறுப்புகள், விழைவுகள் ஆகிய அனைத்தின் ஒன்றுதிரண்ட தொகுப்பே பொதுமக்கள் கருத்து எனலாம். இப் பொதுமக்கள் கருத்து, முரணுக—தொடர்பற்றதாக—ஒழுங்கான வடிவம் ஏதுமற்றதாக — வாரந்தோறும் — ஏன் — நாள் தோறும் மாறிக்கொண்டே இருப்பதாக உள்ளது. ஆயினும் இத் தகைய வேறுபாடுகளுக்கும் குழப்பத்திற்குமிடையில், சமுதாயத்தில் அவ்வப்போது எழுகின்ற சிக்கல்களைக் குறித்துக் குடிமக்களின் பல் வேறு குழுவினரிடையே நிலவும் கருத்துகள், தெளிவான உருவான தொரு வடிவம் பெறுகின்ற வரையில், அச்சிக்கல்கள் இடையறுத வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுகின்றன. இவ்வகையானதொரு கருத்து அல்லது பல கருத்துகளின் தொகுதியானது, குடிமக்களுள் பெரும்பான்மையினரின் கருத்தாக உருவாகும்பொழுதுதான், ஒரு குறிப்பிட்ட கோட்பாடு அல்லது திட்டத்தை ஏற்கக்கூடிய அல்லது தள்ளக்கூடிய பொதுமக்கள் கருத்தாகக் கொள்ளப்பட்டு, வழிகாட்டு வதற்கு அல்லது ஆள்வதற்கு ஏற்றதொரு சக்தியாகக் கருதப்படு கிறது. அல்லது, ஒரு கருத்து அல்லது கோட்பாடு அல்லது ஒரு நடைமுறைத் திட்டத்திற்கு ஆதரவாகவோ எதிராகவோ நாடு முழு வதிலும் நிலவுகின்ற பல்வேறு உணர்ச்சியோட்டங்களின் பிரதிபலிப்

---

1. "Those features of the World outside which have to do with the behaviour of other human beings, in so far as that behaviour crosses ours, is dependent upon us, or it interesting to us, we call roughly public affairs. The pictures inside the heads of these human beings, the pictures themselves, of others, of their needs, purposes and relatinonship are their public opinions. Those pictures which are acted upon by groups of people, or by individuals acting in the name of groups, are Public Opinion with capital letters." (Walter Lippmann : *Public Opinion* : p. 29)

பாகவும் பொதுமக்கள் கருத்தை நாம் கருதலாம். சில கருத்தோட்டங்கள், அதிகத் திண்மைவாய்ந்த ஆதாரங்களைக் கொண்டு, பெருமளவு மக்களின் ஆதரவைப் பெற்று, பிற கருத்தோட்டங்களைக் காட்டிலும் மிகுதியான வன்மை வாய்ந்ததாகவும் விளங்கலாம். இவ்வாறு மிக உயர்ந்த வன்மையோடு விளங்கும் ஒரு கருத்தை, பெரும்பான்மை மக்களின் கருத்தாகக் கொண்டு, அதை எல்லாவற்றிலும் தலையாக பொதுமக்கள் கருத்து என அழைக்கின்ருேம்" என்கிருர் பிரைஸ் பிரபு.[1]

இந்த நீண்ட வாசகம், 'பொதுமக்கள் கருத்து' என்பதன் இன்றியமையாப் பண்புகளைத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

## இருவகைப் பொதுமக்கள் கருத்து

"பொதுமக்கள் கருத்தை" இருவகையாகப் பகுப்பர். அவை 'நிலைத்த பொதுமக்கள் கருத்து' (Static Public Opinion) 'இயக்கப் பொதுமக்கள் கருத்து' (Dynamic Public Opinion) என்பனவாகும். நிலைத்த பொதுமக்கள் கருத்து என்பது நெளிவுசுழிவுகளுக்கு இடங்

---

1. "The term-Public Opinion-is commonly used to denote the aggregate of tne view men hold regarding matters that affect or interest the community. Thus understood, it is a congeries of all sorts of discrepant notions, beliefs, fancies, prejudices, aspirations. It is confused, incoherent, amorphous, varying from day to day and week to week. But, in the midst of this diversity and confusion every question as it rised into importance is subjected to a process of consolidation and clarification, until there emerge and take definite shape certain views, each held and advocated in common bodies of citizens. It is to the power exerted by any such view, or set of views, when held by an apparent majority of citizens, that we refer when we talk of public opinion as approving or disapproving a certain doctrine or proposal, and thereby becoming a guiding or ruling power. Or we many think of the opinion of a whole nation as made up of different currents of sentiment, each embodying or supporting a view or a doctrine or a practical proposal. Some currents develop more strength than others, because they have behind them large numbers or more intensity of conviction; and when one is evidently the strongest, it begins to be called public opinion 'par excellence', being taken to embody the views supposed to be held by the bulk of the people." (Lord Bryce: *Modern Democracies*, volume II, chapter XV, p. 173)

கொடாத கட்டிறுக்கமான கருத்தாக இருக்கவேண்டிய அவசியமில்லை. சம்பிரதாயமான வழக்காறுகள், மரபுகள் ஆகியவற்றின் வடிவில் இவ்வகைக் கருத்து வெளிப்படுகிறது. மேலும், நாகரிகத்தோடு ஆடை அணிகளும் அல்லது நாடாளுமன்றச் சட்டங்களோடு வழக்காற்றுச் சட்டங்களும் உறவுடையனவாக இருப்பதால், நிலைத்த பொதுமக்கள் கருத்தானது ஒருவகையில் இயக்கப் பொதுமக்கள் கருத்துடன் ஒப்புமையுடையதாகவும் உள்ளது. தற்காலத்தில் பெருமளவில் வழங்கும் இயக்கப் பொதுமக்கள் கருத்து என்பது, பகுத்தறிவு சார்புடையதாக விளங்குகின்றது; தவிரவும், இவ்வகைக் கருத்தானது, ஒரு கொள்கையின்மீது நம்பிக்கையூட்டும்படி செய்யக் கூடிய பண்படுத்திய கலைகள், திட்டமிட்ட பிரசாரம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது; மேலும் திட்டவட்டமான வரலாற்று நிகழ்ச்சிகள் அல்லது சமகால நிகழ்ச்சிகள் இதற்கான பிரசாரத்திற்கும் கிளர்ச்சிகளுக்கும் சாதனங்களாகப் பயன்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலவரையறையில், நிலவும் சமூக, பொருளாதார உறவுகளின் அடிப்படையில், இவ்விருவகைப் பொதுமக்கள் கருத்துகளின் விஞ்சிய செல்வாக்கு நிருணயிக்கப்படுகிறது. பொதுவாகக் கூறின், பெரும்பான்மையான வேளாண்மைச் சமுதாயங்களிலும், பண்டமாற்றுப் பொருளியல் அடிப்படையில் அமைந்த சமூகங்களிலும் நிலைத்த பொதுமக்கள் கருத்து காணப்படுகின்றது. அன்றாட வாழ்வின் நிமித்தம் நாள்தோறும் கூடிப் பேசிப் பழகிக் கருத்துகளைப் பரிமாற்றிக்கொள்ளும் சாமான்ய மக்கள் வாழ்கின்ற நகரங்களின் சந்தடிமிகுந்த தெருக்களிலும், சதுக்கங்களிலும் இயக்கப் பொதுமக்கள் கருத்து ஓங்கி வளர்கின்றது.

## டேவிசன் எடுத்துக்காட்டு

நவநாகரிகச் சமுதாயத்தில் இயக்கப் பொதுமக்கள் கருத்து வளரும் முறையை டபிள்யூ. பிலிப்ஸ் டேவிசன் (W. Phillips Davison) என்பவர் எடுத்துக்காட்டுடன் விளக்கிக் காட்டியுள்ளார். அவர் ஒரு நகரைத் தம் கற்பனையில் உருவாக்கிக் கொண்டார். அந்நகரம் வேளாண்மைத் தொழில் முக்கியமாக நடைபெறும் வட்டாரத்தில் அமைந்துள்ளது. ஒரு பரந்த பகுதிக்கு அந்நகர் விற்பனைக் களமாகப் (Market Place) பயன்படுகிறது. அங்கு சிறு வாணிகர்களும், அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களும் ஓரளவு பெருந்தொகையினராக வாழ்கிறார்கள். அங்குச் சில சிறு தொழிற்சாலைகளும் உள்ளன; ஓர் இளங்கல்லூரியும் (Junior College) இருக்கிறது. அந்த நகரின் நிருவாகத்தை ஒரு நகரத் தந்தை (Mayor) கவனிக்கிறார். அண்மையில் நடந்த தேர்தலில், விற்பனை வரி விதிக்கும் திட்டம் ஒன்று முக்கியமான தேர்தல் பிரச்சினையாக இருந்தது. இந்த வரி விதிப்புத் திட்டத்தை இப்பொழுதுள்ள மேயர் எதிர்த்தார். அதனால், பெரும்பான்மையான ஆதரவுடன் தேர்தலில் வெற்றிபெற்று நகரத் தந்தை பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பொழுது, விற்பனை வரி குறித்து அவ்வளவாகச் சர்ச்சை நடைபெறவில்லை.

ஆனால், இந்நகரின் அரசியல் வாழ்வில், ஒரு நாள் ஒரு புதிய அம்சம் புகுந்தது. நகரின் பெரியகடை வீதியில், உலர்பொருள் பண்டகசாலை ஒன்றை நடத்திவரும் ஜோன்ஸ் என்பவருக்கு நகராட்சியிடமிருந்து ஓர் அறிக்கை வருகிறது. அவர் குடியிருக்கும் வீட்டின் பெறுமானம் மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் காணப்பட்டது. முந்திய ஆண்டுகளில் அவர் செலுத்திய வரித்தொகையில் ஏறத்தாழ பாதி அளவு சொத்துவரியாக அவர் மீண்டும் செலுத்தவேண்டுமென அவ்வறிக்கையில் உத்தர விடப்பட்டிருந்தது. இதற்கு மறுப்புத் தெரிவிப்பதற்காக, அவர் உடனடியாக மறுமதிப்பீட்டு அலுவலகத்திற்கு விரைகின்றார். ஆனால், அங்கு அவருக்கு மனநிறைவளிக்கும் வகையில் பதில் கிடைக்க வில்லை. அவர் தன்னுடைய மனக் குறையைத் தன் மனைவியிடமும், மைத்துனனிடமும் உரத்த குரலில் தெரிவிக்கிறார்; தன் உறவினர் களிடமும் பேசுகிறார். தெருவில் காணும் தன் நண்பர்களிடமும் கூறுகிறார். தன்னுடைய சொத்து பற்றிய மதிப்பீடு, அக்கம்பக்கத் திலுள்ள அதேபோன்ற வேறு சொத்துக்களின் மதிப்பீட்டுக்கு ஒத்த தாக இல்லை என்பது அவருடைய புகார்.

ஜோன்ஸ் அந்த நகரில் செல்வாக்குமிக்கவர். அவருக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள். எதிலும் நியாயமாக நடந்துகொள்பவர் என்று அவர் பெயர்பெற்றிருந்தார். எதற்கெடுத்தாலும் புகார் கூறிக் கொண்டிருப்பதோ, அவசரப்பட்டு எதைப்பற்றியும் குற்றங்கூறு வதோ அவருடைய இயல்பல்ல என்பதை அவரை அறிந்தவர்கள் நன்கு அறிந்திருந்தனர். நகராட்சியின் நடவடிக்கைக்கு எதிராகத் தம் மனக்குறையை அவர் மற்றவர்களுடன் விவாதிக்கும்பொழுது, அவர்களுள் சிலருக்குத் தங்களுடைய சொந்த மனக்குறைகள் நினைவுக்கு வந்தன. நகராட்சி அலுவலர்கள் தன்னிடம் அலட்சிய மாக நடந்துகொண்டதாக ஒருவர் கூறினர். குப்பைகூளங்களை அகற்றுவதில் தனக்கு ஏற்பட்ட தொல்லைகளை இன்னொருவர் தெரி வித்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த குடும்பத் தகராறு காரணமாக நகரத் தந்தை மீது தனக்கு இருந்துவந்த வெறுப்பை மற்றொருவர் வெளிப்படுத்தினர். இந்த விவாதங்களின்போது ஏற்பட்ட மனப்போராட்டங்களின் விளைவாக, 'நகராட்சி நிருவாகம் ஊழல் நிறைந்தது' என்ற பொதுவான கருத்து உருவாகியது. விரை விலேயே, ஜோன்ஸுடன் தொடர்புடைய வட்டாரங்களில், "நகராட்சி நிருவாகத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியம்" என்ற கருத்து வளரலாயிற்று. இவ்வாறு அரசியல் பிரச்சினை ஒன்று தோன்றியது.[1]

## *அடிப்படை எது?*

ஒவ்வொருவருக்கும் ஏதேனும் மனக்குறைகள் ஏற்படுவது இயல்பு; சமுதாயத்தை மேம்படுத்துவது குறித்து ஒவ்வொருவருக்கும்

1. Phillips Davison : The Public Opinion Process — *The American Review*, January, 1861, PP. S. 7-8

ஏதாவது கருத்துகள் தோன்றுவதும் இயற்கையே. ஆனால், இக் குறைகள் அல்லது கருத்துகள் பெரும்பாலும் பேச்சுவாக்கில் முணு முணுக்கப்படுவதுடன் அல்லது போகிற போக்கில் பேசப்படுவ துடன் மறைந்து போய்விடுகின்றன. "ஒரு மனக்குறையை ஒருவர், இரண்டாவது நபரிடம் கூறி, அதை அவர் மற்றவர்களிடம் தெரிவிக் கும்போதுதான், அந்த மனக்குறை ஒரு பிரச்சினையாக வேர்க்கொள் கிறது. இந்தச் சங்கிலித் தொடர்பான கருத்துப் பரவல் போதிய அளவு நடைபெறுவதற்கு முன்னர் ஆற்றல்மிக்க பிரச்சினைகளுள் பெரும்பாலானவை மங்கி மறைந்துவிடுகின்றன; எனினும், அப்படி மறையாமல் உயிர்வாழும் பிரச்சினைகள், பொதுமக்கள் கருத்து களுக்கு அடித்தளமாக அமைகின்றன.[1]

பொதுமக்களின் கருத்தரங்கில் வெகுவாக விவாதிக்கப்படும் ஒரு சிக்கல், சில சமயம் தொடக்கநிலையில் வரலாற்றாசிரியர்கள் அல்லது பத்திரிகையாளர்களின் கவனத்தைக் கவரத் தவறிவிடுவதுண்டு. அதனால், அச் சிக்கல் பற்றிய பொதுமக்கள் கருத்து வளர்ந்து ஓர் உருவம் பெறுமலே மங்கி மறைந்துவிடக்கூடும். பெரும்பாலான சிக்கல்கள், பொதுமக்கள் கருத்தாக வளர்ச்சிபெற்று திட்டவட்ட மான உருவில் வெளிப்படும்பொழுதுதான், அச்சிக்கல்கள்மீது சாதாரணமாகப் பொதுமக்கள் கருத்து ஆய்வாளர்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். முக்கியமான கருத்துகள் பெரும்பாலும் வெவ் வேறிடங்களில் வெவ்வேறு சமயங்களில் தனித்தனியே தோன்று கின்றன. அக்கருத்துகளின் வளர்ச்சிபற்றித் துல்லியமாகக் கணித் தறிய பொதுமக்கள் கருத்து ஆய்வாளர்களால் இயலாமற் போவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணம் எனலாம். ஒரு கருத்து தோன்றுவதற்கு அடிப்படை எதுவாக இருப்பினும், அக் கருத்து பலரிடையே பரவி, நிலைபெற வேண்டுமெனில், இக் கருத்தினை மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதனைப் பலரிடம் கூறிப் பரப்புவதற் கான விருப்பார்வமுடைய ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமான மக்கள் குழுக்கள் இன்றியமையாத தேவை என்பது தெள்ளத்தெளி வான உண்மையாகும்.

### *வரலாறு*

இந்நிலையில், 'பொதுமக்கள் கருத்து' என்னும் சொல் தோன்றி வளர்ந்த வரலாற்றை அறிந்துகொள்வது நலமாக இருக்கும். இந்தச்

---

1. "An issue begins to take root only when it is communicated from one person to a second, who then carries it further in his own conversation. Most potential issues disappear from attention before this human chain grows to an appreciable length; but the few that survive, form the basis for public opinions." (*Ibid* : Page 7)

சொல், 18ஆம் நூற்ருண்டின் இறுதியில்தான் புனையப்பெற்றது.[1] எனினும், இதற்கு முன்னரே, இச்சொல்லுக்கு இணையான வேறு பல சொற்கள் வழங்கிவந்தன. ''Ossa, Pheme or nomos என்னும் கிரேக்கச் சொற்கள் பொதுமக்கள் கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. ''fama, fama popularis, rumore and Vox populi'' என்னும் சொற்களை உரோமானியர் பயன்படுத்தி வந்தனர். நவீன காலத்தின் தொடக்கத்தில் ''மக்கள் குரலின்'' (Publica Voce) ஆற்றலை ஐரோப்பியப் புரட்சியாளர் மிகுதியாகப் பயன்படுத்தினர். 18ஆம் நூற்ருண்டுப் புரட்சியாளர்கள் உருவாக்கிய கருத்தைக் குறிப்பிடுவதற்கு ஷேக்ஸ்பியரின் நான்காம் ஹென்ரி மன்னன் கையாண்ட "கருத்து" (Opinion) என்ற சொல்லை எழுத்தெச்சக்குறி (Apostrophe) இட்டு மாக்கியவல்லி (Machiavelli) கையாண்டார்.[2]

பொதுமக்கள் கருத்தின் தன்மையினையும் செயல் முறையினையும் இக்காலப் பொருளில் விளக்குவதற்கு, இங்கிலாந்தில் 17ஆம் நூற்ருண்டில் உள்நாட்டுப் போர் நடந்தபோது முதல் பயற்சி மேற்கொள்ளப்பட்டது. இக் கொள்கை இங்கிலாந்திலிருந்து, 18ஆம் நூற்ருண்டில் பிரான்சுக்குப் பரவியது. பிரெஞ்சுப் புரட்சி தோன்றுவதற்கு முன்னர், 'பொது மக்கள் கருத்து' (Opinion Publique) என்னும் சொல் செல்வாக்குப் பெறலாயிற்று. பிரான்சு நாடு முழுவதிலும் மட்டுமின்றி, மேலைநாடுகள் அனைத்திலும் இவ்விரு சொற்களும் பொன்னேபோற் போற்றிப் பாதுகாக்கப்படும் அருஞ்சொற்களாகப் புகழ்பெற்றுவிட்டன.[3]

## இந்தியாவின் தனிநிலை

இத்தகையதொரு வளர்ச்சிப் போக்கு இந்தியாவில் இன்று நடைபெறுவதாக நாம் கூற இயலுமா? இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்தப் பொதுக்கோட்பாடு முழுமையாகப் பொருந்தும் எனக் கூற முடியாது. இந்தியா முழுவதிலும் சரி அல்லது இந்தியாவின் ஏதேனும் ஒரு பகுதியிலும் சரி, ''பொதுமக்கள் கருத்து'' வளர்ச்சியில், இந்தியாவுக்கே உரிய தனிவகை அரசியல் நிலைமை, மிகமுக்கியமானதொரு அம்சமாக விளங்குவதை நாம் மறந்துவிட முடியாது. இந்திய மண்ணுக்கும் சமுதாயத்திற்கும் முற்றிலும் புறம்பான அந்நிய ஆட்சியாளர்களின்கீழ் இந்நாடு அடிமையாகக் கிடந்தது. இந்த உண்மை, பொதுமக்கள் கருத்தின் தன்மையில் பெருஞ்செல்வாக்குப் பெற்றமையினைக் காண்கிறோம். பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் பாரம்பரிய வழக்காறுகளும், மரபுகளும் பெரும்பங்கு கொண்டன; முக்கியமாக, தங்கள் சமயத்தைப் பரப்புவதற்கென இந்தியாவுக்கு வந்த அயல்நாட்டுச் சமயப் பிரசாரகர்கள், இந்திய

1. Edwin R. A. Seligman, Ed. — *Encyclopaedia of the Social Sciences* — volume XI and XII — Page 671.
2. *Ibid.*
3. *Ibid.*

மக்களிடையே பன்னெடுங்காலமாக வாழையடி வாழையென நிலவி வந்த நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் சீர் குலைக்க முயன்றபோது, பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் இப் பண்டை மரபுகளும், வழக்குகளும் கொண்ட பங்கு மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த முக்கியமான அம்சம் வேறெந்த மேலைநாடு களிலும் காணப்படாத தனி அம்சமாகும். இந்தியாவில் பொது மக்கள் கருத்து வளர்ச்சி பற்றிக் கூறும் பொழுது இந்த அடிப்படை யான வேறுபாட்டை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

## வெளியிடும் வழிகள்

பல்வேறு வழிகளின் மூலம் ''பொதுமக்கள் கருத்தை'' வெளிப் படுத்தலாம். அவ்வழிகளை 'ஒழுங்கமைத்த வழிகள்' (Organised channels) என்றும், 'ஒழுங்கமைப்பில்லாத வழிகள்' (Unorganised channels) என்றும் இருவகையாகப் பகுக்கலாம். ஒழுங்கமைத்த வழி களிலும், 'அரசியலமைப்புக்குகந்த வழிகள்' (Constitutional channels) என்றும், 'அரசியலமைப்புக்கு முரணான வழிகள்' (Unconstitutional channels) என்றும் இரு உட்பிரிவுகள் உண்டு. ஒழுங்கமைத்த வழி களின் போக்கு, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டனவாக இருக்கு மெனில், அவ்வாறு ''பொதுமக்கள் கருத்தை'' வெளிப்படுத்துவதை அரசியலமைப்புக்குகந்த வழிகள் என்பர். சிலசமயங்களில் சட்டத் திற்குப் புறம்பான வழிகளிலும், சட்டத்திற்கு நேர்எதிரான வழிகளி லும் பொதுமக்கள் கருத்து வெளிப்படுத்தப்படலாம். இவ்வாறு பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவது, அரசியல் அமைப்புக் குகந்த', 'அரசியலமைப்புக்கு முரணான' என்னும் சொற்கள், எவ் விதமான உள்நோக்கத்துடனோ, ஒன்றுக்கு அல்லது மற்றொன்றுக் குச் சாதகமான அல்லது பாதகமான எண்ணத்தை உண்டுபண் ணும் நோக்கத்துடனோ இங்கு பயன் படுத்தப்படவில்லை. சொல் லுக்குச் சொல் சரியான நேர்ப்பொருளை உணர்த்தும் முறையிலேயே இச்சொற்கள் இங்கு கையாளப்படுகின்றனவேயன்றி அந்நிலைகளை வெட்டியோ ஒட்டியோ இங்குக் குறிப்பிடவில்லை என்பதைத் தெளி வாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துததற்குரிய அரசியல மைப்புக்குகந்த வழிமுறைகளுள், அதிகாரிகளிடம் நேர்முறையீடு (Personal Representation) செய்தல், பொதுக்கூட்டங்கள், ஊர் வலங்கள் நடத்துதல், சங்கங்கள் அமைத்தல், பத்திரிகைகள், நூல்கள், துண்டுவெளியீடுகள் ஆகியவற்றின் மூலம் எழுதி வெளி யிடுதல், மனுக்கள் அளித்தல், சட்ட மன்றங்களிலும் உள்ளாட்சி மன்றங்களிலும் கோரிக்கைகளை எழுப்புதல், தொழிற்சங்கங்கள் மூலம் உரிமைகளுக்குப் போராடுதல் போன்றவை தலையாயவை எனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இந்தியாவில் பல குறுநில மன்னர்கள் ஆட்சி

செலுத்தி வந்தனர். தற்காலக் குடியரசுக்குப் பக்குவப்படாத நிலையில் இந்திய அரசியல் இருந்து வந்தது. அப்பொழுது எல்லாம், பொதுமக்கள் துணிவும் ஆற்றலும் வாய்ந்த ஒருவர், ஒரு குறிப்பிட்ட சிக்கலின் மீதான பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார். இத்தகையவர்களின், குறிப்பாகச் சமயத்தலைவர்கள், புலவர்கள் ஆகியோரின் நேர்முறையீடு பழங் காலத்தில் மிகவும் பயனுடையதாக விளங்கியது. எடுத்துக்காட்டாக, சங்கப் புலவர் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடலைக் கூறலாம். பிசிராந்தையார் பாண்டிய நாட்டினர்; உரையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட கோப்பெருஞ் சோழருக்குச் சிறந்த ஆருயிர் நண்பர்; பாண்டிய மன்னன் அறிவுடைநம்பியின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். மக்களிடமிருந்து வரி வசூலிப்பதில் அறிவுடைநம்பி கடுமையாக நடந்துகொண்டான். வரிச்சுமை தாங்காது மக்கள் அல்லலுற்றனர். மக்களின் அவலத்தை மன்னனிடம் எடுத்துக்கூற அரசு அதிகாரிகளும் அஞ்சினர். அரசனிட்ட ஆணையின்படியே அதிகாரிகளும் நடந்துகொண்டனர். வரிக் கொடுமையால் மக்கள் படும் துயரை அரசனுக்கு அறிவுறுத்த துணிவோடு முன்வந்தார் புலவர் பிசிராந்தையார். அறிவுடைநம்பியிடம் சென்று, அவன் மனம் கொள்ளும்வகையில் மிகவும் நயமாக, மக்களின் துன்பத்தைக் கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தார் புலவர்:

> "காய்ந்த நெல்லை அறுத்துக் கவளங் கவளமாகக் கொண்டால், ஒரு மாவிற்குக் குறைந்த நிலத்தின் கதிரும் பல நாட்களுக்கு ஆகும்; நூறு செய் நிலமாயினும், யானை தனியே புகுந்து உண்ணுமாயின், அதன் வாயில் புகும் நெல்லினும், காலினால் மிகுதியான அளவு நெல் நாசமாகும். அதுபோன்றே, அறிவுடைய அரசன் அறை (வரி) கொள்ளும் நெறியை அறிந்து, அந்நெறியின்படி இறை கொள்வானாயின், அவன் நாடு கோடிப் பொருளினை ஈட்டிக் கொடுத்துத் தானும் மிகவும் தழைக்கும்; அவ்வாறின்றி, வேந்தன், அறிவால் மெல்லியனாகி, அவன் விரும்புவதனையேத் தாமும் கூறும் கல்நெஞ்சங்கொண்ட உடன் கூட்டத்தாரோடு கூடி அன்புக்கெடக் கொள்ளும் பொருள் தொகுதியை விரும்புவானாயின், அந்த யானை புக்க நிலம்போலத் தானும் உண்ணப்பெறான்; உலகமும் கெடும்."[1]

---

1. "காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகிவைகலும்

இவ்வாறு, அரசன் மனம் புண்படாவாறும், அதே தருணத்தில் அவன் மனந்திருந்தும் வகையிலும் தவற்றைச் சுட்டிக் காட்டிப் பிசிராந்தையார் கூறிய அறிவுரையால் பாண்டியன் அறிவுடைநம்பி மனமாற்றமடைந்து, மக்களின் துயரைக் களைந்தான். புலவர்களின் இத்தகைய அறிவுரைகளைச் 'செவியறிவுறூ' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

### சங்கம்

இக்காலத்தில் (1858—1909) அரசியல்-சமூகக் கிளர்ச்சி முறைகள் பழக்கமாகிவிட்டன. இன்று ஒரேமாதிரியான கருத்தை உடையவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதற்கான நிருவாகிகளையும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இச்சங்கத்தின் கூட்டங்களில், நடப்புச் சிக்கல்கள் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இம் முடிவுகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பெற்று உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன; அல்லது அந்த முடிவுகள் மனுக்களாகத் தயாரிக்கப்பட்டு அதிகாரிகளுக்கு அளிக்கப்படுகின்றன. சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர் தூது சென்று உயர் அதிகாரிகளிடம் சங்கத்தின் கருத்துக்களைத் தெரிவிப்பதும் உண்டு.

### பொதுக்கூட்டம்

பொதுக்கூட்டம் என்பது பொதுச்சங்கத்தைப் போன்று, ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றல்ல. ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்துத் தங்களுடைய கருத்துகளை அரசினரின் கவனத்திற்கும், சமூகத்தினரின் கவனத்திற்கும் கொண்டு வர வேண்டியது அவசியம் எனச்சிலர் கருதுவார்களாயின், அவர்கள் பொதுக்கூட்டத்தைக் கூட்டுவார்கள். இத்தகைய பொதுக்கூட்டங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதும், தூதுக் குழுக்களை அனுப்புவதும் உண்டு.

### ஊர்வலம்

ஒரு குறிப்பிட்ட குழுவின் அல்லது கட்சியின் தலைவர், தம் குழுவின் கருத்துகளை விளம்பரப்படுத்தி, மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு விரும்பினால், அவர் ஊர்வலம் நடத்துகிறார். இந்த ஊர்வலத்தில் அத்தலைவருடைய ஆதரவாளர்கள் கலந்துகொண்டு, தங்களுடைய கோரிக்கைகளையும் கருத்துகளையும் முழக்கமிட்டுக் கொண்டு செல்வார்கள். ஐரோப்பாவில், இத்தாலி நாட்டுச் சர்வாதிகாரி முசோலினியின் பாசிசக் கட்சியினரும், ஜெர்மனி

---

வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணு னுலகமுங் கெடுமே" (புறம்: 184)

நாட்டுச் சர்வாதிகாரி இட்லரின் நாஜிக்கட்சியினரும் இந்த முறையை மிகுதியாகக் கையாண்டனர்.

## செய்தி இதழ்கள்

பொதுமக்கள் கருத்து வளர்ச்சி வரலாற்றில் செய்தி இதழ்களின் (News papers) தோற்றம் மிக அண்மையில்தான் ஏற்பட்டது. எனினும், பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில், செய்தி இதழ்கள் தலையாய முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட செய்தி இதழ், ஒரு குறிப்பிட்ட தனிநபருக்கு அல்லது குழுவினருக்குச் சொந்தமானதாக இருக்கலாம்; அந்தத் தனிநபர் அல்லது குழுவினரின் குறிப்பிட்ட கருத்துகளை அல்லது கொள்கைகளை அந்த இதழ் வெளியிட்டுக் கொண்டு வரலாம். ஆயினும், நாளடைவில், பொதுமக்களின் பொதுவான எண்ணப் போக்கிற்கு முரணைக் கருத்துகளை வெளியிடும் எந்த ஒரு செய்தி இதழும் நீடித்து நிலைக்க இயலாதெனலாம். எடுத்துக்காட்டாக, நம் நாட்டில் திருமதி அன்னிபெசன்ட் அம்மையார் நடத்திவந்த 'நியூ இந்தியா' (New India) என்னும் நாளிதழைக் குறிப்பிடலாம். இந்திய சுயாட்சி கிளர்ச்சியை (Home Rule Agitation) அன்னிபெசன்ட் தலைமைதாங்கி நடத்தி வந்தபோது, இந்நாளிதழ் பெருஞ்செல்வாக்குடன் விளங்கியது, ஆனால், பொதுமக்களின் கருத்துக்கு மாறான வகையில் அன்னிபெசன்ட்டின் கருத்துகள் மாறியதும், அவருடைய நாளிதழும் செல்வாக்கிழந்து, மறைந்துபோயிற்று என்று குறிப்பிடுதல் மிகவும் அவசியம். ஏனெனில், அன்னிபெசன்ட்டின் புகழ் மிகக் குறுகிய காலத்தில் உச்ச நிலையை எட்டிவிட்டது. ஆனால், மகாத்மா காந்தியின் ''ஒத்துழையாமை இயக்கத்தை'' அவர் ஆதரிக்காததுடன், அவ்வியக்கத்தினை கண்டித்தும், நகையாடியும் பேசியும், எழுதியும் வந்தார். பொது மக்கள்கருத்து மகாத்மா காந்திக்குப் பேராதரவு நல்குவதாக இருந்தமையால், அன்னி பெசன்ட்டின் எதிர்ப்பு எடுபடவில்லை. ஆகவே, மிக விரைவில் அன்னிபெசன்ட்டின் 'சுயாட்சி இயக்கம்' ஆதரவு இழந்து முடிவில் மடிந்துவிட்டது. இவ்வுதாரணம் ''பொதுமக்கள் கருத்தின்'' முக்கியத்துவத்தையும் பலத்தையும் சிறப்பாகச் சித்தரிக்கின்றதெனலாம்.

## நூல்களின் பங்கு

பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில், நூல்கள், துண்டுவெளியீடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட இயலாது. பிரான்ஸ் நாட்டில் ரூசோவின் 'சமூக ஒப்பந்தம்' (Social Contract) என்ற நூல், மக்களிடையே புரட்சிக் கருத்துகளை விதைத்திருக்காவிடின், உலகையே உலுக்கிய மாபெரும் 'பிரெஞ்சுப் புரட்சி' (French Revolution) தோன்றியிருக்குமா என்பது ஐயமே. இங்கிலாந்தில் 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பெரும் அரசியல் மாற்றங்களுக்கு அடிசன் (Addison), ஸ்டீல் (Steel), ஸ்விஃப்ட் (Swift) போன்ற எழுத்தாளர்கள் எழுதி வெளியிட்ட துண்டுவெளியீடுகளே காரணம் எனில் மிகையன்று.

### சட்டமன்றங்கள்

பொதுமக்கள் கருத்தை வெளியிடுவதில் சட்டமன்றங்களும், உள்ளாட்சி மன்றங்களும் பெறும் பங்கினை நாம் நன்கறிவோம். தொழிலாளர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட சிக்கல் பற்றிய தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தலாம். இன்று பெரும்பாலான நாடுகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குச் சட்டபூர்வமாக உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

### சட்டவிரோத வழிகள்

அரசியல் கொலைகள் போன்ற பயங்கர நடவடிக்கைகள், வதந்திகள் உட்பட இரகசியச் செய்திகளை அனுப்புதல், நாசவேலை, சத்தியாக்கிரகம் முதலியவற்றைப் பொதுமக்கள் கருத்தை வெளியிடுவதற்கான 'அரசியலமைப்புக்கு முரணான வழி'களாகக் கருதலாம். கூட்டத்தினரின் வன்முறைச் செயல்களையும் (Mob-Violence) இவ்வகையில் சேர்க்கலாம். அயர்லாந்து போன்ற நாடுகளிலும், சார் (Tsar) ஆட்சிக் காலத்தில் ரஷ்யாவிலும் பொது மக்கள் கருத்தை வெளியிடுவதற்குரிய அரசியலமைப்புக்குகந்த வழிகள் ஏதும் இல்லாமையால், அரசியல் படுகொலை (Political Assassination) போன்ற பயங்கர முறைகள், துப்பாக்கிக் குண்டுகளில் பன்றி, பசு ஆகியவற்றின் கொழுப்பு தடவப்பட்டதாக இந்தியப் படைவீரர்களிடையிலும், பொதுமக்களிடத்திலும் வதந்தி பரப்பப்பட்டது. 1857 ஆம் ஆண்டில் 'இந்தியப் படையினர் பெருங்கிளர்ச்சி' (Indian Mutiny of 1857) ஏற்பட்டதற்கு இந்த வதந்தி ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. 1857ஆம் ஆண்டுப் படையின் கிளர்ச்சி மூள்வதற்கு முன்னர், தொன்றுதொட்டு இந்தியாவின் புனிதச் சின்னமாகக் கருதப்படும் தாமரைப்பூவை, இந்தியப் படைவீரர்கள் தங்களுக்குள் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு அனுப்பிக்கொண்டார்கள். அந்தப் பூவைக் கடைசியாகப் பெறும் வீரர், அதனை அண்மையிலுள்ள படையணிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். அங்குள்ள வீரர்களிடையே அந்தப் பூ மீண்டும் சுற்றுக்கு விடப்படும். இவ்விதம் பூவைப் பெற்றுக்கொண்டு அதைப் பரப்புவதற்கு உதவியதன் மூலம் புரட்சியில் கலந்துகொள்ளத் தம் சம்மதத்தைத் தெரியப்படுத்தினர். இவ்வாறு, படைவீரர்களைப் புரட்சியில் ஈடுபடுவதற்குத் தூண்டும் சின்னமாகத் தாமரைப்பூ பயன்படுத்தப்பட்டது. இதே போன்று, பொதுமக்களிடம் புரட்சி பற்றிய செய்தியைப் பரப்புதற்குச் 'சப்பாத்தி' பயன்படுத்தப்பட்டது. ஒரு கிராமத்தின் நாட்டாண்மைக்காரர் (Chaukidar), அண்டைக்கிராமத்தின் நாட்டாண்மைக்காரரிடம் சப்பாத்தியைக் கொண்டுபோய்க் கொடுப்பார். அவர் தன் கிராமமக்களிடையே அதைச் சுற்றுக்கு அனுப்புவார். பிறகு, அந்தக் கிராமத்திலிருந்து, அடுத்த கிராமத்திற்கு அந்தச் "சப்பாத்தி" கொண்டு செல்லப்படும். புரட்சிச் செய்தியைப் பரப்புவதற்குரிய சின்னமாகத் தாமரைப்பூவைத் தேர்ந்தெடுத்

தமைக்கான காரணத்தை நாம் ஊகிக்க முடிகிறது. ஆனால், சப்பாத்தியைத் தேர்ந்தெடுத்தமைக்கான மர்மம் இன்னும் துலங்கவில்லை. வெள்ளையர் ஆட்சியை ஒழிக்கப் புரட்சி செய்யாவிட்டால், மக்கள் உண்ணும் உணவுக்கே ஆபத்து ஏற்படும் என்பதை உணர்த்துவதற்காகச் சப்பாத்தியைத் தேர்ந்தெடுத்திருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுகின்றது.

## அறப்போர் முறை

ஆட்சியர்களை எதிர்ப்பதற்கான அறநெறிக்குட்பட்ட ஒரு சாதனமாகப் பண்டைக் காலத்திலேயே இந்தியாவில் 'சத்தியாக்கிரகம்' பயன்பட்டுள்ளது. இரணியனை எதிர்த்து அவன் மகன் பிரகலாதன் நடத்திய அறப்போர் பற்றிப் புராணங்களில் படிக்கிறோம். ஆனால், தீயசக்திகளை எதிர்ப்பதற்கென, ஒழுங்கமைதிக்குட்பட்ட வன்முறையற்ற 'அறப்போர்' முறையை உலக வரலாற்றில் முதன்முதல் கையாண்டவர் காந்தியடிகளேயாவார். இந்த அறப்போரைச் 'சத்தியாக்கிரகம்' என்று காந்தியடிகள் அழைத்தார். "ஒரு சட்டம் அநீதியானது என ஒருவர் கருதினால், அச்சட்டத்தை அவர் மீறுகிறார். அவ்வாறு சட்டத்தை மீறுவதற்காக என்ன தண்டனை கிடைத்தாலும் அதனை இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருக்கிறார். தனக்குத் தண்டனை வழங்குபவர்கள் மீது அவர் எவ்வித விரோதமும் கொள்வதில்லை. தன்னுடைய கொள்கைக்காக எத்தகைய இன்னல்களையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதாக உணர்த்துவதன் மூலம், தண்டிக்க முனைபவர்களின் மனத்தை மாற்றி, அவர்களைத் தன்பக்கம் பரிவுகொள்ளும்படி செய்கிறார். எனவே, சொல், செயல், சிந்தனை அனைத்திலும் வன்முறையைச் சத்தியாக்கிரகி தவிர்க்கிறார்." இதுவே, காந்தியடிகள் கையாண்ட சத்தியாக்கிரகத்தின் அடிப்படைத் தத்துவம்.

பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கென மேற்குறித்த பல்வேறு வழிமுறைகளிடையே தெளிவான திட்டவட்டமான வேறுபாடுகளை வரையறுத்துக் கூறுவதென்பது இயலாத காரியம். ஒழுங்கமைத்த வழிமுறைகளில் சிலசமயம் கூட்ட வன்முறை போன்ற ஒழுங்கமைப்பில்லாத வழிகளும் இடம்பெறுவதுண்டு. அதே போன்றே, ஒழுங்கமைப்பில்லாத வழிமுறைகளில், சிலசமயம், அதிகாரிகளிடம் மனுக்கள் அளித்தல்போன்ற ஒழுங்கமைதத வழிமுறைகளும் இடம்பெறக்கூடும், அவ்வாறே, இரகசியப் பிரசார முறைகள், சாதாரணமாகத் தெளிவின்றி ஒருங்கிணைப்பின்றி இருப்பதற்குப் பதிலாக, அமைப்புத் திறன்வாய்ந்த ஒருவரின் முயற்சியால் ஒழுங்கமைப்பும், ஒருங்கிணைப்பும் வாய்ந்த இரகசியச் சங்கங்களாக உருவாகக்கூடும்.

## மாகாண அமைப்பு

"சென்னை மாகாணத்தில்" 1858 முதல் 1909 வரைப் பொதுமக்கள் கருத்து வளர்ந்த வரலாற்றை ஆராயும் முன்னர், அக்காலச்

சென்னை மாகாணத்தின் அமைப்பினைச் சற்று அறிந்துகொள்வது அவசியம். அன்றையச் சென்னை மாகாணம் மொழிவழி அடிப்படையிலோ, நிலவியல் அடிப்படையிலோ அமைந்திருக்கவில்லை. வரலாற்றுக் காரணங்களால் பிரிட்டிஷாரின் கைக்கு மாறிய தென்னிந்தியப் பகுதிகள் சிலவற்றைச் "சென்னை மாகாணம்" என்ற பெயரில் ஆங்கிலேயர் அழைத்தனர். சென்னை மாகாணத்தின் அன்றைய அமைப்பு, 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் முழுமை பெற்றது. அதற்குமுன், வடசர்க்கார் பகுதிகளும், செங்கற்பட்டு மாவட்டத்தின் ஜாகிரும், கடற்கரையோரமாக ஆங்காங்கே இருந்த சில தொழிற்சாலைகளுமே ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் (East India Company) உடைமைகளாக இருந்தன. திப்புசுல்தானுடன் ஆங்கிலேயர் நடத்திய மூன்றும் மைசூர்ப் போர் 1792ஆம் ஆண்டில் முடிவடைந்தபொழுது, மலபார், சேலம், திண்டுக்கல்லின் சில பகுதிகள் உட்பட திப்புவின் ஆட்சிப் பகுதிகளில் பெரும்பகுதி கிழக்கிந்திய வாணிகக் குழுவிற்குச் சொந்தமாகியது. நான்காம் மைசூர்ப் போர் 1799இல் முடிவடைந்ததும், கோயம்புத்தூர், கன்னடம், வையநாடு ஆகிய பகுதிகள் உள்ளிட்ட மற்ெருரு பெரும்பகுதி வாணிகக் குழுவின் வசமாகியது. தஞ்சாவூரின் ஆட்சியையும் அதன் மன்னரிடமிருந்து வாணிகக் குழு கைப்பற்றிக் கொண்டது. கடப்பை, கர்னூல், பெல்லாரி ஆகிய மாவட்டங்களை 1800இல் ஐதராபாத் நிஜாம், ஆங்கிலேயருக்கு விட்டுக் கொடுத்தார். அதற்கு அடுத்த ஆண்டிலேயே கர்நாடக நவாபின் ஆட்சிப் பகுதிகளை வாணிகக்குழு எடுத்துக் கொண்டது. நெல்லூர், வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் அனைத்தும் ஆங்கிலேயர் வசமாயின. இந்தப் பகுதிகள் அனைத்தும் சேர்ந்தே சென்னை மாகாணம் உருவாகியது. பம்பாய் மாகாணத்திற்கு மாற்றப்பட்ட வடகன்னடம் தவிர, மற்றப் பகுதிகள் அனைத்தும் 1947இல் நம் நாடு சுதந்திரம் பெறும் வரையில் சென்னை மாகாணத்திலேயே இணைந்திருந்தன.

## மொழி-மத வேறுபாடுகள்

சென்னை மாகாணத்தில் அடங்கிய பகுதியில் தமிழுடன் பல மொழிகளைப் பேசும், பல சமயங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்ந்து வந்தார்கள். கஞ்சம் மாவட்டத்தின் வடகோடிப் பகுதியில் ஒரியா மொழி பேசும் மக்களும் இருந்தார்கள். தெலுங்கு மொழி வடசர்க்கார் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் நிஜாமின் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு பகுதியிலும், நிஜாமி கர்னூல், கடப்பை மாவட்டங்களிலும், நெல்லூர், பெல்லாரி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும், திருவாங்கூர், கொச்சின், மலபார், பகுதியினர் மலையாளமும், பெல்லாரி போன்ற பகுதிகளில் கன்னட மொழியும் பேசப்பட்டன. திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த ஆறு மொழிகள் தவிர, திராவிட மொழிகளோடு தொடர்புடைய சில கிளைமொழிகளை (Dialects) சில மாவட்டங்களிலிருந்த மலைவாசி மக்கள் பேசி வந்தனர். இம்மொழிகளேயன்றி

முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் உருதுமொழி பேசினர். தஞ்சாவூரில் குடியேறியிருந்த மராத்தியர்கள் மராத்தி மொழியைப் பேசினர். இந்தியாவின் பிற பகுதிகளைப் போலவே, ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே ஏற்பட்ட கலப்பு மணங்களின் விளை வாகத் தோன்றிய ஆங்கிலோ-இந்திய சமூகத்தினரும் சென்னை மாகாணத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆங்கில மொழி பேசினுர்கள்.

சமயநிலையைப் பொறுத்தவரையில், சென்னை மாகாணத்தில் பல சமயங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். பெரும்பான்மை மக்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள். மாகாணத்தின் பல பகுதிகளில் சிறுபான்மை முஸ்லிம்களும் பரவலாகக் கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலோ-இந்தியர்களும், மதம் மாறிய இந்தியக் கிறிஸ்தவர்களும் ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் அல்லது புராட்டஸ்டண்டு கிறிஸ்தவப் பிரிவைச் சார்ந் தவர்களாயிருந்தனர். மலபார் மாவட்டத்திலிருந்த கிறிஸ்தவர்களில் பலர் சிரியன் கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர்கள். வட இந்தியாவி லிருந்து வந்து குடியேறிய சமணர்களும் சென்னை மாகாணத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

சுற்றுப்புறச் சூழல்களின் சாயல்கள், பொதுமக்கள் கருத்தில் படிவது இயல்பாகும். எனவே, பொதுமக்கள் கருத்து வளர்ச்சியில், பல்வேறு சமய, மொழி வேறுபாடுகளின் தரக்குறைவு பெருமளவில் ஏற்பட்டதில் வியப்பேதுமில்லை.

## வாணிகமே நோக்கம்

இந்தியாவின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வரலாற்றில் 1858 முதல் 1909 வரையிலான காலம் ஒரு முக்கியமான கட்டமாக அமைகிறது. இந்தியாவில் ஒரு வாணிக நிறுவனமாக இயங்கிவந்த கிழக்கிந்திய வாணிகக் குழுவை, இந் நாட்டின் நிருவாகத்தை நடத் தும் ஆட்சி நிறுவனமாக மாற்றுவதற்குரிய சூழ்நிலைகளும், நிகழ்ச்சி களும் இந்தக் காலத்தில்தான் ஏற்பட்டன என்பதிலிருந்தே இக் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளலாம். குடியேற்ற முறையின் மூலம் இந்தியா ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட வில்லை; அல்லது இங்கிலாந்து அரசு தன் படைகளை அனுப்பி இந்தியாவை வெற்றி கொண்டு அடிமைப்படுத்தவுமில்லை. கீழ்நாடு- களில் வாணிகம் நடத்துவதற்கென ஒரு கூட்டு நிறுவனத்திற்கு இங்கிலாந்து நாடாளுமன்றம் அனுமதி வழங்கியது. "ஆளுநர் ஒருவரின் பெயரிலும், லண்டனைச் சேர்ந்த வணிகர்கள் அடங்கிய வாணிகக் குழுவின் பெயரிலும் ஒரே கூட்டு நிறுவனத்தின்கீழ் கிழக்கு இந்தியத் தீவுகளுடன் வாணிகம் நடத்துவதற்கு அனுமதி வழங்கும் சாசனம் ஒன்றை 1600ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாளன்று சுமார் 220 ஆங்கிலப் பிரமுகர்களுக்கும் வணிகர்களுக்கும்

இங்கிலாந்தின் எலிசபெத் அரசி வழங்கினர். இதன்படி, வாணிக நோக்கத்திற்காகவே கிழக்கிந்திய வாணிகக் குழு தோன்றியது.[1]

இவ்வாறு வாணிகத்திற்காக அமைந்த கூட்டுநிறுவனம், நாட்டுப் பகுதிகளைத் தம் வசப்படுத்திக் கொண்டு, ஆட்சி அலுவல்களைக் கவனிக்க முனைந்தபோது, முற்போக்கு எண்ணங்கொண்டவர்கள், பெரும் எதிர்ப்புக் குரல் எழுப்பலானர்கள். வாணிக நிறுவனம் ஒன்று, ஒரு பெரும் நிலப் பகுதியின் மீது அரசியல் ஆதிக்கம் புரிந்ததாக ஐரோப்பிய வரலாற்றில் சான்றுகளே இல்லை. எனவே, ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் செலுத்த முயல்வதை எதிர்த்து, இங்கிலாந்தில் முற்போக்குவாதிகள் பெருங்கிளர்ச்சியைத் தொடங்கியதும், இங்கிலாந்து அரசினர் இன்னது செய்வதென்றறியாமல், இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் சிக்கிக்கொண்டு தவித்தனர். எனினும், கிழக்கிந்திய வாணிகக் குழுவின் அரசியல் ஆதிக்க விரிவைத் தடுத்து நிறுத்த இங்கிலாந்து அரசினர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இந்தியாவில் வாணிகக் குழுவின் நடவடிக்கைகளை உள்ளது உள்ளபடியே விட்டுவிட்டு, அவ்வப்போது சில சட்டங்களை இயற்றி வாணிகக் குழுவின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்துவதுடன் இங்கிலாந்து அரசினர் நின்றுவிட்டனர். எனவே, இந்திய ஆட்சியின்மீது பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாடு மறைமுகமானதாகவே இருந்து வந்தது. ஏறத்தாழ இரட்டை ஆட்சி போன்ற இவ்வகை ஆட்சி, 1858ஆம் ஆண்டில் இந்தியாவின் ஆட்சியை பிரிட்டிஷ் அரசாங்கமே நேரடியாக ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுவரையில் தொடர்ந்து நீடித்துவந்தது. "பிரிட்டிஷாரின் வாணிகத்தைக் கீழ்நாடுகளில் விரிவுபடுத்துவதற்காக 250 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து அரசியினல் தோற்றுவிக்கப்பட்ட ஒரு வாணிக நிறுவனம், உரோமப் பேரரசைக் காட்டிலும் மகத்தானதொரு மாபெரும் பேரரசை உருவாக்கி, அதைப் பிரிட்டிஷ் பேரரசுக்குக் காணிக்கையாக்கியது.[2]

---

1. "Commercial had been the origion of the East India Company, for it owed its existence to a charter granted by Queen Elizabeth on the 31st December, 1600, to about 220 gentlemen and merchants enabling them, as one body corporate and politic by the name of the Governor and Company of the merchants of London trading to the East Indies." (M. Ruthnaswamy: *Some influencences that made British Administrative System in India* : p. 2)

2. "...it (East India Company) was created by the Crown, two hundred and fifty years before for the purpose of extending British Commerce to the East; and it transferred to the Crown on relinquishing its functions an empire more magnificent than that of Rome." (J. C. Marsham : *The History of India*—Vol. III. p. 457)

இதேபோன்று, இந்திய அரசியல் கிளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டத்தின் முடிவை 1909ஆம் ஆண்டு குறிக்கிறது எனலாம். 1885ஆம் ஆண்டில் இந்திய தேசீயக் காங்கிரசு தோன்றி, நடத்தி வந்த கிளர்ச்சிகளின் பலனுக, மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள் அடங்கிய 1909 ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேறியது. 1918ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தைப் போலன்றி, 1859 முதல் 1909 வரையிலான காலத்தில்தான் பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கான அரசியலமைப்புக்குகந்த வழிமுறைகள் செல்வாக்குப் பெற்று விளங்கின எனலாம்.

## சென்னை சுதேசிச் சங்கம்

பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்குச் சங்கங்கள் முக்கியச் சாதனங்களாக விளங்குவதை முன்னரே கண்டோம். மக்களின் குறைகளை வெளிப்படுத்தவும், பொதுமக்களின் கருத்தை உருவாக்கவும் ஏற்றதொரு அரங்கமாக இத்தகைய சங்கங்களை அறிஞர்கள் அமைக்கின்ருர்கள். நம் ஆய்வுக்குட்பட்ட காலத்தில் நாட்டில் பல சமூகச் சங்கங்களும், அரசியல் சங்கங்களும் தோன்றின. இவற்றுள் சென்னை சுதேசிச் சங்கமும் (Madras Native Association), மகா ஜனசபையும் குறிப்பிடத்தக்கன. ஆட்சியாளர்கள் மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளவிருந்த நடவடிக்கைகள் குறித்துப் பொதுமக்களின் உணர்வுகளை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் இவ்விரு சங்கங்களும் ஆற்றிய பங்கு மகத்தானதாகும்.

## காங்கிரசின் தோற்றம்

இந்திய தேசீயக் காங்கிரசின் தோற்றம், இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் மற்ருெரு முக்கியத் திருப்பத்தை உண்டாக்கியது. இந்தியா முழுவதிலும் பொதுமக்களின் கருத்தை ஒருமுகமாகவும் ஆற்றலோடும் வெளிப்படுத்துவதற்குரிய அரியதோர் அரசியல் நிறுவனமாக இந்திய தேசீயக் காங்கிரசு திகழலாயிற்று.

## நற்பணி மன்றங்கள்

பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில், பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், பிரம்மஞானசபை (Theosophical Society), இராமகிருஷ்ண நற்பணி மன்றம் (Ramakrishna Mission) ஆகிய நிறுவனங்கள் தோன்றின. பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கென நிறுவனங்களைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் 20ஆம் நூற்ருண்டிலும் தொடர்ந்தன. இந்திய ஊழியர் சங்கத்தை (Servants of India Society) 1905ஆம் ஆண்டில் கோபால கிருஷ்ண கோக்கலே தொடங்கினர். இந்தச் சங்கம் எவ்விதமான அரசியல்—கல்வி—பொருளாதார—சமூக நடவடிக்கைகளுக்காகவும் நிறுவப்படவில்லை. தாய்நாட்டிற்குப் பயனுள்ள முறையில் தொண்டு செய்வதற்குரிய ஈடுபாடும் ஆர்வமும் ஆற்றலும் கல்வியறிவும்

உடைய அறிஞர்களைக் கொண்டதாக இச்சங்கம் விளங்கியது. இத்தகைய சங்கங்கள் யாவும், சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு பெற்றன.

பொதுமக்களின் கருத்தை உருவாக்கி, அதனை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும் பணியை எல்லா மக்களும் கூட்டாகச் செய்துவிட இயலாது. பொதுமக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற தொண்டுள்ளம் படைத்த ஒரு சிலராலேயே இப்பணியினைச் செவ்வனே செய்ய முடியும். ஆகவே, முன்பு கூறிய பொதுமக்கள் கருத்தானது, சங்கங்களின் தலைவர்கள், பொதுக் கூட்டங்களை நடத்தும் தலைவர்கள், மனுக்களை எழுதுபவர்கள் ஆகியோரின் சொந்தக் கருத்துகளின் செல்வாக்கிற்குப் பெருமளவில் உட்படுவதைக் காண்கிறோம். இத்தகைய கருத்துகள், சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரின் ஒரு மனதான ஒப்புதலைப் பெற்றதாக இல்லாமலிருக்கலாம். உதாரணமாக, அரசாங்க அலுவலர்கள், அரசுக்கு எதிரான ஒரு கிளர்ச்சியையோ அல்லது அரசு விரும்பாத ஒரு இயக்கத்தையோ பகிரங்கமாக ஆதரிக்கத் தயங்கலாம். நிலப்பிரபுக்களும் சமஸ்தானதிபதிகளும் தங்களுடைய தனி உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் குந்தகம் உண்டாக்கும் வகையில் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் ஈடுபடும் மக்கள் தலைவர்களின் முயற்சிகளுக்கு ஒருநாளும் ஆதரவளிக்கமாட்டார்கள். எனினும், பெரும்பாலான மக்கள் நிச்சயமாக இத்தலைவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து, அவர்கள் காட்டும் வழியில் நிற்க ஆயத்தமாக இருப்பார்கள். இத்தகைய நிகழ்ச்சிகள், எல்லா நாடுகளிலும், அன்றும் இன்றும் என்றும் காணப்படுவனவேயாகும். இந்நிகழ்ச்சிகளை விரும்பத்தகாதவை என்றும் கூற முடியாது. எந்த நாட்டிலும், எக்காலத்திலும், முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு சிக்கல் பற்றியும் பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்தும் பொறுப்பை, சமுதாயத்தின் ஒரு சில தலைவர்கள் அல்லது அறிஞர்களே மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பண்டைக்காலத்தில் சமுதாயத்தினரின் குறைகளை ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்கும் பிரதிநிதிகளாகப் புலவர் பெருமக்கள் விளங்கினர்கள். இதற்குச் சங்க இலக்கியங்கள் நிறையச் சான்று பகரும். ஏற்கெனவே குறிப்பிட்ட பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. பொதுமக்கள் கருத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் தலைவர்கள் கொள்ளும் முக்கியப் பங்கினைக் கருதி, நம் ஆய்வுக்குட்பட்ட காலத்தில் சென்னை மாகாணத்தில் மக்களுக்கு நல்வழிகாட்டிய பெருந்தலைவர்களின் வரலாற்றை அறிந்துகொள்வது நலமாக இருக்கும்.

## மேலைநாட்டுக் கல்வி

பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாகச் சென்னை மாகாணத்திலும், பொதுமக்கள் கருத்து உருவாவதில் மேலைநாட்டுக் கல்விமுறை ஆற்றிய பெருந்தொண்டினையும் நாம் மறந்துவிட இயலாது. மேலைநாட்டுக் கல்வியை இந்தியர்களுக்குக் கிடைத்தற்கரிய ‘வரப்பிர

சாதம்' என ஒருமனதாகக் கூறிவிட முடியாது. கிடைத்தற்கரிய மேலை நாட்டுக் கல்வியினால் சில பயங்கர விளைவுகளும் உண்டாயின. மேலைநாட்டுக் கல்வியைக் கற்ற சில இந்திய இளைஞர்கள், இந்தியப் பண்புகளை அடியோடு புறக்கணித்து, மேலைநாட்டு மோகங் கொண்டு அலையலானார்கள். தொன்றுதொட்டு வழங்கிவரும் அற நெறிமரபுகளை அவர்கள் உதறித் தள்ளிவிட்டு, ஐரோப்பியரின் மிக மோசமான பழக்கவழக்கங்களைக்கூட நவநாகரீகம் என்ற பெயரில் கைக்கொள்ளலானார்கள். எனினும், மேலைநாட்டுக் கல்வியால் இந்தியர்கள் பெற்ற பெரும் பயன்களைக் கருதுமிடத்து, இந்தக் கேடுகள் மிக அற்பமானவையேயாகும். விடுதலை வேட்கை, தேசீய உணர்ச்சி, சுயாட்சி ஆர்வம் ஆகியவை மேலைநாட்டுக் கல்வியின் விளைவாக இந்திய மக்களின் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்று, அந்நிய ஆதிக்கத்தின்மீது அவர்கள் வெறுப்புக் கொள்ளச் செய்தன.

இந்திய மக்களிடம் நாட்டுணர்வுக் கொள்கைகளை மேலைநாட்டுக் கல்வி உரமிட்டு வளர்த்ததுடன், மற்றொரு முக்கியமான நன்மையும் உண்டாக்கியது இதற்குமுன் இந்திய மக்கள் கண்டறிந்திராத 'பொது மொழி' என்னும் விலைமதிக்க முடியாத ஓர் அரிய சாதனத்தை மேலைநாட்டுக் கல்வியினால் இந்தியர்கள் பெற்றனர். இந்தப் பொது மொழி, இந்தியர்கள் ஒருங்கிணையவும், ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றிக் கொள்ளவும், ஆங்கில ஆதிக்கத்தை விரட்டுவதற்குரிய பொதுவான செயல்திட்டத்தை உருவாக்கவும் பேருதவியாக இருந்தது. அந்தப் பொதுமொழி—ஆங்கிலம்—இந்தியா முழுவதிலும் கற்றறிந்த மக்களிடையே தொடர்பு மொழியாக விளங்கலாயிற்று.

மேலைநாட்டுக் கல்வி முறை இன்றியும், இந்திய மக்களிடையே விடுதலை உணர்வு பெருக்கெடுத்திருக்கவே செய்யும் எனச் சிலர் கருதலாம். ஆனால், ஆங்கில இலக்கியங்களையும், ஆங்கிலேயர் வரலாற்றையும் கற்றதன் காரணமாக இந்திய மக்களிடையே தேசீய உணர்வு பெரிதும் தூண்டப்பட்டது என்பதையும், இந்தியர்களிடையே பொதுமக்கள் கருத்து உருப்பெறுவதற்கு ஆங்கிலக் கல்வி மிகவும் உறுதுணையாக இருந்தது என்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை. எனவே, பொதுமக்கள் கருத்து வளர்ச்சியை ஆராய்வதற்கு முன்னர், அதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கிய மேலைநாட்டுக் கல்வி, சென்னை மாகாணத்தில் வளர்ச்சியடைவதற்கு நிலவிய சூழ்நிலைகளை முதலில் சற்றே ஆராய்வது அவசியமாகிறது.

### *மன்ரோவின் பணி*

சென்னை மாகாணத்தின் ஆளுநராக மன்ரோ பிரபு 1820 முதல் 1827 வரைப் பணியாற்றினார். இவருடைய ஆளுநர் பதவிக்காலம், நம் மாகாணத்தில் மேலைநாட்டுக் கல்வி வளர்ச்சியில் மிக முக்கிய மைல் கல்லாக அமைந்தது. இம்மாகாணத்தில் உள்நாட்டுக் கல்வி நிலைபற்றி விசாரணை நடத்துவதற்கு அவர் ஆணையிட்டார். இம் மாகாணத்தில் கல்விபற்றி அரசாங்கமே விசாரணை நடத்தியது,

இதுவே முதல் முறையாகும். மன்ரோ பிரபு, 1822ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் நாள் எழுதியுள்ள குறிப்பு ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

> "இந்திய மக்களின் அறியாமை குறித்தும். அவர்களுக்கு அறிவூட்டுவதுபற்றியும் இங்கிலாந்திலும், இந்நாட்டிலும் எவ்வளவோ எழுதப்பட்டுள்ளன. ஆயினும், இப்பிரச்சினை பற்றிய கருத்துகள் பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் ஊகங்களாகவும், ஆதாரச் சான்றுகள் ஏதுமில்லாதனவாக வும், ஒன்றுக்கொன்று வெகுவாக முரண்பட்டனவாகவும், பொருட்படுத்தச் சிறிதும் தகுதியற்றனவாகவும் உள்ளன. இந்நாட்டு மக்களின் மனப்பண்பாட்டு நிலை குறித்து மதிப் பிடுவதற்குத் துணைபுரியக்கூடிய விவரங்களைச் சேகரித்துக் கொள்ள இந்நாட்டில் நம்முடைய அதிகாரமும், நகராட்சி நிறுவனங்களின் அமைப்பு முறையும் நமக்குப் போதிய வாய்ப்பினைக் கொடுத்துள்ளன. நம்முடைய மாகாணங் களைப்பற்றி நிலவியல் மற்றும் வேளாண்மை ஆய்வுகளைச் செய்துள்ளோம். நாட்டின் வளவசதிகளை ஆராய்ந்தறிந் திருக்கிறோம்; மக்கள் தொகையைக் கணக்கிட முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். ஆனால், இந்நாட்டு மக்களுடைய கல்விநிலையை அறிந்துகொள்வதற்கு நாம் எவ்வித முயற்சி யும் மேற்கொள்ளவில்லை"[1]

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பள்ளிகளின் பட்டியல், அவற்றில் அளிக்கப்படும் கல்வியின் இயல்பு, பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்களைச் சேகரித்து அனுப்பு மாறு மாவட்டக் கலெக்டர்களுக்கு மன்ரோ ஆணையிட்டார். சென்னை மாகாணத்தில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கென ஒரு பள்ளி நிறுவுவதற்கு ஆண்டுதோறும் ரூ. 50,000 மானியம் வழங் கும்படி கிழக்கிந்திய வாணிகக் குழுவின்-இயக்குநர் குழுவிடம் (Court of Directors) மன்ரோ கோரினர்.[2]

இதற்கிடையில் இந்தியாவின் கல்விக் கொள்கை தொடர்பான மற்றொரு மிக முக்கியமானப் பிரச்சினை குறித்தும் இந்திய அரசாங்கம் ஆராய்ந்து வந்தது. இந்தியக் கல்விமுறையில் பாடமொழியாகப் பயன்படுத்துவது ஆங்கிலத்தையா? இந்திய மொழிகளையா? என்பது குறித்து மெக்காலே பிரபுவும், தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் பிரபுவும் 1835ஆம் ஆண்டில் ஒரு முடிவெடுத்தனர். வரலாற்று முறைப்படி பார்த்தால், ஆங்கிலமொழியைக் கற்பிப்பதற் கான பள்ளிகளை நிறுவும் திட்டத்தை முதன்முதல் தெரிவித்தவர்

1. Revenue Consultations: Vol. 277—No. 1, dated 2nd July, 1822.
2. Revenue Consultations: Vol. 314—No. 5, dated 10th March, 1826.

சார்லஸ் கிராண்ட் (Charles Grant) என்ற கிழக்கிந்திய வாணிகக் குழுவின் அதிகாரியே ஆவார்.[1]

இந்தியாவில் ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டது 1813ஆம் ஆண்டுச் சாசனச் சட்டமே (Charter Act of 1813) எனலாம். இந்தியாவில் இலக்கிய மறுமலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், இந்தியக் குடிகளிடையே கல்வியறிவை ஊக்குவிக்கவும், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளில் வாழும் மக்களிடையே விஞ்ஞான அறிவைப் புகுத்தவும் வளர்க்கவும் அரசு வருமானத்தில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் நிதி ஒதுக்குவதற்கு, 1813 சாசனச் சட்டத்தின் 43ஆவது பிரிவு, தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளித்துள்ளது.[2] ஆனால் இக்கல்வியை எம்மொழி மூலம் போதிப்பது என்பது குறித்து இருவகைக் கருத்துகள் நிலவின. கீழ்நாட்டு மொழி ஆதரவாளர்கள் (Orientalists) என்றழைக்கப்பட்ட ஒரு சாரார், சமஸ்கிருத மொழியையும், ஆங்கில மொழி ஆதரவாளர் (Anglists) என்றழைக்கப்பட்ட சாரார், ஆங்கில மொழியையும் போதனை மொழியாக்கவேண்டும் என்று வாதிட்டதினால், 1813ஆம் ஆண்டு முதல் பெண்டிங்குப் பிரபு தலைமை ஆளுநராக வரும் வரையில் (1835) இதற்கு ஒரு முடிவும் ஏற்படவில்லை. மக்களின் நலனே தன் பணி என்ற கொள்கையுடைய பெண்டிங்குப் பிரபு தன் சட்ட ஆலோசகர், மெக்காலே பிரபு மூலம் இதற்கு ஒரு முடிவு எடுத்தார்.

## மெக்காலே எண்ணம்

தலைமை ஆளுநர் ஆலோசனை சபையின் (Governor-General's Council) சட்ட உறுப்பினராக மெக்காலே பிரபு இந்தியாவுக்கு வந்தார். மெக்காலே தொடக்க முதலே ஆங்கில ஆதரவாளராக இருந்தார். அவர் எழுதிய குறிப்புகளும், அறிக்கைகளும் ஆங்கில இலக்கிய உரைநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்கின. ஆனால், கீழ்நாட்டுப் பண்பாடு பற்றியோ அல்லது கல்விமுறை குறித்தோ மெக்காலே சிறிதளவேனும் அறிந்திருந்ததற்கான அறிகுறி அவருடைய குறிப்புகளில் காணப்படவில்லை. இதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். "எனக்கு சமஸ்கிருத மொழியோ அரபுமொழியோ தெரியாது. ஆனால், அவற்றைப் பற்றிய சரியானதொரு மதிப்பீட்டைச் செய்வதற்கு என்னால் இயன்றதைச் செய்துள்ளேன். அரபியிலும், சமஸ்கிருதத்திலும் புகழ் பெற்ற இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளை நான் படித்திருக்கிறேன். கீழ்நாட்டு மொழிப் புலவர்களுடன் இங்கேயும் இங்கிலாந்திலும் நான் உரையாடியிருக்கிறேன். கீழ்நாட்டுக்கல்விமீது கீழ்நாட்டு அறிஞர்கள் பெரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நானறிவேன். இந்தியாவிலும், அரேபியாவிலும் உள்ள உள்நாட்டு இலக்கியங்கள் அனைத்தையும், ஐரோப்பாவி

---

1. A. L. Mudaliar: *Education in India*: pp. 21-22.
2. C. L. Anand-*Government of India*-Chap. II, p. 25

லுள்ள ஒரு சிறந்த நூலகத்தில் ஒரு அலமாரியில் அடக்கிவிடலாம் என்ற உண்மையை மறுத்தவர்கள் யாரையும் நான்கண்டதில்லை. கீழ்நாட்டுக்கல்வி முறையை ஆதரித்தவர்கள்கூட, மேலைநாட்டு இலக்கியங்களின் உள்ளார்ந்த உயர்வினை முற்றிலும் ஒப்புக்கொள் கிறார்கள்" என்ற மெக்காலேயின் கூற்று மூலம், கீழ்நாட்டுக் கல்வி குறித்து அவர் எத்தகைய தாழ்வான எண்ணம் கொண்டிருந்தார் என்பதை அறியலாம்.[1]

1835 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் தேதியன்று பெண்டிங்க் பிரபு பிறப்பித்த ஆணையொன்றில், "இந்தியக் குடிகளிடையே ஐரோப்பிய இலக்கியத்தையும், விஞ்ஞானத்தையும் பரப்புவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தலையாய நோக்கமாக இருக்கவேண்டும். கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதி முழுவதும் ஆங்கிலக் கல்வி யின் வளர்ச்சிக்காகமட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

வில்லியம் பெண்டிங்க் பிரபுவின் இந்த முடிவு, வங்காளத்தின் கல்வியைப் பொறுத்ததாக இருப்பினும், இதன் விளைவுகள் சென்னை மாகாணத்தின் கல்வியிலும் காணப்பட்டன. அரசாங்க நிதியை ஆங்கிலக் கல்விக்காகமட்டுமே, குறிப்பாக உயர் ஆங்கிலக் கல்விக் காகமட்டுமே, செலவிடும்படி சென்னை மாகாண அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட்டிருந்தது.

சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவபட்டது, இம்மாகாணத்தின் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். பல்வேறு கல்வித் துறைகளில் தேர்ச்சிபெறுபவர்களுக்குப் பட்டங்கள் வழங்கவும், அப்பட்டங்களைப் பெறுவதற்குரிய பாட போதனையும், பயிற்சியும் அளிக்கவும் இந்தியாவில் பல்கலைக்கழகங் களை நிறுவுவதற்கு ஏற்ற தருணம் வந்துவிட்டதென இயக்குநர் குழு கருதியது. அதன்படி, 1857ஆம் ஆண்டில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று பல்கலைக் கழகங்கள் நிறுவப்பெற்றன. இலண்டன் பல்கலைக் கழகத்தின் மாதிரியில் ஒவ் வொரு பல்கலைக்கழகத்திற்கு ஒரு வேந்தர் (Chancellor), துணைவேந்தர் (Vice-Chancellor) நியமிக்கப்பட்டனர்; செனட் சபையும் அமைக்கப் பட்டது.

---

1. H. Sharp: *Selections from Educational Records*-Part I (1781-1839), p. 109

2. "........ that the great object of the British Government ought to be the promotion of European literature and Science among the natives of India and that all the funds appropriated for the purpose of education would be best employed on English education alone." (*Ibid*. p. 130)

ரிப்பன் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது, 1882ஆம் ஆண்டில் கல்விக் குழு ஒன்றை நியமித்தார், இக்குழு ஹண்டர் குழு என அழைக்கப்பட்டது. கல்வி வளர்ச்சியில், இக்குழுவை நியமித்தது அடுத்த முக்கியமான கட்டமாகும். ஹண்டர் குழு 1884இல் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. அவ்வறிக்கையில் கண்டிருந்த பரிந்துரைகள் அனைத்தையும் அரசு ஏற்றுக் கொண்டது. உள்ளாட்சி நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் கல்விக்கூடங்களை அமைத்துக் கல்வி போதிக்க அரசு மானியங்கள் வழங்குவதற்கு இப்பரிந்துரைகள் வழிசெய்தன. இதனுல், கல்வி வளர்ச்சி மேலும் ஊக்கம் பெற்றது.

## சமயப் பிரசாரகர்கள் தொண்டு

கல்வி வளர்ச்சிபற்றிக் கூறும்பொழுது, அயல்நாட்டுச் சமயப் பிரசாரகர்கள் இந்நாட்டில் கல்வியறிவைப் பரப்புவதற்காகச் செய்த அருந்தொண்டினைச் சிறப்பாக குறிப்பிடாமலிருக்க முடியாது. இந்திய மக்களிடையே ஆங்கிலக் கல்வி பரவியதற்கு, சமயப் பிரசாரகர்களின் தொண்டே பெரும்பாலும் காரணம் எனலாம். அயல்நாடுகளில் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கென நிறுவப்பெற்ற சங்கம், 1854ஆம் ஆண்டில் 186 பள்ளிகளை நடத்திவந்தது. இவற்றுள் பெரும்பாலானவை திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வந்தன.

சென்னை மாகாணத்தில் 1854-55ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் பாடம் போதிக்கும் பல பள்ளிகள் கிறிஸ்தவ நற்பணி மன்றத்தின் (Mission) சார்பில் நடந்துவந்தன. எனவே, இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கு ஐரோப்பிய சமயப் பிரசார நிறுவனங்கள் ஆற்றிய பெருந்தொண்டினை நாம் நன்றியுடன் ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிருேம். இந்தியாவின் இன்றையக் கல்வி முறையின் முன்னேடிகள் என அந்நிறுவனங்களைப் போற்றுவது முற்றிலும் பொருந்துவதாகும். அவர்கள் இந்நாட்டில் கல்வியைப் பரப்பியதற்கு, அவர்களுடைய சுயநல நோக்கமே காரணம் என்பதில் ஐயமில்லை. "சமயப் பிரசாரகர்கள் இந்நாட்டு மக்களிடம் அன்பும் ஆர்வமும் கொண்டு வயல்களிலும், தொழிலாளர்களிடையிலும் சென்று ஊக்கத்துடன் தொண்டு செய்தார்கள் என்பது உண்மையே. ஆனுல் தேசியக் கல்வியை உருவாக்கும் எண்ணத்துடனே, ஐரோப்பிய இலக்கியத்தையும் விஞ்ஞானத்தையும் பெருமளவில் புகுத்துவதற்கான நோக்கத்துடனே அவர்கள் கல்விப்பணியில் ஈடுபடவில்லை; இந்தியர்களைக் கிறிஸ்தவர்களாக்கும் நோக்கத்துடனேயே அவர்கள் கல்வித் தொண்டாற்றினுர்கள்" என்று அறிஞர் பி.டி.பாசு கூறும்கருத்து[1] முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்

---

1. B. D. Basu—*Education in India Under East India Company*-p. 134.

கூடியதாக இருந்தாலும், இக்கல்வி முறை காலப்போக்கில் நாட்டில் அரசியல் புத்துணர்ச்சிக்கு வித்திட்டது என்பதில் ஐயமில்லை.

கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்கள் கல்வி நிறுவனங்கள் நடத்துவதைக் கண்ட இந்தியர்கள் சிலர் தாங்களும் அத்தகைய கல்விக் கூடங்களை நிறுவி நாட்டு மக்களிடையே கல்வியறிவை வளர்க்க ஆர்வம் கொண்டார்கள். இத்தகைய ஆர்வம்கொண்ட பல்வேறு சமூகப் பெரியார்களின் கூட்டு முயற்சியால் உருவான பச்சையப்பன் அறநிலையக் குழுவின் சார்பில் பல பள்ளிகள் நிறுவப்பட்டன. இதனைச் சென்னை மாகாணக் கல்வி வளர்ச்சி வரலாற்றில் மற்றொரு புதிய சகாப்தமாகக் கருதலாம்.[1]

1. *Madras Manual of Administratation*, Vol. I, p. 570.

*அத்தியாயம் - 2*

# பொதுமக்கள் கருத்தும் அரசியல் சீர்திருத்தமும்

## *அரசியல் நிறுவனங்களும் சங்கங்களும்*

இன்று மக்களாட்சியின் தலையாய நிறுவனங்களாக விளங்கும் சட்ட மன்றங்களும், உள்ளாட்சி மன்றங்களும் *1858* முதல் *1909* வரையிலான காலத்தில் குழவிப் பருவத்தில் இருந்தன என்றே சொல்லவேண்டும். எனவே, இன்றுள்ளது போன்று, இந்நிறுவனங் களின் குரல், பொதுமக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதாகவோ, முடிந்த முடிவாகவோ அன்று விளங்கவில்லை. இதற்குப் பின்னர்தான் ஜனநாயகத்தின் ஆற்றல்மிக்க சாதனங்களாக இந்நிறுவனங்கள் வளர்ந்து உருப்பெற்றன. பொதுமக்கள் கருத்தை எதிரொலிக்கும் அரசாங்கமாக இந்நிறுவனங்கள் பயனுள்ள முறையில் தொண்டாற் றும் வகையில் இந்நிறுவனங்களைச் சீர்திருத்தி அமைக்க வேண்டு மென்ற கோரிக்கை இடையறாது வலியுறுத்தப்பட்டு வந்தது.

சட்டம் இயற்றும் அதிகாரங்களை மாகாணங்கள் பெற்றது *1807* ஆம் ஆண்டிலாகும். *1773*ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி (Regulating Act, 1773) சில ஒழுங்குமுறை களை வகுக்கவும், அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கவும், ஆட்சிப் பகுதிகளின் ஆட்சியை ஒழுங்குபடுத்தவும் தலைமை ஆளுநரின் ஆலோசனை சபைக்கு (Governor General in Council) அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதேபோன்றதொரு அதிகாரத்தை *1807*ஆம் ஆண்டில் நிறைவேறிய ஒரு சட்டம், சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களின் ஆளுநர் ஆலோசனை சபைகளுக்கு (Governor in Council) வழங்கியது.

## *அதிகாரக் குறிப்பு*

சட்டம் இயற்றும் அதிகாரம் முழுமையும் தலைமை ஆளுநரின் ஆலோசனை சபையிடமே அமைந்திருந்தது. இத்தகைய அதிகாரக் குவிப்பைச் சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களின் அரசுகள் ஆதரிக்கவில்லை. தங்களுடைய கோரிக்கைகளும் தேவைகளும் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை என இம்மாகாண அரசுகள் அடிக்கடிப் புகார் கூறி வந்தன. இம்மாகாணங்களின் மக்களும் சீர்திருத்தங்களைக் கோரிக் கிளர்ச்சி செய்யலாயினர்.

1853ஆம் ஆண்டுச் சட்டத்தினால் மாகாணங்களின் இக் குறைகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டன எனலாம். 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி தலைமை ஆளுநர் ஆலோசனை சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. இச்சபை யின் சட்டமியற்றும் நடவடிக்கைகளும் விரிவாக்கப்பட்டன. இச் சபையில் மாகாணங்களின் பிரதிநிதிகள் இடம் பெறவும் இச்சட்டம் வழி செய்தன. இவ்விதம் மாகாணங்களின் குரலை இப்பிரதிநிதி மூலம் வெளிப்படுத்தி வழிவகுக்கப்பட்டது. இவ்வாறு மத்திய சட்டமன்றத்தில் முதன் முதலாக மாகாணங்களுக்குப் பிரதிநிதித் துவம் கிடைத்தது.

இது மாகாண ஆளுநரின் குறையை நீக்கினாலும், மக்களின் மனதை திருப்தி செய்யவில்லை. பொதுமக்களிடையே வளர்ந்துவந்த அரசியல் விழிப்பு உணர்ச்சியானது, தனிப்பட்டவர்களின் வாயி லாகவும் பொதுமக்கள் கருத்தாக உருப்பெற்று வெளிப்படலாயிற்று. மேலைநாட்டுக் கல்வியின் மூலம் மக்களாட்சிக் கொள்கைகளைக் கற்றறிந்துகொண்ட படித்த இந்தியர்களுக்கு இந்நாட்டின் அரசியல் நிலைமை சிறிதும் மன நிறைவளிக்கவில்லை.

இந்திய தேசீயக் காங்கிரசு நிறுவனம் தோன்றுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே, சென்னை மாகாணத்தில் அரசியல் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. சென்னைச் சுதேசி சங்கம் (Madras Native Association) போன்ற அமைப்பு முறையான நிறு வனங்களைத் தோற்றுவித்தவர்களான காசுலு இலட்சுமிநரசு செட்டி, பி. ரங்கைய நாயுடு, பி. அனந்தாச்சார்லு, ஜி. சுப்பிரமணிய ஐயர், சேலம் ஸி. விசயராகவாச்சாரியார் போன்ற அறிஞர்கள் இம்மாகா ணத்தில் அரசியல் விழிப்புகள் தோன்றுவதற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். இவர்கள் நிருவாக, அரசியல் சீர்திருத்தங்களை இடைவிடாது வலியுறுத்தி வந்தார்கள். அதன்மூலம் இவர்கள் தங்கள் முயற்சிகளுக்கு இம்மாகாண மக்களின் ஆதரவையும் படிப் படியாகப் பெற்றனர்கள்.

சென்னையில் செல்வாக்குமிக்க மக்கள் தலைவர்களாக விளங் கியவர்களுள் தலையாயவர் காசுலு இலட்சுமிநரசு செட்டி எனலாம். சென்னைப் பெரிய மேட்டில் 1806ஆம் ஆண்டில் பிறந்த இவர், தாய் நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் தேடித்தரும் அரும்பணிக்குத் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார். சென்னை யில் முதன்முதல் தோன்றிய அரசியல் சங்கமும், பின்னர் தோன்றிய சென்னை மகாஜன சபைக்கு முன்னோடியாக விளங்கியதுமான சென்னைச் சுதேசிச் சங்கத்தைத் தோற்றுவித்து, அதற்கு வழிகாட்டும் தலைவராகவும் விளங்கியவர் இலட்சுமிநரசு செட்டி ஆவார்.

### சென்னை சுதேசிச் சங்கம்

அரசியல் கோட்பாட்டிற்கிணங்கியவாறு மக்களின் குறைகளை அவ்வப்போது அரசுக்குத் தெரிவிக்கும் நோக்கத்துடன் 1852ஆம்

ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் நாளன்று சென்னை சுதேசிச் சங்கம் நிறுவப்பெற்றது. கல்கத்தாவில் "பிரிட்டிஷ் இந்தியர் சங்கம்" (The British Indian Association) என்ற பெயரில் ஒரு நிறுவனம் இயங்கிவந்தது. சென்னை, கல்கத்தா ஆகிய இரு மாகாணங்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் குறித்து இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கு மனுக்களை அனுப்புவதில் பிரிட்டிஷ் இந்தியர் சங்கத்தை வழிகாட்டியாகக் கொள்வது நலமாக இருக்குமென இலட்சுமிநரசு செட்டியும் அவரது நண்பர்களும் கருதினர். எனவே, சென்னையில் கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியர் சங்கத்தின் ஒரு கிளையைத் தொடங்கி, கல்கத்தா சங்கத்துடன் கடிதத் தொடர்பு கொண்டார்கள். இக் கடிதத் தொடர்புமூலம் ஓர் உண்மை புலனாகியது. இந்து மதத்தைச் சேர்ந்த உயர்குடிமக்களின் உயர்வுக்கான திட்டங்களை வகுப்பதும் பரிந்துரைகள் செய்வதும் மட்டுமே பிரிட்டிஷ் இந்தியச் சங்கத்தின் நோக்கம் என்பதும், மத்தியதர, கடைநிலை மக்களின் அவலநிலை குறித்து அச்சங்கம் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை என்பதும் தெரியவந்தது. இத்தகைய போக்கு, சென்னை மாகாணத்தின் சூழ்நிலைகளுக்குச் சிறிதும் பொருந்தாது என்பதைச் சென்னைக் கிளையின் தலைவர்கள் உணர்ந்துகொண்டனர். இது போன்ற பல முக்கியமான பிரச்சினைகளில் கல்கத்தா சங்கத்துக்கும் சென்னைக் கிளைக்குமிடையே உடன்பாடான கருத்து உருவாவதற்கு வழியில்லை என்பதையும் மற்றப் பிரச்சினைகளிலும் தலைமைச் சங்கத்தின் ஒப்புதலைப் பெறுவது கடினமான காரியம் என்பதையும் உணர்ந்துகொண்ட சென்னைத் தலைவர்கள், கல்கத்தா சங்கத்தின் கிளையாக இருந்த சென்னை சங்கத்தை மாற்றி, சென்னை சுதேசிச் சங்கம் என்ற பெயரில் சுதந்திரமான தனிச் சங்கமாக அமைத்தனர். சென்னை மாகாண மக்களின் உடனடிக் குறைகளை இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது இச்சங்கத்தின் தலையாய நோக்கமாக அமைந்தது.[1]

சங்கத்தின் மூலம் மட்டும் மக்கள் கருத்தை பதவியில் உள்ளோருக்குத் தெரிவித்தால்போதுமென்று அவர் நினைக்கவில்லை. சங்க உறுப்பினர்கள் மட்டும் மக்கள் நலனில் நாட்டம் கொள்ளல் சால சிறந்ததென்றும் அவர் கருதவில்லை. சங்கம் மக்கள் தேவையை ஒரு குறிப்பிட்ட நிலையில்தான் அணுகவும் ஆராயவும் முடியும். ஒரு நிலையான, நிரந்தரமான ஆய்வுகோல் மக்களுக்கு மிக அவசியம் என்பதனை உணர்ந்தார். இதன் விளைவு 'கிரசண்ட்' என்ற பத்திரிகையை ஆரம்பிக்கத் தூண்டியது. ஆகவே பேச்சளவில் அன்றி, மனு மூலம் மட்டுமன்றி பத்திரிகை வாயிலாகவும், மக்கள் பொதுக்கருத்தை வெளிப்படுத்தப் பத்திரிகையைத் தமிழகத்தில் முதன்முதலில் தொடங்கிய பெரும்பெயர் அவரையே சாறும். அவர்

---

1. Appendix to Minutes of Evidence taken before select Committee on the Government of Indian Territories, dated the 11th of October, 1852, p. 187.

பெயர் தமிழக அச்சக வரலாற்றில் பொன் எழுத்தால் பொறிக்கப் படவேண்டுமென்றால் அது மிகையாகாது.

இலட்சுமிநரசு செட்டி தமது கருத்தை வெளியிடுவதற்காக 'கிரசன்ட்' (Crescent) என்னும் செய்தி இதழையும் தொடங்கினர். ஆங்கிலேயரிடம் மக்களின் விசுவாசத்தைச் சீர்குலைக்கவோ, ஆங்கிலேய மேலாண்மைக்கு விரோதமான நடவடிக்கைகளில் மக்களைத் தூண்டவோ இலட்சுமிநரசு செட்டி ஒருபோதும் முயன்றதில்லை. பொதுக்கூட்டங்கள் நடத்துதல், கோரிக்கை மனுக்களைத் தயாரித்து அனுப்புதல் போன்ற சட்டத்திற்குட்பட்ட நடவடிக்கைகளைமட்டுமே இவர் கையாண்டார். "நம்முடைய குறைகளை நயமாகவும் உறுதியாகவும் மேலதிகாரிகளுக்கு எடுத்துரைப்பதன் மூலம் நமக்கு நியாயம் கிடைக்கும்; நம்முடைய குறைகள் நீங்கும் என்று நாம் நம்புகிறோம்" என இவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.[1] எனினும் அன்றைய அரசாங்கம் இவரை ஐயக்கண் கொண்டு பார்த்தது. 1854ஆம் ஆண்டு வாக்கில் இவரை ஒரு அரச விரோதியாகவே அரசினர் கருதலாயினர். அதனால் இவர் போலீசாரின் கண்காணிப்புக்கு உள்ளானர். இவருடைய நடவடிக்கைகள் அனைத்தையும் போலீசார் உளவறிந்து அரசுக்குத் தெரிவிக்கலாயினர். இவருடைய சொற்பொழிவுகள் யாவும் இரகசியப் போலீசாரால் குறிப்பெடுக்கப்பட்டுக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன. அரசினரின் இந்த நடவடிக்கை, பொதுவாக அன்றைய ஆட்சியாளரின் மனப்போக்கை எடுத்துக் காட்டுவதாகும்.

## *தேசபக்தியின் சின்னம்*

1857ஆம் ஆண்டுப் படையினர் பெரும்புரட்சிக்குப் பின்னர், சென்னைச் சுதேசிச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அரசாங்கத்திற்கு மனு ஒன்றை இலட்சுமிநரசு செட்டி அனுப்பினர். அரசாங்கம் தொடர்ந்து சமய நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என அம்மனுவில் இவர் வலியுறுத்தி இருந்தார். இதற்கிடையில், சென்னை அரசாங்க நிருவாகத்தில் மாறுதல் ஏற்பட்டது. மக்களிடையே இலட்சுமிநரசு செட்டியின் செல்வாக்கு வெகுவாகப் பெருகியது. நாட்டுமக்களின் நலனுக்காக இவர் செய்துவந்த இடைவிடாத் தொண்டினாலும், அதற்கென இவர் செய்த தியாகங்களினாலும், இந்திய மக்களிடையிலும், ஐரோப்பியர்களிடையிலும் இவருக்குப் பெரும் மதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனால், இவர்பால் கொண்டிருந்த ஐயப்பாட்டையும் ஆவேசத்தையும் சென்னை அரசாங்கம் மாற்றிக்கொண்டன, நாட்டு மக்களுக்காக இவர்

---

1. "...we believe that by a mild and firm representation of our grievances to the superior authorities, we shall obtain justice and redress."

(G. Parameswaran Pillai: *Representative Indians*, P. 198)

ஆற்றிய அரும்பெருந்தொண்டுகளைப் போற்றிப் பாராட்டி, 1861ஆம் ஆண்டில் இவருக்கு C. S. I (Companion of Star of India) என்னும் விருதை வழங்கியது. 1863ஆம் ஆண்டில் இவர் சென்னைச் சட்ட மன்ற உறுப்பினராகவும் நியமிக்கப்பெற்றார். இதைப் பாராட்டும் பொருட்டு 1864ஆம் ஆண்டில் பச்சையப்பன் மண்டபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய ஜான் புரூஸ் நார்ட்டன் (John Bruce Norton) என்பார், "ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும்படி இந்திய மக்களைக் கேட்டிருந்தால், அவர்கள் அனைவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய ஒருவரை (இலட்சுமிநரசு செட்டி) அரசாங்கமே தேர்ந்தெடுத்துச் சட்டமன்ற உறுப்பினராக நியமித்திருக்கிறது" என்று பாராட்டினார்.[1] அன்றைய இந்தியாவின் உண்மையான தேசபக்தியின் சின்னமாகவும், தியாகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்த இலட்சுமிநரசு செட்டி 1868ஆம் ஆண்டில் காலமானபோது நாட்டு மக்கள் எல்லோரும் கண்ணீர்க் கடலில் ஆழ்ந்தனர்.

## *இந்தியரின் நண்பர்*

இந்திய மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்கிய ஐரோப்பியர்களுள் ஜான் புரூஸ் நார்ட்டன் குறிப்பிடத்தக்கவராவார். இவர் 1815 ஜூலை8-இல் பிறந்தவர். இவருடைய தந்தை சர் ஜான் டேவிட் நார்ட்டன், சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஹாரோவிலும் (Harrow), மார்ட்டன் கல்லூரியிலும் கல்விகற்ற ஜான் புரூஸ் நார்ட்டன், 1841ஆம் ஆண்டில் வழக்குரைஞரானார். 1842-ல் இவர் சென்னைக்கு வந்தார். 1843 முதல் 1845 வரை ஷெரீஃப் பதவி வகித்தார். 1845ஆம் ஆண்டில் கிழக்கிந்திய வாணிகக் குழுவில் ஓர் அதிகாரியாக (Clerk of the Crown) நியமனம்பெற்ற இவர், 1863இல் அரசு வழக்குரைஞராக (Government Pleader) நியமிக்கப் பெற்றார். பிறகு அரசு வழக்குரைத்துறை முதல்வராக (Advocate General) உயர்வு பெற்று, 1871 வரை அப்பதவியை வகித்தார். மக்களின் எல்லாப் பொதுப் பணிகளிலும் கலந்து கொண்டதுடன், அவைகளை ஊக்குவிக்கும் வகையில் தம்மால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்யத் தவறாத செம்மல். பிறப்பால் ஆங்கிலேயர், ஆனால் உள்ளத்தால் உழைப்பால் தமிழகத்தை தாயகமாகக் கொண்டவர். மக்களின் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட முதன்மையருள் முதன்மையானவராக கருதுவதில் தவறில்லை எனலாம். தென்னிந்தியாவில் பொதுநடவடிக்கைகள் எதுவும் இவரின்றி நடந்ததில்லை என்றால் அது மிகையாகாது. இந்தியர்களின் நலன்களுக்காக இவர் மிகத்தீவிரமாக வாதாடி வந்தார். இந்தியர்களின் கல்வி அறிவு பெருகப் பாடுபட்டார். லண்டனில் டெம்ப்பிள் சட்டக் கல்லூரியில் இந்திய

1. "...the Government had selected the man who would have been called to the post by the unanimous suffrage of his fellow countrymen": *Ibid.* p. 198.

மாணவர்களின் முதல் சட்ட விரிவுரையாளராக 1873-இல் நியமிக்கப் பெற்றார். இவர் பச்சையப்பன் அறநிலையப் புரவலராகவும் பணியாற்றினார். இந்தியர்களின் உற்ற துணைவராகவும், நண்பராகவும் விளங்கிய நார்ட்டன் 1883 ஜூலை 13-இல் காலமானார்.[1]

1857ஆம் ஆண்டுப் படையினர் பெரும்புரட்சி, சென்னை மாகாணத்தில் எவ்வித விளைவுகளையும் உண்டாக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அத்துடன் வட இந்தியாவில் நடந்த வன்முறைச் செயல்களைக் கண்டித்தும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆதரித்தும் சிலர் அரசுக்கு மனுக்கள் அனுப்பினார்கள். வேறு சிலர், வன்முறை நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு அவதியுற்ற மக்களுக்கு உதவிபுரிய நிதி வசூலித்து அரசுக்கு அனுப்பினார்கள். ஆனால், இந்த அரசு விசுவாசம் காரணமாக, அரசியல் சலுகைகள் கோருவதையும், நிருவாகத்தில் இந்தியர்களுக்கு அதிகப் பங்கு தர வேண்டுமென வலியுறுத்துவதையும் அவர்கள் கைவிட்டு விடவில்லை. சர் தாமஸ் மன்ரோவிற்குப் பிறகு, சென்னை மாகாண மக்களின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கிய சென்னை ஆளுநர் சர் சார்லஸ் டிரவிலியான் (1859-1860) இந்திய அரசுடன் கருத்துவேறுபாடுகொண்டார். அதனால் இந்திய அமைச்சர் அவரை இங்கிலாந்துக்குத் திருப்பி அழைத்தார். தமிழக பெருமக்கள் ஒன்றுசேர்ந்து டிரவிலியானுக்கு வழியனுப்பு விழா ஒன்று நடத்தினர். அப்பொழுது 8500 பேருக்கும் அதிகமானவர்கள் கையெழுத்திட்டிருந்த மனு ஒன்று அவரிடம் அளிக்கப்பட்டிருந்தது. அதில் அரசியல் சீர்த்திருத்தங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன. அதற்குப் பதிலளித்த டிரவிலியான், "பிரதிநிதித்துவ நிறுவனங்களை நிருவகிப்பதற்கு ஏற்றவாறு இந்தியர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்" என அறிவுறுத்தியதுடன், "அத்தகையதொரு தருணம் வந்தே தீரும். பிரிட்டிஷ் அரசின் பொதுவான பாதுகாப்பின்கீழ் நீங்கள் அனைவரும் ஒருமைப்பட்டு நிற்கின்றீர்கள். சுதந்திர வாழ்வு நடத்தும் இங்கிலாந்து மக்கள், தாங்கள் அனுபவித்துவரும் அரசியல் சலுகைகளை மற்றவர்களும் அனுபவிப்பதற்கு ஒருபோதும் தடங்கலாக இருக்கமாட்டார்கள்" என்றும் திட்டவட்டமாக அறிவித்தார்.[2]

## சட்டசபைச் சட்டம்

படையினர் பெரும்புரட்சிக்கு முற்பட்ட காலத்தில், இந்தியாவில் அரசின் நடவடிக்கைகள் குறித்துப் பொதுமக்கள் தங்கள் கருத்துகளை அரசினருக்குத் தெரிவிப்பதற்கு முறையானதொரு சாதனம் எதுவும் இருக்கவில்லை. படையினர் பெரும்புரட்சி மூண்டதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணம் என்பதை அதிகாரிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். மாகாணங்களின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலமாகப் பறித்துக்

1. *Dictionary of Indian Biography*: pp. 318—319.
2. S. Baliga: *Studies in Madras Administration*: Vol. 1, p. 130.

கொண்டது எத்தனை பெரிய இமாலயத் தவறு என்பதைக் கட்டுப் பாட்டு வாரியத்தின் (Board of Control) தலைவராக இருந்த சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பார் சுட்டிக் காட்டியுள்ளார். இங்கிலாந்து மக்கள் சபையில் (House of Commons), 1861 ஜூன் 6ஆம் நாளன்று, 1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபை மசோதாவை (Indian Council Bill, 1861) கொணர்ந்து சார்லஸ் வுட் உரையாற்றிய போது தெரிவித்த கருத்துகள் சிந்தனைக்குரியனவாகும். "இந்திய மக்களின் உணர்ச்சிகளையோ கருத்துகளையோ நன்கு அறிந்துகொள் வதற்கு ஒவ்வொரு ஐரோப்பியரும் எத்துணை சிரமப்படவேண்டி யிருந்தது என்பதை நினைக்கும்பொழுது மனவருத்தம் உண்டாகிறது. இந்தியாவில் ஆரம்பகால உயர் அதிகாரிகளுள் ஒருவராக விளங்கிய சர் மார்க் கப்பான் (Sir Mark Cubbon) என்பார் எழுதிய கடிதம் ஒன்றைப் படித்தபோது நான் அதிர்ச்சியடைந்தேன். அவர் மைசூரில் 30 ஆண்டுகள் நிருவாக அதிகாரியாகப் பணிபுரிந்தவர். உள்நாட்டு மக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு, முன்னர் எந்த ஒரு ஆங்கில அதிகாரியும் பெற்றிராத அளவுக்கு மக்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி பல்லாண்டுகள் பணியாற் றியவர் ஆவர். ஆயினும், 'நாட்டுமக்களுடன் நான் அன்றாடம் தொடர்பு கொண்டிருந்தபோதிலும், அவர்களுடைய கருத்துகளையும் உணர்ச்சிகளையும் போதிய அளவில் அறிந்து கொள்ள என்னால் இயலவில்லை' என்று வருந்திக் குறிப்பிட்டுள்ளார்" எனக் கூறிய சார்லஸ் உட், இந்தியச் சட்டமன்றத்தில் இந்தியர்களுக்குப் பிரதி நிதித்துவம் அளிக்கவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். "சட்டம் இயற்றும் பணிகளில், நம்முடன் ஒத்துழைப்பதற்கு உள் நாட்டுத் தலைவர்களை அனுமதித்தோமானால், அதனால் நமக்குப் பெரு மளவில் நன்மைகள் உண்டாகும். தங்களுடைய சொந்த நாட்டின் நிருவாக விவகாரங்களிலிருந்து தாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு இனிமேல் உண்டாகாது. இந்த எண்ணம் ஒன்றே, நம் ஆட்சியின்மீது அவர்கள் பெருமதிப்பு கொள்ளப் போதுமானதாக இருக்கும் எனக் கருதுகின்றேன். இந்தச் சட்டசபையை ஒரு விவாத அரங்காக உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. இந்தியா முழுமைக்குமான சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும் இயற்றும் பொறுப்பு தலைமை ஆளுநர் ஆலோ சனை சபையிடமே இருந்துவரும்; அந்தச் சபையே இந்தியாவில் தலைமையான சட்டம் இயற்றும் நிறுவனமாக செயல்பட்டுவரும். மாகாணங்களிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் நிறுவவேண்டு மென நான் கோரும் சட்டசபைகள் யாவும் தலைமை ஆளுநர் ஆலோசனை சபைக்குக் கீழ்ப்படிந்தனவாகச் செயல் பட்டுவரும். மாகாணங்களின் ஆளுநர்களுக்கும், அவர்களின் ஆலோசனை சபை களுக்கும் சட்டமியற்றுவதற்கு எந்தெந்த அதிகாரங்களை வழங்க லாம் என்பதை இனிக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்திய நாட்டில் மக்களின் நலன்கள் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. எனினும், தத்தம் பகுதிகளில் வாழும் மக்களின் நலன்கள் பற்றி நன்கறிந்த பிரதிநிதிகள், தலைமை ஆளுநரின் ஆலோசனை சபையில்

உறுப்பினர்களாக இடம்பெறுவதால், பெருமளவு நற்பலன்கள் ஏற்படுகின்றன என்பது உண்மையே; எனினும், வங்காள சபை என்று மாகாணங்களினால் அழைக்கப்படும் தலைமை ஆளுநர் ஆலோசனை சபையிடம் அளவுக்கு மீறிய அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன என்ற எண்ணத்தைப் போக்குவதற்கு இந்தச் சீர்த்திருத்தங்கள் போதுமானவையாக இல்லை என கானிங்கு பிரபு (Lord Canning) கருதுகின்றார். மேலும், தொலைதூரத்திலுள்ள வங்காளத்திலிருந்து கொண்டு, வெகுதொலைவுகளிலுள்ள உட்பகுதி மக்களின் நலன்களையும் தேவைகளையும் நன்கறிந்துகொள்ளாமல், அம்மாகாணங்களுக்கெனத் தலைமை ஆளுநர் ஆலோசனை சபையானது சட்டங்களை இயற்றுவதனால் ஏற்படும் கேடுகளையும் தவிர்க்க இயலவில்லை. மக்களுக்கு அருகிலுள்ள நிறுவனங்களுக்கே சட்டம் இயற்றும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். எனவேதான் தங்கள் ஆட்சிப்பகுதியின் உள்விவகாரங்கள் குறித்துச் சட்டங்கள் இயற்றுவதற்கான அதிகாரம் சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களுக்கு மீண்டும் வழங்கவேண்டும் என நான் கூறுகின்றேன். சட்டங்கள் இயற்றுவதற்காகத் தமது ஆலோசனை சபையைத் தலைமை ஆளுநர் கூட்டுவதைப்போல, மாகாண ஆளுநரும் ஒரு குறிப்பிட்ட அளவு உறுப்பினர்களைக் கொண்ட சபையைக் கூட்டிச் சட்டம் இயற்றும்படி செய்யலாம். இந்த உறுப்பினர்கள், ஐரோப்பியர்களாகவோ இந்தியர்களாகவோ இருக்கலாம்; மேலும், இவ்வுறுப்பினர்களில் குறைந்தது பாதிப்பேராவது நிருவாகிகள் (Office-bearers) அல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்'' என்று சர் சார்லஸ் உட் கூறினார்.[1]

இந்திய அரசியலமைப்பு வரலாற்றில்; 1861ஆம் ஆண்டுச் சட்டம், ஒரு முக்கியமான முன்னேற்றம் எனலாம். ''மாகாணத்தின் நல்லாட்சிக்கும், அமைதிக்குமான சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் இயற்றும் அதிகாரம் இச் சட்டத்தின் மூலமாகச் சென்னை, பம்பாய் அரசுகளுக்கு மீண்டும் கிடைத்தன. (இந்த அதிகாரம், 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, இம்மாகாணங்களின் அரசுகளிடமிருந்து பறிக்கப்பட்டிருந்தது.) இந்தச் சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னர், இந்திய ஆட்சியாளர்களினால், இம்மாகாணங்களுக்கென இயற்றியிருந்த சட்டங்களையும். ஒழுங்குவிதிகளையும் நீக்கவும், திருத்தவும் மாகாணங்களின் அரசுகளுக்கு இச்சட்டம் அதிகாரம் அளித்தது. எனினும், இந்தச் சட்டத்தின் விதிகளையோ நடைமுறையிலுள்ள அல்லது இனிமேல் நடைமுறைக்கு வரக்கூடிய நாடாளுமன்றச் சட்டத்தின் விதிகளையோ எந்த வகையிலும் பாதிக்கக்கூடிய வகையில் சட்டங்களையோ ஒழுங்குவிதிகளையோ ஆளுநர் ஆலோசனை சபை இயற்றக்கூடாதெனவும் இந்தச் சட்டத்தில் தடைவிதிக்கப்பட்டிருந்தது.''[2]

---

1. A. B. Keith: *Speeches and Documents on Indian Policy*; Vol. II, p. 17-18.
2. Act of 1861, Clause 42; *Ibid*, Vol. II, p. 40

ஆளுநர் ஆலோசனை சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. "சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மட்டும் இயற்றுவதற்காக, மாகாண அரசு வழக்குரைத் துறை முதல்வரை (Advocate-General) அல்லது அப்பதவியில் செயல்படும் அதிகாரியை யும், மற்றும் நான்குக்குக் குறையாமல் எட்டுக்கு மேற்படாத எண்ணிக்கையில் வேறு உறுப்பினர்களையும் தன்னுடைய ஆலோசனை சபையில் உறுப்பினர்களாகக் கூடுதலாக நியமித்துக் கொள்ள ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. சட்டங்கள் அல்லது ஒழுங்கு விதிகளை இயற்றுவதற்காக நடக்கும் இச்சபைக் கூட்டங்களில் மட்டுமே இந்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளவோ வாக்களிக்கவோ செய்யலாம். இச்சபையின் வேறு கூட்டங்களில் இவ்வுறுப்பினர்கள் கலந்துகொள்ளவோ வாக்களிக்கவோ கூடாது"[1]

இவ்வாறாக, நிருவாக சபையிலிருந்து (Executive Council) மாறுபட்ட சட்டசபை, **1861**ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் முதன் முறையாகச் செயலுக்கு வந்தது.

அதே சமயத்தில், இந்தியா முழுவதற்கும் சட்டம் இயற்றும் உரிமை தலைமை ஆளுநர் ஆலோசனை சபையிடமே இருந்தது. இந்த உரிமை, **1861**ஆம் ஆண்டுச் சட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப் பட்டிருந்தது. "சட்டங்கள் இயற்றவும், விதிமுறைகளை வகுக்கவும் தலைமை ஆளுநர் ஆலோசனை சபைக்கு அதிகாரம் உண்டு. இந்தியா வில் வாழும் பிரிட்டிஷார் அல்லது இந்தியர், அயல்நாட்டவர் அல்லது பிறர் ஆகிய அனைவருக்காகவும், மற்றும் நீதிவழங்கும் எல்லா நீதிமன்றங்களுக்காகவும், இங்கிலாந்தில் அரசருடன் நல் லுறவு கொண்டுள்ள சுதேச மன்னர்கள், சமஸ்தானங்களின் கீழுள்ள இந்திய அரசாங்க ஊழியர்கள் அனைவருக்காகவும் மற்ற அரசாங்க ஊழியர்கள் அனைவருக்காகவும் சட்டங்கள் இயற்றவும், விதிமுறைகள் வகுக்கவும் தலைமை ஆளுநர் ஆலோசனை சபைக்கு அதிகாரம் உண்டு. மேலும், தலைமை ஆளுநர் ஆலோசனை சபை யினால் அவ்வாறு இயற்றப்படும் சட்டங்களும், வகுக்கப்படும் விதி முறைகளும், சென்னை பம்பாய் மாகாணங்களின் ஆளுநர் ஆலோசனை சபைகளினால் இயற்றப்பட்ட முந்தையச் சட்டங்களை யும் விதிமுறைகளையும் கட்டுப்படுத்துவனவாகவும், அவை முரண் பாடாக இருக்குமெனில் அவற்றை நீக்கவும் உரியன", என்று 1861ம் ஆண்டுச் சட்டம் வரையறுத்துக் கூறுகின்றது.[2]

ஆயினும், நடைமுறையில், மாகாணத்தில் அமைதியை நிலை நாட்டுவதற்கும், நல்லாட்சியை நடத்துவதற்குமான சட்டங்களை இயற்றுவதற்கு ஆளுநர் ஆலோசனை சபை உரிமை உடையதாகவே

1. Clause 29 of the Act — A. C. Bannerjee - *op. cit.* Vol. II, p. 14.
2. Clause 22 of the Act — *Ibid.* p. 9.

இருந்தது. இந்த உரிமைக்குப் பலவிதக் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டிருந்தன; மேலும், மாகாண அரசு இயற்றும் சட்டங்களைக் கண்காணித்து மேற்பார்வையிடும் மேலாண்மை அதிகாரம் தலைமை ஆளுநர் ஆலோசனை சபைக்கு இருந்துவந்தது.

1861-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாகாணங்களில் சட்ட சபைகள் அமைந்தன. ஆனால் இந்தச் சட்டசபைகள், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டனவாகவோ, ஜனநாயகத் தத்துவங்களின் அடிப்படையில் அமைந்தனவாகவோ விளங்கவில்லை. ஆகவே, இச்சட்டசபைகள், பொதுமக்கள் கருத்தை நிறைவு செய்யவோ மக்களின் ஆதரவை பெறவோ தவறியதில் வியப்பேதுமில்லை.

### *உள்ளாட்சி நிறுவனங்கள்*

இந்தச் சட்டத்திற்குப் பிந்திய காலத்தில்தான் உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பு முறை திருத்தியமைக்கப்பெற்றன. இது பற்றிய விவரங்களை இங்குச் சுருங்கக் கூறுதல் அவசியம்.

உள்ளாட்சி நிறுவனங்கள் இந்தியாவுக்குப் புதியன அல்ல. பண்டைய இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் ஊராட்சி சபையுடன் தனித்தனித் தன்னாட்சிக் குடியரசுகளாகவே விளங்கின. சோழர் காலத்தில் ஊரே ஆட்சியின் அடிப்பிரிவாகத் திகழ்ந்தது. ஊராட்சி தன்னாட்சியாக நடைபெற்றது. ஊர்மக்களின் நலன்பேணும் குடியாட்சிகளாக ஊராட்சிகள் விளங்கின. சோழர் ஆட்சியில் ஊராட்சி முறை எத்துணை செவ்வியதாய் அமைந்திருந்ததென்பதைச் சென்னையிலிருந்து சுமார் 40 கல் தொலைவிலுள்ள உத்தரமேரூர் என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகின்றது.[1] அக்காலத்தில், ஊராட்சி உறுப்பினர்கள் 'குடவோலை' என்னும் தேர்தல் முறைப்படிப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டமையும், அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குப் பலவித அதிகாரங்கள் இருந்தமையும் இக்கல்வெட்டுகளிலிருந்து தெரிகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியில், நிருவாகம் முழுவதும் மத்திய அரசிடம் ஒருமுகப்படுத்தப்பட்டது. நீதிவழங்கும் பொறுப்பு மாவட்ட நீதி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ரயத்துவாரி முறை செயலுக்கு வந்தது. இக்காரணங்களினால் ஊர்களின் தன்னாட்சி வீழ்ச்சியடைந்தது.

### *நீதி நிருவாகம்*

ஆங்கில வாணிகக் குழுவினர் ஆட்சி உரிமைகளை மேற் கொண்டதும், பிரிட்டிஷ் மாதிரியில் புதியதொரு நீதி நிருவாக

---

1. K.A. Nilakanta Sastri—*Studies in Chola History And Administration*—Chap. III, pp. 73-84.

அமைப்பைப் புகுத்த முடிவெடுத்தனர். அதன்படி, எல்லா மாவட்டங்களிலும் நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர்; மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களும், சுற்று நீதிமன்றங்களும் நிறுவப்பெற்றன. ஆளுநர் ஆலோசனை சபையே மாகாணத்தின் உச்சநீதிமன்றமாகியது. எனினும், அங்கிருந்து அரசரிடம் மேல்முறையீடு செய்ய அனுமதிக்கப் பெற்றது.

இந்த நீதிமுறையில் பலவிதக் குறைபாடுகள் இருந்தன. எனவே, இந்த முறை சரிவரச் செயல்படவில்லை. பிரிட்டிஷ் மாதிரியில் அமைந்த புதிய நடைமுறையில் முட்டுக்கட்டை போடும் பலவிதக் கட்டுப்பாடுகள் மித மிஞ்சித் திணிக்கப்பட்டிருந்தன. இக்கட்டுப்பாடுகள், வழக்காடுவோருக்குத் துணைசெய்வதற்குப் பதிலாகத் தொல்லை தருவனவாக இருந்தன. மேலும் நீதிநிருவாக முறை முன்பின் பழக்கமற்றதாக இருந்தமையால், வழக்காடுவதற்குக் கட்சிக்காரர்கள் வழக்குரைஞர்களை நியமித்துக் கொள்ளவேண்டியிருந்தது. இந்த வழக்குரைஞர்களுக்கான கட்டணமும், வழக்காடுவோரிடம் நீதிமன்றங்கள் வசூலித்த கட்டணங்களும் மிக அதிகமாக இருந்தமையால், பலர் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குத் தயங்கினர்கள். தவிரவும், கிராமவாசி நீதிமன்றங்களை நாடி நெடுந்தொலைவிலுள்ள நகரங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது. அவருடைய வழக்கு தீர்வதற்குள் அவர் இவ்விதம் பலமுறை சென்று, பல மாதங்கள், பல ஆண்டுகள்வரை அலைந்து திரிந்து காத்திருக்க நேர்ந்தது.

அதிகாரம் அனைத்தையும் ஓரிடத்தில் ஒட்டுமொத்தமாகக் குவிக்கும் ஆங்கிலேயர் கொள்கையின் விளைவாக, தன்னாட்சிக் குடியரசு என்ற நிலையிலிருந்த கிராமம் வீழ்ச்சியடைந்து, மாபெரும் மத்தியநிருவாக அமைப்பின் ஒரு சிறு அங்கமாக அமைந்தது. இதனை, "தனிமனித ஆதிக்க வளர்ச்சியினலும், ரயத்துவாரி முறையைப் புகுத்தியமையினலும், கிராமச் சமுதாயம் விரைவில் சீரழியலாயிற்று" என்று ஏ. பி. பாட்ரோ (A. P. Patro) குறிப்பிட்டுள்ளார்.[1] உள்ளாட்சி நிருவாகப் பொறுப்பிலிருந்த அரசு அதிகாரிகள், உள்ளூர்ப் பொதுமக்கள் கருத்தை நன்கு அறிந்திருக்கவில்லை. இதனல் ஆங்கில அரசினருக்குப் பெருந்தொல்லைகள் உண்டாயின.

மேலைநாட்டு முறையிலமைந்த உள்ளாட்சி நிருவாக முறையை ஆங்கிலேயர் இந்தியாவில் புகுத்தினர்கள். சென்னையில் 1767ஆம் ஆண்டிலேயே உள்ளூர் மக்களிடம் வரிவசூலிப்பதற்காகக் கழகம் (Corporation) ஒன்று நிறுவப்பெற்றது. இதில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் உறுப்பினர்களாக இருந்தனர்.[2] மாகாணத் தலைநகர்களில் சாலைகளைப் பராமரிப்பதற்கான ஊழியர்களை நியமிப்பதற்குத்

1. *Studies in Local Self-Government, Education and Sanitation*—Chapter XII, p. 84.

2. *Indian Statutory Commission Report*, Vol. I, p. 28.

தலைமை ஆளுநருக்கு 1773ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் அதிகாரமளித்தது. மற்ற நகரங்களிலும் நகராட்சி நிறுவனங்களை அமைப்பதற்கு வகை செய்யும் பல சட்டங்கள் 1842-க்கும் 1862-க்குமிடையில் இயற்றப்பெற்றன.[1] நகராட்சி விவகாரங்களை நிருவகிப்பதற்கு ஆணையாளர்களை (Commissioners) நியமிப்பதற்கும், அந்த ஆணையாளர்கள் பல்வேறு வரிகளை விதிப்பதற்கும் இச்சட்டங்கள் அதிகாரம் வழங்கின.

1865ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றின் மூலம், கிராமப் பகுதிகளுக்கும் உள்ளாட்சி நிருவாக முறை விரிவுபடுத்தப் பட்டது. நகரங்களிலிருந்த உள்ளாட்சி நிறுவனங்கள் நகராட்சிகள் (Municipalities) என்றும், கிராமப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மாவட்டக்கழகங்கள் (District Boards) என்றும் அழைக்கப்பட்டன. உள்ளாட்சியின் நிதிவசதிகளுக்காக, நிலத்தின் மீது பிரதேச வரியும் (Cess), வீட்டுவரியும் வசூலிப்பதற்கு இந்தச் சட்டம் அதிகாரம் அளித்தது.

## நிதி நிருவாகம்

மாகாண நிதியியல் (Provincial Finance) குறித்து 1870ஆம் ஆண்டில் தலைமை ஆளுநர் மேயோ பிரபு ஓர் ஆணை பிறப்பித்தார். இது, உள்ளாட்சி நிறுவன வளர்ச்சியில் மற்றொரு முன்னேற்றமாக விளங்கியது. கல்வி, சுகாதாரம், மருத்துவ உதவி, உள்ளூர்ப் பொதுப் பணிகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்படும் நிதிகளை நிருவகிப்பதில் உள்ளூர்க் கண்காணிப்பையும், மேற்பார்வையினையும் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த ஆணை வலியுறுத்தியது. ''இந்த ஆணை முழுமையாகவும் நேர்மையோடும் செயல்படுத்தப்படுமானால், நகராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தி உள்ளாட்சி முறையை மேலும் வளர்க்கவும், நிருவாக விவகாரங்களில் இந்தியர்களும் ஐரோப்பியர்களும் இதுகாறும் இருந்ததைவிட அதிக அளவில் பங்குபெறவும் வாய்ப்புகள் ஏற்படும்'' என்று மேயோ பிரபு நம்பிக்கை தெரிவித்திருந்தார்.[2] சென்னை மாகாணத்தில் இயற்றப் பட்ட ஒரு சட்டத்தின்படி, உள்ளாட்சி நிதி வட்டங்களாக (Local Fund Circles) மாகாணம் பிரிக்கப்பட்டது; அத்துடன், அவற்றின் நிருவாகத்திற்கென மாவட்ட ஆட்சித் தலைவரின் (Collector) தலைமையின்கீழ் ஆலோசனை வாரியங்களும் (Consultative Boards) அமைக்கப் பெற்றன. எனினும், உள்ளாட்சி நிருவாகம் பற்றிய மேயோவின் திட்டம் பெரும்பாலும் நிதியியல் பற்றியதாகவே இருந்தது. மத்திய அரசின் வரிகளுடன் தொடர்பில்லாமல், உள்ளூர்க் காரியங்களுக் காக வசூலிக்கப்படும் வரிப்பணத்தை நிருவகிப்பதற்குரிய ஒரு நிறுவன அமைப்பு மேயோவின் திட்டத்தால் ஏற்பட்டது. அதே

1. *Ibid.*, p. 28.
2. H.H. Dodwell (Ed.)—*The Cambridge History of India*, Vol. VI, p. 517.

சமயம், உள்ளூர்க் காரியங்களை நிருவகிக்கும் பொறுப்பு அரசினரிட மிருந்து விடுபட்டது.

ரிப்பன் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சி நிருவாக வளர்ச்சி வரலாற்றில் புதியதொரு அத்தியாயம் தொடங்கியது. உள்ளாட்சி நிறுவனங்களை அரசியல் பயிற்சியளிக்கும் சாதனங்களாக உருவாக்கிய பெருமை ரிப்பன் பிரபுவையே சாரும். அவர் பிறப்பித்த ஆணையின்படி, உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பும், அதிகாரங்களும், அலுவல்களும் பெருமளவில் மாற்றியமைக்கப் பட்டன. "உள்ளாட்சி நிருவாக முறையை முன்னேற்றுவதில் உண்மையில் அக்கறை கொண்ட மாகாண அரசுகளுக்குத் திட்ட வட்டமானதொரு சிறந்த வழியைக் காட்டுவதாக அவருடைய ஆணை அமைந்திருந்தது."[1]

## *ரிப்பன் பிரபு சீர்திருத்தம்*

உள்ளாட்சி நிருவாகம் குறித்து 1882ஆம் ஆண்டில் ரிப்பன் பிரபு பிறப்பித்த ஆணையின் வாசகத்தை இங்கே குறிப்பிடுவது நலமாக இருக்கும்.

> "உள்ளாட்சி நிருவாகத்தை விரிவுபடுத்த வேண்டுமெனவும் உள்ளாட்சி விவகாரங்களின் பல பிரிவுகளை நிருவகிப்பதில் உள்ளாட்சி நிருவாகத் தத்துவத்தைக் கையாளவேண்டும் எனவும் தலைமை ஆளுநர் ஆலோசனை சபை வலியுறுத்துவதற்குக் காரணம், அரசினரின் மாவட்ட அதிகாரிகளைவிட உள்ளாட்சி நிறுவனங்கள் சிறப்பாக நிருவாகத்தை நடத்திவிடும் என்பதல்ல. நிருவாகத்தைச் சீர்திருத்துவது இந்த நடவடிக்கையின் அடிப்படை நோக்கமல்ல. மக்களிடையே அரசியல் அறிவைப் பெருக்குவதற்கான ஒரு சாதனத்தை உருவாக்குவதே இந் நடவடிக்கையின் தலையாய நோக்கமாகும், உள்ளூர் பற்றியும், உள்ளூர் மக்களின் நலன்கள் பற்றியும் அறிவுடையவர்கள், நாளடைவில் உள்ளாட்சி நிருவாகத்தில் அதிகப் பங்குகொள்ள வாய்ப்புப் பெற வேண்டும் எனவும், அதனல் உள்ளாட்சியின் நிருவாகத் திறமை மிகுதிப்படும் எனவும் தலைமை ஆளுநர் திட்ட வட்டமாக நம்புகிறார். ஆனல், இதற்கான முயற்சியில், தொடக்கத்தில் பல தோல்விகள் ஏற்பட்டு எதிர்பார்த்த பலன்கள் விளையாமல் போகலாம்; சிலசமயம், உள்ளாட்சி நிருவாக முறைக்கே கெட்ட பெயர் ஏற்படக்கூடும். ஆயினும், சுதந்திரமான அரசியல் வாழ்வை உருவாக்குவதற்கென மேற்கொள்ளப்படும் இந்த ஆரம்ப முயற்சிகளில் அரசாங்க அதிகாரிகள் விடா முயற்சியோடு ஊக்கத்துடன் ஈடுபடுவார்களானல் — அரசாங்கத்தின் இக்கொள்கையினைத் தங்களின்

---

1. Prof. M. Venkatarangiah—*Development of Local Boards in the Madras Presidency*, p. 47.

சொந்தக் கொள்கையைப்போல் எண்ணி முழு விசுவாசத்துடன் செயலாக்குவார்களானல் — இதுகாறும் செயலில் இருந்துவந்த எதேச்சாதிகார முறையைக் காட்டிலும் அதிகமான நிருவாகத் திறனேடும், ஆற்றலோடும் செயல்புரிவதற்கு இந்தப் புதிய முறை அதிக வாய்ப்பை அளிக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்களானல், தோல்வியின் காலம் வெகுவாகக் குறைந்து, உண்மையான முன்னேற்றம் மிக விரைவிலேயே உண்டாகும் என்பதில் ஐயமேதுமில்லை.

இந்த நாட்டுமக்கள், உள்ளாட்சித் தத்துவங்களை விரும்பாதவர்கள் என்றும், பொது விவகாரங்களில் அவர்கள் அக்கறை காட்டாதவர்கள் என்றும், பொது விவகாரங்களை அரசு அதிகாரிகளே நிருவகிக்க வேண்டுமென அவர்கள் விரும்புகின்றவர்கள் என்றும் தவருனதொரு கருத்து உருவாக்கப்பட்டிருக்கின்றது. இக்கருத்து உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்று தலைமை ஆளுநர் திட்டமாக நம்புகிருர். மாவட்ட அதிகாரிகளுள் நல்லெண்ணமும் சுறுசுறுப்பும் மிகுந்த அதிகாரிகள் பலர் இத்தகைய கருத்தை உடையவர்களாக இருப்பது உண்மையே; நடப்பு நிலவரங்களை இந்திய மக்கள் மிகுந்த பொறுமையுணர்வோடு சகித்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனல், கல்வியறிவு வளர்ந்து வருவதையொட்டி, பொதுசேவையில் பேரார்வம் கொண்ட அறிவாற்றல் மிகுந்த வர்க்கம் ஒன்று நாடெங்கிலும் வெகுவிரைவாக உருவாகிக் கொண்டு வருவதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அந்த வர்க்கத்தினரின் சேவையைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிடுவோமாயின் அது பெருந்தவருன கொள்கையாக முடியும். இந்திய நாடு நாகரிகத்திலும், பொருள் வளத்திலும் வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. அதனல், நிருவாகப் பணி, ஆண்டுக்கு, ஆண்டு சுமை மிகுந்ததாகப் பெருகிக் கொண்டே போகிறது. உள்ளூர் அதிகாரிகளின் பொறுப்புகளும் பணிகளும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருப்பதை அரசாங்கத்தின் அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. அரசு அலுவலர்கள் அதிக அளவில் நியமிக்கவேண்டுமென எல்லாத் துறைகளிலும் குரல் எழுப்பப்படுகின்றது. வேலைச் சுமை மிகுந்துவிட்டதாக எல்லாத் துறைகளிலும் புகார்கள் கூறப்படுகின்றன. அரசு அலுவலர்களின் வேலைச்சுமைகளைக் குறைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தங்கள் சொந்த விவகாரங்களை பொதுமக்களே நிருவகித்துக் கொள்ளும்படி செய்யும் இந்தத் திட்டத்தைச் செயலாக்குவது தான் அரசாங்கத்துக்குள்ள ஒரே வழி என்று தலைமை ஆளுநர் திட்டவட்டமாகக் கருதுகின்ருர். பிரதிநிதித்துவ அரசாங்கத்திடம் உள்ள சில பொறுப்புகளைப் பொதுமக்கள் தாங்களே கவனித்

துக்கொள்வதற்குரிய வாய்ப்பை உருவாக்க வேண்டும் எனவும் தலைமை ஆளுநர் விரும்புகிறார்"[1]

ரிப்பன் பிரபுவின் இந்த ஆணை எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பினும், அதில் கண்டிருந்த ஆர்வத்தோடு மாகாண அரசும், மத்திய அரசும் அக்கொள்கையைச் செயல்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு 36 ஆண்டுகளுக்குப் பிறகு, **1918**ஆம் ஆண்டில் இன்னொரு ஆணைபிறப்பிக்கப் படுகின்ற வரையிலும், உள்ளாட்சி நிருவாகத் துறையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. உள்ளாட்சி நிருவாகத்தை விரிவுபடுத்துவதில் கர்சான் பிரபு போன்ற தலைமை ஆளுநர்கள் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. எனவே, ரிப்பன் பிரபு மிகுந்த நல்லெண்ணத்துடன் உள்ளாட்சி நிருவாகத் திட்டத்தைக் கொண்டுவந்த போதிலும், நடைமுறையில் இத்துறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆகவே, உள்ளாட்சித் தன்னாட்சி பற்றிய நடவடிக்கை குறித்துப் பொதுமக்கள் கருத்து நிறைவு பெறாமலே இருந்துவந்தது.

## தேசீய எழுச்சி

இதற்கிடையில், இந்திய மக்களின் தேசீய உணர்வு மேலும் விழிப்படைந்தது. அவர்களின் தேசீய உணர்வின் வெளிப்பாடு, அரசியல் நிறுவனங்களாக உருப்பெறத் தொடங்கின. *1884*ஆம் ஆண்டில் சென்னை மகாஜன சபை நிறுவப்பெற்றது; அதைத் தொடர்ந்து *1885*ஆம் ஆண்டில் இந்திய தேசீயக் காங்கிரசு தோன்றியது.

சென்னை சுதேசிச் சங்கத்தைத் தோற்றுவித்தவரும், அதற்குவழி காட்டும் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவருமாகிய இலட்சுமிநரசு செட்டி *1868*ஆம் ஆண்டில் காலமாகிவிடவே, அந்தச் சங்கமும் நாளடைவில் நலிந்து இறுதியில் செயலற்றுப் போயிற்று. மக்களின்மனக்குறைகளை உறுதிப்பாட்டோடு வெளிப்படுத்தவும், பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதற்கும் நிறுவனம் ஒன்று இன்றியமையாது தேவை என்பதை நன்குணர்ந்த ஜி. சுப்பிரமணிய ஐயர், சேலம் விஜயராகவாச்சாரியார் போன்ற தேசபக்தர்கள், செயலிழந்துகிடந்த சென்னை சுதேசிச் சங்கத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்து மறுவாழ்வுபெறச் செய்தார்கள். தனிப்பட்டவர்கள் எத்துணை பேரறிஞர்களாகவும் அருந்திறன் படைத்தவர்களாகவும் இருந்தாலும், மக்களின் குறைகளை அவர்கள் தெரிவிப்பதைவிட, ஒரு சங்கத்தின் வாயிலாக வெளிப்படுத்துவது மிகுந்த ஆற்றலும் பயனும் உடையதாக இருக்கும் என அவர்கள் கருதினார்கள். அந்தக் காலத்தில், அரசாங்கத்தில் பணிபுரிந்துவந்த அதிகாரிகள், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடை ஏதும் இருக்கவில்லை. இதனால், அரசாங்கத்தில் உயர்

1. *Report of the Indian Statutory Commission*, Vol. I, pp. 299-300.

அதிகாரிகளாக விளங்கிய சிலர், சென்னைச் சுதேசிச் சங்கத்திற்கு வழிகாட்டித் துணைபுரிந்து வந்தார்கள்.

## ஜி. சுப்பிரமணிய ஐயர்

சென்னைச் சுதேசிச் சங்கம் மறுவாழ்வுபெறுவதற்குக் காரணமாக விளங்கியவருள் ஒருவரான ஜி. சுப்பிரமணிய ஐயர், பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அவர் 1878ஆம் ஆண்டில் சேலம் விசயராகவாச்சாரியின் துணையுடன் "இந்து" (*"THE HINDU"*) என்ற வார இதழைத் தொடங்கினர்; 1898 வரை அவர் அவ்வார இதழுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவர் உள்ளாட்சி நிருவாகக் கொள்கையைப் பரப்புவதற்காக சென்னை மாகாணமெங்கும் சுற்றுப் பயணம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார். 1884ஆம் ஆண்டில் ரிப்பன் பிரபுவுக்குப் பாராட்டுக் கூறி வழியனுப்புவதற்காகச் சென்ற தூதுக்குழுவில் அவரும் ஓர் உறுப்பினராக இருந்தார். 1885ஆம் ஆண்டில் நடந்த இந்திய தேசீயக் காங்கிரசின் முதலாவது மாநாட்டில் முதலாவது தீர்மானத்தை முன்மொழியும் தனிப்பெருமை அவருக்குக் கிடைத்தது. 1897ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குச் சென்று இந்தியச் செலவினங்கள் பற்றி விசாரித்த வெல்பி குழுவின் (Welby Commission) முன் சென்னை மகாஜன சபையின் சார்பில் சாட்சியமளித்த பெருமையும் சுப்பிரமணிய ஐயருக்கு உண்டு. **'இந்து'** இதழோடு **'சுதேசமித்திரன்'** என்னும் தமிழ் இதழையும் சுப்பிரமணிய ஐயர் தொடங்கினர். இத் தமிழ் இதழை 1898 முதல் நாளிதழாக வெளியிடலானர். அவர் மிகச் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாகவும் விளங்கினர்.[1] "இன்றையச் சென்னை மாகாணத்தை உருவாக்கிய பெரியார்களில் ஒருவர்" என்று அவரைச் சுரேந்திரநாத் பானர்ஜி புகழ்ந்துரைத்துள்ளார்.[2]

சுப்பிரமணிய ஐயர் தம்மைச் சந்திக்கின்றவர்களை எளிதில் கவர்ந்துவிடும் பேச்சாற்றலும் மதிநுட்பமும் வாய்ந்தவர். டபிள்யூ. எஸ். பிளன்ட் (W. S. Blunt) என்பவரை ஐயரும், வீரராகவாச்சாரியாரும் ஒருமுறைச் சந்திக்கச் சென்றிருந்தார்கள். இந்தச் சந்திப்பின்போது ஐயரும், வீரராகவாச்சாரியாரும் தம்மைக் கவர்ந்த விதத்தை பிளன்ட் தாமே விளக்கியுள்ளார். "நான் சென்னை சென்றதும் என்னை முதலில் இரு இந்துப் பிரமுகர்கள் சந்தித்தார்கள். அவர்களில் ஒருவர் சுப்பிரமணிய ஐயர் என்பவர்; அவர் சென்னையில் வெளியாகும் 'இந்து' என்ற இதழின் ஆசிரியர் மற்றொருவர் வீரராகவாச்சாரியார் என்பவர். அவர்கள் இருவரும் தெளிவான சிந்தனையும் மதிநுட்பமும் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். லண்டனிலுள்ள எந்த ஒரு திறமையானப் பத்திரிகை ஆசிரியருக்கும் அவர்கள் சிறிதும் குறைந்தவர்களல்லர். அவர்கள் மிகவும் பண்போடு நடந்துகொண்டார்கள்; மிகத் திறமையோடு உரை

---

1. *Dictionary of Indian Biography*—pp. 420-21.
2. *A Nation in Making*—Appendix 'B'-p. 410.

யாடினுர்கள். சென்னை மாகாண விவசாயிகளிடம் அளவுக்குமீறி நிலவரி வசூலிப்பது குறித்தும், அபரிமிதமான உப்புவரி குறித்தும், நீதிமன்றங்களில் நடைபெறும் ஊழல்கள் பற்றியும், இங்கிலாந்துடன் தடையிலா வாணிக முறையைப் புகுத்தியதன் விளைவாக இந்தியாவில் பருத்தி உற்பத்தியும், பஞ்சாலைத் தொழிலும் நசித்து வருவது குறித்தும், 'ஆக்கப்பணிகள்' என்ற பெயரில் சாலை அமைப்பு போன்ற போலிப் பணிகள் மேற்கொள்வது குறித்தும், பழைமையை விரும்பும் உயர் அதிகாரிகள் எல்லாச் சீர்த்திருத்தங்களையும் கண்மூடித்தனமாக எதிர்ப்பது பற்றியும் நாங்கள் முக்கியமாக உரையாடினேம். அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளுக்குத் தலைமை ஆளுநர்களாலும், ஆளுநர்களாலும்கூட தகுந்த பதில் கூற இயலவில்லை'' என்று பிளன்ட் குறிப்பிட்டுள்ளார்.[1]

சென்னை சுதேசிச் சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்றெழுந்த போதிலும் இலட்சுமிநரசு செட்டியின் தலைமையின்கீழ் இயங்கியது போன்று அத்துணை தீவிரமாக இயங்கவில்லை. இறுதியில், 1884ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற சென்னை மகாஜன சபையிடம் அச் சங்கம் இணைந்துவிட்டது. இச்சபையின் முதல் தலைவராக இருந்தவர் டி. ரங்கைய நாயுடு ஆவார். இவர் தீவிர தேசபக்தராக விளங்கினுர். சமூகச் சீர்த்திருத்தங்களைப் பொறுத்தவரையில் பழைமையை விரும்பும் மனப்போக்குடையவராக இருந்தபோதிலும், ''தாம் வாழ்ந்த காலத்திற்கு உன்னதமான எடுத்துக்காட்டாகக் குறிப்பிடத் தக்க சிறந்ததோர் பிரதிநிதியாக ரங்கைய நாயுடு திகழ்ந்தார். நாட்டுக்காக எத்தகைய அரிய தியாகத்தையும் மகிழ்வோடும் துணிவோடும் செய்வதற்கு அவர் எப்பொழுதும் தயாராக இருந்தார்.''[2]

### அனந்தாச்சார்லு

மகாஜனசபையின் நிறுவனத் தலைவர்களுள் பி. அனந்தாச்சார்லுவும் ஒருவர். சித்தூரில் *1841*ஆம் ஆண்டில் பிறந்த இவர், 1867இல் எஃப். ஏ. தேர்ந்து, சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். *1869*ஆம் ஆண்டில் பி.எல். தேர்வுபெற்று, *1870*-இல் வழக்குரைஞர் தொழில் தொடங்கினுர். *1875*ஆம் ஆண்டில் இவர் பொதுசேவையில் ஈடுபட்டார். சென்னை மாகாணத்தில் இவர் பங்குபெருத துறை எதுவுமே இல்லை எனலாம். அரசாங்கம் இவருக்கு 'ராவ்பகதூர்' பட்டமும், C. I. E. என்ற விருதும் வழங்கிச் சிறப்பித்தது.

மிக உயர்ந்த தகுதிகள் வாய்ந்த அனந்தாச்சார்லு இடைவிடா முயற்சியினுலும், கடும் உழைப்பினுலும் சென்னையில் முன்னணி வழக்குரைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அரசியலில் இவரது

---

1. *India Under Ripon*—Private Diary-p. 36.
2. *Madras Maha Jana Sabha Diamond Jubilee Souvenir*, 1946, p.46.

அஞ்சாநெஞ்சமும் சுதந்திரமான போக்கும் இவருக்குப் பெரும்புகழ் தேடித்தந்தன. அரசினரிடம் மனுக்களை வழங்குவதே அந்நாளில் முக்கிய அரசியல் நடவடிக்கையாக இருந்துவந்தது. இந்த மனுக்களை வரைவதில் கைதேர்ந்தவராக அனந்தாச்சார்லு விளங்கினார். அதிகாரிகளைச் சந்தித்துக் குறைகளை அவர்கள் உளங்கொள்ளும் வகையில் எடுத்துரைப்பதிலும் இவர் திறன்வாய்ந்தவராகத் திகழ்ந்தார். இந்திய தேசீயக் காங்கிரசை நிறுவிய தேசபக்தர்களுள் இவரும் ஒருவர். 1891ஆம் ஆண்டில் நாகபுரியில் நடந்த ஏழாவது காங்கிரசு மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் இவர் ஆற்றிய தலைமையுரை என்றும் மறக்க இயலாத உணர்ச்சிப் பேருரையாகும். "சுதந்திர இயக்கத்தின் முன்னோடிகள் என்ற முறையில் நாம் பெறப்போவது, 'உரிமைக்குப் பாடுபட்டோம்; அநியாயத்தை எதிர்த்துப் போராடினோம்" என்ற மனநிறைவு ஒன்றுதான். ஆனால், நம்முடைய இன்றைய உழைப்பின் பலனை நமக்குப் பின்வரும் தலைமுறையினர்தான் அனுபவிக்கப் போகின்றார்கள். அஞ்சா நெஞ்சத்தோடும், கொண்ட கொள்கையில் விடாப்பிடியான ஆர்வத்தோடும், வருங்காலத் தலைமுறையினரின் நல்வாழ்வுக்காகக் கொடிய அடக்குமுறைகளையும் சொந்த இழப்புகளையும் பொருட்படுத்தாமல் அயராமல் பாடுபட்ட தியாகச் செம்மல்களின் பெயர்களை நமது சந்ததியினர் நன்றிப்பெருக்குடன் என்றென்றும் நெஞ்சில் இருத்திக் கொள்வார்கள். தன்னலம் கருதா இத்தியாகிகளுக்கு அரசினர் விருதுகள் வழங்கி சிறப்புச் செய்யப் போவதில்லை. ஆனால், இவர்கள் தங்கள் முற்பிறப்பின் நல்வினையால் பெரும்பட்டங்களைப் பெறுதற்குரிய பெருமையெல்லாம் பெற்றவர்களாவார்கள். நாட்டுக்கு விடுதலை ஈட்ட ஆண்டவன் அனுப்பிய உண்மையான திருத்தூதர்கள் இவர்கள் என்பதை உணர்ந்து அதற்குரிய பெருமையை இவர்களுக்கு அளிக்கச் சமகாலத்தவர் தவறிவிடலாம். ஆயினும், இவர்கள் திருத்தூதர்கள் என்பது ஆண்டவன் இட்ட ஆணை; அதை யாராலும் மாற்ற இயலாது, இவர்கள் தங்கள் வாழ்வின் கடமைகளை ஆற்றி முடித்ததும் உலகின் உயர்ந்த விருதுகள் எல்லாம் இவர்களுக்குத் தானே வந்து குவியும். தங்களின் தாய்த்திருநாட்டைத் தாங்கள் கண்ட சீர்கெட்ட நிலையிலிருந்து சிறிதேனும் சீர்தூக்கிவிட்டோம் என்ற உணர்வை — இனத்தாலும் சாதியாலும் மொழியாலும் மதத்தாலும் பலவாறாகப் பிளவுபட்டுக் கிடக்கும் பாரத மக்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்தி ஐக்கிய இந்தியாவை உருவாக்கினோம் என்ற பெருமிதத்தை — அரசியல், சமூக மடமையில் மூழ்கிக் கிடந்த மக்களைச் சிந்திக்கச் செய்து, செயல்படத் தூண்டி, சட்ட பூர்வமான வழிகளில் தங்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட வழி காட்டினோம் என்ற மனநிறைவை இவர்கள் அடைந்து மனமகிழ்வார்கள்" என்று அனந்தாச்சார்லு தமது தலைமையுரையில் முழங்கினார்.[1] சமூகச்சீர்திருத்தங்களையும் அனந்தாச்சார்லு தீவிரமாக ஆதரித்தார். சட்டங்களின் மூலம் சமூகச் சீர்திருத்தங்களைச் செயல்

1. G. A. Natesan (Ed.) — *Indian Politics* — Part II, p. 61.

படுத்த இவர் பாடுபட்டார். தலைமை ஆளுநர் சபை உறுப்பினர் என்ற முறையில் இவர் சமூகச் சீர்திருத்தங்களை வலியுறுத்தி வந்தார்.

சென்னை மகாஜன சபை 1884ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற போது, இந்திய தேசீயக் காங்கிரசு தோன்றியிருக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. ''இந்தியா முழுவதிலும் முதலில் தோன்றி இன்றும் இருந்துவரும் மிகப் பழைய அரசியல் நிறுவனம் சென்னை மகாஜனசபைதானு என்பதை நிச்சயமாகக் கூற இயலா விடினும், தென்னிந்தியாவில் இன்றும் இயங்கிவரும் மிகப் பழைய அரசியல் நிறுவனம் சென்னை மகாஜனசபைதான் என்பதில் ஐயம் ஏதுமில்லை.''[1]

## காங்கிரசின் தோற்றம்

இந்தியாவெங்கிலும், பொதுமக்கள் கருத்து வளர்ச்சியில், இந்திய தேசீயக் காங்கிரசின் தோற்றம், மிக முக்கியமானதொரு திருப்பமாக அமைந்தது. எனவே, காங்கிரசின் தோற்றம், அதன் கொள்கைகள் வளர்ந்த விதம் குறித்து இங்கு சுருங்கக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

நாட்டு மொழிப் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act), ஆயுதச்சட்டம் (Arms), ஐ. சி. எஸ். அதிகாரிகள் தேர்வு முதலியவை பற்றி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராகப் பொதுமக்கள் நடத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி, சென்னை மாகாணம் உட்பட இந்தியா முழுவதிலும் அரசியல் வாழ்வு ஒரு திட்டமான வடிவம் பெறுவதற்குத் துணை புரிந்ததுடன், பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதற்கும் பேருதவிபுரிந்தது. இக்கிளர்ச்சி தொடங்கியதுமே விரைவாக வலுவடைந்து, நாட்டுக்குச் சுதந்திரம் கோரும் பெரும் போராட்டமாக உருவெடுத்தது. இல்பர்ட் மசோதா (Ilbert Bill) தொடர்பாக ஏற்பட்ட பெரும் சர்ச்சையினைத் தொடர்ந்து, பிரதிநிதித்துவ நிறுவனங்களை அமைக்கவேண்டுமென்ற திட்டவட்டமான கோரிக்கைகள் எழுப்பப்படலாயின.

## இல்பர்ட் மசோதா

1873ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் (Criminal Procedure Code, 1873), மாகாணத் தலைநகர்களில் தவிர, மற்ற நகரங்களில் ஐரோப்பிய பிரிட்டிஷ் குடிகள் குற்றங்கள் செய்தால் அவர்களை ஐரோப்பிய நீதிபதிதான் விசாரிக்கவேண்டுமெனவும், இந்திய நீதிபதிகள் விசாரணை செய்யக்கூடாதெனவும் ஒரு விதி இருந்தது. ஆனுல் அந்தச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, ஐ.சி.எஸ். தேர்வு எழுதுவதற்கு இந்தியர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, பல இந்தியர்கள் ஐ. சி. எஸ். அதிகாரிகளாகி பொறுப்பான பதவிகளை வகித்து வந்தார்கள். இந்தியர்கள் பலர் நீதிபதிகளாகவும் இருந்

---

1. *Madras Maha Jana Sabha Diamond Jubilee Souvenir*, 1956, p. 7.

தார்கள். ஐரோப்பிய நீதிபதிகளுக்குரிய அதே அதிகாரத்தை இந்திய நீதிபதிகளுக்கும் வழங்குவதுதான் நியாயம் என வலியுறுத்தப்பட்டு வந்தது. இந்தக் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்த ரிப்பன் பிரபு, நீதிவழங்குவதில் இனவேறுபாடு அடிப்படையிலான இத்தகுதியின்மையை நீக்கிவிட முடிவுசெய்தார். ஐரோப்பிய நீதிபதிகளுக்கும் இந்திய நீதிபதிகளுக்கும் சரிசமமான அதிகாரம் வழங்க வழிசெய்யும் மசோதா ஒன்றைத் தலைமை ஆளுநர் ஆலோசனை சபையின் உறுப்பினராகிய இல்பர்ட் என்பவர் 1883ஆம் ஆண்டில் தயாரித்தார்.

## *ஐரோப்பியர் எதிர்ப்பு*

இந்த மசோதாவை ஐரோப்பியர்கள் அனைவரும் ஒருமுகமாக எதிர்த்தார்கள். கல்கத்தா நகர மண்டபத்தில் நடந்த ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் இல்பர்ட் மசோதாவை வன்மையாகக் கண்டித்துப் பலர் பேசினார்கள். வங்காள மாகாணம் முழுவதிலும் இல்பர்ட் மசோதாவிற்குக் கண்டனம் தெரிவிக்கும் பொதுக்கூட்டங்கள் நடந்தன. ஐரோப்பியர் நடத்திய இந்தக் கிளர்ச்சியை, இந்தியர்களும் தங்களுடைய பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்குரிய முன்மாதிரியாகக் கொண்டனர். ஐரோப்பியர்கள் ஒன்று சேர்ந்து ஆங்கிலோ—இந்தியர்—ஐரோப்பியர் பாதுகாப்புச் சங்கம் (Anglo-Indian and European Defence Association) என்ற பெயரில் ஓர் அமைப்பை நிறுவினர். அதைப் பார்த்து இந்தியர்களும் ஒரு சங்கத்தை அமைத்துக் கொண்டார்கள். ரிப்பன் பிரபு நடத்திய வரவேற்புகளை அதிகாரிகளல்லாத ஐரோப்பியர்கள் புறக்கணித்தார்கள். சிம்லாவிலிருந்து ரிப்பன் பிரபு கல்கத்தாவிற்கு வந்தபொழுது, ஐரோப்பியத் தோட்ட முதலாளிகள் தெருக்களில் அவரைப் பகிரங்கமாக அவமானப்படுத்தினார்கள். இல்பர்ட் மசோதாவை எதிர்ப்பதற்காக ஐரோப்பியச் சீமாட்டிகளின் குழுக்களையும் ஐரோப்பியர்கள் அமைத்தார்கள்.

ஐரோப்பியர்களின் இந்தக் கிளர்ச்சிக்கு ரிப்பன் பிரபுவின் அரசாங்கம் ஓரளவு பணிந்துபோக நேர்ந்தது. இல்பர்ட் மசோதாவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. இதன்படி, ஐரோப்பியக் குற்றவாளிகளை விசாரிக்கும் அதிகாரம் இந்தியக் குற்றவிசாரணை நீதிபதிகளுக்கும் (Indian Sessions Judges), இந்திய மாவட்ட நடுவர்களுக்கும் (District Magistrates) மட்டுமே வழங்கப்பட்டது; அப்படி விசாரிக்கப்படும் ஐரோப்பியக் குற்றவாளிகள், பாதிக்குமேல் ஐரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சான்றுயத்தினால் (Jury) விசாரிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். இந்த உரிமை, இந்தியர்களுக்குக் கிடையாது. இதனால், ஐரோப்பியர் தனியுரிமைகள் தொடர்ந்து நீடித்தன. நீதி வழங்குவதில் இனப்பாகுபாட்டை நீக்குவதற்கு அரசினர் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

## இந்தியர் கொதிப்பு

இல்பர்ட் மசோதாவிற்கெதிராக ஐரோப்பியர் நடத்திய கிளர்ச்சி, இந்தியர்களிடையே பெருங்கொதிப்பை உண்டாக்கியது. ஐரோப்பியர்களின் கிளர்ச்சிக்கு எதிராக நாடெங்கிலும் இந்தியர்களின் கிளர்ச்சி மூண்டது. இக் கிளர்ச்சியில் சென்னை மாகாணமும் தீவிரப் பங்குகொண்டது. 'சுதேசமித்திரன்' இதழில் வெளியான கட்டுரையொன்றில் பின்வருவாறு கூறப்பட்டிருந்தது:

> "ஐரோப்பியர்களின் பழக்கவழக்கங்களும் பண்பாடுகளும் இந்தியர்களுக்குத் தெரியாது என்று ஐரோப்பியர்கள் கூறுகிறார்கள். நம்முடைய பழக்கவழக்கங்களையும் பண்பாட்டையும் அவர்கள் அறிந்திருக்கிறார்களா? ஐரோப்பிய நீதிபதிகள் தங்களுடைய அறியாமை காரணமாக இந்தியர்களைத் தவறாகத் தண்டிப்பதை நாம் அறியாதவர்களா? இந்திய நீதிபதிகள் தங்களின் தேசீய உணர்ச்சியின் காரணமாக நீதி பிறழ்ந்துவிடுவார்கள் என்று அவர்கள் வாதிடுகிறார்கள். இதற்கு, ஐரோப்பியர்கள் மட்டும் விதிவிலக்காகிவிட முடியுமா என்று அவர்களை நாம் கேட்க விரும்புகிறோம். உண்மையில் குற்றம் புரிந்த பல ஐரோப்பியர்களை, ஐரோப்பிய நீதிபதிகள் தங்களுடைய இன உணர்ச்சி காரணமாக விடுதலை செய்திருப்பதைக் கண்டிக்கிறோம். மாகாணத் தலைநகர்களில், ஐரோப்பியர்கள் பெருமளவில் இருப்பதாலும், அவர்கள் தங்களுடைய குறைகளை வெளியிடுவதற்குப் பத்திரிகை இருப்பதினாலும், இந்திய நீதிபதிகள் தவறாக நீதி வழங்கத் துணியமாட்டார்கள் என்று சில ஐரோப்பியர்கள் கூறுகிறார்கள். இது உண்மைதான். ஆனால் மற்ற நகரங்களிலும் இதே நடைமுறையைக் கையாள முடியாதா?"[1]

இல்பர்ட் மசோதா இவ்விதம் தோல்வியைத் தழுவியது கண்டு, முஸ்லிம்கள் உட்பட இந்திய மக்கள் அனைவரும் வருத்தமடைந்தார்கள். "ஷாம்ஸ்-உல்-அக்பர்" என்ற முஸ்லிம் பத்திரிகையின் 31—12—1883ஆம் தேதி இதழ் இது பற்றித் தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளது. "ஐரோப்பியக் குற்றவாளிகளை இந்திய நீதிபதி விசாரணை செய்வதுபற்றி நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டுவந்த சிக்கலுக்கு இறுதியில் ஐரோப்பியர்களுக்குச் சாதகமான முறையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. தலைமை ஆளுநர் ஆலோசனை சபையில் இல்பர்ட் தமது வரைவுச் சட்டத்தை முன்மொழிந்தார். தலைமை ஆளுநர், இந்தியர்களுடைய கோரிக்கையின் நியாயத்தை எடுத்துரைத்து, அம்மசோதாவை நிறைவேற்றுவதற்குத் தான் உறுதி பூண்டிருப்பதை வலியுறுத்தினார். ஆனால், கல்கத்தாவிலுள்ள தம்முடைய சொந்த நாட்டவர்களின் ஆத்திரத்திற்கு அஞ்சி அவர்

---

1. Newspaper Report (Confidential), 1883, p. 3

கடைசி நேரத்தில் பணிந்து போய்விட்டார்'' என்று அந்த இதழ் குறிப்பிட்டுள்ளது.[1]

## இந்தியர் கற்ற பாடம்

இல்பர்ட் மசோதா இவ்வாறு கைவிடப்பட்டமை, ஒருவகையில் இந்திய மக்களுக்கு நல்லதாகப் போயிற்று. "இம்மசோதா கற்றுத் தந்த பாடத்தை படித்த இந்தியர்கள் எவரும் என்றும் மறக்கவே இல்லை. புகழ்ச்சிக்கும் கெஞ்சலுக்கும், இலஞ்சத்துக்கும் அச்சுறுத் தலுக்கும்தான் ஆட்சியாளர்கள் அடிபணிவார்கள் என்பதைத்தான் அதுவரை அவர்கள் அறிந்திருந்தார்கள். பத்திரிகையின் அவதூறு களுக்கும், அநாகரிக நடவடிக்கைகளுக்கும் பயந்து அரசினர் பணிந்துபோவதைக் காண்பது அவர்களுக்குப் புதியதொரு அனுபவ மாக இருந்தது. பிந்திய நாட்களில், இங்கிலாந்தில் நடந்த வாக் குரிமை இயக்கம், அயர்லாந்து சுயாட்சி இயக்கம் ஆகியவற்றி லிருந்து சிலவகை உத்திகளை இந்திய தேசீய இயக்கத்தினர் கைக் கொண்டனர் என்பது உண்மையே; என்றாலும், இல்பர்ட் மசோதா விற்கு எதிராக ஐரோப்பியர்கள் வெற்றிகரமாக நடத்திய இயக்கம் தான், இந்திய அரசியல் தலைவர்கள் நடத்திய இயக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்தது என்றே சொல்லவேண்டும். இல்பர்ட் மசோதா எதிர்ப்பு இயக்கம் நடந்தபின் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்திய தேசியக் காங்கிரசும், ஐரோப்பியர் சங்கமும் தோன்றின என்பதை இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்''[2]

## சென்னையில் காங்கிரசு தோற்றம்

இந்திய தேசீயக் காங்கிரசை அமைப்பதற்கு இறுதியாக முடி வெடுக்கப்பட்ட இடம் சென்னையே ஆகும். ''1884ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை அடையாற்றில் நடந்த பிரம்ம ஞானசபை யின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த பிரதிநிதி களுள் சிறந்த தேசபக்தர்கள் 17 பேர், மாகாணக் குழுவினராக அமைந்து, பின்னர் தொடர்ந்து ஆலோசனை நடத்துவதெனத் தீர்மானித்தார்கள்'' என்று அன்னிபெசன்ட் அம்மையார் குறிப்பிட் டுள்ளமை இதனை வலியுறுத்துவதாகும்.[3]

பிரம்மஞான சபையின் கூட்டம் முடிவடைந்ததும், இந்த 17 அறிஞர்களும், திவான் பகதூர் இரகுநாதராவின் இல்லத்தில் கூடினார்கள். இந்திய மக்களின் முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்த உயர் அதிகாரிகளுள் இரகுநாதராவும் ஒருவர். அவர் சமூக விவகாரங்களிலும் தீவிர அக்கறை காட்டினார். 1887ஆம்

1. Ibid-p. 3.
2. E. Thompson and G. T. Garratt — *Rise and Fulfilment of British Rule in India* — p. 498
3. How India wrought for Freedom ? — p. 1.

ஆண்டில் சென்னையில் நடந்த முதலாவது இந்தியச் சமூக மாநாட்டைக் (Indian Social Conference) கூட்டுவதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் இரகுநாதராவ் ஆவார். இவருடைய இல்லத்தில் கூடியிருந்த அறிஞர்களில் சென்னை மாகாணத்தில் அன்று முக்கியத் தலைவர்களாக விளங்கிய பி. ரங்கையா நாயுடு, பி. அனந்தாச்சார்லு, எஸ். சுப்பிரமணிய ஐயர் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்கள் அனைவரிலும் தலைமைசான்றவராக விளங்கியவர் எஸ். சுப்பிரமணிய ஐயராவார். இவர் 1841ஆம் ஆண்டில் பிறந்தவர். 1868 ஆம் ஆண்டில் சட்டத்தில் பட்டம்பெற்று, 1868 முதல் மதுரையில் வழக்குரைஞர் தொழில் நடத்தி வந்தார். 1887 முதல் சென்னையில் தொழில் தொடங்கினர். 1888ஆம் ஆண்டில் இவர் அரசு வழக்குரைஞராக (Government Pleader) நியமனம் பெற்றார்; 1892ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் குற்றப் பொதுவழக்குரைஞர் (Public Prosecutor) ஆனர், இப்பதவிக்கு நியமிக்கப் பெற்ற முதல் இந்தியர் இவரேயாவார். 1894 வரை இவர் இப்பதவியை வகித்தார். 1895ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற இளநிலை நீதிபதியாகி (Puisne Judge) இரண்டாண்டுகள் அப்பதவியை வகித்தார். அக்காலத்தில் மூன்று முறைத் தற்காலிகத் தலைமை நீதிபதியாகப் பணியாற்றினர். சென்னைப் பல்கலைக்கழகம் 1908ஆம் ஆண்டில் இவருக்குச் சட்ட மேதை (Doctor of Laws) என்ற பட்டம் வழங்கியது. இந்தச் சிறப்புப் பட்டத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதல் பெற்றவர் இவரேயாவார். பிற்காலத்தில் இவர் அரசியலில் முக்கியப் பங்கு கொண்டார். அன்னிபெசன்ட் அம்மையாரை பென்ட்லாண்டுப் பிரபுவின் (Lord Pentland) அரசாங்கம் கைது செய்து உதகையில் காவலில் வைத்தபோது, அதை அநியாயம் எனக் கருதிய இவர், அரசினரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவிப்பதற்காக, பிரிட்டிஷ் அரசாங்கம் தமக்கு வழங்கியிருந்த சி.ஐ.ஈ., திவான்பகதூர், கே. சி. ஐ. ஈ. முதலிய விருதுகள் அனைத்தையும் துறந்தார். இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தை வலியுறுத்தும்படி கோரி அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனுக்கு இவர் எழுதிய கடிதம் உலகப் புகழ்பெற்றதாகும். இவ்வறிஞர் 1924ஆம் ஆண்டில் காலமானர்.[1]

## ஆலன் ஆக்டேவியன் ஹியூம்

காங்கிரசின் வரலாற்றாசிரியர் எனப் புகழ்பெற்ற பட்டாபி சீத்தாராமையா, காங்கிரசின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில், "காங்கிரசின் தோற்றம் எதுவாயினும், அதைத் தோற்றுவித்தவர் யாராயினும், அத்தகையதொரு நிறுவனத்தை நிறுவவேண்டியது அவசியம் என்ற எண்ணம் நெடுநாட்களாக நிலவி வந்திருக்கிறது என்பதும், அதற்கான முதல் முயற்சியை ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allan Octavian Hume) மேற்கொண்டார் என்பதும், முதலாவது இந்திய தேசீய மாநாட்டை (Indian National Union) டிசம்பர்

1. *The Madras High Court Centenary Volume* — pp. 44-45.

மாதத்தில் புனுவில் கூட்டுவதற்கு 1885 மார்ச் மாதத்தில் முதல் அறிக்கை வெளியிடப்பட்டது என்பதும், இந்திய நாடெங்கும், வடக்கிலும் தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும், அருவமானதொரு எண்ண ஓட்டமாக உலவிவந்த ஒரு கருத்து, திட்டவட்டமான தொரு வடிவாகவும், செயல்திட்டமாகவும் உருவாகியது என்பதும் நமக்குத் தெளிவாகத் தெரியவருகின்றது'' என்று கூறியுள்ளார்.[1]

பட்டாபி சீத்தாராமையா குறிப்பிட்டுள்ள ஹியூம் இந்தியர்களின் நல்வாழ்வுக்காக அரும்பாடுபட்ட ஆங்கிலப் பெருந்தகையாளர் களுள் தலையாய இடம்பெறும் தகைமையாளராவார். இவர் ஐ. சி. எஸ். அதிகாரியாகஇருந்தவர். இந்தியாவில் பல பெரும் பதவிகளை வகித்தவர். அதிகாரியாக இருந்தபொழுதும், ஓய்வு பெற்ற பிறகும் சுமார் 60 ஆண்டுக்காலம் இந்தியாவின் நலனுக்காக இவர் பாடுபட்டார். இந்திய அரசியலின் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்ட தலைசிறந்த ஆங்கிலப் பெருமக்களுள் தலைமை சான்றவர் என்ற பெருமையைப் பெறுவதற்கு இவர் முற்றிலும் தகுதிவாய்ந் தவர் எனலாம்.[2]

ஹியூமுக்கு இந்தியர்கள் எத்துணை அளவு கடமைப்பட்டவர்கள் என்பதை பி. அனந்தாச்சார்லு குறிப்பிட்டிருப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ''உடல்நலம், பணம், ஓய்வு, மன நிம்மதி ஆகிய அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு, இந்நாட்டுமக்களின் நலனுக் காக அயரா ஆர்வத்துடன் அவர் (ஹியூம்) இடையருது மனப்பூர்வ மாகப் பாடுபட்டார். இதனுல் நம்முடைய நன்றிக்கும் அன்புக்கும் மட்டுமின்றி, நம்முடைய வருங்காலச் சந்ததியினரின் நன்றிக்கும் அன்புக்கும் அவர் பாத்திரமானவராகிவிட்டார்'' என்று அனந்தாச் சார்லு கூறுகின்ருர்.[3]

கல்கத்தாப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு 1883ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியன்று ஹியூம் ஒரு கடிதம் வரைந்திருந்தார். அக்கடிதத்தில் அவர் பின்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார் :

''ஒவ்வொரு நாட்டுக்கும், தன் தகுதிக்கேற்ப, நல்லரசு ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் உரிமை உண்டு. இந்நாட்டில் மிக உயர்ந்த கல்விபெற்றுப் பட்டதாரிகளாய்த் திகழும் நீங்கள் தன்னலம் கருதாமல், உங்களுடைய உரிமைக்காகவும் உங்கள் தாய்நாட்டின் விடுதலைக்காகவும், உங்களுடைய விவகாரங் களை நிருவகிப்பதில் நீங்கள் அதிகப் பங்கு பெறுவதற்காகவும் ஆர்வத்துடன் பாடுபட முன்வராவிடில், உங்களுடைய நண்பர்

1. *The History of the Indian National Congress* — vol. I, p. 11.
2. For a detailed account of his life, vide Weddernburn—*A. O. Hume*.
3. G. A. Natesan (Ed.)—*op. cit.* Part II, p. 54.

களாகிய எங்களுடைய எண்ணம் தவறானதாகிவிடும்; உங்களுடைய நலனுக்காக ரிப்பன் பிரபு கொண்டுள்ள உன்னதக் குறிக்கோள்கள் யாவும் பயனற்றனவாக, வெறுங்கனவுகளாகப் போய்விடும்; முன்னேற்றம் காணலாம் என்ற இன்றைய நம்பிக்கைகள் எல்லாம் சிதறிவிடும். உண்மையில் இந்தியாவின் இன்றைய அரசாங்கத்தில் குறையேதும் இல்லை: இதைவிடச் சிறந்த அரசாங்கம் உங்களுக்குத் தேவையுமில்லை. உங்களைக் கற்றுக் குட்டிகளாகக் கருதுவதாகவும், சிறு குழந்தைகளைப்போல் நடத்துவதாகவும் ஆத்திரங்கொண்டு வீண் புகார்கள் கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை நன்கறிந்த செயல்வீரர்கள் இதோ இருக்கிறார்கள் என்பதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். முக்கியமான எல்லாப் பதவிகளிலும், இந்தியர்களை ஒதுக்கிவிட்டு ஆங்கிலேயரையே நியமிப்பதாக இனிமேலும் குறை கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. பொதுத் தொண்டில் குன்றாத ஆர்வம், தன்னலம் கருதாத் தகைமை, பிறர் நலம் பேணும் பேராண்மை, ஆழ்ந்த தேசபக்தி ஆகிய அரும்பண்புகளினால் ஆங்கிலேயர் இன்றைய உயர்நிலையை எய்தியிருக்கின்றார்கள். இந்தப் பண்புகளில் நீங்கள் குறைவுடையவர்களாக இருப்பீர்களாயின், உங்களுக்குப் பதில் அவர்களுக்கு முன்சலுகை வழங்குவது தவறாகாது; அவர்கள் உங்களை ஆள்பவர்களாக ஆகியிருப்பதிலும் வியப்பேதுமில்லை. தியாக உணர்வும், தன்னலமின்மையும்தான் நாட்டின் விடுதலைக்கும் நல்வாழ்வுக்கும் என்றும் வழிவகுக்கும், என்னும் மகத்தான உண்மையை நன்கு உணர்ந்து, அதற்கிணங்கத் துணிவோடும் தளரா ஊக்கத்தோடும், குன்றாத ஆர்வத்தோடும் செயலாற்றுவதற்கு நீங்கள் தயாராகும் வரையில், ஆங்கிலேயர்கள் உங்களை ஆள்பவர்களாகவும் உங்கள் எசமானர்களாகவும் நீடித்துக்கொண்டு தானிருப்பார்கள்; அதுவரையில், அந்நிய ஆதிக்க நுகத்தடி உங்கள் கழுத்தை அழுத்துவதை நீங்களும் தாங்கிக் கொண்டு தானிருக்கவேண்டும்.''[1]

## முதல் காங்கிரசு மாநாடு

இந்திய தேசீயக் காங்கிரசின் முதல் மாநாடு 1885ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் நாள் கூடியது. எஸ். சுப்பிரமணிய ஐயர், பி. அனந்தாச்சார்லு, பி. ரங்கைய நாயுடு, ஜி. சுப்பிரமணிய ஐயர், சேலம் விஜயராகவாச்சாரியார் ஆகியோர் சென்னை மாகாணப் பிரதிநிதிகளாக இம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இந்தியச் சட்டசபைகளில் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் உயர்த்தவேண்டும் என்ற கோரிக்

1. W. Wedderburn — *op. cit.*, pp. 52-53.

கையை முதல் காங்கிரசு மாநாடு வலியுறுத்தியது. இதுபற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை இம்மாநாட்டில் மேதகு கே. டி. டெலாங் (Hon. K. T. Telang, C. I. E.) முன்மொழிந்தார். எஸ். சுப்பிரமணிய ஐயர் இத்தீர்மானத்தை வழிமொழிய, தாதாபாய் நௌரோஜி அதை ஆதரித்தார். "இப்போதுள்ள மத்தியச் சட்ட சபையிலும், மாகாணச் சட்டசபைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகரிக்க வேண்டியது இன்றியமையாதது என இந்த மாநாடு தீர்மானிக்கிறது. இத்தகையச் சட்டசபைகளை வடமேற்கு மாகாணங்களுக்கும், அவுத் பகுதிக்கும், பஞ்சாபிற்கும் அமைக்கவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது. எல்லா வரவுசெலவுத் திட்டங்களும் (Budgets) இச்சட்டசபைகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும். நிருவாகத்தின் எல்லாத் துறைகளைப் பற்றியும் சட்ட சபைகளின் உறுப்பினர்கள் வினா எழுப்ப அதிகாரம் வழங்க வேண்டும். சட்டசபைகளில் பெரும்பான்மை ஆதரவோடு மேற்கொள்ளப்படும் முடிவுகளை ஆட்சித்தலைவர் (தலைமை ஆளுநர்) தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தித் தள்ளுபடி செய்வாரானால் அதற்குச் சட்டசபைகளின் பெரும்பான்மையினரால் தெரிவிக்கப்படும் எதிர்ப்பைப் பரிசீலனை செய்வதற்காக மக்கள் சபையின் (House of Commons) நிரந்தரக் குழு ஒன்றை அமைக்கவேண்டும்" என்று அத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.[1]

இந்தத் தீர்மானம் பற்றிக் குறிப்பிட்ட ஹியூம், "இந்திய நாடு இறுதியில் ஒன்றுபட்டுவிட்டது; இந்த ஒற்றுமையை இனி யாராலும் ஒருக்காலும் குலைக்க இயலாது; இந்திய மக்கள் எழுச்சிகொண்டு, அவர்களிடம் எதிர்பார்த்த மகத்தான பணிக்கு வரிந்துக்கட்டிக் கொண்டு ஆயத்தமாகிவிட்டார்கள் என்பதை இந்தத் தீர்மானம் எடுத்துக்காட்டுகின்றது" என்று கூறியுள்ளார்.[2]

### காங்கிரசின் குறிக்கோள்

காங்கிரசு மாநாட்டை ஒவ்வோராண்டும் இந்தியாவில் வெவ்வேறிடங்களில் நடத்துவதென முதல் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் காங்கிரசின் குறிக்கோள் குறித்து 17—12—1887ஆம் தேதியிட்ட 'சுதேசமித்திரன்' இதழ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "இந்தியாவின் ஆட்சியிலிருந்து ஆங்கிலேயர் உடனடியாக நீங்கிவிடவேண்டும் என்பதோ, ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்குச் சிறிதும் தகுதியில்லாத இந்தியர்களிடம் அரசாங்க அதிகாரங்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதோ காங்கிரசின் நோக்கமல்ல; மாறாக, வரிகள் விதிக்கவும், செலவுகள் செய்யவும், சட்டங்கள் இயற்றவும் முற்படுவதற்கு முன்னர் மக்கள் பிரதிநிதிகளின் கருத்தை முதலில் அரசாங்கம் தெரிந்துகொள்ள

1. Annie Besant — *op. cit.* p. 13.
2. W. Wedderburn — *op. cit.* p. 59.

வேண்டும் என்பதே காங்கிரசின் நோக்கமாகும். பிரதிநிதிகள் தெரிவிக்கும் கருத்துகளை அரசினர் ஏற்கலாம்; அல்லது ஏற்காமலும் இருக்கலாம். ஆனால், மக்கள் பிரதிநிதிகளின் கருத்தை எப்பொழுதும் அறிந்துகொள்ள அரசினர் முயலுதல் அவசியம். இப்படி ஒரு நியதி கடைப்பிடிக்கப்படுமானால், மக்களின் விருப்பத்திற்கு முரணாக நடப்பது அரசினருக்கு எளிதாக இராது. அரசாங்கம் அந்நியரால் நடத்தப்படுவதால், குடிமக்களின் விருப்புவெறுப்புகளை அறிந்து கொள்வதற்கு அதற்கு வழி இல்லை. மேலும், சொந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகளைப்போல், வேறு யாராலும் மக்களின் குறைபாடுகளை வலியுறுத்திக் கூறஇயலாது. எனவே, தன் சொந்த நாட்டின் ஆதிக்கத்தைப் பெருக்குதற்கு இந்த நாட்டின் நிதியை அரசாங்கம் வீணாகச் செலவிடுகிறது இயற்கையே. பர்மாவை ஆங்கிலேயர் ஆக்கிரமித்துக் கொண்டதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். பர்மாவைக் கைப்பற்றிக் கொண்டதால், ஆங்கிலேயரின் வாணிகத்திற்குப் புதிய விற்பனை வாய்ப்புகள் ஏற்பட்டன என்பது உண்மை. ஆனால், அந்த நடவடிக்கையினால், இந்திய மக்களின் தேவைகள் ஏதேனும் நிறைவுபெற்றதா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். நாட்டை ஆளும் அரசாங்கத்தில் இந் நாட்டுமக்களுக்குச் சிறிதேனும் பங்கு இருக்குமாயின், அந்நியரின் நலனுக்காக இந்நாட்டின் நிதியை அரசினர் வீணாகச் செலவிடுவதற்கான வாய்ப்புகள் குறையும். எனவேதான், அந்த அளவுக்கேனும் அதிகாரத்தைப் பெறுவதைக் காங்கிரசு தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது."[1]

## முஸ்லீம்கள் ஐயம்

இந்திய மக்கள் அனைவரும் ஆரம்பத்தில் ஒருமுகமாக, காங்கிரசு இயக்கத்தில் ஆர்வம்கொண்டதாகக் கூற இயலாது. கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் காங்கிரசுடன் ஒத்துழைக்க மறுத்தார்கள். அக்காலத்தில் முஸ்லீம்கள் முன்னணித் தலைவராக விளங்கியவர் சர் சையத் அகமது கான் என்பவராவார். இந்துக்களும், முஸ்லீம்களும் இந்தியாவின் இருகண்கள் என்று அவர் முதலில் கருதினார். பின்னர் காங்கிரசு அமைக்கப்பட்டதும், காங்கிரசுடன் தொடர்புகொள்ளாமல் அவர் விலகி இருந்ததுடன், போட்டிச் சங்கங்களையும் அமைத்தார். தம்முடைய பழைய கொள்கைகள் சிலவற்றையும் இவர் கைவிட்டார். உதாரணமாக, இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் ஐ. சி. எஸ். தேர்வுகள் நடத்தவேண்டும் என அவர் முதலில் வலியுறுத்தி வந்தார். ஆனால், இதே கோரிக்கையைக் காங்கிரசும் வலியுறுத்தத் தொடங்கியதும், இவர் இக்கோரிக்கையை எதிர்க்கலானார். இந்திய ஜனநாயகத்தில் முஸ்லீம்களை இந்துக்கள் அமுக்கிவிடுவார்கள் என்று இவர் கருதியதுடன், அக்கருத்தைப் பிரசாரமும் செய்துவந்தார்.

---

1. Newspaper Report (Confidential), 1887, p. 17.

சென்னையிலிருந்து, வெளிவந்துகொண்டிருந்த 'ஜல்வா-ஐ-சகுன்' (Jalva-I-Sakun) என்ற முஸ்லீம் பத்திரிகையின் 15—9—1888ஆம் தேதி இதழ் முஸ்லீம்களின் மனப்போக்கை வெளிப்படுத்தியுள்ளது. "இந்துக்களின் காங்கிரசு தனது கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி தவறான முறையில் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறது. அந்த இந்துக் காங்கிரசில் முகமதியர்கள் சேர்வது சரியல்ல" எனக் கூறியுள்ள இதழ் அதே சமயத்தில், "அரசாங்கம் வேற்று இனத்தவரால் நடத்தப்படுவதால், முஸ்லீம்களின் தேவைகளை நாம் எடுத்துரைத்தாலன்றி அவர்கள் அறிந்துகொள்ள வழியில்லை. எனவே, முஸ்லீம்களின் எண்ணங்களையும் தேவைகளையும் அரசினருக்கு மரியாதையோடும் சட்டபூர்வமாகவும் எடுத்துரைப்பதற்காக முகமதியர்களின் மாநாடு ஒன்றை நடத்த வேண்டும்" என்று ஆலோசனை கூறியுள்ளது.[1]

காங்கிரசில் சேர்வதைவிட அரசினருக்கு ஆதரவாக இருப்பதால் முஸ்லீம்களுக்கு இலாபகரமாக இருக்கும் என்று பல முஸ்லீம் தலைவர்கள் கருதினார்கள். எனவே, ஆரம்ப காலத்தில் காங்கிரசு மாநாடுகளில் கலந்து கொண்ட முஸ்லீம் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

## சென்னையில் காங்கிரசு மாநாடு

இந்திய நாடு முழுவதிலும், இந்திய மக்களின் கருத்தை வெளிப்படுத்தும் குரலாகக் காங்கிரசு விளங்கியபோதிலும், சென்னையில் காங்கிரசு மாநாடுகள் குறித்துச் சற்றுத் தனிக்கவனம் செலுத்துதல் இங்கு நலமாக இருக்கும். ஏனெனில், சென்னை மாகாணத்தில் பொது மக்கள் கருத்து வளர்ச்சிக்குப் பெரும் தூண்டுதலாக இருந்தவை, சென்னையில்நடந்த இந்த மாநாடுகளேயாகும்.

இந்திய தேசீயக் காங்கிரசின் மூன்றாவது மாநாட்டை நடத்தும் பெருமை சென்னைக்குக் கிடைத்தது. 1887ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் நாளன்று மக்கே தோட்டத்தில் (Mackey's Garden) காங்கிரசு மாநாடு நடந்தது. பத்ருதீன் தியாப்ஜி (Badrudin Tyabji) இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.[2] பம்பாயைச் சேர்ந்த பத்ருதீன் தியாப்ஜி, காங்கிரசைத் தீவிரமாக ஆதரித்த முஸ்லீம்களில் ஒருவராவார். இவருடைய ஆலோசனையின் பேரில்தான், மாநாட்டின் செயல் திட்டத்தை வகுப்பதற்காகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு, பின்னாளையப் பொருளாய்வுக் குழுவிற்கு (Subjects Committee) முன்னோடியாகும். இவர் பின்னர் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் பணியாற்றினார். இவர் 1906ஆம் ஆண்டில் காலமானார்.

---

1. Newspaper Report (Conf.), 1888, p. 218.
2. Annie Besant — *op. cit.* p. 35.

### *மாதவ ராவ்*

சென்னைக் காங்கிரசு மாநாட்டிற்கென 1887 மே மாதம் முதல் தேதியன்றே ராஜா சர். டி. மாதவராவ் தலைமையில் 120 உறுப்பினர் களைக் கொண்ட வரவேற்புக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. இக் குழுவில் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் முதலிய அனைத்துச் சமயத்தை சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இடம்பெற்றிருந்தார்கள். அக் காலத்தில் தலைசிறந்த அரசியல் மேதையாக விளங்கியவர் சர் டி. மாதவராவ் ஆவார். இவருடைய தந்தை ஆர். ரங்காராவ் திருவாங் கூர் சமஸ்தானத்தின் திவானாக இருந்தவர். மாதவராவ் தமது இளமைக்காலத்தைச் சென்னையில் கழித்தார். அப்போது சென்னைப் பல்கலைக்கழக உயர்நிலைப்பள்ளி என வழங்கிய மாநிலக்கல்லூரியில் பயின்று 1846ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார்.

பட்டம் பெற்றபின், தாம் படித்த அதே கல்வி நிறுவனத்தில் கணிதப் பயிற்றாசிரியராக (Tutor) மாதராவ் சிறிது காலம் பணியாற்றி னார். பின்னர் அரசுக் கணக்குத்துறைத் தலைவர் (Accountant-General) அலுவலகத்தில் இவருக்கு ஓர் உயர்பதவி கிடைத்தது. அப்பதவியில் இருக்கும் பொழுதே, திருவாங்கூர் இளவரசர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக இவருக்குப் பதவி அழைப்பு வந்தது. இவ்வழைப்பை இவர் ஏற்றுக்கொண்டார். இந்திய சமஸ்தானங் களுடன் இவர் கொண்டிருந்த நெடுநாள் தொடர்புக்கு இந்த வாய்ப்பு முதல் படியாக அமைந்தது. இளவரசர்களின் ஆசிரியராக நான் காண்டுகள் பணியாற்றியபின், சமஸ்தான நிருவாகத்தில் திவானுக் குக் கீழ் இயங்கிவந்த வருவாய்த் துறையில் ஒரு பொறுப்பான பதவி யில் இவர் நியமிக்கப்பட்டார். 1857ஆம் ஆண்டில்இவர் திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானாக உயர்ந்தார். இவர் திவானாகப் பதவி ஏற்ற சமயத்தில், சமஸ்தானத்தின் நிருவாகம் மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்தது. இவர் பதவியேற்றதும் அரும்பாடுபட்டு சமஸ்தான நிருவாகத்தைச் சீர்திருத்தித் திறம்பட அமைத்தார். இவருடைய சிறந்த பணியைப் பாராட்டி, பிரிட்டிஷ் அரசாங்கம் இவருக்கு கே. சி. எஸ். ஐ. என்ற உயர்ந்த விருதை வழங்கியது. இந்த விருது, ஒரு இந்தியருக்கு வழங்கப்படுவது அக்காலத்தில் மிகவும் அரிய தாகும். அதே ஆண்டில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி உறுப்பினராகவும் (Fellow) இவர் நியமிக்கப்பட்டார்.

திருவாங்கூர் சமஸ்தான அரசருக்கும் மாதவராவுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டமையால், திவான் பதவியிலிருந்து மாதவராவ் விலகினார். அதன்பின் வாழ்நாளைச் சென்னையிலேயே கழிக்க முடிவு செய்தார். ஆனால் அருந்திறன்வாய்ந்த மாதவராவின் திறமை வீணாகப் போய்விட அனுமதிக்கலாகாது என இந்திய அரசினர் கருதினர். அச்சமயத்தில், இந்தூர் சமஸ்தானத்தை நிருவகிப்பதற்குத் திறன்வாய்ந்த அதிகாரி ஒருவர் வேண்டும் என அதன் மன்னர் தாக்கோஜி ராவ் ஹோல்கார் அரசினரிடம் வேண்டி னார். இந்திய அரசினர் உடனே மாதவராவின் பெயரை அவருக்குப்

பரிந்துரைத்தார்கள். மாதவ ராவ் 1873ஆம் ஆண்டில் இந்தூர் சமஸ்தானத் திவானுகப் பொறுப்பேற்ருர். அங்கு அவருடைய நிருவாகம் ஈராண்டுகள்தாம் நீடித்தது. பரோடா மன்னர் முல்ஹர் ராவ் கெயிக்வார், நிருவாக ஊழல் காரணமாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும், 1875ஆம் ஆண்டில் பரோடா சமஸ்தானத்தின் திவானுக மாதவ ராவை இந்திய அரசாங்கம் நியமித்தது.

மாதவ ராவுக்கு "ராஜா" என்ற பட்டம் 1877ஆம் ஆண்டில் வழங்கப் பெற்றது. 1882ஆம் ஆண்டு வரையில் இவர் பரோடா திவானுக இருந்து வந்தார். அதன்பின் தம் வாழ்நாளின் மீதிக் காலத்தைச் சென்னையிலேயே கழித்தார். அப்போது அவர் அரசியலில் தீவிர ஆர்வம் காட்டிவந்தார்; நிறையப் படித்தார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளியாகும் பத்திரிகைகள், நாளிதழ்கள், மதிப்புரைகள், அரசியல் விமர்சனங்கள் ஆகியவற்றைப் படிப்பதில் இவர் மிகுந்த ஆர்வம் காட்டினுர். 'சுதேசப் பொதுமக்கள் கருத்து' (Native Public Opinion) என்னும் பெயரில் பத்திரிகை ஒன்றையும் இவர் தொடங்கினுர். இந்த இதழ் விரைவில் விரும்பத்தகாதவர்களின் கையில் சிக்கி, 1887 ஆம் ஆண்டில் நின்றுபோயிற்று. சமூகச் சீர்திருத்தங்களில் இவர் பெரிதும் ஆர்வம்கொண்டார். பெண் கல்வியை வளர்ப்பதிலும், குழந்தை திருமண முறையை ஒழிப்பதிலும் தம் கவனத்தைச் செலுத்தினுர்.

1885ஆம் ஆண்டில் சர் கிராண்ட் டஃப் (Sir Grant Duff) என்பாரின் வேண்டுகோளுக்கிணங்க மலபார் நில உரிமைக் குழுவின் (Malabar Land Tenure Commission) விவாதங்களுக்கு மாதவராவ் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார். 1887ஆம் ஆண்டில் கன்னிமாராப் பிரபுவின் (Lord Connemara) வேண்டுதலுக்கிணங்கி, சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் இவர் பட்டமளிப்புப் பேருரையாற்றினுர். அதே ஆண்டில் மூன்ருவது காங்கிரசு மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்.

வரவேற்புக் குழுவின் தலைவர் என்ற முறையில் உரையாற்றிய மாதவராவ், காங்கிரசு பற்றிக் குறிப்பிடுகையில், "காங்கிரசு, பிரிட்டிஷ் நிருவாகத்தின் வெற்றி முரசம்; பிரிட்டிஷ் தேசத்தின் புகழ் மகுடம்" என்று கூறினுர். இவர் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாளன்று பக்கவாதம் காரணமாகக் காலமானுர்.

காங்கிரசின் சென்னை மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மிகச் சிறந்த முறையில் செய்யப்பட்டன. சென்னை மாகாணத்தில் பத்தாயிரத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு நகரத்திலும் ஒரு துணைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் மூலம் தீவிர அரசியல் பிரசாரம் நடைபெற்றது. காங்கிரசுபற்றிய வினுவிடை ஒன்றைத் தமிழில் சேலம் விஜயராகவாச்சாரியார் தயாரித்திருந்தார். இதன் 30,000 பிரதிகள் மாகாணமெங்கும் வினியோகிக்கப்பட்டன. இதற்கு

உடனடியாகப் பலன் கிடைத்தது. ஓரணு முதல் ஒன்றரை ரூபாய் வரை 8000 பேர் நன்கொடை வழங்கியதில் ரூ. 5,500 நிதி வசூலாகி யது; மேலும் ஒன்றரை ரூபாய் முதல் முப்பது ரூபாய் வரையிலான நன்கொடைகள் மூலம் இன்னும் ரூ. 8,000 வசூலாகியது. மைசூர், திருவாங்கூர், கொச்சி, விசயநகரம், வெங்கிடகிரி முதலிய சமஸ் தானங்களின் அரசர்கள்கூட இந்த நிதிக்கு நன்கொடை வழங் கினார்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பின்னாளில், காங்கிரசு குறித்து சமஸ்தானாதிபதிகளின் போக்கு எவ்வாறிருந்தது என்பதை கருதும்பொழுது, இந்தச் சமஸ்தான அரசர்களின் இத்தகைய ஆதர வான போக்கு வியப்புக்குரியதாகும். சென்னை மாநாட்டில் 607 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இவர்களில் 36 பேர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

## சேலம் இராமசாமி முதலியார்

சென்னை மாநாட்டில் நடந்த விவாதங்களில் முக்கியப் பங்கு கொண்ட சென்னைப் பெருந்தலைவர்களுள் வீரராகவாச்சாரியார், ஜி. சுப்பிரமணிய ஐயர், பி. அனந்தாச்சார்லு, பி. ரங்கைய நாயுடு முதலியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். இந்த மாநாட்டில் இரண்டு ஆங்கிலேயர்களும் கலந்து கொண்டனர். அவர்களுள் ஒருவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராக (1884-1894) இருந்த ஜான் ஆடம்; மற்றொருவர் முன்னர் குறிப்பிட்ட ஜான் புரூஸ் நார்ட்டனின் புதல்வர் எர்ட்லி நார்ட்டன் (Eardly Norton). எர்ட்லி நார்ட்டன் 1852ஆம் ஆண்டில் பிறந்தவர். 1870ஆம் ஆண்டில் இவர் இங்கிலாந்தில் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கினார். சென்னைக்கு 1874ஆம் ஆண்டில் வந்தார். சட்டவியலில் ஆர்வத்தை யும், இந்தியருக்கு உதவிபுரிய வேண்டுமென்ற உணர்வையும் இவர் தம்முடைய தந்தையிடமிருந்து பெற்றார் எனலாம். இவர் இந்திய தேசீயக் காங்கிரசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.[1] சென்னை மாநாட்டில் கலந்துகொண்ட மற்றொரு இந்தியப் பெருந் தலைவர் சேலம் இராமசாமி முதலியார் ஆவார். இவர் 1852ஆம் ஆண்டு செப்டெம்பர் 6ஆம் நாள் சேலத்தில் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் உயர்கல்வி பயின்று 1871ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார். வரலாறும், அறநெறி இயலும் தனியாகப் பயின்று 1873ஆம் ஆண்டில் எம்.ஏ. தேர்வு பெற்றார். பின்னர் 1875இல் சட்டத்தில் பட்டம்பெற்று, 1876இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞரானார். அதே ஆண்டிலேயே மாவட்ட நடுவராக (District Munsiff) நியமனம் பெற்றார். அந்தப் பணி இவருக்குப் பிடிக்காததால், 1882இல் அப்பதவியிலிருந்து விலகிவிட்டு, சென்னையிலிருந்துகொண்டு வழக்குரைஞராகவே தொழில் புரிய லானார். அதேசமயம் தென்னிந்திய அரசியல் நடவடிக்கைகளிலும் இவர் தீவிரப் பங்குகொண்டார். அதிகாரிகளின் பொறுப்பற்ற போக்கினை எதிர்த்துச் சென்னை மகாஜனசபை கிளர்ச்சி நடத்தி

1. V. C. Gopalaratnam—*op. cit.*, pp. 276-280.

வந்தது. இக்கிளர்ச்சியில் சேலம் இராமசாமி முதலியார் பெரும் பங்கு கொண்டார்.

ரிப்பன் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற பிறகு, இந்திய மக்களின் மனக்குறைகளை ஆங்கில அரசினர் உணரும்படி செய்வதற்கான சிறந்த வழி ஒன்று சென்னை மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. இந்தியத் தலைவர்கள் சிலர் இங்கிலாந்துக்குச் சென்று அங்கு 1885ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலின்போது இங்கிலாந்து வாக்காளர்களிடையே பிரசாரம் செய்து, இந்திய மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் அவர்கள் உணர்ந்துகொள்ளும்படி செய்யவேண்டும் என்பதே சென்னை மாநாடு இந்தியத் தலைவர்களுக்குத் தெரிவித்த ஆலோசனை யாகும். இந்தப் பொறுப்பான பணிக்குச் சென்னையிலிருந்து சேலம் இராமசாமி முதலியாரை இங்கிலாந்திற்கு அனுப்புவதெனவும் முடி வெடுக்கப்பட்டது. அதன்படி இராமசாமி முதலியாரும், பம்பாய், வங்காளத்தைச் சேர்ந்த வேறு இரு பிரதிநிதிகளும் இங்கிலாந்து சென்றனர். அங்கு இராமசாமி முதலியாரும், மற்றவர்களும் பல கூட்டங்களில் உரையாற்றினர்கள். இந்திய நாட்டை ஆட்சிபுரி வதில் எத்தகைய பெரும்பொறுப்பு ஆங்கிலேயருக்கு இருக்கிறது என்பதை இங்கிலாந்து மக்கள் நன்கு உணர்ந்துகொள்ளும்படி செய் வதற்கு இந்தக் கூட்டங்கள் பேருதவியாக இருந்தன.

சென்னையில் 1886ஆம் ஆண்டிலும், அதற்கு அடுத்த ஆண்டில் அலகாபாத்திலும் நடந்த இரண்டு காங்கிரசு மாநாடுகளில் மட்டும் சேலம் இராமசாமி முதலியார் கலந்து கொண்டார். எனினும், இவருடைய சேவை, காங்கிரசுக்கு விலைமதிக்க முடியாததாக இருந்தது. அதனல், இவரைக் காங்கிரசின் தலைவராக்கக் காங் கிரசின் பிற தலைவர்கள் முன் வந்தபோது, அப்பதவியைப் பெறும் அளவுக்குத் தாம் காங்கிரசுக்குத் தொண்டு செய்துவிடவில்லை எனக் கூறி இவர் தலைமைப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். பச்சையப்பன் அறக்கட்டளையின் அறங்காவலராகவும் இவர் இருந்து அரும்பணியாற்றினர். சென்னை நகராட்சி வாரியத்தில் (Madras Municipal Board) இவர் தெரிவித்த ஆலோசனைகள், அதன் தலைவ ராலும் ஆணையாளர்களாலும் பெருமதிப்புடன் போற்றி வரவேற்கப் பட்டன. இவருடைய அரும் முயற்சிகளினுல்தான், 1892ஆம் ஆண்டில் இந்தியச் சட்டசபைச் சட்டம் (Indian Council's Act, 1892) நிறைவேறியது. இச்சட்டம் நிறைவேறும்வரை இவர் உயிருடன் இருந்திருப்பாரானல், இச்சட்டப்படி அமைக்கப்பட்ட சட்ட சபைக்கு இவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். இந் நாட்டின் தவப்புதல்வர்கள் பலரை, அவர்களுடைய உழைப்பு பலன்தரப்போகும் தறுவாயில் தன் பாசக்கயிற்ருல் பறித்துப் பறித் துப் பழக்கப்பட்டுப்போன காலதேவன், இப்பெருமகனுரின் உயிரை யும் 1892 மார்ச் 2ஆம் நாள் பறித்துக் கொண்டான்.[1]

1. G. Parameswaran Pillai—*Representative Indians*—pp. 214-216.

## ஆங்கிலேயர் போக்கு

இந்திய தேசியக் காங்கிரசு தோன்றிய தொடக்கக் காலத்தில் ஆங்கிலேயர் அதை எதிர்க்கவில்லை; மாருக, அத்தகையதொரு அமைப்பு அவசியம் எனக் கருதி அதை வரவேற்ருர்கள். இது பற்றி அறிஞர் டபிள்யூ. சி. பானர்ஜி தமது "இந்திய அரசியல்" (Indian Politics) என்ற நூலில் குறிப்பிடுகையில், "இங்கிலாந்தில் எதிர்க்கட்சி செய்யும் பணியைச் செய்வதற்கு இந் நாட்டில் ஓர் அமைப்போ அல்லது ஆட்களோ இல்லை. பத்திரிகைகள், மக்களின் எண்ணத்தை ஓரளவு பிரதிபலித்தாலும், அவை நம்பத்தக்கனவாக இல்லை. ஆங்கிலேயரைப்பற்றியும் ஆங்கிலேயரின் கொள்கை குறித்தும் இந்திய வட்டாரங்களில் என்ன நினைக்கின்ருர்கள் என்பதை அறிந்துகொள்ள ஆங்கிலேயருக்கு வாய்ப்பில்லை. இந்நிலையில், இந்திய அரசியல் தலைவர்கள் ஆண்டுதோறும் கூடி, நிருவாகத்தில் காணும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அக்குறைகளைக் களைவதற்குரிய வழிவகைகளைக் கூறுவது ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் மிகவும் நன்மை தருவதாகும் என்று டஃபரின் பிரபு (Lord Dufferin) அவரிடம் (ஹியூம்) கூறினர்" என்று குறிப்பிட்டுள்ளார்.[1]

காங்கிரசு தோன்றியது பற்றி ஆரம்பத்தில் இவ்வாறு கருத்துத் தெரிவித்த, டஃபரின் பிரபு, பின்னர் காங்கிரசின் நடவடிக்கைகளை விரும்பவில்லை என்பதும் இங்குக் கருதத்தக்கது. இந்தியாவிலிருந்து செல்வதற்கு முன்னர், *1888* நவம்பர் 30ஆம் தேதியன்று கல்கத்தாவில் நடந்த வழியனுப்பு விருந்தில் பேசுகையில், டஃபரின் பிரபு காங்கிரசைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினர். இந்திய மக்களில் மிகச் சிறிய தொகையினர்தான் காங்கிரசை ஆதரிப்பதாகவும், எனவே இந்திய மக்களின் ஒருமுகமான பிரதிநிதியாகக் காங்கிரசைக் கருத இயலாதெனவும் அவர் கூறினர். "மாண்புமிக்க மாபெரும் பிரிட்டிஷ் பேரரசின் அங்கமாய் விளங்கும் இந்தியாவின் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்கும் ஆண்டவன் பெயரால், நாகரிகத்தின் பெயரால் பிரிட்டிஷ் அரசாங்கம் பொறுப்பாளியாக இருந்து வருகின்றது. இம்மாபெரும் நாட்டை இத்தகைய அற்பச் சிறுபான்மையினர் (காங்கிரசு) நிருவகிக்கப் பிரிட்டிஷ் அரசினர் அனுமதிப்பார்கள் என்று அறிவுடைய எவரும் கற்பனையில்கூட நினைக்க முடியாது" என்று டஃபரின் பிரபு குறிப்பிட்டுள்ளார்.[2]

டஃபரின் பிரபுவின் கருத்து இவ்வாருக இருந்தபோதிலும், அரசினரின் போக்கு, காங்கிரசின் நடவடிக்கைகளுக்கு முற்றிலும் பாதகமானதாக இருக்கவில்லை என்பது, சென்னைக் காங்கிரசு மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு, அரசாங்க மாளிகையில், சென்னை ஆளுநர் கன்னிமாரா பிரபு (*1886-1890*) விருந்து ஒன்றை அளித்ததிலிருந்து புலனுகும்.

---

1. G. A. Natesan (Ed.)—*op. cit.* Introduction, p. VI.
2. A. C. Banerjee—*op. cit.*, Vol. II, p. 57.

சட்டசபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவான பொதுமக்கள் கருத்தைப் பத்திரிகைகளும், பொதுக்கூட்டங்களும் இடைவிடாமல் எதிரொலித்து வந்தன. 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் **4—9—1886**ஆம் தேதி இதழின் தலையங்கத்தில், "ஒரு நாட்டின் மக்களைப் பாதிக்கும் சட்டங்களை இயற்றும்பொழுது, அந்த மக்களின் விருப்பங்களை உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா? நாட்டுக்குத் தேவையானதென ஒரு சில அதிகாரிகளாலும், வழக்குரைஞர்களாலும் கருதப்படும் ஒரு சட்டம், அந்நாட்டு மக்களின் தேவைக்கு உகந்ததாக இருக்குமா?" என்ற வினாவை எழுப்பி இருந்தது.[1]

அரசியல் துறையில் இன்னும் அதிகமான முன்னேற்றம் ஏற்பட வேண்டியது அவசியம் எனப் பிரிட்டிஷ் அரசாங்கம் கருதியது. இந்திய தேசீயக் காங்கிரசை டஃபரின் பிரபு கண்டித்தபோதிலும், சட்டசபைகளைச் சீர்திருத்தி அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இரகசியக் கடிதம் ஒன்றை இங்கிலாந்துக்கு அனுப்பினார். "இந்திய மக்களுக்கு நாம் போதிய அளவு கல்வியறிவு ஏற்படுத்தி விட்டோம். தங்களுடைய உள்நாட்டு விவகாரங்களை நிருவகிப்பதில் தங்களுக்குக் கூடுதல் பங்கு வேண்டுமென அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இவர்களுடைய இந்தக் கோரிக்கை, முறையானதாகவும், நியாயமானதாகவும் தோன்றுகிறது. அரசியல் மதிநுட்பத்தைக் கையாண்டு, நமது ஆதிக்க மேலாண்மையை அதிக அளவில் விட்டுக் கொடுக்காமல், அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்குவது நலம் என நான் கருதுகின்றேன்" என்று டஃபரின் பிரபு தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.[2] அவரது இந்த இரகசியக் கடிதம்தான், *1892*ஆம் ஆண்டுச் சட்டம் உருவாவதற்குக் காரணமாக இருந்தது.

இந்தச் சட்டத்தின்படி மாகாணச் சட்டசபைகள் விரிவாக்கப்பட்டன. அவற்றின் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை "எட்டுக்குக் குறையாமல்; இருபதுக்கு மேற்படாமல்" இருக்க வேண்டுமென இச்சட்டத்தில் கூறப்பட்டிருந்தது.[3] நகராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பல்கலைக்கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், நிலவுடைமையாளர் சங்கங்கள் முதலிய அமைப்புகளைப் பொறுத்த வரையில், அவற்றின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, ஆளுநர் அந்த அமைப்புகளுடன் கலந்தாலோசித்து, அவை பரிந்துரைக்கும் ஆட்களையே நியமிப்பது வசதியாகவும் நன்மை தருவதாகவும் இருக்கும் என்றும் இச்சட்டத்தில் கூறப்

1. Newspaper Report (Confidential), 1886—p. 3.
2. A. C. Banerjee—*op. cit.* Vol. II, p. 63.
3. Clause I—sub (i) of the Act.

பட்டிருந்தது.[1] இதன்மூலம், தேர்தல் முறையை இந்தச் சட்டம் மறைமுகமாகத் தொடங்கிவைத்தது. கொள்கையளவில், முன்பு போன்று, உறுப்பினர்களை அரசாங்கமே நியமித்து வந்தபோதிலும், நடைமுறையில், முன்குறிப்பிட்ட நிறுவனங்களும் சங்கங்களும் தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் உறுப்பினர்களையே அரசாங்கம் நியமித்துவந்தது. பரிந்துரைக்கப்படும் உறுப்பினர்களை நிராகரிக்க அரசுக்கு உரிமை உண்டு; எனினும் அரசாங்கம் பெரும்பாலும் அவ்வாறு நிராகரிக்கப்படுவதில்லை.

## *சட்டசபை அதிகாரங்கள்*

சட்டசபைகளின் அதிகாரங்களும் இச்சட்டத்தின்படி விரிவாக்கப்பட்டன. முதன்முதலாக ஆண்டுநிதி அறிக்கைகள் பற்றி விவாதிக்கும் உரிமை சட்டசபைகளுக்குக் கிடைத்தன. எனினும், சில நிபந்தனைக்குட்பட்டே இந்த விவாதங்கள் நடைபெற்றன. "இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நடைபெறுவதுபோன்று, இந்திய வரவுசெலவுத் திட்டத்தின்மீது இனவாரியாக வாக்கெடுப்பு நடத்த சட்டசபைகளுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால், இந்திய அரசாங்கத்தின் நிதியியல் கொள்கை குறித்து முழு அளவில் சுதந்திரமாக விவாதிக்கவும் நியாயமான குறைகளை எடுத்துக் கூறவும் உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்" என்பதே அந்த நிபந்தனையாகும். இந்த நிபந்தனையை இச்சட்டத்தில் புகுத்தியவர், அப்போது இந்திய விவகாரத் துணை அமைச்சராக இருந்தவரும் பின்னர் இந்தியாவின் தலைமை ஆளுநராக (*1899-1904*) இருந்தவருமான கர்சான் பிரபு ஆவார். "இத்தகைய விவாதங்களினால் எல்லாத் தரப்பினருக்கும் நன்மை உண்டாகும்" என அவர் கருதினார். "இந்த விவாதங்களின் போது, அரசாங்கம் தனது நிதியியல் கொள்கையை விளக்கிக் கூறவும், வீண் அச்சங்களைப் போக்கவும், ஆதாரமற்ற அவதூறுகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் தக்க பதிலளிக்கவும் அரசுக்கு வாய்ப்பு ஏற்படும். அதேசமயம், இந்திய மக்களின் தகுதிவாய்ந்த பிரதிநிதிகளால் பொதுமக்களின் நிலையிலிருந்து பொறுப்பான முறையில் கூறப்படும் குறைபாடுகளை அறிந்துகொண்டு அக் குறைபாடுகளைப் போக்குவதற்கும் வாய்ப்பு உண்டாகும்" என்று கர்சான் பிரபு கூறினார்.[2]

கேள்விகள் எழுப்பி அரசிடமிருந்து தகவல்களைப் பெற உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கியமை, இச்சட்டத்தினால் ஏற்பட்ட மற்றொரு முக்கியமான நன்மையாகும்.[3]

*1861*ஆம் ஆண்டுச் சட்டத்தைவிட *1892*ஆம் ஆண்டுச் சட்டம் ஓரளவு முற்போக்கானதாக இருந்த போதிலும், இச்சட்டம் பொது

---

1. G. O. No. 886—Pub. (Conf.), dated 22nd Nov. 1907, pp. 15-17.
2. A. B. Keith—*op. cit.* Vol. II, p. 56.
3. *Ibid*—p. 57.

மக்கள் கருத்தை முற்றிலும் நிறைவு செய்வதாக இல்லை. 'சசிலேகா' என்ற பத்திரிகையின் 29-10-1897ஆம் தேதி இதழ், இச்சட்டம்பற்றிக் குறிப்பிடுகையில், "இந்தியச் சட்டசபைகள் விரிவாக்கப்பட்டிருப்பதாகக் கூறுவது வெறும் கண்துடைப்பே; இந்த விரிவாக்கம் போதுமானதல்ல. ஏனெனில், உறுப்பினர்களுக்கு வினா எழுப்பும் உரிமை ஒன்றைத் தவிர, வேறு உரிமைகள் வழங்கப்படவில்லை; உறுப்பினர்கள் எழுப்பும் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய கட்டாயம் அரசினருக்கு இல்லை" என்று கண்டித்துள்ளது.[1] பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார், இந்தச் சட்டம்பற்றிக் குறிப்பிடுகையில், "இந்தச் சட்டம், எதிர்பார்த்த அளவுக்கோ வேண்டிய அளவுக்கோ அமைந்திருக்கவில்லை. எனினும், இதில் கண்ட சீர்திருத்தங்களினால், தங்கள் நாட்டின் அரசாங்கத்தில் தீவிரப் பங்கு கொள்ள இந்தியர்களுக்கு வழி ஏற்பட்டது. மேலும், பெரும்பான்மையினராய் இருந்த அதிகாரிகள் முட்டுக்கட்டைகள் போட்ட போதிலும், எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் தங்கள் குரலை எழுப்புவதற்கு இந்தியர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. முதலாவது முக்கிய அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது. அடுத்த அடிகள் தொடர்வதற்கு விரைவில் காலம் வரும்" என்று கூறியுள்ளார்.[2]

இதற்கு அடுத்தபடியாக, 1909ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இந்தியச் சட்டசபைகளின் வளர்ச்சியில், இந்தச் சட்டம் மற்றொரு முக்கியமான கட்டமாகும். 1892ஆம் ஆண்டுச் சட்டத்திற்கும், 1909ஆம் ஆண்டுச் சட்டத்திற்கும் இடைப்பட்ட காலம், இந்திய தேசீய எழுச்சி வரலாற்றில் மறக்க இயலாத மாபெரும் சகாப்தமாகும். இந்தக் காலத்தில்தான், மக்களின் தேசீய உணர்ச்சியைத் தூண்டி அவர்களை எழுச்சி கொள்ள வைத்த பல முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. மக்களின் கிளர்ச்சி முறையில் இந்தக் காலத்தில்தான் மகத்தான மாறுதல் உண்டாயிற்று. தேசீய எழுச்சியும், பொதுமக்கள் கருத்து வளர்ச்சியும் ஏறத்தாழ ஒரேகாலத்தில் நிகழ்ந்தன. எனவேதான், பொதுமக்கள் கருத்து வளர்ச்சியில், இக்காலம் மிகமுக்கியமானதொரு கட்டமாக விளங்குகிறது.

இந்தக் காலத்தில் இந்திய மக்களிடையே புதியதொரு விடுதலை வேட்கை ஊற்றெனப் பெருக்கெடுத்தது. நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுவதற்குரிய தியாக உணர்வும், ஆண்மையும், தன்னம்பிக்கையும் அவர்களிடம் தோன்றின. இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக் காலத்தில் நாடெங்கிலும் பெருங்கொந்தளிப்பும் குழப்பமும் உண்டாயின.

இந்திய தேசீயக் காங்கிரசின் பத்தாவது மாநாடு 1894ஆம் ஆண்டில் சென்னையில் நடந்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்

1. Newspaper Report (Conf.), 1897—p. 305.
2. *History of India*—Part III—Modern India-p. 314.

பினரும், அயர்லாந்துக்காரருமாகிய ஆல்ஃபிரடு வெப் (Alfred Webb) என்பவர் இம்மாநாட்டிற்குத் தலைமைதாங்கினார். இம்மாநாட்டின் வரவேற்புக் குழுவிற்கு பி. ரங்கைய நாயுடு தலைவராக இருந்தார். இம்மாநாட்டு நடவடிக்கைகளில் முக்கியப் பங்குகொண்ட சென்னைத் தலைவர்களில், பழைய முதுபெருந்தலைவர்களுடன், என். சுப்பாராவ் பந்துலு, சி. சங்கரன் நாயர் என்ற இரு புதிய தலைவர்களும் இருந்தார்கள்.

## சுப்பாராவ் பந்துலு

நியாபதி சுப்பாராவ் பந்துலு, 1854ஆம் ஆண்டில் பிறந்தவர். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து 1876இல் பி.ஏ. பட்டம் பெற்ற இவர் 1879ஆம் ஆண்டில் சட்டத்தில் பட்டம்பெற்று, 1866ல் இராசமகேந்திரத்தில் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கினார். அரசியலில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் இவர், இந்திய தேசீயக் காங்கிரசின் தீவிர ஆதரவாளராக இருந்துவந்தார். "காங்கிரசு தோன்றிய காலத்திலிருந்தே இவர் காங்கிரசுடன் தொடர்பு கொண்டிருந்தார்" என்று பட்டாபி சீத்தாராமையா குறிப்பிடுகின்றார். "அலகாபாத்தில் 1888ஆம் ஆண்டில் நடந்த காங்கிரசின் நான்காவது மாநாட்டில் சுப்பாராவ் பந்துலு கலந்துகொண்டு உரையாற்றினார். உப்பு வரி, நீதி-நிருவாகப் பிரிவினை, நிருவாக சபைகளில் இந்தியர்களுக்கு இடமளித்தல், சான்றுய (Jury) முறை விசாரணை, வழக்குரைஞர்களின் நிலை என்று இப்படி ஏதாவது ஒரு பிரச்சினை குறித்துக் காங்கிரசுக் கூட்டங்களில் தீர்மானங்களை முன்மொழிவதும், வழிமொழிவதும், ஆதரித்துப் பேசுவதுமாக இவர் அந்த மாநாட்டின் உயிரோட்டமாகத் திகழ்ந்து வந்தார்" என்று பட்டாபி சீத்தாராமையா தமது நூலில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[1] சட்டத்தில் போதிய பயிற்சியில்லாதவர்களை நீதிபதிகளாக அரசாங்கம் நியமிப்பதைக் கண்டித்து சுப்பாராவ் பந்துலு கொண்டுவந்த தீர்மானம், அலகாபாத் மாநாட்டில் நிறைவேறிய முக்கிய தீர்மானங்களுள் ஒன்றாகும். இத்தீர்மானத்தை முன்மொழிந்து இவர் பேசுகையில், "வழக்காடுதல் என்பது ஒரு சூதாட்டமாகப் போய்விட்டது. தன்னுடைய கட்சிக்குச் சிறந்த ஆதாரங்கள் இருந்தபோதிலும், நீதிமன்றத்தில் அதற்கு உரிய நியாயம் கிடைக்கும் என்று யாரும் நம்பிக்கை கொள்வதற்கில்லை" என்று கூறினார்.[2]

சென்னையில் நடந்த பத்தாவது காங்கிரசு மாநாட்டில், தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதை எதிர்த்து முதன்முதலில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தைத் தலைவரே கொண்டு வந்தார். மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேறியது.[3]

---

1. *The History of the Congress*, vol. I, p. 114.
2. Res. VII of the 10th Congress-Mrs. Annie Besant—*op. cit.*, p. 192.
3. Vide-Res. XXI of the 10th Congress—*Ibid*, p. 204.

### சங்கரன் நாயர்

சங்கரன் நாயர் மலபாரைச் சேர்ந்த செல்வாக்கு மிகுந்த நாயர் சமூகத்தில் 1857ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று, 1887ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார்; 1889இல் பி.எல். பட்டமும் பெற்றார். 1880இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டார். மலபார் பகுதி நிலைமை குறித்து விசாரணை நடத்துவதற்காக 1894ஆம் ஆண்டில் அரசாங்கம் அமைத்த குழுவில் ஓர் உறுப்பினராக இவரும் நியமிக்கப்பட்டார். பின்னர், அமராவதியில் 1897ஆம் ஆண்டில் நடந்த காங்கிரசு மாநாட்டிற்கு இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் இவர் இருந்தார். சென்னை மகாஜன சபையுடன் இவர் நெடுங்காலம் தொடர்பு கொண்டிருந்து, அதன் செயலாளராகவும் சிறிது காலம் பணிபுரிந் தார். 1899ஆம் ஆண்டில் அரசாங்க வழக்குரைஞராகவும் (Government Pleader), 1904 முதல் 1907 வரை குற்றப் பொதுவழக்குரைஞ ராகவும் (Public Prosecutor), 1907இல் அரசு வழக்குத்துறை முதல்வ ராகவும் (Advocate General) பணியாற்றினார். 1908ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக உயர்ந்தார். 1913இல் இவர் தலைமை ஆளுநர் நிருவாக சபையில் ஓர் உறுப்பினரானார் 1934ஆம் ஆண்டில் இவர் காலமானார்.[1]

சென்னையில் நடந்த இந்தக் காங்கிரசு மாநாட்டில் இந்தியா சபை குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்தியா சபையை ஒழித்துவிட வேண்டும் என வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை இம் மாநாட்டில் எர்ட்லி நார்ட்டன் கொண்டுவந்து பேசுகையில், "இந்தியாவிலுள்ள அதிகாரிகளுக்கும் ஐரோப்பிய அதிகாரிகளுக்கு மிடையில் சிக்கி நாம் இப்பொழுது நெருக்குண்டு தவிக்கிறோம். இந்த அதிகாரிகள், அதிகார வர்க்கத்தினரின் நலனைப் பெருக்கு வதற்கெனவே பயிற்சி பெற்றவர்களாகத் தோன்றுகின்றார்கள்; அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தும் அதிகார வர்க்கத்தின ரின் நலனைப் பாதுகாப்பதாகவே அமைந்துள்ளன. இந்த அதிகாரி களின் பேச்சை இந்தியா சபையின் உறுப்பினர்கள் வேதவாக்காக நம்புகிறார்கள். அதனால், உங்களுடைய மனோதிடத்தைக் குலைப் பதிலும், பொருளாதார — அரசியல் சீர்திருத்தங்களை நிறைவேற்றாமல் தடுப்பதற்கு முட்டுக்கட்டைப் போடுவதிலும் அவர்கள் முழு மூச்சுடன் முனைகிறார்கள்" என்று கூறினார்.[2]

காங்கிரசின் 14வது மாநாடு, 1898ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. ஆனந்தமோகன் போஸ் இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அவர் தமது

---

1. *The Madras High Court Centenary Volume*—pp. 47-48.
2. Res. IV of the 10th Congress-Mrs. Annie Besant-*op. cit.* p. 188.

தலைமை உரையில், "இந்தியாவிலுள்ள படித்த வர்க்கத்தினர், இங்கிலாந்தின் நண்பர்களே, எதிரிகள் அல்லர்; இங்கிலாந்து மேற் கொண்டிருக்கும் மாபெரும் பணிக்கு உற்றுழி உதவும் நேசக்கரங் களே நாங்கள்" என்று குறிப்பிட்டார்.[1] வடமேற்கு எல்லைப்பகுதி பற்றிய அரசாங்கத்தின் கொள்கையை இம்மாநாடு வன்மையாகக் கண்டித்தது. இதுபற்றிய தீர்மானம் ஒன்றை ஜி. சுப்பிரமணிய ஐயர் இம்மாநாட்டில் கொண்டு வந்தார். அவர் பேசுகையில், "வடமேற்கு எல்லைப்பகுதியில் தேவையற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ள அரசாங்கம், அங்கு நிதிகளையெல்லாம் கொண்டு போய்க் கொட்டி விரயமாக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் உள் நாட்டில் முன்னேற்றப் பணிகள் யாவும் நிதியின்றி முடங்கிவிட்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்துவதற்காக மேற்கொள் ளப்படும் போர்களுக்காகும் பணத்தைப் பிரிட்டனே செலவிட வேண்டும். இந்தியரின் பணம், இந்தியரின் நலனுக்காகவே செல விடப்படவேண்டும்" என்று முழங்கினார்.[2]

இந்த மாநாடு நடந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, 1903ஆம் ஆண்டில் காங்கிரசின் 19ஆம் மாநாடு மீண்டும் சென்னையில் நடந் தது. லால் மோகன் கோஷ் இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில் அவர் ஆற்றிய தலைமை உரை, காங்கிரசு வரலாற் றில் கேட்டறியாத மிகச்சிறந்த பேருரையாகப் போற்றப்படுகின்றது.

> "நமது நாடு சுயாட்சி நாடு அல்ல; ஆங்கிலேயர் தேர்தல்களில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி, ஓர் அரசாங்கத்திற்குப் பதில் இன்னொரு அரசாங்கத்தை மாற்றி யமைப்பது போன்ற உரிமை நமக்கு இன்று இல்லை. பிரிட் டிஷ் நாடாளுமன்றத்தின் நியாய உணர்வு ஒன்றினையே நாம் முழுக்க முழுக்க நம்பிக்கொண்டிருக்கவேண்டி யுள்ளது. நம் தீவினைப் பயனாக, நம்முடைய இந்திய அதிகார வர்க்கத்தினர், பொதுமக்களின் எண்ணங்களை அனுதாபத்துடன் அணுகுவதற்குப் பதிலாக, நம்மீது வெறுப்புணர்வை மேன்மேலும் வளர்த்துக்கொண்டே போகிறார்கள்."

என்று லால் மோகன் கோஷ் தமது உரையில் வருத்தம் தெரிவித் தார்.[3] பர்மாவிலிருந்து வந்த பிரதிநிதிகளும் முதன்முதலாக இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

---

1. Annie Besant—*Ibid*-p. 274.
2. "All improvements at home were starved for want of the funds wasted in foolish aggression. If the wars were made for Imperial purposes, then let Britain pay the cost, and leave Indian money to be spent on Indian needs." (Res. No. VII--*Ibid*-p. 276)
3. Pattabi Sitaramayya—*op. cit.*, Vol. I-pp. 105-106.

அரசாங்கத்தின் உயர்பதவிகளில் இந்தியர்களை நியமிக்க மறுப்பதைக் கண்டித்து காங்கிரசு மாநாட்டில் அடிக்கடி நிறைவேற்றப் படும் தீர்மானம் ஒன்றை டி. இ. வாச்சா (D. E. Wacha) இந்த மாநாட்டில் கொண்டுவந்தார். அவர் பேசுகையில் "நாம் உண்ணும் உணவில் ஐரோப்பியர்கள் பங்குபெறுவதை நாம் குறைகூறவில்லை. ஆனல், சாசனங்களையும், வாக்குறுதிகளையும், பிரகடனங்களையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, நமக்குரியதில் மிகப் பெரும்பகுதியை வெள்ளைக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டு, கறுப்பர்களுக்கு மிக அற்பமான பங்கைக் கொடுப்பதைத்தான் நாம் எதிர்க்கின்றோம்" என்று கூறினர்.[1]

நம்நாட்டின் அரசியல் வளர்ச்சியில் கர்சான் பிரபுவின் ஆட்சிக் காலம் மற்றொரு முக்கியத் திருப்பமாக அமைந்தது. அவர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள், நாடெங்கிலும் மக்களிடம் பெரும் மனக்கொதிப்பை உண்டாக்கின. மக்கள் மூலமாகவோ அவர்களின் உதவியுடனே ஆட்சியை நடத்துவதில் கர்சானுக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. எல்லா உயர் பதவிகளிலும் ஆங்கிலேயர்களையே அவர் நியமித்தார். "அப்பதவிகளிலும் வகிப்பதற்கு, பாரம்பரியத்தாலும், வளர்ப்பு முறையாலும், கல்வியறிவாலும், அரசாங்கத் தத்துவங்களை அறிந்துள்ள வகையாலும், மன இயல்பாலும், பண்பாலும் ஆங்கிலேயரே தகுதியுடையவர்கள்" என்று அவர் கருதினர். 'மக்களின் நலனுக்கு உகந்தது எது என்பதை அதிகாரவர்க்கத்தினர் அறிவார்கள்.' என்பதே அவருடைய அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவமாக விளங்கியது. சுயாட்சி பெற இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்கும் கொள்கையில் அவருக்கு நம்பிக்கை இல்லை. வருங்காலத்திறமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் இன்றையத் திறமையைத் தியாகம் செய்ய அவர் விரும்பவில்லை. "பிரதிநிதித்துவ முறையே இந்தியர்களின் போக்கிற்குப் புறம்பானது" என்பது அவரது கருத்து.[2]

## வங்காளப் பிரிவினை

வங்காள மாகாணத்தை 1905ஆம் ஆண்டில் கர்சான்பிரபு பிரிவினை செய்தார். நிருவாக வசதிக்காகவே இவ்வாறு பிரிவினை செய்ததாக அவர் காரணம் கூறினர். ஆனல், இந்துக்களுக்கும் முகமதியர்களுக்குமிடையில் ஒற்றுமையைக் குலைத்து, அவர்களிடையே வகுப்பு

---

1. "We do not grumble at Europeans having a share of the loaves and fishes, but we do grumble and make it strong grievance that the bigger and most numerous loaves are deliberately allowed, in defiance of charters, pledges and proclamations, to go to the whites and smaller and fewer loaves to the blacks" — (Res. No. II-vide Annie Besant—*op.cit.* p. 380).
2. A. C. Banerjee—*op.cit.* Vol. II, p. 82.

வாதத்தை வளர்த்துப் பகையுணர்ச்சியை உண்டாக்குவதே வங்காளப் பிரிவினையின் உள்நோக்கம் என்று பொதுமக்கள் கருதினர்கள். இவ்வாறு கருதியதற்குத் தக்க ஆதாரங்களும் இருந்தன. கிழக்கு வங்காளத்தில் முகமதியர்களின் கூட்டத்தில் கர்சான் பிரபு பேசுகையில், ''வங்காளத்தைப் பிரிவினை செய்ததற்கு; வங்காள நிருவாகத்தைச் சுலபமாக்குவது மட்டும் காரணமல்ல, முகமதியர்களுக்கெனத் தனி மாகாணம் ஒன்றை உருவாக்குவதும் அதற்குக் காரணமாகும்; இவ்வாறு உருவாகும் முகமதிய மாகாணத்தில் இஸ்லாமிய சமயம் முதன்மைபெற்று விளங்கும்; இசுலாமியர்கள் உயர்நிலையில் இருப்பார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய இந்தப் பேச்சு, இந்திய மக்களின் அச்சத்தை வலியுறுத்துவதாக இருந்தது.

அரசியல் முன்னேற்றத்தின் வளர்ச்சியில் மோசமான ஆட்சியாளர்களின் ஆட்சியினுல் சிலசமயம் மறைமுகமாக நன்மைகளும் ஏற்படுவதுண்டு. வங்காளத்தைக் கர்சான் பிரபு பிரிவினை செய்தமையால் ஒரு நன்மையும் உண்டாயிற்று. இந்திய மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி கொண்டு எழுச்சிகொள்வதற்கு இந்தப் பிரிவினை தூண்டுதலாக இருந்தது. பல்லாண்டுகாலம் இடைவிடாமல் கிளர்ச்சி செய்திருந்தால்கூட ஏற்பட்டிராத அளவுக்குப் பேரெழுச்சியை இந்தப் பிரிவினை உண்டாக்கியது எனலாம். நாட்டுமக்களிடம் பொங்கியெழுந்த உணர்ச்சி வெள்ளம் ஒருமுகமாகப் பெருக்கெடுத்துச் சென்று ஆட்சியாளர்களின் மோசமான நடவடிக்கைகளையெல்லாம் வேருடன் அடித்துச் சென்றதுடன், உத்தரவாதமுடைய எதிர்காலத்தை உருவாக்குவதற்குத் தேவையான நிலையானதொரு ஆன்மீக ஆற்றலையும் ஏற்படுத்திவிட்டுச் சென்றது.

வங்காளப் பிரிவினை ஏற்படாமலிருந்தால்கூட, சுயாட்சிக்கான கிளர்ச்சி இயக்கம் தொடங்கப்பட்டிருக்கும், எனினும் இந்தப் பிரிவினை, சுயாட்சிக் கிளர்ச்சிக்கு பெருந்தூண்டுதலாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

## *ஐரோப்பியர் வலிமையில் நலிவு*

இந்தியாவில் சுதந்திரக் கிளர்ச்சி வலுப்பெறுவதற்குச் சில புற நிகழ்ச்சிகளும் தூண்டுதலாக இருந்தன. ஐரோப்பியர்களின் அமைப்பாண்மையும் ஆதிக்க வலியையும் அவர்களை வெல்லமுடியாதவர்களாக ஆக்கியுள்ளன என்ற எண்ணம் 19ஆம் நூற்ருண்டின் இறுதிவரை நிலவி வந்தது. 1896ஆம் ஆண்டில், அபிசீனியர்கள், இத்தாலியர்களைத் தோற்கடித்துப் பெரும் வெற்றி கண்டதும், இந்த எண்ணம் நலியலாயிற்று. 1904-1905இல் நடந்த ரஷ்ய-ஜப்பானியப் போரில் ஜப்பானியர் அடைந்த வெற்றியினுல் புதியதொரு சகாப்தம் தோன்றிவிட்டதாக ஆசிய மக்களும் இந்திய மக்களும் கருதினர்கள்.

இந்திய மக்களுக்கு 'சுயராஜ்யம்' பெறுவதே தனது குறிக்கோள் என 1906ஆம் ஆண்டில் காங்கிரசு அறிவித்தது எனினும்,

பிரிட்டிஷ் பேரரசிற்குட்பட்ட சுயாட்சி டொமினியன் அந்தஸ்தைத் தான் அந்தக் காலத்தில் 'சுயராஜ்யம்' என்ற சொல் குறித்தது என லாம். 'பரிபூரண சுதந்திரம்' என்ற குறிக்கோள் பின்னர்தான் உரு வாகியது. தீவினைப் பயனாக, இந்திய தேசீயத் தலைவர்களிடையே கருத்துவேறுபாடு தோன்றிப் பிளவு ஏற்பட்டது.

## *காங்கிரசில் பிளவு*

1892ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி வழங்கப்பட்டிருந்த அளவை விட அதிக அளவில் நிருவாகத்தில் இந்தியர்களுக்கு பங்கு தர வேண்டும், இறுதியில் உயர்பதவிகள் அனைத்தையும் இந்தியர் களுக்கே வழங்குதல் வேண்டும், ஐ. சி. எஸ். தேர்வை இங்கிலாந்தி லும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டும், தேர்தல் அடிப்படையில் சட்டசபைகளை விரிவுபடுத்தவேண்டும், நீதி-நிருவாகப் பிரிவினை வேண்டும் என்ற கோரிக்கைகளை மட்டுமே 1906ஆம் ஆண்டு இறுதிவரையில் காங்கிரசுத் தலைவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இந்தக் குறிக்கோள்களை அடைவதற்குத் தீர்மானங் களை நிறைவேற்றுதல், மனுக்களை வரைந்து அனுப்புதல், தூதுக் குழுக்களை அனுப்புதல் போன்ற சட்டபூர்வமான நடவடிக்கைகளில் மட்டுமே காங்கிரசு ஈடுபட்டு வந்தது. பிரிட்டனுடன் இந்தியா கொண்டுள்ள உறவில் நம்பிக்கை கொண்டவர்களாகவே பெரும் பாலான காங்கிரசுத் தலைவர்கள் இருந்தார்கள். பிரிட்டிஷ் அரசின் நல்லெண்ணத்தில் காங்கிரசுத் தலைவர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்து வந்தது. பிரிட்டிஷ் பொதுமக்கள் கருத்தில் உள்ளார்ந்த சுதந்திர வேட்கை உணர்வு, இந்திய மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி அரசினரைத் தூண்டிவிடும் என்று காங்கிரசுத் தலைவர்கள் மனதார நம்பினார்கள். எனவேதான், ஒவ்வொரு காங்கிரசு மாநாட்டிலும் தொடக்கத்தில் பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வந்தது.

இந்திய தேசீயக் காங்கிரசின் வரலாற்றில், 1907 துயரந்தரும் ஆண்டாக அமைந்தது. அவ்வாண்டில் சூரத்தில் காங்கிரசின் 23வது மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுப் பதில் தகராறு எழுந்தது. லாலா லஜபதிராயைக் காங்கிரசின் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை இன்னொரு குழுவினர் ஆதரித்தனர். இறுதியில் ராஷ் பிகாரி கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார்.

அப்பொழுது பாலகங்காதரத் திலகர் மேடைக்கு வந்தார்; ஒரு திருத்தத்தை முன்மொழிய விரும்புவதாகக் கூறினார். அது ஒழுங்கு விதிகளுக்கு முரணானதெனக் கூறி, அதற்கு அனுமதி வழங்கத் தலைவர் மறுத்துவிட்டார். இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் கூச்ச லும் குழப்பமும் ஏற்பட்டன. அதுமுதல் காங்கிரசில் மிதவாதிகள் (Moderates), தீவிரவாதிகள் (Extremists) என இரண்டு பிரிவுகள்

தோன்றின. "ஒவ்வொரு குழுவின் தலைவர்களும் அஞ்சாநெஞ்சமும், சுதந்திர உணர்வும் உடையவர்கள்; பெருந்தியாகங்கள் செய்தவர்கள். இந்தியா சுதந்திரம் பெற்றுத் தனது பண்டைச்சிறப்பையும் புகழையும் அடையவேண்டும் என்ற ஒரே குறிக்கோளைத்தான் அவர்கள் வலியுறுத்தினர்கள். இந்தக் குறிக்கோளை அடைவதற்குரிய வழிமுறை குறித்துத்தான் இரு குழுவினருக்குமிடையே கருத்து வேறுபாடு நிலவியது" என்று ஜி. என். சிங் தமது நூலில் குறிப்பிடுகின்ருர்.[1] பொதுக்கூட்டங்கள் நடத்துதல், தீர்மானங்கள் நிறைவேற்றுதல், தூதுக்குழுக்களை அனுப்புதல் போன்ற சட்டபூர்வமான வழிகளின் மூலம் சீர்த்திருத்தங்களை வலியுறுத்தும் முறையில் மிதவாதிகள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இந்தப் பழைய முறை காலங்கடந்ததென்றும் பயனற்றதென்றும், ஆதிக்கபீடத்தில் வலுவாகக் கால்கொண்டிருக்கும் ஆங்கில அரசாங்கத்தை இதுபோன்ற மிதமான எதிர்ப்பு முறைகளினல் பணிய வைக்க முடியாதெனவும் தீவிரவாதிகள் கருதினர்கள். பிரிட்டிஷ பொருள்களைப் புறக்கணித்தல், ஆர்ப்பாட்டங்கள் நடத்துதல் போன்ற தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென இவர்கள் வலியுறுத்தினர்கள். இந்தத் தீவிரவாதிகளை, பயங்கரவாதத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும், புரட்சி நடவடிக்கைகளைத் தூண்டுகின்றவர்கள் என்றும் அக்காலப் பிரிட்டிஷ் அரசாங்கம் கருதியது.[2]

## *காங்கிரசின் அமைப்பு விதிகள்*

இவ்வாறு பெருங்குழப்பத்தில் முடிவடைந்த **23**வது காங்கிரசு மாநாடு, கூட்டுக்குழு ஒன்றை அமைத்தது. இக்குழுவின் கூட்டம் ***1908*** ஏப்ரல் ***18, 19***ஆம் தேதிகளில் அலகாபாத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காங்கிரசுக்கு அமைப்பு விதித் தொகுதி (Constitution) ஒன்று வகுக்கப்பட்டது. இந்த அமைப்பு விதிகளின் முதலாவது பிரிவில் காங்கிரசின் குறிக்கோள்கள் விளக்கப்பட்டிருந்தன. "பிரிட்டிஷ் பேரரசின் சுயாட்சி உறுப்பு நாடுகளில் நிலவுவதுபோன்றதொரு அரசாங்க முறையை இந்திய மக்களுக்கும் பெற்றுத் தருவதே காங்கிரசின் குறிக்கோள். அந்த உறுப்பு நாடுகளுக்குச் சரிசமமான உரிமைகளோடும் கடமைகளோடும் பேரரசின் நிருவாகத்திலும் பொறுப்புகளிலும் பங்குபெறும் வாய்ப்பை இந்நாட்டு மக்கள் பெறவேண்டும். இன்றுள்ள நிருவாக முறையில் படிப்படியாகச் சீர்திருத்தங்களைச் செய்தும், தேசீய ஒற்றுமையை வளர்த்தும், பொது

---

1. *Land marks in Indian Constitutional and National Development*, p. 259.
2. **1914**ஆம் ஆண்டில் சென்னையில் காங்கிரசு மாநாடு நடந்தபோது, மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே சமரசம் செய்துவைக்க என். சுப்பாராவ் போன்ற தலைவர்கள் முயன்ருர்கள். ஆனல் **1916** வரை இவ்விரு பிரிவினருக்குமிடையே சமரசம் ஏற்படவில்லை.

மக்களின் உணர்வைத் தூண்டியும், நாட்டிலுள்ள அறிவு, அறநெறி, பொருளியல், தொழில் வசதிகளைப் பெருக்கியும் ஒழுங்கமைத்தும் சட்டபூர்வமான வழிமுறைகளின் மூலம் காங்கிரசு தனது இந்தக் குறிக்கோள்களை அடைதல்வேண்டும் என்று அந்தப் பிரிவில் கூறப் பட்டிருந்தது.[1]

1907ஆம் ஆண்டில் நடந்த சூரத் காங்கிரசு மாநாட்டில் நியமிக் கப்பட்ட கூட்டுக் குழுவினால் வகுக்கப்பட்ட அமைப்பு விதிகளுக் கிணங்க முதலாவது காங்கிரசு மாநாடு 1908ஆம் ஆண்டில் சென்னை யில் நடந்தது. சென்னை அண்ணா சாலையில் (மவுண்ட் ரோடு) எல்பின்ஸ்டன் திடலில் அமைந்திருந்த பெரிய பந்தலில் இந்த மாநாடு நடந்தது. இந்த மாநாட்டின் உயிரோட்டமாகத் திகழ்ந்தவர் வி. கிருஷ்ணசாமி ஐயர் ஆவார். சட்டக்கல்வி பயின்று சென்னையில் வழக்குரைஞராகத் தொழில்புரிந்து வந்த கிருஷ்ணசாமி ஐயர், வழக் குரைஞர் தொழிலுடன் நிற்காமல், அரசியலிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். கோக்கலே, வாச்சா, சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற பெருந்தலைவர்களுடன் இவர் நெருங்கிய நட்புக் கொண்டார். டாக்டர். சர். சி. பி. இராமசாமி ஐயர் இவரைப்பற்றிக் குறிப்பிடுகை யில், "இவர் பொதுவாக மிதவாதி எனக் கருதப்பட்டபோதிலும், அந்த மிதவாதத்தில்கூட இவர் மிகுந்த உணர்ச்சி வேகத்தோடும் உற்சாகத்தோடும் தீவிரத்தோடும் செயலாற்றி வந்தார். எனவே, இவரை மிதவாதி என்பதுகூட தவறானது என்று சொல்லலாம்" என்று கூறியுள்ளார்.[2] ஆளுநரின் நிருவாக சபையில் ஓர் உறுப்பினராக கிருஷ்ணசாமி ஐயர் நியமிக்கப்பட்டார். இதுபற்றிக் கருத்துத் தெரி வித்த டாக்டர். சர். சி. பி. இராமசாமி ஐயர் "சட்டத்துறையிலும், அரசியல் துறையிலும் ஓர் உச்சநிலையை எட்டியிருந்த இவரை, ஆளுநரின் நிருவாக சபை உறுப்பினராக நியமிக்க ஆளுநர் முன் வந்தது வருந்தத் தக்கதாகும்" என்றார்.[3] ஆளுநரின் நிருவாகசபை உறுப்பினர் என்ற முறையில் பல புதிய சட்டங்கள் இயற்றுவதற்கு கிருஷ்ணசாமி ஐயர் காரணமாக இருந்தார். நிருவாக சபைக் கூட்டங்களில் இவர் மிகுந்த வாதத்திறமையைக் காட்டினார்; அரிய அரசியல் மதிநுட்பத்துடன் நடந்துகொண்டார். புகழ்பெற்ற டில்லி தர்பாரில் இவருக்கு விருது வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது. அந்தத் தர்பார் கூட்டத்திலேயே இவர் நோய்வாய்ப்பட்டார். ஐம்பது வயதிற்குள் இவர் காலமானார்.

1907ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவெங்கும் சுதேசி இயக்கம் காட்டுத் தீபோல் பரவி வந்தது. இந்த இயக்கம் இரண்டு நோக்கங் களைக் கொண்டது. அயல்நாட்டினரின் போட்டியினால் நலிந்து போன இந்தியத் தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பது முதல்

---

1. Vide-Mrs. Annie Besant - *op. cit.*, p. 470.
2. V. C. Gopalaratnam - *op. cit.*, p. 164.
3. *Ibid*-p. 165.

நோக்கம். அரசாங்கத்திற்குப் பொருளாதார நெருக்கடியை உண்டாக்கும் வகையில் பிரிட்டிஷ் பொருள்களைப் புறக்கணிப்பது இரண்டாவது நோக்கம். இந்தக் கிளர்ச்சித் திட்டத்தைக் காங்கிரசு மேற்கொண்டது. இந்த இயக்கத்தைத் தென்னாடெங்கும் பரப்புவதில் தலையாய பங்குகொண்டவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த தேசபக்தர் வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆவார்.

## கப்பலோட்டிய தமிழன்

'கப்பலோட்டியதமிழன்', 'தென்னாட்டுத் திலகர்' என்றெல்லாம் அழைக்கப்பெற்ற வ. உ. சிதம்பரம்பிள்ளை, 1872ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் தேதி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்தார். வழக்குரைஞர் கல்வி பயின்று, 1900 முதல் தூத்துக்குடியில் இருந்துகொண்டு வழக்குரைஞர் தொழில் நடத்திவந்தார். தென்னிந்தியாவில் விடுதலை இயக்கத்தின் தீவிரத் தலைவராக இவர் விளங்கினர். சுதேசிக் கப்பல் நிறுவனம் (Indian Steam Navigation) ஒன்றை இவர் நிறுவியது, இவருடைய அரசியல் வாழ்வில் அரியதொரு சாதனையாகும்.

வ. உ. சி. யின் இணைபிரியாத் தோழராக விளங்கியவர் சுப்பிரமணிய சிவா ஆவார். இவர் 1908ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கு வந்து வ. உ. சி. க்குத் துணைசேர்ந்தார். இவருடைய வருகை, வ. உ. சி. க்குப் பெரும் வலுவைக் கொடுத்தது. சென்னைக் காவல் துறையின் துப்பறியும் பிரிவினர், சுப்பிரமணிய சிவாவைப்பற்றி உளவறிந்து, "சுப்பிரமணிய சிவாவின் உண்மையான பெயர் பி. சுப்பிரமணிய ஐயர் என்பதாகும். இவர் கவைக்குதவாதவர். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இவர், இரண்டு மூன்று முறை மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதித் தோல்வி கண்டு, காவல் துறையில் ரூ. 10 சம்பளத்தில் வேலைக்காக விண்ணப்பித்தார். உடல் தகுதியின்மையால் அந்த வேலை இவருக்குக் கிடைக்கவில்லை. இவர் பிறகு சன்னியாசி வாழ்க்கையை மேற்கொண்டு, ஊர் ஊராகத் திரிந்து பிச்சையெடுத்து வாழ்ந்து வருகிறார்" என்று இகழ்ந்துரைத்துள்ளனர்.[1]

சுப்பிரமணிய சிவா தலைசிறந்த தேசபக்தர்; நாட்டின் விடுதலைக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்தவர். 1908ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் முதல் மார்ச் 12ஆம் தேதி வரையில் இவரும் வ. உ. சி. யும் தூத்துக்குடியில் நாள்தோறும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர்கள். மார்ச் 12ஆம் நாள் இவ்விருவரையும் அரசினர் கைது செய்தார்கள்.

1908 பிப்ரவரி 19ஆம் தேதியன்று தூத்துக்குடிக் கடற்கரையில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசிய சுப்பிரமணிய சிவா,

---

1. Note on the riots in Tinnevelly and Tuticorin in March, 1908, p. 3.

,அந்நியர் ஆட்சியினால் உண்டாகும் அபாயங்களை விளக்கினர். "அந்நியரின் அரசாங்கம் ஒருபோதும் நிரந்தரமாக இருக்க முடியாது. சுயராஜ்யம், அதாவது சுயாட்சியே இந்நாட்டில் நிலைத்து நிற்க முடியும்'' என்று கூறிய சிவா, அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் டொமினியன்களை உதாரணங்காட்டி, போர்ச்சுகலில் அரசரையும் இளவரசரையும் மக்கள் கொலை செய்ததைச் சுட்டிக்காட்டி, அவ்வாறு செய்தது நியாயமே என்று வாதிட்டார். ''அடக்குமுறை கொடுமையைத் தாங்கமுடியாத மக்கள் அவ்வாறு கொலைச் செயலில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது'' என்று கூறிய சிவா, "இந்தியா, இந்தியருக்கே, அந்நியருக்கு அல்ல'' என்ற முழக்கத்துடன் தன் உரையை முடித்தார்.[1]

இந்தக் கூட்டத்தில் சிவா, வன்முறையை ஆதரித்துப் பேசியிருந்தாலும், பொதுவாக இவர் வன்முறையை ஆதரிப்பவர் அல்ல. இதன் பிறகு மார்ச் 4ஆம் தேதியன்று ஒரு கூட்டத்தில் இவர் பேசுகையில், மக்கள் வன்முறையில் ஈடுபடுவதைத் தாம் எதிர்ப்பதாகக் கூறினர். சாத்துவீக எதிர்ப்பு இயக்கத்தையே மக்கள் கையாள வேண்டுமென இவர் வலியுறுத்தினர். அந்நியரின் அடக்குமுறையை நான் வன்மையாகக் கண்டித்து வருகிறேன் என்பதில் ஐயமில்லை; ஆனல், இதனல் நான் வன்முறையைத் தூண்டுகிறேன் என்று குற்றஞ்சாட்ட முடியாது'' என்று சிவா கூறினர்.[2]

தூத்துக்குடியில் மார்ச் 5ஆம் தேதியன்று நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய சுப்பிரமணிய சிவா 9ஆம் தேதியன்று வங்காள தேசபக்தர் விபின் சந்திர பாலர் சிறையிலிருந்து விடுதலையாகவிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார். விபின்சந்திர பாலர், ஓராண்டுக்கு முன்னர் 1907இல் தென்னகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பல பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர். அப்போது, அயல்நாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கும்படி அவர் பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்; சுயராஜ்யத்தின் பெருமையை எடுத்துரைத்தார். **ஷாம்ஸ்-உல்-அக்பர்** (Shams-ul-Akbhar) என்ற பத்திரிகையின் **6—5—1907**ஆம் தேதி இதழில், "சென்னை மாகாணத்தில் கடற்கரைகளில் மாபெரும் கூட்டங்களில் பாபு பாலர் உரையாற்றி வருகின்ருர். சுதேசி இயக்கம்பற்றி பாலர் குறிப்பிடுகையில், பிரிட்டிஷ் நிருவாகத்தினரின் சுயநலப் போக்கையும், தீய எண்ணங்களையும், அதிகாரிகளின் அடக்குமுறை வெறியினையும் உணர்ச்சியூட்டும் வகையில் வன்மையாக எடுத்துக் கூறினர் அவருடைய பேச்சைக் கேட்டவர்கள், உணர்ச்சிபெற்று, எழுச்சிகொண்டு தாங்கள் அணிந்திருந்த ஆங்கில நாட்டுத் தொப்பிகளைத் தூர எறிந்து தீயிட்டுக் கொளுத்தினர்கள்'' என்று ஒரு செய்தியில் கூறியுள்ளது.[3]

---

1. G. O. No. 1542, Judicial Dept. (Conf.), dated 3rd October, 1911-pp. 13-14.
2. Ibid, pp. 195-196.
3. Newspaper Report (Conf.), 1907-p. 148.

மசூலிப்பட்டினத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த **'கிஷ்ணப் பத்திரிகா'** என்ற வாரப் பத்திரிகையின் 3—6—1907ஆம் தேதி இதழில் விபின்சந்திர பாலருக்கு தெலுங்கு நாட்டில் வழங்கப்பட்ட மாபெரும் வரவேற்பு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "விபின்சந்திர பாலர்மீது மக்கள் காட்டிய பெருமதிப்பும் மரியாதையும் அவரை அவர்கள் விருந்தோம்பிய சிறப்பும், அவருடைய பேச்சைக் கேட்க அவர்கள் காட்டிய பேரார்வமும், ஏதோ தற்காலிக உணர்ச்சிகளின் எழுச்சியினுல் நேர்ந்தவை அல்ல; சுதந்திரம் பெறவேண்டும் என்ற தணியாத வேட்கை மக்களின் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருக் கிறது என்ற உள்ளார்ந்த பொருளை அவையெல்லாம் உணர்த்து கின்றன" என்று அந்த இதழ் கூறி இருக்கிறது.[1]

**'வந்தே மாதரம்'** என்ற இதழின் ஆசிரியருக்கு எதிராக நீதி மன்றத்தில் சாட்சியமளிக்க விபின்சந்திர பாலர் மறுத்துவிட்டார். அதனுல் இந்திய அரசாங்கம், இவருக்கு ஆறுமாதச் சிறை தண்டனை விதித்துச் சிறையில் தள்ளியது. இந்த விவரங்களையெல்லாம் சுப்பிர மணிய சிவா தமது உரையில் உணர்ச்சி பொங்கக் கூட்டத்தினருக்கு விளக்கிக் கூறிவிட்டு, "சத்தியத்தைக் காப்பதற்காக அரிச்சந்திரன், தன் அரசையும் மனைவிமக்கள் அனைவரையும் இழந்தான் என்பதை நாமெல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். அதே போன்று, விபின்சந்திர பாலரும் தம்முடைய உடமைகளையெல் லாம் இழந்துவிட்டார். அன்னுர், மார்ச் 9ஆம் தேதியன்று சிறையி லிருந்து விடுதலையாகின்ருர். அன்றைய தினம் நாமெல்லோரும் பெருமளவில் ஒன்றுபட வேண்டும். நகரெங்கும் ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்தி அந்தப் பொன்னுளைக் கொண்டாட வேண்டும். மாலையில், நாமெல்லாம் கடற்கரையில் கூடவேண்டும். சுயராஜ்யச் சிங்கம் சிறையிலிருந்து வெளிவரும் அந்நாளில் நாமனைவரும் அடிமைத்தளைகளிலிருந்து விடுபட்டு வெளிவந்து, சுதந்திரக் கொடி யைப் பட்டொளி வீசிப் பறக்கவிட வேண்டும்" என்று அறிவித்தார்.

மக்களிடையே தேசீய உணர்ச்சியைத் தூண்டிவிடுவதற்காகச் சென்னை மாகாணமெங்கும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பெற்றன. தேசீயக் கருத்துகளை மாகாணமெங்கும் பரப்புவதில் பத்திரிகைகளும் மிகப் பெரும்பங்குகொண்டன.

### *பாரதியாரின் வீரப்பாட்டு*

பத்திரிகைகளின் வாயிலாகப் பாரத சமுதாயத்தின் உள்ளொலி யைப் பெருக்கி, உணர்ச்சியை எழுப்பி, தேசீயக்கனலை மூட்டி அவர்களை எழுச்சி கொள்ளச் செய்யலாம் என்பதைத் தம் எழுத்து களால் நிரூபித்துக் காட்டியவர் அமரகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். இருபதாம் நூற்ருண்டில் தம் கவிதைகளால் தமிழ்மொழிக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்த பாரதியார், நாட்டுமக்களிடையே

---

1. Ibid-p. 157.

தேசீய உணர்வைத் தூண்டுவதற்கும் தமது கவிதா சக்தியைச் சிறந்த சாதனமாகக் கையாண்டார். தாம் வாழ்ந்த காலத்தில் வேற்றரசாட்சி இந்நாட்டில் வேரூன்றி நின்றிருந்த நிலைகண்டு உள்ளம் கொதித்த பாரதியார், இந்திய மக்களிடையே விடுதலை வேட்கையை உருவாக்குவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். 'வந்தேமாதரம்' என்ற சுதந்திர கீதம் வங்கநாட்டில் எழுந்து எங்கும் பரவி, பாரத மக்கள் தாரகமந்திரமாகக் கொண்ட அவ்வாசகத்தின் பொருளை,

> "வந்தே மாதரம் என்போம்—எங்கள்
> மாநிலத் தாயை வணங்குவதும் என்போம்"

என்று செந்தமிழ்ப் பாட்டால் விளக்கினார் பாரதியார். அவருடைய இந்த விளக்கத்தை வெள்ளையர் ஆட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. 'வந்தேமாதரம்' என்றால் வந்தது பெருந்தொல்லை. 'இம் மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம்' என்று கொடுங்கோலாட்சியில் குடிகள் குமைந்து வருந்தினர்.

இந்த நிலையில் பொதுமக்கள் மனத்தைப் பற்றி நின்ற அச்சத்தை அகற்றி, விடுதலை உணர்ச்சியை ஊட்டும் வண்ணம் வீரப் பாட்டிசைத்தார் பாரதியார். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை அச்ச மென்பதில்லையே' என்று பாடினார். பொதுமக்கள் விரும்பிப் பாடும் பாப்பாப் பாட்டு, பள்ளுப் பாட்டு, கும்மிப்பாட்டு முதலிய இசைப்பாட்டுகளின் வாயிலாகச் சுதந்திர ஆர்வத்தைப் பெருக்கினார்.

பாரத சமுதாயம் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை நன்குணர்ந்த பாரதியார், சாதிசமய வேற்றுமைகளால் விளையும் தீமைகளை விளக்கமாகப் பாடினார். 'நாமிருக்கும் நாடு நமது' என்று ணர்ந்து தாய்நாட்டையும் தாய் மொழியையும் போற்றுதல் வேண்டு மென வலியுறுத்தினார். 'செந்தமிழ்நாடெனும் போதினிலே, இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று தம்மை ஈன்ற தமிழ்நாட்டைப் புகழ்ந்து பாடினார்; தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று பழகு தமிழில் இவர் இசைத்த இனிய பாடல்கள் முத்தமிழுக்கும் புத்துயிரளித்ததுடன், தமிழக மக்களின் நாட்டுணர்வையும் தட்டி எழுப்பின.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டையபுரத்தில் 1882ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி பிறந்த கவிஞர் பாரதியார், 1904ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்து, **'சுதேசமித்திரன்'** இதழில் துணையாசிரியராகச் சேர்ந்தார். அவ்விதழில் தேசபக்தியைத் தூண்டும் கவிதைகளையும் எழுதிவந்தார். 1906ஆம் ஆண்டில் **'இந்தியா'** என்னும் வார இதழைத் தாமே தொடங்கி அதன் ஆசிரியரானார். அவ்வாண்டில் இந்திய தேசீயக் காங்கிரசின் ஆண்டு மாநாட்டில் பாரதியார் கலந்துகொண்டார். அது முதல் ஒவ்வோராண்டும் காங்கிரசு மாநாடு எங்கு நடந்தாலும் அங்குச் சென்று அம்மாநாட்டில் கலந்து கொண்டார். இவ்வாறு இவர் சுதந்திர வேட்கை மிக்க தீவிர தேச

பக்தரானார். இவருடைய விடுதலை வேட்கை, உணர்ச்சி மிக்க கவிதை களாக உருவெடுத்து, நாட்டுமக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெறலாயின. "இவருடைய எழுத்தில் புரட்சிவீரன் மாஜினியின் செல்வாக்கைப் பெருமளவில் காணலாம்" என்று தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிட்டுள்ளார்.[1] தனிநபர் சுதந்திரம், நாட்டு விடுதலை, மனிதர் எல்லோர்க்கும் சம உரிமை ஆகிய உயர்ந்த குறிக்கோள்களை பாரதியார் தம் கவிதைகளில் இடையறாது வலியு றுத்தி வந்தார். எனவே, இவரை, ஆங்கில ஆட்சிக்கு ஆபத்தானவர் என அரசினர் கருதியதில் வியப்பில்லை. ஆகவே, 1908ஆம் ஆண்டில் இவரைக் கைதுசெய்து வழக்குத் தொடர அரசினர் முனைந்தனர். ஆனால், பாரதியார் ஆட்சியாளர்களின் கையில் சிக்காமல், சென்னை யிலிருந்து இரகசியமாகப் புதுச்சேரி சென்றுவிட்டார். அப்பொழுது தென்னிந்தியத் தேசீயத் தலைவர்களுக்கு "அரசியல் அடைக்கலம்" கொடுக்கும் புகலிடமாகப் புதுச்சேரி விளங்கியது. அங்கு ஏற்கெனவே அடைக்கலம் புகுந்திருந்த அரவிந்தர், வ. வெ. சு. ஐயர் போன்ற தேசபக்தர்களுடன் இணைந்து பாரதியார் தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

## அரசின் அடக்குமுறை

விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு அரசினர் எல்லாவகை அடக்குமுறைகளையும் கையாண்டனர். அரசாங்க விரோதக் கூட்டத் தடுப்புச் சட்டம் (Seditious Meeting Act) ஒன்றை 1907ஆம் ஆண்டில் அரசாங்கம் இயற்றியது. இந்தச் சட்டத்தை இந்தியாவில் எந்த மாகாணத்திலும் பயன்படுத்து வதற்கு அரசுக்கு இந்தச் சட்டம் அதிகாரம் அளித்தது. இச்சட்டத் தின்படி, எந்தக் காரியத்திற்காக இருப்பினும், 20 பேருக்குமேல் கூட்டம் கூடுவதாக இருந்தால், மூன்று நாட்களுக்கு முன்னர், உள் ளாட்சி அதிகாரிகளுக்கு முன்னறிவிப்புக் கொடுக்கவேண்டும். 'பொதுக்கூட்டங்கள்' என்பதற்கு இச்சட்டத்தில் மிக விரிவான விளக்கம் காணப்பட்டது. தனியார் வீடுகளில் நடக்கும் சமூகக் கூட்டங்களைக்கூடப் பொதுக்கூட்டங்கள் எனக் கருதும் வகையில் இந்த விளக்கம் அமைந்திருந்தது. இந்தச் சட்டத்தின்படி, எந்த ஒரு பொதுக்கூட்டத்திற்கும் அதிகாரிகள் அனுமதி தர மறுக்கலாம்; அனு மதி அளித்த பின்னரும், அந்தக் கூட்டத்தினால் பொது அமைதி கெடும் எனக் கருதினால் அக்கூட்டத்தைத் தடை செய்யலாம்; எவ் விதக் கட்டுப்பாடுகளையும் விதிக்கலாம்; அந்தக் கூட்டங்களைக் கண் காணிக்கப் போலீசாரை அனுப்பலாம்.

இந்திய அரசாங்கம் ஏற்கெனவே 1878ஆம் ஆண்டில் இந்திய ஆயுதச் சட்டத்தையும் (Indian Arms Act), 1884ஆம் ஆண்டில் வெடிமருந்துச் சட்டத்தையும் (Explosives Act) இயற்றி இருந்தது. இந்தச் சட்டங்கள், புதிய நிலைமையைச் சமாளிக்கப் போதுமானவை

---

1. Dr. Nagendra (ed)., *Indian Literature*-Tamil p. 43.

அல்ல என இந்திய அரசாங்கம் கருதியது. அதனால் 1908ஆம் ஆண்டில் வெடிமருந்துப் பொருள் சட்டத்தை (Explosive Substances Act) அரசு இயற்றிக்கொண்டது. இந்தச் சட்டம், வெடிமருந்துகளை மட்டுமின்றி, வெடிமருந்துகளைத் தயாரிக்கப் பயன்படும் பொருள் களையும் சாதனங்களையும் கையாள்வதையும் தடை செய்தது. "இவற்றை எவராவது ஐயத்திற்கிடமான சூழ்நிலையில் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், ஐந்தாண்டுகள் முதல் 14 ஆண்டுகள் வரைச் சிறைத் தண்டனை விதிக்கப்படும்" என்று இச்சட்டத்தின் ஒரு விதி கூறியது.[1] வெடித்தல் ஏற்படாவிட்டால்கூட, வெடிப் பதற்கு முயற்சி நடந்ததாக நிரூபிக்கப்பட்டாலும், அந்தக் குற்றத் திற்கு ஏழாண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க இன்னொரு விதி அதிகாரமளித்தது.[2] எல்லாவற்றிற்கும் மேலாக, "யாராவது வெடிமருந்துப் பொருள்களை வழங்கினாலும், அதற்குப் பணம் கொடுத்து உதவினாலும், அவற்றைத் தயாரிப் பதற்கு இடமளித்தாலும், அல்லது இந்தச் சட்டத்தில் குறிப்பிட்ட குற்றங்களைச் செய்வதற்குத் தூண்டினாலும், உடந்தையாக இருந் தாலும், உதவிபுரிந்தாலும் அவருக்கும் அதற்குரிய தண்டனை வழங் கப்படும்" என்று ஒரு விதி கூறியது.[3]

## *திருநெல்வேலிக் கலவரம்*

இந்தியாவின் மற்றப் பகுதிகளைப்போலவே சென்னை மாகாணத் திலும் அரசாங்கத் துரோகக் குற்றச்சாட்டுகளின்கீழ் பல வழக்குகள் தொடரப்பட்டன. 1908ஆம் ஆண்டு பிப்ரவரி 23, 25, மார்ச் 5 ஆகிய தேதிகளில் தூத்துக்குடிக் கடற்கரையில் கூட்டங்கள் கூட்டி, அர சாங்கத்திற்கு விரோதமாக மக்களைத் தூண்டிவிடும் வகையில் பேசி யதாகக் குற்றஞ்சுமத்தி வ. உ. சி. யையும் சுப்பிரமணிய சிவாவையும் ஆங்கில அரசினர் 1908 மார்ச் 12ஆம் தேதி கைது செய்தனர். இவர்கள் கைதானதைத் தொடர்ந்து திருநெல்வேலியில் பல இடங் களில் பெருங்கலவரங்கள் மூண்டன. இக்கலவரங்களில் அரசாங்கச் சொத்துகள் பெருமளவில் சேதமடைந்தன. "திருநெல்வேலியில், அரசுக் கட்டிடங்கள் அனைத்தும் தாக்கப்பட்டன. இக் கட்டிடங் களிலிருந்த தளவாடங்களும், எழுத்துச் சான்றுகளும், கட்டிடத்தின் பகுதிகளும் தீக்கிரையாக்கப்பட்டன. நகராட்சி அலுவலகம் அடி யோடு சாம்பலாயிற்று. இக்கலவரங்கள் தொடர்பாக, 27 பேருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.[4]

வ. உ. சி. யின் மீதும், சுப்பிரமணிய சிவாவின் மீதும் தொடரப் பட்ட வழக்குகளைக் கொண்டு தேசீய இயக்கம் பற்றி அதிகாரி களின் மனப்போக்கை அறிந்துகொள்ள முடிகிறது. இவர்களின்

---

1. Clause 5 of the Act.
2. Clause 4 of the Act.
3. Clause 6 of the Act.
4. Sedition Committee Report, 1918-p. 163.

மீதான வழக்கை விசாரணை செய்த திருநெல்வேலி கூடுதல் குற்ற விசாரணை நீதிபதி ஏ. எஃப். பின்ஹே (A. F. Pinhey) தம்முடைய தீர்ப்பில், "குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் (சுப்பிரமணிய சிவா), சுய ராஜ்யம் பற்றிய தனது கொள்கையைத் தெள்ளத் தெளிவாக ஐயந் திரிபுக்கு இடமின்றித் தமது வாக்குமூலத்தில் எடுத்துரைத்திருக்கிறார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி தமது தீர்ப்புக்கு ஆதாரமாக, சிவா தம்முடைய வாக்கு மூலத்தில் கூறியிருந்த கருத்துகளையே எடுத்துக்காட்டியிருந்தார். "இரத்தம் சிந்தாமல் எதையும் சாதிக்க இயலாது. ஜப்பான் 20,000 வீரர் களைத்தியாகம் செய்து, ரஷ்யாவை வெற்றிகொண்டது. அதுபோல், 15 கோடி இந்தியர்கள் உயிர்த்தியாகம் செய்தால், சுயராஜ்யம் கிடைத்து விடும்"[1] என்ற சிவாவின் வாக்குமூலத்தைச் சுட்டிக் காட்டிய நீதிபதி, அவரைக் குற்றவாளி எனத் தீர்மானித்து, அவருக்கு 10 ஆண்டுக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தார்.

அரசாங்கத்துக்கு விரோதமாகப் பேசுவதற்குச் சுப்பிரமணிய சிவாவுடன் சேர்ந்து சதி செய்ததாகவும், இச்சதியின் விளைவாகவே அரசுக்கு விரோதமான பேச்சுகளைச் சிவா பேசியதாகவும், வ. உ. சி. மீது அரசுத் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது. "சிவா தூத்துக்குடி யில் இருந்தபோது, சிதம்பரம்பிள்ளை அவருக்குத் தங்குவதற்கு இடமளித்தார்; அவர் பேசுவதற்கு மேடை அமைத்துக் கொடுத் தார்; கூட்டம் திரட்டித் தந்தார்; சொற்பொழிவுகளுக்கு ஏற் பாடுகள் செய்து கொடுத்தார். மேலும், அவர்கள் இருவரும் சேர்ந்து பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டனர்; இருவரும் அடிக்கடி ஒரே கூட்டத்தில் பேசினார்கள்" என்பதும் ஒரு குற்றச் சாட்டு.[2] "சிவா தம்முடைய பேச்சுக்களில் தெரிவித்த எந்தக் கருத் தையும் சிதம்பரம்பிள்ளை மறுத்துப் பேசாததுடன், பல சமயங்களில் அவருக்குப் பிறகு பேசும்பொழுது அவருடைய கருத்துகளை ஏற்றுக் கொண்டும், பாராட்டியும், மேற்கோள் காட்டியும், விரிவுபடுத்தியும் பேசினார். இதிலிருந்து, சுப்பிரமணிய சிவா செய்த குற்றங்கள் யாவும், இவ்விருவருடைய கூட்டுச் சதியினால் உருவானவை என்ப தும், எனவே அக்குற்றங்களைச் செய்வதில் இவரும் (வ. உ. சி.) கூட்டுச் சதிகாரராக இருந்திருக்கிறார் என்பதும் தெளிவாகின்றது" என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார். "பிப்ரவரி 23ஆம் தேதியன்று சுப்பிரமணிய சிவா உரையாற்றியபோது, வ. உ. சி. யும் உடனிருந் தார். சிவா குறிப்பிட்ட சுயராஜ்யக் குறிக்கோளை எவ்வாறு அடைய முடியும் என்பதை விளக்கி வ. உ. சி. யும் உறையாற்றினார். பிப்ரவரி 25ஆம் தேதியன்று சிவா பேசிய மற்றொரு கூட்டத்தில் வ.உ.சி. யும் இருந்தார்; ஆனால் அவர் அக்கூட்டத்தில் பேசவில்லை. இந்தியச் சாட்சியச் சட்டத்தின் (Indian Evidence Act) பத்தாவது பிரிவின்படி, இவர்கள் இருவரும் சதி செய்திருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கு

---

1. S.C. No. I of 1908, dated 7th July, 1908, Para 25.
2. Ibid-Para 29.

நிறையச் சாட்சியங்கள் உள்ளன'' என்றுகூறிய நீதிபதி இக்குற்றச் சாட்டுக்கு தண்டனைபற்றிக் குறிப்பிடுகையில், இத்தகைய குற்றச் சாட்டுக்குரிய சட்டம் அனுமதிக்கும் மிக உயர்ந்தஅளவு தண்டனை கூட, இவ்வழக்கில் போதுமானதாகாது. அவர் (வ. உ. சி.), அரசாங்க விரோதி; அவரைப் போன்றவர்களால் சமூகத்திற்குப் பேராபத்து விளையும். ஆகவே, அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன்'' என்று தீர்ப்பளித்தார்.[1]

## வ. உ. சி. தண்டனை குறிப்பு

இத்தீர்ப்பை எதிர்த்து சிவாவும், வ. உ. சி. யும் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள். தலைமை நீதிபதி சர் சார்லஸ் ஆர்னல்டு ஒயிட், நீதிபதி மில்லர் ஆகிய இருவரும் இம் மேல் முறையீட்டை விசாரணை செய்தார்கள். இவர்கள் சிவாவுக்கும், வ. உ. சி. க்கும் விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையைக் குறைத்துத் தீர்ப்பளித்தார்கள். நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பில் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த இருவரையும் கைது செய்ததுதான், திருநெல்வேலி கலவரங்களுக்கு உடனடிக் காரணம் என்பதை ஏற்காமலிருப்பதிற்கில்லை. அதேசமயம், தூத்துக்குடியிலும் திருநெல் வேலியிலும் முதல் எதிரியும் (சிவா) மற்றவர்களும் தங்களுடைய அரசாங்க விரோதப் பேச்சுக்களால் பொதுமக்களின் உணர்ச்சி யைத் தூண்டிவிடாமலிருந்திருந்தால், இவர்களைக் கைது செய்த வுடன் கலவரங்கள் தோன்றியிருக்காது என்பதிலும் சிறிதும் ஐய மில்லை. இப்போதையக் குற்றச்சாட்டுகளில் பிரதானமாக விளங்கு வது தூத்துக்குடியில் இவர்கள் பேசிய பேச்சுக்கள்தாம்; இந்தப் பேச்சுக்கள் அவை நிகழ்த்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின ரிடையில் மட்டுமே விளைவுகளை ஏற்படுத்தியது என்றும், விளைவுகளை ஏற்படுத்துவதற்கென நிகழ்த்தப்பட்டன என்றும் கூறுவது சரி யாகாது. திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான போக்குவரத்து வசதிகள் குறித்துக் கீழ் நீதிமன்ற நீதிபதி தமது தீர்ப் பில் சான்றுகள் காட்டியுள்ளார்.[2] ஆயினும், முதல் எதிரியின் (சிவா) உணர்ச்சியைத் தூண்டும் பேச்சுக்களின் விளைவாகவே 1908 மார்ச் 10ஆம் தேதி திருநெல்வேலிக் கலவரங்கள் மூண்டன எனக் கூறுவதை நாங்கள் ஏற்பதற்கில்லை. எனினும், இ. பி. கோ. 124 (ஏ) பிரிவின்படி, முதல் எதிரி சுப்பிரமணிய சிவாவைக் குற்றவாளி எனத் தீர்மானித்தது முற்றிலும் சரியே என நாங்கள் உறுதிப்படுத்து

---

1. S. C. No. I of 1908, dated 7th July, 1908-Para 36.

2. 1908 மார்ச் 10ஆம் தேதி எதிரிகள் இருவரும் திருநெல்வேலி யில் இரவில் ரகசியக் கூட்டம் நடத்திவிட்டுத் தூத்துக்குடி திரும்பி முற்பகலில் தடையை மீறி விபின்சந்திர பாலரின் படத்துடன் ஊர்வலம் நடத்தினர்கள். பகல் 12-30 மணி ரயிலைப் பிடித்துத் திருநெல்வேலி வந்து, மாலையில், மாவட்ட நடுவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட நேரத்தில் இருந்தார்கள்.

கிறோம். தண்டனையைப் பொறுத்த வரையில், அவருக்கு ஆறு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தாலே போதுமானதாக நாங்கள் கருதுகிறோம். இந்தத் திருத்தங்களுடன், முதல் எதிரி சுப்பிரமணிய சிவாவின் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்கிறோம்'' என்று கூறியுள்ளார்கள்.[1]

வ. உ. சி. பற்றி நீதிபதிகள் குறிப்பிடுகையில்,

> ''இவர் வன்முறையைக் கண்டித்துள்ளார். கலவரங்களில் ஈடுபடவேண்டாம் என்று இவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்; கூட்டத்தை உரிய காலத்திற்கு முன்னரே முடித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், இந்தக் காரணங்களுக்காக, அரசத்துரோகக் குற்றச்சாட்டிலிருந்து இவரை விடுவிப்பதற்கில்லை. ஏனென்றால், சுப்பிரமணிய சிவாவின் கருத்துகள் இவருக்கு உடன்பாடானவை என்பது இவருடைய பேச்சுக்களிலிருந்து தெரிகின்றது. இவர் சுப்பிரமணிய சிவாவுடன் சேர்ந்து பல கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அக்கூட்டங்களில் சுப்பிரமணிய சிவா அரசியல் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார். இவர் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார். இவருடைய இறுதிக் குறிக்கோள் ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. இந்நாட்டிலிருந்து அந்நியர்களையும், அந்நியப் பொருள்களையும் வெளியேற்றவேண்டும் என்பதும், அதன்மூலம் இந்நாட்டிற்குச் சுயராஜ்யமும் வளமும் ஏற்படவேண்டும் என்பதும் இவர்கள் இருவரின் பொதுக் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது''

என்று கூறியுள்ளனர்.[2] வ. உ. சி. யின் ஆயுள் தண்டனையை நீதிபதிகள் ஆறாண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைத்தனர்.

## *ஆங்கில இராவணன்*

வ. உ. சி., சிவா மீதான வழக்குகளைப்போல், எத்திராஜ சுரேந்திர நாத் ஆர்யா என்பவர் மீதான வழக்கும் அக்காலத்தில் மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 1908ஆம் ஆண்டில் மார்ச் 9, மே 3, ஜூன் 2 ஆகிய தேதிகளில் சென்னையில் தெலுங்கில் இவர் ஆற்றிய உரைகளுக்காக இவர்மீது இ. பி. கோ. 124 (ஏ) ஆகிய பிரிவுகளின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. 1908 மே மாதம் 3ஆம் தேதியன்று ஒரு பொதுக்கூட்டத்தில் இவர் பேசுகையில், ''இந்தியாவில் முப்பதுமுக்கோடி மக்கள் வாழ்கின்றார்கள்; இவர்கள் அனைவரும் சேர்ந்து அந்நியர்களின்மீது ஒருமுறை காரி உமிழ்ந்து, ஒரு கை மண்ணை அள்ளி வீசினாலே போதும், அந்நியர்கள் அனைவரும் அதில் அமிழ்ந்துபோவார்கள்'' என்று கூறியதாக அரசுத்தரப்பில்

1. Judgement in Criminal Appeal No. 503 of 1908-p. 16.
2. Judgement in Criminal Appeal No. 491 of 1908-p. 22.

குற்றஞ்சாட்டப்பட்டது. ஜூன் 2ஆம் தேதி மற்றொரு கூட்டத்தில் பேசுகையில் "சீதையை சிறைவைத்திருக்க வேண்டாம் என இராவணனுக்கு அவன் மனைவி மண்டோதரி அறிவுரை கூறவில்லையா? அவளது அறிவுரையைக் கேட்காமலிருந்ததற்காக இராவணன் பின்னர் மனம் வருந்தவில்லையா? அவ்வாறே, ஆங்கில ஆட்சியாளரும் நம்முடைய வலிமையை உணராமல், நமது கோரிக்கைகளையெல்லாம் புறக்கணித்து வருகின்றார்கள். எனவே, இராவணனுக்கு நேர்ந்த கதிதான் இவர்களுக்கும் ஏற்படும்" என்று இவர் கூறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.[1]

"எத்திராஜ சுரேந்திரநாத் ஆர்யா சென்னையைச் சேர்ந்தவர்; மயிலாப்பூரைச் சேர்ந்த தனகோடிராஜு நாயுடு என்பவரின் மகன், 1897ஆம் ஆண்டில், இவர் கல்கத்தா சென்று, பிரம்மஞானியாகமாறி, அங்குள்ள பிரம்மசமாஜத்தைச் சேர்ந்த சாது ஆசிரமத்தில் சேர்ந்தார். 1906ஆம் ஆண்டு மத்தியவாக்கில் இவர் சென்னை திரும்பினார். இவருக்கு பிரம்மசமாஜம் மாதம் ரூ. 30 வழங்கிவந்தது. இவருடைய முக்கியக் கூட்டாளி சி. சுப்பிரமணிய பாரதி என்று இவரைப்பற்றித் துப்பறியும் போலீசாரின் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.[2] ஆர்யாவின் வழக்கை விசாரித்த நீதிபதி எல். வி. மில்லர், இவரைக் குற்றவாளியெனத் தீர்மானித்து இவருக்கு 11 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.[3]

ஆட்சியைக் குலைக்கும் சதிகளிலும் பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் மீதான வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்வதற்காகவும், சில தொண்டர்படைகளைச் சட்ட விரோதமானவையென அறிவிக்கவும் அதிகாரமளிக்கும் சட்டம் ஒன்றை 1908ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை அரசாங்கம் இயற்றியது. குற்றவியல் சட்டத் திருத்தச்சட்டம் (The Criminal Law Amendment Act, 1908) என்ற பெயருடைய இந்தச் சட்டம், ஒரு தனிவகையான விசாரணைக்கு வழி செய்தது. இதன்படி, எதிர்தரப்பினர் இல்லாத நிலையில் ஒருதரப்பு விசாரணை (Exparte enquiry) ஒன்றை நடத்திய பின்னர், ஒரு நடுவர் (Magistrate) மூலம் வழக்கை விசாரிக்கலாம்; அப்படி விசாரித்தபின் இவ்வழக்கை குற்ற விசாரணை நீதிமன்றத்துக்குத் (Sessions) தாக்கல் செய்வதற்குப் பதிலாக, மூன்று நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றப் பிரிவில் சான்றாயம் (Jury) இல்லாமலே இந்த வழக்கை விசாரிக்கலாம். இதில் இந்த மூன்று நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானது.

---

1. G. O. No. 920, dated 3rd July, 1908-Prosecution Note.
2. C. I. D. Report, Madras. dated, 21st May, 1909. p. 1.
3. No 13 of the Third Criminal Sessions of 1908, High Court of Madras.

## ஆஷ் துரை கொலை

பயங்கர அரசியல் நடவடிக்கைகளைத் தடுக்கச் சென்னை அரசாங்கம் இவ்விதம் முன்னெச்சரிக்கையாகச் சட்டம் இயற்றியபோதிலும், நாட்டின் பிற பகுதிகளைப்போன்று சென்னை மாகாணத்தில் பயங்கர நடவடிக்கைகள் அவ்வளவாக நடைபெறவில்லை. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணியாச்சி ரயில் சந்திப்பில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஆஷ்துரையை 1911ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் தேதியன்று வாஞ்சிநாதன் என்ற இளைஞர் சுட்டுக் கொன்றது ஒன்றுதான் சென்னை மாகாணத்தில் நடந்த பயங்கர நடவடிக்கையாகும். ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதன், உடனே தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தானும் மாண்டுவிட்டார். வ. உ. சி. க்குத் தண்டனை விதித்தமையால், ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பின் விளைவாக நிகழ்ந்த அரசியல் கொலை இது எனலாம்.[1]

தீவிரவாதிகளை ஆங்கில அரசினர் இவ்விதம் ஐயக்கண்கொண்டு நோக்கியதற்கு அவசியமே இல்லை. ஏனெனில், தீவிரவாதிகள் பொதுவாக அரசியல் குற்றங்கள் எதையும் விரும்பவில்லை. எனினும் தீவிரவாதத் தலைவர்கள் சிலர் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் பேசிய பேச்சுக்களினால் எழுச்சிகொண்ட சில இளைஞர்கள், சில இடங்களில், குறிப்பாக வங்காளத்தில் அரசியல் குற்றங்களில் ஈடுபட்டிருக்கக்கூடும்.

சென்னை மாகாண நிலைமை குறித்து அரசுவிரோதத் தூண்டல் விசாரணைக் குழு (Sedition Commitee) கருத்துத் தெரிவிக்கையில், "சென்னை மாகாணத்தில் சுயமான புரட்சி இயக்கம் எதுவும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. விபின்சந்திரபாலர், பாரிசிலும் புதுச்சேரியிலும் இருந்துகொண்டு சதி செய்யும் புரட்சிவாதிகள் போன்ற ஒருசிலரின் செல்வாக்கு இல்லாதிருந்தால், தென்னிந்தியாவில் ஒரு தொல்லையும் ஏற்பட்டிருக்காது" என்று கூறியுள்ளது.[2]

## மின்டோ-மார்லிச் சீர்திருத்தம்

அரசு மேற்கொண்ட இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகளினால், பொங்கி எழும் தேசீய உணர்வைக் கட்டுப்படுத்த இயலவில்லை. மிதவாதிகள், முகமதியர்கள் ,நிலப்பிரபுக்கள், சமஸ்தானாதிபதிகள் ஆகியோரின் ஆதரவைப் பெறுவதற்காக, அவர்களுக்குச் சில சலுகைகள் வழங்குவது விவேகமான கொள்கையாகும் என்பதை அரசு உணரலாயிற்று. இதன் பலனாக மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள் என அழைக்கப்படும் 1909ஆம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

---

1. *Sedition Committee Report*, 1918, p. 165.
2. *Ibid*, 1918, p. 166.

இந்தச் சட்டத்தின்படி, மாகாணச் சட்டசபைகளின் அமைப்பு முறையிலும் அலுவல் முறையிலும் முக்கியமான திருத்தங்கள் செய்யப்பட்டன. சென்னை போன்ற மாகாணங்களின் சட்டசபை களில் உறுப்பினர்களின் உயர்ந்த அளவு எண்ணிக்கை, ஆளுநரும் அவருடைய நிருவாகசபை உறுப்பினர்களும் உட்பட, 50ஆக நிருணயிக்கப்பட்டது.[1] சட்டசபையில் அதிகாரிகளின் எண் ணிக்கை பெரும்பான்மையாக இருக்கும் முறை கைவிடப்பட்டது; அதிகாரிகள் அல்லாதவர்களே பெரும்பான்மையாக இருக்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அதிகாரிகள் அல்லாதவர்கள் பெரும் பான்மையினராக இருந்தாலும், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையினர் அல்லர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அரசு அதிகாரிகளாக இருந்து ஓய்வுபெற்றவர்களையே, அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்களாகச் சட்டசபைகளில் அரசாங்கம் நியமித் தது. சட்டசபைகளின் அதிகாரங்கள் மிகக் குறைவாக இருந்தமை யாலும், சட்டசபைகள் இயற்றும் சட்டங்களை ஏற்றுக்கொள்ளவோ தள்ளிவிடவோ ஆளுநருக்கு அதிகாரமிருந்தமையாலும், வங்காளச் சட்டசபை தவிர, மற்ற மாகாணச் சட்டசபைகளில் அதிகாரிகள் பெரும்பான்மையாக இருக்கும் முறையைக் கைவிடும்படி மார்லிப் பிரபு ஆலோசனை கூறினர். வங்காளச் சட்டசபையில் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மையினராய் இருந்தனர்.

நியமன உறுப்பினர்களுக்குத் தனித்தகுதிகள் எதுவும் நிருண யிக்கப்படவில்லை. தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இயலாத வகையில் அமைப்பொழுங்குடனில்லாத குறிப்பிட்ட பிரி வினருக்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கும் நோக்கத் துடன் உறுப்பினர்களை நியமிக்கும் முறை கையாளப்பட்டது.

சட்டசபையில் இடம்பெற்ற அதிகாரச் சார்பு உறுப்பினர்களில் சிலர், பதவியின் நிமித்தம் (Ex-officio) உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டார்கள். இவர்களில் ஆளுநரும் அவருடைய நிருவாகசபையின் நான்கு உறுப்பினர்களும் அடங்குவர். அதிகாரச் சார்பு உறுப் பினர்களை, ஆட்சித்தலைவர் (ஆளுநர்) நியமித்தார்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், தேர்தலுக்கு விரிவான விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. 1892 ஆம் ஆண்டுச் சட்டத்தில்கூட ஒருவகைத் தேர்தல் முறை இருந்து

---

1. சென்னைச் சட்டசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அரசின் தலைவர் உட்பட 49 என நிருணயிக்கப்பட்டது:

| | |
|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்டோர் ... | 21 |
| நியமிக்கப்பட்டோர் (அதிகாரிகள் அல்லாதவர்கள்) | 7 |
| அதிகாரிகள் ... ... ... | 20 |
| ஆளுநர் ... ... ... | 1 |

வந்தது. அதன்படி, பிரதிநிதிகளை ஆட்சித்தலைவரே நியமித்த போதிலும், அப்பிரதிநிதிகளை நடைமுறையில் தொகுதிகளே தேர்ந்தெடுத்தன. இந்த நியமன முறை, 1909ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்தின்படி ஒழிந்தது. சட்டசபைக்கு அதிகாரச் சார்பில்லாத உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில்கூட இயன்ற வரையில் தேர்தல் முறையே கையாளப்பட்டது. எனினும், தேர்தல் நேர்முகமாக நடைபெறவில்லை. நகராட்சிகள், மாவட்டக் கழகங்கள் போன்றவை மாகாணச் சட்டசபைகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளாக (Constituencies) விளங்கின.

சட்டசபைகளின் அமைப்பு முறையில் இவ்விதம் மாறுதல்கள் செய்த அதேசமயத்தில், அவற்றின் அதிகாரங்களும் அலுவல்களும் விரிவுபடுத்தப்பட்டன. 1892ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த உரிமை, மேலும் விரிவாக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தின்மீது தீர்மானங்களைக் கொண்டுவரவும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பற்றித் தீர்மானங்களைக் கொண்டுவரவும், எழுப்பப்படும் பிரதான வினாக்களையொட்டித் துணைக்கேள்விகள் கேட்கவும் உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டது.

1861ஆம் ஆண்டிலும், 1892ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்ட சட்டங்களிலிருந்து பலவகையிலும் மேம்பட்டதாக மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள் அமைந்திருந்தன என்பதில் ஐயமில்லை. மாகாணச் சட்டசபைகளில், அதிகாரிகள் அல்லாதவர்களின் பெரும்பான்மை ஏற்படுத்தியது குறித்துச் சில வட்டாரங்களில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. 1908ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் தேதி எழுதியுள்ள கடிதம் ஒன்றில், இந்தியா அமைச்சர் மார்லிப் பிரபு இந்தக் கண்டனத்திற்குப் பதிலளித்துள்ளார்:

"அரசினரால் ஏற்றுக்கொள்ள இயலாத சட்டங்களை, அதிகாரிகளல்லாத பெரும்பான்மையினர் நிறைவேற்றலாம். சட்டங்களுக்கு இசைவு தெரிவிக்க மறுப்பதற்குத் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சித்தலைவர் இந்நிலைமையைச் சமாளிக்கலாம். சட்டசபையின் உறுப்பினர்கள், பல்வேறு துறைகளில் அக்கறை கொண்டவர்கள். சட்டசபையின் அதிகாரங்களும், பொறுப்பும் விரிவடைந்துள்ளன. இந்நிலையில், அரசினர் இயற்ற விரும்பும் ஒரு சட்டத்தை, அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒருமுகமாக எதிர்ப்பதற்குச் சாத்தியமில்லை. அதிகாரச்சார்பற்ற உறுப்பினர்களில் ஒருசிலராவது அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். அப்படியே அதிகாரச்சார்பற்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒருமுகமாக ஒரு சட்டத்தை எதிர்ப்பார்களானால், அந்தச் சட்டம் உண்மையிலேயே எதிர்ப்புக்குரியதுதான்

என்பதை அரசாங்கம் உணர்ந்துகொண்டு, அதை நிறைவேற்ருமலிருப்பதே நல்லது.''[1]

மார்லிப் பிரபு கூறிய இக்கருத்து, பின்னர் முற்றிலும் சரியானதாயிற்று. ஏனென்ருல், அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்கள் ஒருபோதும் ஒருங்கிணைந்த பெரும்பான்மையுடன் செயல்பட்டதில்லை. நியமன உறுப்பினர்கள் பெரும்பாலும் அரசாங்கத்தையே ஆதரித்தார்கள்.

இந்தச் சட்டம் அரசாங்கத்தை எந்த வகையிலும் சட்டசபைக்குப் பொறுப்பாளியாக்கவில்லை.[2] இதனுல், தாங்கள் கூறும் கருத்துகளினுல், அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையில் எவ்வித மாறுதலும் ஏற்படப்போவதில்லை எனக் கருதிய, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள், சட்டசபை நடவடிக்கைகளில் அக்கறை காட்டவில்லை. மேலும், தாங்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளை அரசினர் ஏற்றுச் செயலாக்கப்போவதில்லை என்பதை நன்குணர்ந்த அவ்வுறுப்பினர்கள், பொறுப்புணர்வுடன் அரசின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும் கவனம் செலுத்தவில்லை. 17—12—1908ஆம் தேதியன்று பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் (House of Lords) மார்லிப் பிரபு பேசுகையில், "இந்தியாவில் பொறுப்பாட்சியை வளர்ப்பதற்கான ஒரு தொடக்கமாக இந்தச் சீர்திருத்தங்களை நான் கொண்டுவரவில்லை'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டு, '' இந்தச் சீர்திருத்தங்கள் சிலவற்றினுல் இந்தியாவில் நேரடியாகவோ அல்லது மறைமுகவாகவோ நாடாளுமன்ற முறை ஒன்று அமையுமானுல், அதற்கு நான் எந்தவகையிலும் பொறுப்பாளியாகமாட்டேன்'' என்று கூறினுர்.[3]

இவ்விதம் அமைக்கப்பட்ட சட்டசபைகள் "பிரதிநிதித்துவம் வாய்ந்தவையாகவோ, ஜனநாயக அடிப்படையில் அமைந்தவையாகவோ இருக்கவில்லை; அவற்றின் அமைப்பும் அதிகாரங்களும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன; நிருவாகத்தின் மீது அவற்றுக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இருக்கவில்லை; அரசாங்கச் சட்டங்கள் சிலவற்றை வன்மையாகக் கண்டிப்பதற்குரிய ஓர் அங்கமாக அமைந்ததேத் தவிர, அவற்றின் செயல்முறையும் நடவடிக்கைகளும் வெறும் போலிநாடகமாகவே அமைந்தன.[4]

## பிரித்தாளும் சூழ்ச்சி

இந்தச் சட்டத்தில் கண்ட தேர்தல் தத்துவம், ஒரு முன்னேற்ற நடவடிக்கையாக விளங்கியபோதிலும், அதை நடைமுறையில்

---

1. A. C. Banerjee-*op. cit.*, vol. II, p. 145.
2. *Report on Indian Constitutional Reforms*, 1918, p. 52.
3. As quoted in A. C. Banerjee — *op. cit.*, vol. II, p. 146.
4. M. R. Palande — *Indian Administration*, p. 240.

அரசாங்கம் செயல்படுத்திய விதம் மிகவும் விநோதமாக, எவ்வித ஒழுங்குமுறைக்கும் ஒவ்வாததாக, சமுதாயத்தில் பிளவுகளை உண்டாக்கக்கூடியதாக, ஒற்றுமையைச் சீர்குலைக்கக்கூடியதாக அமைந்திருந்தது.[1]

முதன்முதலில் முஸ்லீம்களுக்குத் தனியே பிரதிநிதித்துவம் வழங்க இந்தச் சட்டம் வழிசெய்தது. 1906ஆம் ஆண்டில் ஆகாகான் தூதுக் குழுவினரின் கோரிக்கைக்கு மின்டோ பிரபு அளித்த பதிலில், சமூகப்பிரதிநிதித்துவம் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை முதன்முதலாகக் காணப்படுகின்றது. 1906ஆம் ஆண்டு அக்டோபர் முதல்தேதியன்று, ஆகாகான் தலைமையில் முஸ்லீம்களின் தூதுக்குழு ஒன்று தலைமை ஆளுநர் மின்டோ பிரபுவைச் சந்தித்தது. இந்தியாவின் புதிய அரசியலமைப்பில் முஸ்லீம்களுக்குத் தனிச் சலுகைகளும், உரிமைகளும், சமூக அடிப்படையில் பிரதிநிதித்துவமும் வழங்க வேண்டுமென இத் தூதுக்குழுவினர் மின்டோவிடம் வலியுறுத்தினர்கள். அவர்களுடைய கோரிக்கையைத் தலைமை ஆளுநர் பரிவுடன் செவிமடுத்ததுடன், சமூக அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கும் கொள்கையையும் ஏற்றுக்கொண்டார். ஆனால், இக்கொள்கை நடைமுறையில் எவ்வாறு செயலாக்கப்படும் என்பது குறித்து அவர் எவ்வித உறுதிமொழியும் வழங்கவில்லை. ''நான் கொண்டுவரவிருக்கும் எந்த ஒரு நிருவாகச் சீரமைப்பிலும், முகமதிய சமுதாயத்தினரின் அரசியல் உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்படும் என நீங்கள் உறுதியாக நம்பலாம்'' என்று இத் தூதுக்குழுவினரிடம் மின்டோ பிரபு உறுதி கூறினர்.[2]

சமூகப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதன் மூலம், 1909ஆம் ஆண்டுச் சட்டத்தை வகுத்தவர்கள், இந்தியாவின் ஒற்றுமையைக் குலைத்து வலிமையை நலியச் செய்யும் பெருந்தீங்கினை இழைத்திருக்கிறார்கள் என்று திட்டமாகக் கூறலாம். இதன் பின்னர் மேற்கொண்ட எல்லாச் சீர்திருத்தங்களிலும் இந்தக் கொள்கையை விடாமல் கையாள நேர்ந்தது. தனி வாக்காளர் தொகுதிகள், சமூகப் பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் தீங்கான விளைவுகளை நன்கு உணர்ந்திருந்த மான்டேகுவும், செம்ஸ்போர்டு பிரபுவும்கூட மின்டோ பிரபுவின் உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டியதிருந்தது.

> ''எந்த ஒரு வகுப்புவாரி வாக்காளர் தொகுதி முறையும் சுயாட்சித் தத்துவத்தின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடங்கலாக இருக்கும் என நாங்கள் கருதுகிறோம். இந்த முறையை விரிவாக்குவதால் ஏற்படும் தீங்குகள் மிகத் தெளிவாகத் தெரிந்தவை. ஏற்கெனவே சென்னையில் ஒரு பெரும்பான்மைச் சமூகத்

---

1. G. N. Singh — *op. cit.*, p. 396.
2. A. C. Banerjee — *op. cit.*, vol. II, p. 137.

தின் நலனுக்காகச் சமூகப் பிரதிநிதித்துவத்தைப் புகுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேசமயம், சில மறுக்கமுடியாத உண்மைகளை நாம் எதிர்நோக்கியாகவேண்டும். 1909ஆம் ஆண்டில் தனி வாக்காளர் தொகுதிகள் அமைத்து முகமதியர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இந்து, முஸ்லீம் ஆகிய இரு சமூகங்களின் அரசியல் தலைவர்களிடையே ஏற்பட்ட இந்த நடப்பு உடன்படிக்கையில் இந்துக்களின் இசைவும் பெறப்பட்டுள்ளது. முகமதியர்கள், இதை ஒரு தீர்ந்துபோன பிரச்சினையாகக் கருதுகிறார்கள். இந்த உடன்பாட்டிலிருந்து பின்வாங்க முயன்றால், கடுமையான எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டியதிருக்கும். அத்துடன், மக்களாட்சி அரசாங்க முறையின்கீழ் தன்னுடைய நலனைப் பாதுகாத்துக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள பெரும் நெருக்கடி காலத்திலெல்லாம் அரசாங்கத்திடம் மிகுந்த விசுவாசத்துடன் நடந்து வந்துள்ள ஒரு சமூகத்தின் விசுவாசத்தில் நலிவு உண்டாகும். வகுப்பு வாரித் தொகுதிகளும், தனிப்பிரதிநிதித்துவமும்தான் தங்களுக்குச் சிறந்த பாதுகாப்பு என முகமதியர்கள் கருதுகிறார்கள். ஆகவே, நம்முடைய வாக்குறுதியிலிருந்து நாம் காப்பாற்றவேண்டியிருப்பதுடன், சட்டசபைகளில் முகமதிய சமுதாயத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி பார்த்துக் கொள்வதும் நம்முடைய கடமையாகின்றது. 1909ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முடிவு தவறானதென்றும் பொறுப்பாட்சியை நோக்கி முன்னேறிச் செல்லும்பொழுது அந்த முடிவைத்தொடர்ந்து கையாள்வது காலத்திற்கு ஒவ்வாதது என்றும் அந்த முடிவைக் கைவிடுதல் அவர்களுக்குத்தான் நன்மை உண்டாகும் என்றும், இந்தக் காரணங்களினால்தான் அந்த முடிவை மாற்றத் தீர்மானித்தோம் என்றும் அவர்களிடம் நாம் எவ்வாறு விளக்கிக் கூறிக்கொண்டிருக்கமுடியும்? இந்த முறையை நீடிக்க அவசியமில்லை என நாம் நன்கு உணர்ந்தபோதிலும், முகமதியர்களைப் பொறுத்தவரையில், நிலைமை மாறுதலடையும் வரையில் தற்போதைய முறையே நீடித்ததாகவேண்டும்; பொதுக் குடியுரிமையை ஏற்படுத்துவதில் தாமதமான முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும், இந்த முறையைத்தான் தொடர்ந்து கையாள வேண்டியிருக்கிறது''

என்று மான்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.[1]

## வகுப்புவாதம்

முஸ்லீம்களிடையே முதலில் தோன்றிய இந்த வகுப்புவாத நோய், ஆங்கிலோ-இந்தியர், தாழ்த்தப்பட்டோர் போன்ற பிற சமூகத்தினரிடையேயும் பரவலாயிற்று. இந்தியாவின் பிற்கால வரலாற்றில் துயர்மிகுந்த அத்தியாயமாக விளங்குவது இந்த வகுப்பு வாத அரசியலேயாகும்.

---

1. *Report on Indian Constitutional Reforms*, 1918, p. 149.

இந்திய மக்களின் பிரதிநிதியாக விளங்கிய காங்கிரசுக்கு 1909ஆம் ஆண்டுச் சட்டம் சிறிதும் மனநிறைவளிக்கவில்லை. 'இந்திய அரசாங்கத்திற்கு இறுதியில் பிரிட்டிஷாரே பொறுப்பாளி; படிப்பறிவில்லாத இந்திய மக்களின் நலன்களைக் கருதும் பாதுகாவலர்களாக படித்த வர்க்கத்தினரைக் கருத இயலாது' என்னும் ஆங்கிலேயரின் கொள்கையின் அடிப்படையிலேயே 1909ஆம் ஆண்டுச் சட்டம் அமைந்திருந்தது. எனவே, இந்திய மக்களின் மனக் கொதிப்பு சிறிதும் தணியாமல் இருந்ததில் வியப்பில்லை.

'1909ஆம் ஆண்டுச் சட்டம்தான் இறுதியானது; இதற்குமேல் அரசியல் உரிமைகளையும் சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது' என்று பலர் கருதி வந்தனர். ஆனால் இக்கருத்துத் தவறான ஊகமே என்பதைப் பின்னாளைய நிகழ்ச்சிகள் நிரூபித்தன. நாளடைவில் மாகாண அரசுகளுக்கு அதிக அளவில் சுயாட்சி வழங்கவேண்டிய கட்டாயம் பிரிட்டிஷ் அரசினருக்கு ஏற்பட்டது.

### *உள்ளாட்சி நிறுவனங்கள்*

'உள்ளாட்சித் துறையிலும் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதனாலும் பொதுமக்கள் மிகவும் வெறுப்புணர்ச்சி கொண்டிருந்தார்கள். **'இந்து'** பத்திரிகையின் 6—1—1908 ஆம் தேதி இதழில், ''திறமைமட்டும் உள்ளாட்சி நிறுவனங்களின் ஒரே குறிக்கோளாக இருக்கக்கூடாது. பொதுமக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டுவதற்குரிய பயிற்சிக்களன்களாகப் பணி புரிவதே அவற்றின் குறிக்கோளாக இருக்கவேண்டும். இந்த நோக்குடன் பார்க்கும்பொழுது, இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் உள்ளாட்சி நிறுவனங்களின் சாதனை வெறும் பூச்சியமாக இருப்பது கண்டு வேதனைப்படாமலிருக்க முடியவில்லை'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.[1]

பிரிட்டிஷ் ஆட்சியில், ஊராட்சிகளின் அவலநிலையை அன்னி பெசன்ட் அம்மையார் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். ''ஊர் சபைகளையும், நகரசபைகளையும் பிரிட்டிஷ் ஆட்சி அடியோடு அழித்துவிட்டது. அவற்றுக்குப் பதிலாக வாரியங்களும், சபைகளும் கலந்த கவைக்குதவாத ஒரு கதம்ப முறையைப் புகுத்தியுள்ளனர். இந்த முறையின்படி பதவிக்கு வரும் ஆங்கிலேய அதிகாரிகள், இந்தியர்களின் நியாயமான கோரிக்கைகளையும் கருத்துக்களையும் கூட புறக்கணித்துவிட்டு, தனக்கேயுரிய தனிப் பெரும்பாரம்பரியங்களையுடைய இந்தப் பழம்பெருநாட்டில், ஆங்கில முறைகளைப் புகுத்துவதில் முனைகிறார்கள். பிறகு, தங்களுடைய கதம்ப முறையினால் பலன் ஏற்படவில்லை என்று முணுமுணுக்கிறார்கள். கதம்பத்தினால் இதுதான் நிகழும். ஊராட்சியிலிருந்து தொடங்கி உச்சிவரையில், அந்நியர்களின் தலையீடில்லாமல், தன்னுடைய சொந்த முறை

1. Newspaper Report (Conf.), 1908, p. 20.

களுக்குப் புத்துயிரளித்துச் சீர்திருத்தி அமைக்க இந்தியா விரும்பு கிறது'' என்று அன்னிபெசன்ட் கூறியுள்ளார்.[1]

திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவந்த ''புதன்விமர்சனம்'' (*Wednesday Review*) என்ற வாரப்பத்திரிகையின் 8—12—1909ஆம் தேதி இதழில், ''இந்தியாவில் அடிப்படைச் சமூக அமைப்பாக விளங்கும் கிராமத்தை எட்டாத வரையிலும், பொதுப்பணிகளைச் செய்வதற்குக் கிராமத்திற்கு ஓரளவுக்கேனும் வாய்ப்பளிக்காத வரை யிலும், அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பன்முகமாக்குவதற்கான (Decentralisation) எந்த முறையினாலும் எவ்விதப் பலனும் ஏற்படாது. பொதுப்பணிகளை மேற்கொள்வதற்குக் கிராமவாசிகள் திறமையும் ஆர்வமும் உடையவர்களாக விளங்குகிறார்கள். கிராமத்தினரால் எளிதாகவும் செலவின்றியும் செய்து முடிக்கக்கூடிய பல சிறிய விவகாரங்களில தாலுக்கா அதிகாரிகள் கவனத்தைச் செலுத்தித் தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றுகூறியுள்ளது.[2]

அதிகாரங்களை மிதமிஞ்சி ஒருமுகமாக்குவதால் (Centralisation) உண்டாகும் தீங்குபற்றி விசாரித்து, இந்தத் தீங்குகள் நேராமல் தவிர்ப்பதற்குரிய வழிவகைகளைக் கூறுவதற்காக விசாரணைக் குழு ஒன்றை 1909ஆம் ஆண்டில் மார்லிப் பிரபு நியமித்தார். உன்னத மான நோக்கத்துடன் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழு, நடுநிலையோடும், நேர்மையோடும், நீதியுணர்வோடும் நடந்திருந் தால், மகத்தான விளைவுகள் ஏற்பட்டிருக்கும். ஆனால், இக் குழு விடம் இந்நல்லியல்புகள் சிறிதும் அமைந்திருக்கவில்லை. இக்குழு வின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதிலேயே பெருந்தவறு இழைக் கப்பட்டது. இக்குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்கள் அனைவரும், அன்றிருந்த முறையைச் சிறிதும் மாற்றாமல் அப்படியே வைத்திருக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருந்தனர் இக்குழுவில் ஆறு உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். இவர் களில், ரமேஷ் தத் என்ற ஒரே ஒரு இந்தியர்மட்டுமே இடம்பெற் றிருந்தார்; குழுவின் தலைவர் உட்பட மற்ற அனைவரும் அதிகார வர்க் கத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, இந்தியரின் சுதந்திரமான கருத்தை பிரதிபலிப்பவர்களுக்கு இக்குழுவில் போதிய பிரதிநிதித்துவம் அளிக் கப்படவில்லை. ஆகவே, அனைவரும் எதிர்பார்த்ததைப் போலவே, இக்குழுவின் விசாரணையும் தோல்வியில் முடிந்தது. மக்களாட்சியில் அடித்தளமாக உள்ளாட்சிகளை உருவாக்குவதற்கு ஒரு முயற்சியும் நடைபெறவில்லை. இந்தியா விடுதலை பெறும்வரையில், ஊராட்சி முறைக்குப் புத்துயிரளிப்பதற்கு உருப்படியான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மத்திய, மாகாண நிருவாகத் துறைகளைப் போலவே, உள்ளாட்சி நிருவாகத் துறையிலும் அரசாங்

1. Annie Besant — *op, cit.*, p. 16.
2. Newspaper Report (Conf.), 1909, p. 1017.

கத்தின் கொள்கை, இந்தியப் பொதுமக்களின் உற்சாகத்துடன் வர வேற்கத் தக்கதாக இருக்கவில்லை என்ற முடிவுக்கு வரவேண்டியிருக் கிறது.

## பத்திரிகைத் துறை

அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பத்திரிகைகளும் மிகவும் வன்மையாகக் கண்டித்து வந்தன. எனவே, அரசாங்கம் பேச்சு மேடைகளை கடுமையாகக் கண்காணித்து வந்தது போலவே, பத்திரி கைகளிடமும் கடுமையான போக்கில் நடந்துகொண்டது. பத்திரி கைகளுக்குப் பலவிதமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பலவிதமான நாளிதழ்களும், வார இதழ்களும், வாரம் இருமுறை இதழ்களும், மாத இதழ்களும், மாதம் இருமுறை இதழ்களும் வெளிவந்துகொண் டிருந்தன. "இந்தியாவில் பத்திரிகை தோன்றுவதற்கு, இங்குக் குடியேறிய, அரசாங்கத்துடன் தொடர்பில்லாத ஐரோப்பியர்களே காரணம்"[1] எனலாம்.

சென்னையில் ஆரம்பத்தில் வெளிவந்த பத்திரிகைகள் **'கவர்ன் மென்ட் கெசட்', 'மெட்ராஸ் கெசட்', 'மெட்ராஸ் கூரியர்'** என்னும் மூன்று வார இதழ்களாகும். ஐரோப்பியச் செய்தி இதழ்களில் வெளி வந்த செய்திகளின் பகுதிகளை இப்பத்திரிகைகள் வெளியிட்டன; மேலும், நாடாளுமன்ற விவாதங்கள் பற்றிய செய்திகளை, அவ் விவாதங்கள் நடந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு, இவை வெளி யிட்டு வந்தன. கிழக்கிந்திய வாணிகக் குழுவின் வானூல் கணிப் பாளர் (Astronomer) கோல்டிங்காம் (Goldingham) என்பவர் **'கவர்ன் மென்ட் கெசட்'** என்ற இதழுக்கு ஆசிரியராக இருந்தார். **"மெட்ராஸ் கூரியர்"** நகைச்சுவைத் துணுக்குகளுக்குப் பெயர்பெற்றதாக விளங் கியது; ஆனால், அரசாங்கத்தின்மீது அது கவனம் செலுத்தவில்லை. இவ்விதழ், பல சமயங்களில், **'மெட்ராஸ் கெசட்'** இதழுடன் மோதியது.[2]

மெட்ராஸ் கெசட் இதழில் தமிழில் விளம்பரங்கள் வெளிவந்தன. இதற்கும், மெட்ராஸ் கூரியருக்கும் அரசாங்கம் ஆதரவளித்தது. சென்னையிலுள்ள ஸ்டிரிங்கர் தெருவில், அச்சகம் ஒன்றை வில்லியம் உர்க்கர்ட் (William Urquhart) என்பவர் நிறுவியிருந்தார். அவர் 'கமர்சியல் சர்குலேட்டர்' என்ற பெயரில் அரைப்பக்க அளவில் ஒரு விளம்பர இதழை நடத்திவந்தார். இதையே அவர் பெரிதாக்கி மெட்ராஸ் கூரியர் என்ற புதிய பெயரில் வெளியிட்டார். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் எழுத்தராகப் பணியாற்றிய சி. எச். கிலே (C. H. Clay) என்பவர், இந்த இதழின் ஆசிரியராக

---

1. *Some influences that made the British Administrative System in India*: Prof. M. Ruthnaswamy, p. 638.
2. C. Srinivasachari-*History of the City of Madras*, p. 200.

இருந்தார். அவர் ஆசிரியராக இருந்தபொழுது, இந்த இதழ் மிகுந்த செல்வாக்குப் பெற்றது.[1]

## இந்தியரின் இதழ்கள்

சென்னையிலிருந்து முதன்முதலில் இந்தியரால் வெளியிடப்பட்ட பத்திரிகை 'கிரசன்ட்' எனலாம். இது, 1844ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளியாகியது. பொதுமக்கள் கருத்தை உருவாக்கிய முன்னோடித் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்த, காசுலு இலட்சுமி நரசு செட்டி இதனைத் தொடங்கினர். ஆனல், நிதி நெருக்கடி காரணமாக விரைவிலேயே இவ்விதழ் நின்றுபோயிற்று. எனினும், ராஜா சர். டி. மாதவராவ், அவருடைய ஆருயிர்த் தோழராகிய திவான் பகதூர் ரங்கநாத முதலியார் ஆகிய இருவரின் முயற்சியால் 'சுதேசிப் பொதுக்கருத்து' (Native Public Opinion) என்ற இதழ் தொடங்கப் பெற்றது. பிற்காலத்தில் மைசூர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதி பதியாக விளங்கிய ஏ. இராமச்சந்திர ஐயர், "மதராசி" (Madarasse) என்னும் பத்திரிகையை நிறுவினர். இதனுடன், 'சுதேசிப் பொதுக் கருத்து' இதழ் பின்னர் இணைக்கப் பட்டது. 'மக்கள் நண்பன்' (People's Friend) என்ற பெயரில் மற்ருெரு இதழும் தொடங்கப் பட்டது. ஆனல், இந்தப் பத்திரிகைகள் அனைத்தும் நாளடைவில் மறைந்து போயின.

1878ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 'இந்து' இதழ் வெளி வந்தது. "தென்னிந்தியாவில் பொதுவாழ்வை உண்மையில் தொடங்கிவைத்தது இந்து இதழேயாகும்" என்று பட்டாபி சீத்தா ராமையா குறிப்பிடுகின்ருர்.[2] இந்துப் பத்திரிகை முதலில் வார இதழாக வெளிவந்தது; 1883இல் வாரம் மும்முறை வெளியிடப் பட்டது; 1889இல் நாளிதழாக மாறியது. 1905ஆம் ஆண்டில் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்காரின் கைக்கு 'இந்து' இதழ் மாறியது. அவர் இதைத் தம்முடைய அயரா உழைப்பினல், வலிவும் பொலிவும் வாய்ந்ததாக உருவாக்கிப் பெருஞ்செல்வாக்குடைய நாளிதழாக வளர்த்தார். இன்று, உலகெங்கும் முழுநேரச் செய்தியாளர்களை (Correspondent) நியமித்திருக்கும் நாளிதழ், தென்னிந்தியாவிலேயே 'இந்து' ஒன்றுதான்.

1836ஆம் ஆண்டில் தோன்றிய 'ஸ்பெக்டாக்குலர்' (Spectacular) 1860இல் தொடங்கப்பட்ட 'மெட்ராஸ் டைம்ஸ்' (Madras Times), 1867இல் வெளியான 'மெட்ராஸ் மெயில்' (Madras Mail) போன்ற பத்திரிகைகள், சில குறிப்பிட்ட குழுவினரின் நலன்களை மேம்படுத் தும் நோக்கத்துடன் நிறுவப்பட்டனவாகும். மெட்ராஸ் மெயிலுக்கு முன் தோன்றிய மெட்ராஸ் டைம்ஸ் இதழின் வாழ்வு அமைதியற்ற தாக இருந்தது. "ஐரோப்பியச் சமூகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள்,

---

1. *The Madras Tercentenary Commemoration Volume* — A History of Journalism in Madras by K.P.Viswanatha Iyer, pp. 451—452.
2. *Op. cit.* vol. I, p. 10.

சிறு வாணிகர்கள், தோட்ட முதலாளிகள் போன்றவர்களின் நலனுக்காக இந்த இதழ் நடத்தப்பட்டது. எனவே, வர்த்தகர்களுடனும், தோட்ட முதலாளிகள் சங்கங்களுடனும் இந்த இதழ் தொடர்பு கொண்டிருந்தது. வாணிகர் சங்கம், சென்னைக் கழகம் ஆகியவற்றுடன் மெட்ராஸ் மெயில் தொடர்புகொண்டிருந்தது. 'மெட்ராஸ் டைம்ஸ்' இதழைப் போலன்றி, 'மெட்ராஸ் மெயில்' இதழ் மேட்டுக் குடியினர் சார்புடையதாக விளங்கியது. ஐரோப்பிய அதிகாரி வர்க்கத்தினரும், வாணிக உலகின் நவாபுகளும் 'மெட்ராஸ் மெயில்' இதழை ஆதரித்து வந்தார்கள். இங்கிலாந்திலிருந்த செய்தி இதழ்களின் மாதிரியில் இவ்விதழ் வெளியிடப்பட்டு வந்தது."[1]

மெட்ராஸ் மெயில் பத்திரிகையின் முதல் இதழ், *1868*ஆம் ஆண்டு டிசம்பர் *14*ஆம் தேதியன்று வெளியாகியது. அதுமுதல், இந்துப் பத்திரிகையுடன், இந்த இதழும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது. (*31—12—1982*ல் மூடப்பட்டது.) 1921ஆம் ஆண்டு ஜனவரியில், பங்கு நிறுவனமாக (Partnership) இயங்கிவந்த 'மெட்ராஸ் மெயில்' நிருவாகம், ஒரு தனியார் கம்பெனியாக மாற்றப் பட்டது; இதன் அலுவலகமும், ஜார்ஜ் டவுனிலிருந்து இன்றுள்ள அண்ணா சாலைக் கட்டிடத்திற்கு மாறியது.

இந்துப் பத்திரிகையை நிறுவியவர்களால் *1880*ஆம் ஆண்டில் 'சுதேசமித்திரன்' இதழ் தமிழில் தொடங்கப்பெற்றது. சென்ற நூற்றுண்டின் இறுதியாண்டுகளில், சென்னை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது முதலிய மொழிகளில் பலவகையான வார, மாத, நாளிதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

### *பத்திரிகைச் சுதந்திரம்*

தொடக்கத்தில், பத்திரிகையின் போக்கில் அரசாங்கம் தலையிடவில்லை. ஆனால், விரைவிலேயே பத்திரிகை ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தலானார்கள். அதிகாரிகளுடைய மனைவிமார்களின் சொந்த நடவடிக்கைகளைக்கூட அவை கண்டிக்கலாயின. இந்தச் சமயத்தில், நாட்டின் அரசியல் நிலைமையும் கொந்தளிப்பாக இருந்தது. இதனால், அரசின் ஒப்புதல் பெறாமல் எந்தச் செய்திகளையும் பத்திரிகைகளில் வெளியிடக்கூடாதெனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. வெல்லெஸ்லி பிரபு (*1798-1805*) தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றபோது, நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் எந்தநேரமும் படையெடுக்கலாம் என்ற அச்சம் எல்லோரையும் அலைக்கழித்துக்கொண்டிருந்த்து. ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதற்காகப் பிரெஞ்சுக்காரர்களுடன் மைசூர்த் திப்பு சுல்தான் பேரம் பேசிக் கொண்டிருந்தார். நிஜாமுடன் நடந்த போரில் வெற்றிபெற்ற மராத்தியர்கள், தங்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்குத் தருணம்

---

1. K. P. Viswanatha Iyer, *op. cit.*, p. 454.

பார்த்துக் கொண்டிருந்தார்கள்.[1] இத்தகைய நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில், இந்தியாவில் ஆங்கிலேயரின் நலனைப் பாதுகாப்பதற்குப் பத்திரிகைகளின்மீது கண்காணிப்பு அவசியம் என அரசாங்கம் கருதியது. ஆகவே, இந்தியா முழுவதிலும் வெளிவந்த பத்திரிகைகள் அனைத்தையும் தணிக்கை செய்யும் முறை 1799ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டில் பத்திரிகைகள் தொடர்பான பல விதிமுறைகளை வெல்லெஸ்லி பிரபு கொணர்ந்தார். இதன்படி, "ஒவ்வொரு பத்திரிகையின் அடியிலும் அதை அச்சிடுபவரின் பெயரை அச்சிடவேண்டும்; ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரியரும், உரிமையாளரும் தங்கள் பெயரையும் முகவரியையும் அரசாங்கச் செயலாளருக்கு அறிவிக்கவேண்டும். அரசாங்கச் செயலாளர் அல்லது அதற்கென அதிகாரம்பெற்ற ஒருவரின் அனுமதி இன்றி எந்தப் பத்திரிகையையும் வெளியிடக்கூடாது. இந்த விதிமுறைகள் எதையாவது யாராவது மீறி நடந்தால், அவர் ஐரோப்பாவுக்கு நாடுகடத்தபடுவார்."[2] *1801* முதல் *1818* வரையில், அதிகாரிகளைக் கண்டித்தமைக்காகவும், அரசின் நடவடிக்கைகளைக் குறைகூறியதற்காகவும் பல பத்திரிகைகளின் ஆசிரியர்கள் எச்சரிக்கப்பட்டனர்; அல்லது கண்டனத்துக்குள்ளாயினர்.

ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநராக இருந்தகாலத்தில் (*1813-1823*) நிலைமை சற்றுச் சீரடைந்தது. இவர் முற்போக்குக் கொள்கையுடையவர்; பத்திரிகைகள் சுதந்திரமாகக் குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவதை ஆதரிப்பவர். எனவே, பத்திரிகைகள் சட்டத்திற்குட்பட்டுத் தங்களுடைய பணிகளை ஆற்றுவதற்கு இவர் ஊக்கமளித்தார். பத்திரிகைகளைத் தணிக்கை செய்யும் முறையை இவர் *1818*இல் ஒழித்தார். ஆனால், சில ஆசிரியர்கள் குறிப்பிடுவதுபோல், இதன்பின் பத்திரிகைகளுக்கு முழுச் சுதந்திரம் கிடைத்து விட்டதாகக் கருத இயலாது. மாறாக, நிலைமைகளைத் தெளிவாக விளக்கிப் புதிய விதிமுறைகள் கொண்டுவரப்பட்டன. *1818*ஆம் ஆண்டு ஒழுங்குவிதிகளின்படி, "இந்திய அதிகாரிகள் அல்லது இங்கிலாந்திலுள்ள அதிகாரிகளின் நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் கடிந்துரைக்கக் கூடாது; உள்ளாட்சிகளின் அரசியல் பேரங்கள் குறித்து விமர்சிக்கக் கூடாது; நிருவாக சபை உறுப்பினர்கள், நீதிபதிகள், கல்கத்தா மேற்றிராணியார் (Bishop) ஆகியோரைக் குறைகூறி எழுதக்கூடாது; இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரத்தையும் மதிப்பையும் சீர்குலைக்கும் வகையில் ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பிற பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கும் வாசகங்கள் எதையும் மற்றப் பத்திரிகைகள் மீண்டும் பிரசுரிக்கக்கூடாது; சமுதாயத்தில் உட்பூசல்களை உண்

---

1. நிஜாமை கர்தா என்ற இடத்தில் நானாபர்னவிஸ் தலைமையிலான மராத்தியர்கள் 1795இல் தோற்கடித்து, தாங்கள் விரும்பிய வண்ணம் ஓர் உடன்படிக்கையில் அவரைக் கையெழுத்திட வைத்தார்கள்.

2. As quoted in M. Ruthnaswamy-*op.cit.*, p. 639.

டாக்கக்கூடிய, தனியார் ஊழல்களை அல்லது தனிநபர்கள் மீதான அவதூறுகளையோ வெளியிடுதல் கூடாது."[1]

### பத்திரிகைகளின் நோக்கம்

பத்திரிகைகளைப்பற்றி 1822ஆம் ஆண்டில் மீண்டும் மறு பரிசீலனைச் செய்யப்பட்டது. இந்தியாவில் பத்திரிகைகள் பற்றிய பிரச்சினை குறித்து விசாரணை செய்து அறிக்கை அளிப்பதற்காக சர் தாமஸ் மன்ரோவை இந்திய அரசாங்கம் நியமித்தது. அவர் தம் முடைய அறிக்கையில், "சுதந்திரமான பத்திரிகைத் துறையும் அந்நியர் ஆட்சியும் ஒருநாளும் ஒத்துப்போக முடியாது; இவை இரண்டும் ஒரேசமயத்தில் இணைந்திருக்கவும் இயலாது. இதற்குப் பொருத்தமான காரணம் உண்டு. சுதந்திரமான பத்திரிகைத்துறையின் தலையாய கடமை என்ன? அந்நியர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவிப்பதும், அந்த ஒரே குறிக்கோளுக்காக எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருப்பதுமே ஆகும். இந்தியர்களின் பத்திரிகைகளும், ஐரோப்பியர்களின் பத்திரிகைகளும் சுதந்திரமாக இயங்குவதற்கு நாம் உரிமை வழங்கினோமானால், இத்தகைய விளைவுதான் ஏற்படும். இந்திய மக்களுக்கு அறநெறியையும் சமயத்தையும் போதிப்பது ஒன்றுதான் இந்தியப் பத்திரிகைகளின் நோக்கமாக இருக்க வேண்டுமென்றும் இதற்குமேல் வேறு எவ்வித முயற்சிகளிலும் அவை ஈடுபடக்கூடாதென்றும் நாம் விரும்புகின்றோம். அப்பத்திரிகைகளும் ஒருகுறிப்பிட்ட காலம் வரை இவ்விதமே இயங்கிவருவதுடன் மனநிறைவு கொள்ளலாம். ஆனால், விரைவிலேயே அவர்கள் பத்திரிகைகளை அரசியல் குறிக்கோள்களை அடைவதற்குப் பயன்படுத்துவதற்கு அறிந்துகொள்வார்கள்; தங்கள் நாட்டின் நிலையை நம் நாட்டு நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, நம்முடைய ஆதிக்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயல்வார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

அதே அறிக்கையில் இன்னோரிடத்தில் பத்திரிகைகளின் நிலை குறித்துத் தாமஸ் மன்ரோ குறிப்பிடுகையில், "இந்தியாவின் இன்றைய நிலையில், சுதந்திரமான பத்திரிகைத் துறையினால் ஏற்படக்கூடிய நன்மை மிகவும் சொற்பம்; அதுவும் நிச்சயமல்ல; ஆனால் ஏற்படக்கூடிய கெடுதியோ அளவிடமுடியாதது. சுதந்திரமான பத்திரிகைத்துறையை வழிகாட்டியாகக் கருதக்கூடிய, பத்திரிகைகள் வாயிலாக அறிவு பெறக்கூடிய பொதுமக்கள் இந்தியாவில் இல்லை. அங்குள்ள ஐரோப்பியச் சமூகத்தினருள் பெரும்பாலாராக அமைந்திருப்பவர் இங்கிலாந்தின் அரசையும் வாணிகக்குழுவையும் சார்ந்த நிருவாக அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளுமேயாவர்; வாணிகர்களும், கடைக்காரர்களும் மிகச் சிறு அளவில் உள்ளனர். இவர்களுள்

1. Mill and Wilson — *The History of British India,* Vol. VII, p. 413.
2. Vide — Fort St. George, Secret Consultation, dated 12th April of 1822, Para 3.

பெரும்பாலோர் ஐரோப்பியப் பத்திரிகைகளை வாங்கிப் படிக்கும் வசதியுள்ளவர்கள்; இந்தியப் பத்திரிகைகளைப் படித்து அரசியல் செய்திகளை அறிந்துகொள்ளவேண்டிய அவசியம் இவர்களுக்கு இல்லை'' எனக் கூறியிருக்கின்ருர்.[1]

தாமஸ் மன்ரோ தமது அறிக்கையின் முடிவுரையில், ''இந்தியா வில் பத்திரிகைத் துறை பற்றிய பிரச்சினையைத் தங்கள் முன்வந் துள்ள மிக முக்கியமானதொரு பிரச்சினை என்ற எண்ணத்துடன் மாண்புமிகு இயக்குநர்கள் அணுகுவார்கள் என நம்புகிறேன். பத்திரிகைத்துறை மிகச் சக்திவாய்ந்த ஒரு சாதனம். இதனை அரசினர் தங்களின் முழுக்கட்டுப்பாட்டின்கீழ் கவனத்துடன் வைத்திருக்கா விட்டால், இந்நாட்டில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்துக்கு அது மிகப் பெரும் அபாயமாக உருவெடுத்துவிடும்'' என்று எச்சரிக்கை விடுத் திருக்கிருர்.[2]

## *பத்திரிகைக் கட்டுப்பாடுகள்*

தாமஸ் மன்ரோவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம் பத்திரிகைகளுக்கான புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது. அரசாங்கத்தின் உரிமம் (Licence) பெருமல் எந்த ஒரு அச்சகத்தையும் நிறுவக்கூடாதெனவும், அரசின் முன் அனுமதி பெரு மல் எந்த ஒரு பத்திரிகையையும், நூலையும் வெளியிடக்கூடாதென வும் ஆணை பிறந்தது. கல்கத்தாவில் தலைமை ஆளுநர் ஆலோசனை சபையில் மூத்த உறுப்பினராக இருந்தவரும், ஹேஸ்டிங்ஸ் பிரபு வுக்குப் பிறகு ஆமெர்ஸ்ட் பிரபு (Lord Amherst) தலைமை ஆளுநராகப் பதவி ஏற்கும் வரையில் (*1823* ஜனவரி முதல் ஆகஸ்டு **13** வரை) தற்காலிகத் தலைமை ஆளுநராகப் பணியாற்றியவருமான ஜான் ஆடம்ஸ் (John Adams) பதவி வகித்தபோது *1823*ஆம் ஆண்டில் இந்தப் புதிய கட்டுப்பாட்டு விதிகள் கொண்டுவரப்பட்டன.

பத்திரிகை ஆசிரியர்களின் உரிமையைக் கட்டுப்படுத்திய இந்த விதிமுறைகளை *1835*ஆம் ஆண்டில் சர் சார்லஸ் மெட்காஃப் (Sir Charles Metcalfe) நீக்கினர். இவர், வில்லியம் பெண்டிங்க்குப் பிரபு விற்குப் பிறகு, சிறிது காலம் தற்காலிகத் தலைமை ஆளுநராகப் பணி யாற்றினர். தம்முடைய பதவி தற்காலிகமானதுதான் என்பதை நன்குணர்ந்திருந்தபோதிலும், மிகுந்த துணிச்சலுடன், *1835*ஆம் ஆண்டில் பத்திரிகையாளர்களின் உரிமையைக் கட்டுப்படுத்தி விதி களை நீக்கும் சட்டம் ஒன்றை இயற்றினர். இவருடைய பரந்த கொள்கையை ஆதரித்து, மெக்காலே பிரபுவும் இவருடைய இந்த முயற்சிக்கு உதவிசெய்தார். இந்தச் சட்டத்தின்படி, இந்தியா முழு வதும் பத்திரிகைகளுக்கு உரிமம் பெறும் முறை ஒழிக்கப்பட்டது; பத்திரிகைத் தணிக்கையும் ஒழிந்தது; இங்கிலாந்திலுள்ளதுபோல் பத்திரிகைகளைப் பதிவு செய்தால் போதும் என்ற எளிய முறை அமுலுக்கு வந்தது.

---

1. Ibid — 5 para.
2. Ibid — 15 para.

இவ்வாறு இந்தியப் பத்திரிகைகள், இங்கிலாந்துப் பத்திரிகைகளைப்போல், சுதந்திரமாக இயங்கி வரலாயின. "இந்தியப் பத்திரிகைச் சுதந்திரத்தின் தந்தை" என்ற பாராட்டுதலுக்கு மெட்கா.ஃப் உரியவரானர். பத்திரிகையாளர் உரிமையை மெட்காஃப் போற்றிய செயலைப் பாராட்டிக் கல்கத்தா பொதுமக்கள் தங்களின் மகிழ்ச்சிக்கு அறிகுறியாக 'மெட்காஃப் மண்டபம்' ஒன்றை நிறுவி நன்றி செலுத்தினர்கள். ஆனல், பத்திரிகைகளுக்கு இவர் சுதந்திரம் வழங்கியதை வாணிகக் குழுவின் இயக்குநர்கள் விரும்பவில்லை. இவரை உடனே இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அழைத்துக் கொண்டார்கள். எனினும், இந்தியப் பத்திரிகைகள் இவர் அளித்த உரிமைகளுடன், 1835 முதல் 1857 வரையில் சுதந்திரமாக இயங்கிவந்தன. படையினர் பெரும்புரட்சியின்போது பத்திரிகைச் சுதந்திரம் ஆபத்தானதெனக் கருதப்பட்டது. அதனல், பத்திரிகைகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்க அரசினர் தீர்மானித்தனர். படையினர் பெரும் புரட்சியினல் ஏற்பட்ட நெருக்கடியின்போது, அப்போது தலைமை ஆளுநராக இருந்த (1856-1862) கானிங்கு பிரபு, 1857ஆம் ஆண்டில் உரிமச் சட்டத்தைக் (Licensing Act, 1857) கொண்டுவந்தார். இச் சட்டத்தின்படி, அச்சகங்கள் வைத்துக்கொள்வதற்கு உரிமங்கள் பெறவேண்டும். இந்த உரிமங்களுக்குத் தலைமை ஆளுநருக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். இந்த உரிமங்களை வழங்குவதற்கும் மறுப்பதற்கும், நிபந்தனைகள் விதிப்பதற்கும் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. அவர் தம்முடைய முடிவுக்கு எவ்விதக் காரணமும் கூறத் தேவையில்லை. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கும் கருத்துகளைப் பத்திரிகைகள் வெளியிடக்கூடாது. அரசுக்கு அவதூறு உண்டாகும் வகையிலோ, அதன் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் முறையிலோ, அரசு அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்கு இழுக்கு ஏற்படும் விதத்திலோ எவ்விதச் செய்திகளையும் பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என இச்சட்டப்படி தடைவிதிக்கப்பட்டது.[1]

இந்தச் சட்டம் அடுத்த ஆண்டிலேயே கைவிடப்பட்டது. 1867ஆம் ஆண்டில், 1835ஆம் ஆண்டுச் சட்டத்தின் கட்டுப்பாடுகள் மீண்டும் அமுலாக்கப்பட்டன. ஆனல், 1870ஆம் ஆண்டில், இந்தியக் குற்ற இயல் நடைமுறைச் சட்டத்தில் (Indian Penal Code), 120-ஏ என்ற பிரிவு சேர்க்கப்பட்டது. இப்பிரிவின்படி, "பிரிட்டிஷ் இந்தியாவில் சட்டபூர்வமாக நிறுவப்பட்டுள்ள அரசின்மீதோ அல்லது பிரிட்டிஷ் அரசின்மீதோ வெறுப்புணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் பேசினலோ அல்லது எழுதி வாசித்தாலோ, அது குற்றமாகும். இக்குற்றத்திற்கு அபராதம் விதிப்பதோடு ஆயுள் தண்டனையோ அல்லது அதற்குக் குறைந்த காலத் தண்டனையோ

---

1. C. L. Anand — *History of Government in India*, p. 157.

விதிக்கப்படும்; அல்லது மூன்ருண்டுகள் வரைச் சிறைத் தண்டனை யுடன் அபராதமும் விதிக்கப்படும்.''[1]

## இந்திய மொழிப் பத்திரிகைகளின்மீது பாய்ச்சல்

லிட்டன் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது (1876-1880), அரசினர் புதிய சீற்றத்துடன் இந்திய மொழிப் பத்திரிகைகளின்மீது பாய்ந்தனர். ஆங்கில மொழிப் பத்திரிகைகளுக்கும், இந்திய மொழி களில் வெளிவரும் பத்திரிகைகளுக்கும் வேறுபாடு ஏதுமில்லை என கானிங்குப் பிரபு கருதினர். ஆனல், ஆங்கில மொழிப் பத்திரிகை களைவிட இந்தியமொழிப் பத்திரிகைகள், அரசின்மீது மக்களின் வெறுப்புணர்ச்சியை அதிக அளவில் தூண்டிவிடுகின்றன என லிட்டன் பிரபு கருதினர். இந்திய மொழிப் பத்திரிகைகளின் அர சாங்க விரோதப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு இ. பி. கோ. வின் 124-ஏ பிரிவு போதுமானதல்ல என்றும் லிட்டன் எண்ணினர். அதனல், அவர் 1878ஆம் ஆண்டில் நாட்டுமொழிப் பத்திரிகைச் சட்டத்தை (Vernacular Press Act, 1878) இயற்றினர்.

இந்தச் சட்டத்தை, தலைமை ஆளுநர் நிருவாக சபையின் மூன்று உறுப்பினர்கள் வன்மையாக எதிர்த்தனர். ''ஓரிரு பத்திரிகையாளர் களின் மித மிஞ்சிய நடவடிக்கையினல்; எல்லாப் பத்திரிகையாளர் களையும் தண்டிக்க முனைவது நியாயமல்ல; குற்றங்குறை களை எடுத்துரைப்பது கண்டு அரசாங்கம் ஆத்திரங்கொள்வதாக மக்கள் எண்ணி, அரசின்மீது அவர்களின் விரோத உணர்வு மேலும் பெருகுவதற்கு இந்தச் சட்டம் இடமளிக்கும்'' என்று அந்த உறுப் பினர்கள் வாதிட்டார்கள். ஆனல் அவர்களுடைய எதிர்ப்பை லிட்டன் பிரபு பொருட்படுத்தவில்லை. ''குற்றவாளிகளையும் குற்றங் களையும் தண்டிப்பதைவிட அக்குற்றங்களைச் செய்யாமல் தடுப்பதற்கே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது'' என்று லிட்டன் பிரபு வாதிட்டார்.

நாட்டுமொழிப் பத்திரிகைச் சட்டத்தின்படி, பத்திரிகையை அச்சிடுபவரும் வெளியிடுபவரும் அரசுக்குப் பொறுப்புத் தொகை கட்டவேண்டும் என வற்புறுத்துவதற்கு மாவட்ட நடுவர்களுக்கு (Magistrates) அதிகாரமளிக்கப்பட்டது; அரசுக்கு எதிரான விரோத உணர்ச்சியையும், பல்வேறு இனங்களிடையே பகையுணர்ச்சியை யும் தூண்டக்கூடிய செய்திகளை அச்சிடவோ வெளியிடவோ செய் வதில்லை, என பத்திரிகை வெளியீட்டாளரிடமும் அச்சிடுபவரிடமும் உறுதிமொழிப் பத்திரம் எழுதி வாங்கவும் நடுவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. விரும்பத் தகாத செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டால், அப்பத்திரிகைகள் செலுத்தியுள்ள பொறுப்புத் தொகையைப் பறிமுதல் செய்யவும், அச்சகங்களிலுள்ள அச்சு

---

1. R. Ranchhodas & D. K. Thankure — *The Indian Penal Code*, p. 276.

எந்திரங்களைக் கைப்பற்றிக் கொள்ளவும் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

இந்தச் சட்டத்திடமிருந்து தப்புவதற்கு, அச்சிடுவோருக்கு ஒரு மாற்று ஆலோசனையும் கூறப்பட்டிருந்தது. அதாவது, செய்திகளை அச்சிடுவதற்கு முன்னர், அவற்றின் அச்சுத்தாள்களை (Proofs) அரசாங்கத் தணிக்கையாளரிடம் (Official Censor) காட்டி, அவர் நிராகரிக்கும் செய்திகளை விலக்கிவிட்டு, மற்றச் செய்திகளைமட்டும் வெளியிடலாம். இச்சட்டத்தின் செயலாட்சியில், நடுவர்களின் முடிவுகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் மேல்முறையீடு செய்வதற்கு இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கவில்லை.

பத்திரிகைச் சுதந்திரத்தின் கழுத்தை நெறிக்கும் இந்தக் கொடூரச் சட்டத்திற்கு எதிராக நாடெங்கும் கடும் எதிர்ப்புப் புயல் தோன்றியதில் வியப்பில்லை. படித்த இந்தியர்கள் இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். வங்காளத்தில்தான் இந்தச்சட்டம் மிகத் தீவிரமாக அமுலாக்கப்பட்டது. எனவே, வங்காள மக்கள் இதை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சி நடத்தினர்கள். இத்தகைய கடும் எதிர்ப்புக்கிடையிலும் இச்சட்டம் நான்காண்டுகள் வரை அமுலில் இருந்தது. இக்காலத்தில்தான், இதன் கடுமை தாங்காமல், சில நாட்டுமொழிப் பத்திரிகைகள் ஆங்கிலப் பத்திரிகைகளாக வெளிவராயின. **'அமிர்த பஜார் பத்திரிகா'** என்ற இதழ், *1868*வரை வங்காளிமொழியில் வெளிவந்தது. ஆனால், அந்த ஆண்டிலிருந்து ஆங்கில இதழாக வெளிவரலாயிற்று. அதேபோன்று, பல ஆண்டுகளாக வார இதழாக வெளிவந்த **'இந்து'** பத்திரிகை *1889*ஆம் ஆண்டிலிருந்து ஆங்கில நாளிதழாக வெளிவரத் தொடங்கியது.

சென்னை மாகாணத்தில் இந்தச் சட்டம் அமுலாக்கப்படவில்லை. எனினும், சென்னைப் பத்திரிகைகள் இச்சட்டத்தை வன்மையாகக் கண்டித்தன. **'சுதேசாபிமானி'** என்ற பத்திரிகையின் *1—4—1878*ஆம் தேதி இதழில், "நாட்டின் பாதுகாவலனுக விளங்கும் பத்திரிகைச் சுதந்திரம் — இதுநாள் வரை இந்தியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பத்திரிகைச் சுதந்திரம், இப்பொழுது பறிக்கப்பட்டுவிட்டது. *1858*ஆம் ஆண்டில் வாணிகக் குழுவிடமிருந்து, இங்கிலாந்து அரசியின் நேரடி ஆட்சிக்கு இந்தியா மாறிய சமயத்தில் அரசியார் விடுத்த பிரகடனத்தில் இந்திய மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதிகளை அரசாங்கம் இப்பொழுது மீறிவிட்டது. ஒரு சில நாட்டுமொழிப் பத்திரிகைகள், அரசுக்கு விரோதமான செய்திகளை வெளியிடக் கூடும் என்றும், நாட்டுமொழிப் பத்திரிகைகளை அதிக அளவு மக்கள் படிப்பதால், அவர்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபடக் கூடுமென்றும் காரணம் கூறி அரசாங்கம், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது இச்சட்டம், நாட்டுமொழிப் பத்திரிகைகளுக்குச் சாவுமணியாக அமையும்" என்று கண்டித்திருக்கிறது.[1]

---

1. Newspaper (Confidential) Report, 1878, p. 1.

சில பத்திரிகைகள், இந்தச் சட்டம் குறித்துப் பொதுவாகச் சீற்றங்கொள்வதற்குப் பதிலாக, இச்சட்டத்திலிருந்து சென்னை மாகாணத்திற்கு விதிவிலக்கு அளித்தமைக்காக மகிழ்ந்து கொண்டிருந்தன. உதாரணமாக 'பக்ஷிமாதாரகா', 'கேரளப் பத்திரிகா' என்னும் இரு மலையாளப் பத்திரிகைகளும் "இந்தச் சட்டம், பம்பாய், வங்காள மாகாணங்களில்மட்டும் செயலாக்கப்படுகின்றன. இச் சட்டம், தற்சமயத்துக்கு, நம்மையோ, சென்னை மாகாணத்திலுள்ள மற்ற நாட்டுமொழிப் பத்திரிகைகளையோ பாதிக்கவில்லை. இதிலிருந்து, நம்முடைய பத்திரிகைகளை அரசாங்கம் எத்தகைய கண்ணோட்டத்துடன் நோக்குகின்றது என்பது தெளிவாகிறது. இந்தச் சட்டம் அமுலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நம்முடைய பழைய கொள்கைகளுக்கு முரணான செய்திகளை நாம் வெளியிடக் கூடாது; மேலும், இந்தச் சட்டத்தைச் சென்னை மாகாணத்திலும் விரிவாக்க வேண்டிய சூழ்நிலையை நம்முடைய சக பத்திரிகைகள் உருவாக்காமலிருக்கும் எனவும் நம்புகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளன.[1]

ரிப்பன் பிரபு, 1882ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தை நீக்கி விட்டார். 1870ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்தியக் குற்றஇயல் நடைமுறைச் சட்டத்தின் 124-ஏ பிரிவில் கண்ட கட்டுபாடுகளே போதும் என அவர் கருதினார். இந்நிலை 1908ஆம் ஆண்டுவரை நீடித்தது. அந்த ஆண்டில் பத்திரிகைக் குற்றத்தூண்டல் தடுப்புச் சட்டத்தை (Newspapers incitement to offence Act, 1908) இந்திய அரசாங்கம் இயற்றியது இந்திய மக்களிடையே தேசீய உணர்ச்சி பரவுவதற்கு அடக்குமுறை நடவடிக்கைகளில் ஒன்றாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

கொலைகளைச் செய்யுமாறு தூண்டும் பத்திரிகைகளின் பொறுப்பாளர்களைத் தண்டிக்கவும், கடுமையான குற்றங்கள் புரிந்தவர்களை விரைவாக விசாரித்துத் தண்டிக்கவும், இச்சட்டம் வழி செய்தது. அரசாங்கத்திற்கு எதிராகப் பத்திரிகைகள் புரியக்கூடிய குற்றங்கள் இச்சட்டத்தில் 16 வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இச்சட்டத்தின்படி எல்லாப் பத்திரிகைகளும் அரசாங்கத்திடம் பிணையத் தொகை கட்டவேண்டியதாயிற்று ஒவ்வொன்றுக்கும் தக்கவாறு ரூ. 500 முதல் ரூ. 2000 வரை பிணையத் தொகை நிருணயிக்கப்பட்டது. சட்டத்தை மீறி எந்தப் பத்திரிகையாவது குற்றம்புரிந்தால், பிணையத் தொகையை அது இழக்கவேண்டியதுதான். ஒரு தடவை குற்றம் புரிந்து பிணையத் தொகையை ஒரு பத்திரிகை இழக்குமானால், அடுத்தாற்போல் அது கட்டவேண்டிய பிணையத் தொகையை ரூ. 1000 முதல் ரூ. 10,000 வரை நிருணயிப்பதற்கு அரசாங்கத்திற்குச் இச்சட்டம் அதிகாரம் அளித்தது. இரண்டாம் முறையாக ஒரு பத்திரிகை குற்றம்புரிந்தால், அதன் பிணையத் தொகையுடன் அதன் அச்சகத்தையும் அரசாங்கம் பறிமுதல் செய்யலாம். 1878ஆம் ஆண்டு நாட்டுமொழிப் பத்திரிகைச் சட்டத்தைப்

1. Ibid, p. 4 (Malayali Weeklies published from Calicut).

போலன்றி, அரசின் ஆணையைப் பெற்ற 15 நாட்களுக்குள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துகொள்ள இச்சட்டம் உரிமை அளித்தது.

இச்சட்டம் 1922 வரை அமுலில் இருந்தது. முதலாவது உலகப் போரின்போது (1914-18), தேசீய இயக்கத்தை ஆதரித்த பல பத்திரிகைகள், இச்சட்டத்தின்படி பிணையத் தொகையை இழந்தன. அவற்றுள் சென்னையிலிருந்து வெளிவந்த **'இந்து'**வும், **'நியூ இந்தியா'**வும் குறிப்பிடத்தக்கன.

ஒரு நாட்டில் வலுவாக ஆதிக்கம்பெற்றுள்ள ஓர் அரசாங்கம், தன்னுடைய அதிகாரத்திற்கு எதிர்ப்புத் தோன்றும்பொழுது எத் தகைய பதட்ட உணர்வுடன் நடந்துகொள்ளும் என்பதற்கு உதாரணமாக இந்த அடக்குமுறைச் சட்டம் அமைந்திருந்தது. இந்தியாவில் மட்டுமின்றி எந்த நாட்டிலும், ஆதிக்கவாதிகளின் போக்கு இவ்வாறுதான் இருக்கும்.

1908ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, பல பத்திரிகைகளின் அச்சிடுவோர், வெளியிடுவோர்மீது அரசு அடுக்கடுக்கான அடக்கு முறைக் கணைகளை ஏவினர். **'இந்தியா'** என்ற தமிழ் வார இதழின் 1908ஆம் ஆண்டு மே, 2, மே 23, ஜூன் 27 ஆகிய இதழ்களில் உணர்ச்சியைத் தூண்டும் கட்டுரைகளை வெளியிட்டமைக்காக அந்தப் பத்திரிகையின் அச்சிடுவோரும், வெளியீட்டாளருமான எம். சீனிவாச ஐயங்காருக்கு எதிராக அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தது. இவ்வழக்கில், இ. பி. கோ. 124ஏ பிரிவின்படி, சீனிவாச ஐயங்காருக்கு நீதிபதி ஜே. எச். மன்ரோ, ஐந்தாண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.[1]

**'சுதேசமித்திரன்'** பத்திரிகை ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனால், அவர் நோய் வாய்ப்பட்டமையாலும், இ. பி. கோ. 108வது பிரிவின்கீழ் அவர் பிணையம் அளித்தமையாலும் அவர் மீதான வழக்கு கைவிடப் பட்டது.[2]

பத்திரிகைகளின் மீது இத்தகைய கட்டுப்பாடுகள், விதிக்கப்பட்ட போதிலும் நாளிதழ்கள், பருவ இதழ்களின் எண்ணிக்கை அதிகரிப் பது பாதிக்கப்படவில்லை; பொது மக்கள் கருத்தை உருவாக்குவதில் அவற்றின் செல்வாக்கும் தங்குதடையின்றிப் பெருகிக் கொண்டு தான் இருந்தது.

---

1. **'இந்தியா'** வார இதழின் ஆசிரியராக இருந்தவர் அமரகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். அவர் இச்சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப் புதுச்சேரிக்குச் சென்றுவிட்டார்.
2. G. O. No. 1460 (Conf.), Judicial Dept., dated 25th October 1908; (Returns of proceedings instituted for seditious writings since 1st January, 1907).

## *அத்தியாயம் - 3*

# மக்கள் மனக் குறைகளும் பொதுமக்கள் கருத்தும்

அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தும் வகையிலேயே பொது மக்கள் கருத்து உருவாகி வந்துள்ளமையை இதுவரைக் கண்டோம். சுயாட்சி பற்றிய அடிநிலைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே ஜனநாயகச் சீர்த்திருத்தங்களுக்கான கோரிக்கைகள் யாவும் எழுப்பப்பட்டு வந்தபோதிலும், நாட்டுமக்களிடையே நிலவி வந்த எண்ணற்ற மனக்குறைகள் அக்கோரிக்கைகளுக்குத் தூண்டு தலாக விளங்கின என்பதை மறுப்பதற்கில்லை. இக்குறைகளையெல் லாம் தீர்ப்பதற்கு, மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஓர் அர சாங்கத்தினுல்தான் இயலும் என்னும் கருத்து நாடெங்கும் பரவலாக நிலவி வந்தது. சொந்த நாட்டுமக்களின் நடவடிக்கைகள், ஆதிக்க வாதிகளின் நலன்களுக்கு ஊறு விளைவிப்பனவாக இருக்குமோ என்ற ஐய உணர்வுடன் அந்நிய ஆட்சியாளர்கள் விதிக்கும் வெறுப் பூட்டும் கட்டுப்பாடுகளின் விளைவாகத் தோன்றிய மனக்குறைகள் சிலவும் இருந்தன. இதற்கு எடுத்துக்காட்டாக ஆயுதச் சட்டத்தை யும் பத்திரிகைகள் மீதான கட்டுப்பாடுகளையும் குறிப்பிடலாம். அந்நிய ஆட்சியாளர்கள் தங்களுடைய தனிப்பட்ட நலன்களையும் பாதுகாப்பதற்காக வகுத்த கொள்கையின் விளைவாகத் தோன்றிய மனக்குறைகள் சில. உதாரணமாக, உயர்தர இராணுவ, நிருவாகப் பதவிகளில் அயல்நாட்டவர்களை மட்டும் நியமித்தல், வாணிகத்திலும் தொழில்களிலும் பிரிட்டிஷாருக்கே சலுகைகள் வழங்குதல் போன்ற வற்றைக் கூறலாம். இந்தியர்களின் பொதுக் கருத்தை அடியோடு புறக்கணித்துவிட்டு, பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினரின் கருத்தையே வேதவாக்காகக் கருதும் அரசினரின் போக்கினுல் வேறு சில மனக் குறைகள் தோன்றின. அபரிமிதமான அளவு வரிகள் விதித்ததை யும், நிருவாக அலுவல்களையும் நிதிமுறை அலுவல்களையும் ஒன்ருக இணைத்ததையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். வெள்ளையர் களே இனத்தால் உயர்ந்தவர்கள் என்ற உயர்வு மனப்பான்மை, இந்தியாவில் பணிபுரிந்த பெரும்பான்மையான ஆங்கில அதிகாரி களிடம் நிலவிவந்தது. இதனுல், பொழுதுபோக்குக் கழகங்கள் போன்ற ஐரோப்பிய நிறுவனங்களில் அங்கம் பெறுவதற்கு இந்தி யர்கள் அனுமதிக்கப்படவில்லை. மேலும், சரிசமமான பதவி வகிப் பவர்களாக இருந்தாலும், அவர்கள் இந்தியர்களாக இருந்தால், அவர்களை ஆங்கிலேயர்கள் மரியாதைக் குறைவாக நடத்தி

அவமதித்து வந்தார்கள். ஆங்கிலேயரின் இத்தகைய அகம்பாவப் போக்கினுலும் இந்திய மக்களிடையே வெறுப்புணர்ச்சி குமுறிக் கொண்டிருந்தது. மேற்குறித்த முக்கியமான மனக்குறைகளைச் சற்று விரிவாகக் காண்பது நலமாக இருக்கும்.

## *அரசுப் பதவி நியமனங்கள்*

நம்பிக்கையும், பொறுப்பும்வாய்ந்த அரசாங்க உயர் பதவிகள் அனைத்திலும் ஐரோப்பியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டனர். இப் பதவிகளில் இவ்விதம் ஐரோப்பியர்களைமட்டுமே நியமிப்பதை இந்தியர்கள் எதிர்க்கவில்லை. அப்படி நியமிக்கப்பட்ட ஐரோப் பியர்கள், அவர்கள் எவ்வளவுதான் படித்தவர்களாகவும் திறமை சாலிகளாகவும் இருந்தபோதிலும், தங்களுடைய இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட இந்திய இனத்தவரின் மன இயல்புகளை உணர்ந்துகொள்ளாமலும், அவர்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் அறிந்து கொள்ளாமலும் நடந்துகொண்ட தைத்தான் இந்தியர்கள் கடுமையாக வெறுத்தார்கள். இதற்கு எடுத் துக்காட்டாக, 1932ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப் பிடலாம். அவ்வாண்டில், இந்தியாவெங்கும் ஒத்துழையாமை இயக் கத்தைக் காங்கிரசு தொடங்கியிருந்தது. தலைச்சேரியில் எஸ். எஸ். பிரபு என்பவருடைய மனைவி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டு சிறைப்பட்டார். அவர் மீதான வழக்கை விசாரித்த டாட்வெல் (Dodwell) என்ற துணை நடுவர் (Sub-Judge) அந்த அம்மை யாருக்கு அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். அபராதத் தொகை யைச் செலுத்த அவ்வம்மையார் மறுத்துச் சிறை தண்டனைக்குத் தயாராக இருப்பதாகக் கூறினர். ஆனுல், அந்த நடுவர், அபராதத் தொகைக்குப் ப்திலாக அந்த அம்மையார் கழுத்தில் கிட ந்ததாலியைக் கழற்றும்படி உத்திரவிட்டார். அவ்வாறே தாலியும் பறிக்கப்பட்டது. தாலியின் மகத்துவத்தை அந்த ஆங்கிலேயர் சிறிதும் அறிந்திருக்க வில்லை. பின்னர், சென்னை அரசினர் தொலைபேசி மூலம் ஆணையிட்ட தற்கிணங்க, தாலியைத் திருமதி பிரபுவிடம் திருப்பிக் கொடுத்து விடும்படி, நடுவர் உத்தரவிட்டார். ஆனுல், அத் தாலியைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அந்த அம்மையார் மறுத்துவிட்டார்.[1]

அரசாங்க உயர்பதவிகளில் ஐரோப்பியர்களைமட்டுமே நியமிக் கும் கொள்கையினுல், அறிவாற்றலும் திறமையும் வாய்ந்த இந்தியர்கள் இப்பதவிகளைப் பெற வாய்ப்பே இல்லாமல் போன துடன், அப்பட்டமான அநியாயமாகவும் கருத இடம் ஏற்பட்டது. ஐரோப்பிய அதிகாரிகள் தங்கள் மனதில் அபாயகரமான அளவுக்கு உயர்வுமனப்பான்மையையும் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குக் கீழ் வேலைபார்க்கும் இந்தியர்கள் அனைவரும் தாழ்ந்த வேலைகளுக்கே தகுதியுடையவர்கள் எனத் தவருகக் கருதிக் கொண்டிருந்தார்கள்.

---

1. Vide Pub. Dept. No 312 (Mis.), 24th Feb. 1932.

## பொருந்தாக் கொள்கை

பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த உயர்பதவிகளில் இந்தியர்களை நியமிக்காமல், ஒதுக்கிவைக்கும் கொள்கையை முதன்முதலில் தொடங்கி வைத்தவர் தலைமை ஆளுநர் கார்ன்வாலிஸ் பிரபுவே (*1786–1793*) ஆவார். இந்தியர்கள் அனைவரும் நேர்மையற்றவர்கள் என்றும், சோம்பேறிகள் என்றும், நம்பத் தகாதவர்கள் என்றும் அவர் தவறாகக் கருதினார். ஆனால், அவருடைய இத்தகைய பொருந்தாக் கொள்கையை, அவருக்குப் பின் வந்த தலைமை ஆளுநர் எல்லோரும் கடைப்பிடிக்கவில்லை. இது ஒருவகையில் ஆறுதல் தருவதாகும். சென்னை ஆளுநராக இருந்த தாமஸ் மன்ரோ (1820-1827) போன்ற பல நிருவாகிகள், 'இந்தியர்களுக்கு அவர்களுடைய சொந்த நாட்டின் நிருவாகத்தில் அதிகப் பங்கு வழங்கவேண்டும்' என மனப்பூர்வமாகக் கருதினார்கள். பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த உயர் பதவிகளிலிருந்து இந்தியர்களை ஒதுக்கிவைப்பது மிகத் தவறானதொரு கொள்கை என்று தாமஸ் மன்ரோ அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.[1] *1833*ஆம் ஆண்டுச் சாசனத் திட்டத்தில்தான் (Charter Act of 1833) முதன்முதலாக, "சமயம், பிறந்த இடம், பாரம்பரியம், நிறம் போன்ற வேறுபாடுகள் காரணமாக, வாணிகக் குழுவின் பதவிகளிலிருந்து இந்தியர்கள் ஒதுக்கப்படமாட்டார்கள்" என்று திட்டவட்டமாக உறுதி கூறப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் மிக உயர்ந்த பதவிகளில் இந்தியர்களை நியமிப்பதற்கு *1833*ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் அதிகாரம் வழங்கியபோதிலும் "ஆண்டுக்கு 800 பவுனுக்குமேல் ஊதியமுள்ள பதவிகளுக்கு வாணிகக் குழுவின் ஒப்பந்த அலுவலர்களைத்தான் (Covenanted Servants) நியமிக்கவேண்டும்" என்ற *1793*ஆம் ஆண்டுச் சாசனத்தின் விதிகள் நீக்கப்படாமலிருந்து வந்தன.

உயர்பதவிகளை வழங்குவதில் இந்தியர்களுக்கு ஓரவஞ்சகம் காட்டப்படமாட்டாதென்ற உறுதிமொழியை அரசியாரின் *1858*ஆம் ஆண்டுப் பிரகடனமும், *1861*ஆம் ஆண்டு ஐ. சி. எஸ். சட்டமும் மீண்டும் உறுதிசெய்தன. ஆனால், இந்த வாக்குறுதிகள் யாவும் ஏட்டளவிலேயே இருந்துவந்தன. இவ்வாக்குறுதிகளை மீறுவதில்தான் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினார்களேயன்றி, அவற்றைச் செயலாக்குவதில் அவர்கள் சிறிதும் அக்கறை காட்டவில்லை. இதற்கிடையில், ஆங்கில கல்வி கற்ற இந்திய வர்க்கம் ஒன்று இந்தியாவில் உருவாகியது. இவர்கள் எந்தத் துறையிலும், எந்த நாட்டவர்க்கும் ஈடான திறமையோடு தங்களாலும் செயலாற்ற முடியும் என்பதை அனுபவ வாயிலாக நிரூபித்து வந்தார்கள். ஆனால், இவர்களுக்கு நிருவாகத்தில் போதிய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை; அரசாங்கத்தில் நியாயமாகக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வுகள்கூட இவர்களுக்கு மறுக்கப்பட்டன; இவர்களுக்குரிய பதவிகளில் ஆளும்

---

1. Vide A.J. Arbuthnot (ed.) — *Minutes and other writings of Sir Thomas Munro* — pp. 567-575.

வர்க்கத்தின் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளே நியமிக்கப் பட்டார்கள்.

போட்டித் தேர்வுமுறை ஒன்றின் அடிப்படையில், நிருவாகப் பணிக்கான (Civil Service) நியமனங்கள் செய்யப்பட்டன. இந்த முறையினை 1853ஆம் ஆண்டில் வாணிகக் குழு புகுத்தியது; அதனை 1858ஆம் ஆண்டு அரசியாரின் பிரகடனமும் ஏற்றுக்கொண்டது. இந்தப் போட்டித் தேர்வு இலண்டனில் ஆண்டுக்கு ஒருமுறை நடந்தது. அரசியாரின் குடிமக்கள் யாவரும், இந்தியராயினும் ஆங்கிலேயராயினும், இந்தத் தேர்வினை எழுதலாம். இத் தேர்வு எழுதுவோருக்கான வயது மேல்வரம்பு முதலில் 23 என்று நிருணயிக் கப்பட்டிருந்தது. 1860ஆம் ஆண்டில் இவ்வயது வரம்பு 22 ஆகக் குறைக்கப்பட்டது. இத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் ஓராண்டுக்காலம் இங்கிலாந்தில் சோதனை முறையில் (Probation) பணிபுரியவேண்டும். 1866ஆம் ஆண்டில் வயது மேல்வரம்பு மேலும் குறைக்கப்பட்டு 21 ஆக நிருணயிக்கப்பட்டது; அத்துடன் சோதனை முறை அலுவலர்கள் (Probationers), ஒரு பல்கலைக்கழகத் தில் ஈராண்டுகளுக்குத் தனிப் பயிற்சிபெற வேண்டும் எனவும் விதிக் கப்பட்டது.

## இந்தியர்க்கு ஓரவஞ்சகம்

இந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுவது, இந்திய மாணவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. தேர்வு எழுதுவதற்காக இந்தியா விலிருந்து இங்கிலாந்து செல்வதற்குப் பெருஞ்செலவாகியது. தவிர வும், இந்துக்களில் ஒரு பகுதியினர், கடல்கடந்து பயணம் செய் வதைச் சமயவிரோதமான செயலாகக் கருதி வந்தார்கள். மேலும், இந்தத் தேர்வு ஆங்கிலத்தில்மட்டுமே நடத்தப்பட்டமையால், ஆங்கிலேயருக்கு ஈடாகப் போட்டியிட்டு இத்தேர்வில் தேர்வுபெறுவ தென்பது இந்தியர்களுக்குப் பெரிதும் கடினமாக இருந்தது. இத் தனை தடங்கல்களுக்கிடையிலும், இத்தேர்வில் இந்திய மாணவர்கள் சிலர் வெற்றிபெற்று வந்தார்கள். ஆனால், இப்படி வெற்றிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மிகமிகச் சொற்பமாகவே இருந்தது. 1866 முதல் 1878வரை 12 ஆண்டுகளில் 10 இந்திய மாணவர்கள் மட்டுமே இத்தேர்வுகளில் வெற்றிபெற முடிந்தது.

இத்தேர்வு எழுதுவதற்கான வயது வரம்பு 1876இல் 19 ஆகக் குறைக்கப்பட்டது; இதனால் இத்தேர்வில் இந்தியர்கள் தேர்வுபெறு வதற்கான வாய்ப்பு மேலும் குறைந்தது. வயது வரம்பை இவ்விதம் குறைத்த செயலை அக்காலத்தில் பல அறிஞர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். நார்த்புருக் பிரபு (Lord Northbrook) என்பவர், இது குறித்து அப்போது இந்தியாவில் பணிபுரிந்து வந்த ஐ. சி. எஸ். அதி காரிகளின் கருத்துகளைக் கேட்டறிந்து, ஓர் அறிக்கை வெளி யிட்டார். அவ்வறிக்கையில், "1861ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவுக்குப் பணியாற்ற வந்த 53 ஐ. சி. எஸ். அதிகாரிகளில், 11

பேர் மட்டுமே வயது வரம்பைக் குறைத்ததை ஆதரித்தனர். 1870ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்த 26 ஐ. சி. எஸ். அதிகாரிகளில் இருவர்மட்டுமே வயது வரம்பைக் குறைப்பதை ஆதரித்தனர்; தற்போதைய வயது வரம்பே (21) நீடிக்கவேண்டுமென 15 பேர் கூறினர்; வயது வரம்பை உயர்த்த வேண்டுமென 9 பேர் கருத்துத் தெரிவித்தனர்'' என்று நார்த் புரூக் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது சொந்தக் கருத்தைத் தெரிவிக்கையில், ''இந்தியாவுக்கு வரும் ஐ. சி. எஸ். அதிகாரிகள் ஒரு வயது குறைந்தவர்களாக இருப்பதால், சிறிதளவு நன்மை ஏற்பட்டாலும்கூட, வயது குறையும்பொழுது அவர்களுடைய கல்வியின் தரமும் குறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால், பல்கலைக்கழகக் கல்வியிலும் ஆர்வம் வெகுவாகக் குறையும்'' என்று கூறியுள்ளார்.[1]

வயது வரம்பைக் குறைத்ததை எதிர்த்து நாடெங்கும் மக்கள் கடும் கண்டனக் குரல் எழுப்பினர்கள். இந்தக் கிளர்ச்சியை சுரேந்திரநாத் பானர்ஜி தலைமைதாங்கி நடத்தினர். அவர் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து, லாகூர், அமிர்தசரஸ், மீரட், அலகாபாத், டெல்லி, கான்பூர், இலட்சுமணபுரி, அலிகார், காசி, பம்பாய், சூரத், அகமதாபாத், புனு, சென்னை ஆகிய நகரங்களில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர். இறுதியில் கல்கத்தாவில் நடந்த பொதுக்கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேறியது. இந்தக் கிளர்ச்சியில், தமிழக மக்கள் தீவிரப்பங்கு கொண்டார்கள். தமிழகமெங்கும் கூட்டங்கள் நடந்தன; அவற்றில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1884ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் தேதியன்று, இப்பிரச்சினை குறித்து விண்ணப்ப மனு ஒன்றைச் சென்னை மகாஜனசபை தயாரித்து அரசினருக்கு அனுப்பியது. அதில், ஐ. சி. எஸ். தேர்வுக்கான வயது வரம்பைக் குறைத்தமையால் இந்தியர்க்கு ஏற்பட்டுள்ள பாதகம் குறித்தும், வயது வரம்பை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும், தெளிவாக விளக்கி, இத் தேர்வை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. மகாஜனசபை தன்னுடைய விண்ணப்ப மனுவில், ''ஐ. சி. எஸ். அதிகாரிகள் இந்நாட்டுக்கு வந்தவுடனேயே, அவர்களுக்குப் பெருமளவு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. எனவே, அவர்கள் அதிகாரப் பொறுப்புகளை ஏற்கும்பொழுது, அதற்குரிய மனமுதிர்ச்சியும், அறிவு வளர்ச்சியும், பண்பாடும், கல்வியறிவும், உலகியலறிவும் உடைய ஒரு வயதை எட்டியவர்களாக இருக்கவேண்டும். 17 அல்லது 18 வயதில் தேர்ச்சிபெறுகின்றவர்கள், போதிய மன வளர்ச்சியற்றவர்களாகவும், அறிவுக் கூர்மை பெருதவர்களாகவும், அனுபவமில்லாதவர்களாகவும், நுண்மான் நுழைபுலமில்லாதவர்களாகவும் இருக்கிருர்கள் என்று டி. சி. இப்பெஸ்டான் (D.C. Ibbeston) கருது

1. Vide — G. O. No. 2357 (Mis.) Pub. Dept., dated 4th Nov. 1884, para 5.

கின்ருர். அவருடைய இக்கருத்து முற்றிலும் உண்மை என்பதை நாங்கள் அனுபவத்தில் கண்டறிந்துள்ளோம்'' என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், "இந்தத் தேர்வுக்கான வயது வரம்பை அடுத்தடுத்து குறைத்தமையால், இத்தேர்வு எழுதுவோரின் விகிதமும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. இத் தேர்வு எழுதியோரின் எண்ணிக்கை 1869இல் 322; 1879இல் 327; ஆனல் இந்த எண்ணிக்கை 1881இல் 182 ஆகவும் 1882இல் 147 ஆகவும் குறைந்துவிட்டது" என்றும் இந்த மனு சுட்டிக்காட்டியுள்ளது.

## வாக்குறுதி எங்கே?

ஐ. சி. எஸ். அதிகாரிகள் தேர்வுக்கான வயது வரம்பை 19 ஆகக் குறைத்துவிட்டு, அதேசமயம் இலங்கை, ஹாங்காங் போன்ற பகுதிகளில் இதற்கு ஒப்பான தேர்வுகளுக்கு வயது வரம்பை 24 ஆக நிருணயித்திருப்பதையும் மகாஜன சபை தனது மனுவில் எடுத்துக் காட்டியிருந்தது.

"இந்தியப் பேரரசின் நிருவாகத்தில் ஆங்கிலேயர்களோடு இந்தியர்களும் பங்குபெற வாய்ப்பளிக்க வேண்டுமென இந்நாட்டிலுள்ள எல்லாக்கட்சியினரும் ஒருமனதாகவிரும்புகின்ருர்கள். இதனை மேன்மைதங்கிய அரசியாரின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்துதான் தாங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்திய அரசாங்கத்தில் எந்த ஒரு பதவியையும் பெறுவதற்கு எந்த ஒரு இந்தியருக்கும் சமயம், பிறப்பிடம், பாரம்பரியம், நிறம், இனம் ஆகியவை தடங்கலாக இரா என்று அரசியாரும், நாடாளுமன்றமும், இயக்குநர் வாரியமும் உறுதிமொழி வழங்கி 50 ஆண்டுகள் கடந்து விட்டன. பெருந்தன்மையும், அரசியல் மேதகைமையும் வாய்ந்த இந்தமுடிவை, மேதகு பேரரசியாரின் 1858ஆம் ஆண்டுப் பிரகடனம் மேலும் வலியுறுத்தியது. ஆனல், இந்தியர்களுக்குப் பேதம் காட்டப் படமாட்டாதென அறிவிக்கப்பட்ட அந்த நாளிலிருந்து கடந்த 50 ஆண்டுக்காலத்தில் 12 இந்தியர்கள் மட்டுமே ஒப்பந்த அலுவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை அறியும் போது, பெருந்தன்மையும் அரசியல் மேதகைமையும் வாய்ந்த அந்த முடிவு, எந்த அளவில் நடைமுறையில் செயலாக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம்!" என்றும் இந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.[1]

தேர்வுக்கான வயது வரம்பை 19 ஆகக் குறைத்தமையால், நடைமுறையில் ஒப்பந்த அலுவலர்களாகத் தேர்வுபெறுவதற்கான வாய்ப்பு இந்தியர்களுக்கு இல்லாமலேயே போய்விட்டது எனலாம். 1879ஆம் ஆண்டில் எஸ். சி. எஸ். (Statutory Civil Service) என்ற

---

1. G. O. No. 3357 (Mis.) Public Department, dated, 4th of Nov. 1884, para 12.

அலுவலர் தேர்வு முறையை லிட்டன் பிரபு கொண்டுவந்தார். இந்த முறையின்படி, ஒப்பந்த அலுவலர்கள் வகித்துவரும் பதவிகளில் ஆறில் ஒரு பங்கு இடங்களுக்கு இனிமேல், இந்தியாவிலுள்ள உள்ளாட்சிகளால் நியமிக்கப்படுகின்ற இந்தியர்களையே (பிறப்பால் இந்தியர்கள்) நியமிக்கப்படுவார்கள்; இந்நியமனங்களுக்குத் தலைமை ஆளுநரும், இந்தியா அமைச்சரும் ஒப்புதல் அளிக்கவேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் இந்தியர்கள், தங்களின் நியமனத்திற்கு முன்னர் ஈராண்டுகள் சோதனை முறை அலுவலர்களாகப் (Probationers) பணிபுரிந்து, தனித் தேர்வுகளிலும் தேர்ச்சிபெறவேண்டும். 1879ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதியன்று இந்திய அரசு பிறப்பித்த ஆணையொன்றில், "நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயும், உயர்ந்த சமூகநிலையிலுள்ளவர்களாயும், திறமையும், கல்வியும் வாய்ந்தவர்களாயும், ஒப்பந்தமில்லா அலுவலர்களாகப் பணியாற்றுவதில் விருப்பமில்லாதவர்களாயுமுள்ள இளைஞர்கள்மட்டுமே பொதுவாக இந்த விதிகளின்படி நியமிக்கப்படுவார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.[1] ஒப்பந்த அலுவலர் பணிக்கும், ஒப்பந்தமில்லா அலுவலர் பணிக்கும் இடைப்பட்ட ஓர் அலுவலர் பணியாக எஸ். சி. எஸ். அலுவலர் பணி அமைந்திருந்தது.

## இரண்டாந்தரப் பதவி

சென்னை மகாஜன சபை 1884 நவம்பர் 4இல் அனுப்பிய மனுவில் இந்த எஸ். சி. எஸ். பதவிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. "இந்தப் புதிய எஸ். சி. எஸ். பதவிகளை, ஐ. சி. எஸ். பதவிகளுக்கு எந்தவகையிலும் ஈடானவைகளாக இந்திய இளைஞர்கள் கருத இயலாது. ஏனென்றால், முதலாவதாக, கடுமையான போட்டித் தேர்வுகளில் தேர்ச்சிபெற்றவர்கள் அடங்கிய ஒரு பணித்துறைக்கு, நியமன அலுவலர்களைக் கொண்ட ஒரு பணித்துறை ஒருபோதும் ஈடாக அமைய முடியாது. எஸ். சி. எஸ். பதவிகளுக்கான நியமனங்கள் பற்றிய விதிமுறைகள் குறித்து, பம்பாய்க் கல்லூரியில் தருக்க-உளவியல் பேராசிரியராக இருந்தவரும், படித்த இந்திய இளைஞர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை நன்கு அறிந்தவருமாகிய வில்லியம் வர்ட்ஸ்வர்த் தெரிவித்துள்ள கருத்து இங்கு கருதத்தக்கது:

> "இந்திய மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் நாம் இழக்காமலிருக்கவேண்டுமானால், வேண்டியவர்களுக்கு ஆதரவு காட்டுகின்ற இந்தப் பணித்துறையை (எஸ். சி. எஸ்.) திருத்தியமைக்க வேண்டும்: இல்லையெனில் ஒழித்துவிடவேண்டும். இந்த முறையின்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் உண்மையில் உயர்குடிப் பிரதிநிதிகளாகவும் இருக்கமாட்டார்கள்; இந்நாட்டின் அறிவார்ந்த வர்க்கத்தைச் சேந்தவர்

---

1. Vide H. H. Dodwell (Ed.) — *The Cambridge History of India*, Vol. VI, p. 361.

களாகவும் இருக்கமாட்டார்கள். மாருக, இவர்கள், அரசாங்கச் செயலாளர், ஆளுநர் ஆலோசனை சபை உறுப்பினர், போலீஸ் ஆணையாளர் போன்ற உயர் அதிகாரிகளின் தயவுக்குப் பாத்திர மாக உள்ள ஒருசில மேட்டுக்குடியினராகவே இருப்பார்கள். இந்த மாகாணத்தில், கல்லூரிக் கல்வியும் பல்கலைக் கழகப் பட்டமும் தேர்வுபெறுவதற்குத் தகுதியின்மைகளாகக் கருதப்படுகின்றன. சுதந்திரமான போக்கும், உயர்ந்த திறமையும் வாய்ந்த இளைஞர் எவரும் இனிப் போட்டித் தேர்வு மூலம் ஐ. சி. எஸ். பதவியில் நுழைவதற்கு வழியில்லை; தயவின் மூலம் நேர்மையற்ற வழியில் பதவியைப் பெறவும் பொதுவாக அவர்கள் விரும்பமாட்டார்கள்.''[1]

இரண்டாவதாக, ஒப்பந்த அலுவலர் பணித்துறைப் பதவிகளை விட எஸ். சி. எஸ். பதவிகள் குறைந்த தகுதியுடையனவாகும். ஒப்பந்த அலுவலர்களுக்குரிய சில உயர்பதவிகளில் எஸ். சி. எஸ். அலுவலர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. மொத்தத்தில், எஸ். சி. எஸ். பதவிகள் தோற்றுவிக்கப்பட்டதற்கான உண்மையான காரணம் என்ன என்பதை இந்திய அமைச்சருக்கு அனுப்பிய மனுவில் மகாஜன சபை சுட்டிக் காட்டியுள்ளது. ''இந்திய அதிகாரிகளுக்குக் கீழ்படிந்து, மகிழ்ச்சியோடும் வெற்றிகரமாகவும் பணிபுரியக்கூடிய தகுதியும் திறமையும் வாய்ந்த ஐரோப்பிய அதிகாரிகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக உள்ளது. மாவட்ட நிருவாகப் பணியைப்பொறுத்த வரையில், இந்தப் பணியானது பகீரதப் பிரயத்தனமாக இருந்துவருகிறது. போட்டித் தேர்வுகளின் மூலம், ஒப்பந்த அலுவலர் பதவிகளைப் பெற இந்தியர்களுக்கு வாய்ப்பு இருக்கும்வரை, இந்தச் சிரமம் இருந்துகொண்டேதான் இருக்கும். இந்தச் சிரமத்தைப் போக்குவதற்காகவே எஸ். சி எஸ். அலுவலர் பணித்துறை தோற்றுவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஒப்பந்த அலுவலர் பதவிகளில் ஐரோப்பியர்களை மட்டும் நியமித்து விட்டு, அதற்குத் தாழ்ந்த பதவிகளில் இந்தியர்களை நியமிப்பதற்கெனவே இந்த எஸ். சி. எஸ். பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்தியர்களை என்றென்றும் அரசியல் அடிமைகளாகவே வைத்திருக்க வழிசெய்யும் இந்த எஸ். சி. எஸ். பதவிகளை இந்தியர்கள் ஒருநாளும் ஏற்றுக் கொள்ள இயலாது'' என்று மனுவில் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது.[2]

## *எதிர்ப்பின் பலன்*

லிட்டன் பிரபு கொண்டுவந்த எஸ். சி. எஸ். முறைக்கு எதிராக எழுந்த பொதுமக்கள் கருத்துக்குப் பலன் ஏற்படாமல் போகவில்லை. இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த (*1884—1888*) டஃபரின்

1. Ibid, para 13.
2. Vide — G. O. No. 2357 (Mis.) Public Dept., dated 4th of Nov. 1884 — para 14.

பிரபு, 1886ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினைக் குறித்து ஆராய்வதற்காக 'அரசு அலுவலர் தேர்வுக் குழு' (Public Service Commission) ஒன்றை நியமித்தார். சர் சார்லஸ் அயிட்கிசன் (Sir Charles Aitchison) தலைமையில் அமைந்த இக்குழுவில் 15 உறுப்பினர்கள் இடம் பெற்றனர்; அவர்களுள் ஐவர் இந்தியர்கள். இக்குழு 1887ஆம் ஆண்டில் இந்திய அரசிடம் தனது அறிக்கையை அளித்தது. ஒப்பந்த அலுவலர் தேர்வுக்கு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் தேர்வுகள் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை இக்குழு நிராகரித்துவிட்டது; அதேசமயம் எஸ். சி. எஸ். முறையை ஒழித்துவிட வேண்டுமெனவும் ஆலோசனை கூறியது. மேலும், பொதுத்துறை அலுவல் அதிகாரிகளைப் (Civilian Officers) பேரரசின் ஐ. சி. எஸ். பணி அதிகாரிகள் (Imperial Indian Civil Service), மாகாணப் பணி அதிகாரிகள் (Provincial Service), கீழ்நிலை அலுவல் அதிகாரிகள் (Subordinate Service) என மூன்று பிரிவினராகப் பிரிக்கும்படி இக்குழு பரிந்துரைத்தது. முதல் பிரிவு அதிகாரிகள், இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இதற்கான தேர்வுகள் இலண்டனில் நடைபெறும்; இந்தியர்களும் இங்கிலாந்துக்குச் சென்று இத்தேர்வுகளை எழுதலாம். மற்ற இரு பிரிவுகளுக்கும் இந்தியாவிலேயே தேர்வு நடைபெறும்; பெரும்பாலும் இந்தியர்களே இப்பிரிவுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்வு, மாகாண அரசுகளின் நியமனம், கீழ்நிலை அலுவல்களிலிருந்து பதவி உயர்வு ஆகிய மூன்று வழிகளின் மூலம் மாகாணப் பணி அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பெரும்பான்மையான முக்கிய உயர்பதவிகளில் பேரரசின் ஐ. சி. எஸ். பணி அதிகாரிகளே நியமிக்கப்பட்டார்கள். அவற்றைவிடக் குறைந்த தகுதியுடைய, ஆனாலும் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்த நிருவாக, நீதித்துறைப் பதவிகளில் மாகாணப்பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்.[1]

பேரரசின் போட்டித் தேர்வுக்கான வயது வரம்பை 23 ஆக உயர்த்த வேண்டுமென இந்தக் குழு பரிந்துரை செய்தது. வயது வரம்பு இவ்வாறு உயர்த்தப்பட்டதை இந்தியப் பொதுமக்கள் வரவேற்றபோதிலும், இக்குழுவினுடைய அறிக்கையின் மற்றப் பகுதிகள் அவர்களுக்கு ஏற்புடையனவாக இல்லை. ஆயினும் இந்திய அரசாங்கம், இக்குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக் கொண்டது; 1891ஆம் ஆண்டு முதல் இப்பரிந்துரைகளே அரசின் கொள்கையாக இருந்துவந்தது.[2]

---

1. P. E. Roberts — *History of British India*-p. 500.
2. இப்பரிந்துரைகள் அடங்கிய தீர்மானத்தை இங்கிலாந்து மக்கள் சபையில் ஹெர்பர்ட் பால் என்ற உறுப்பினர் 2—6—1893 அன்று கொண்டுவந்தார். நாடாளுமன்றத்தின் முதலாவது இந்திய உறுப்பினராகிய தாதாபாய் நௌரோஜி இத்தீர்மானத்தை வழிமொழிந்தார்.

## *மக்கள் சபை தீர்மானம்*

ஐ. சி. எஸ். தேர்வுகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் நடத்துவதை ஆதரிக்கும் தீர்மானம் ஒன்றை 1893ஆம் ஆண்டில் இங்கிலாந்து மக்கள்சபை நிறைவேற்றியது. இத்தீர்மானம் இந்தியா அமைச்சரின் பரிசீலனையில் இருந்துவந்தபோது, இந்தப் பிரச்சினைக் குறித்து இந்தியாவில் மாகாண, மத்திய அரசுகளின் கருத்தினை இந்தியா அமைச்சர் கேட்டிருந்தார். அப்போது, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப் பட்டன. இந்தக் கூட்டங்களில் நிறைவேற்றிய தீர்மானங்களும், தயாரிக்கப்பட்ட மனுக்களும் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டன.

இத்தகைய பொதுக்கூட்டம் ஒன்று 30—7—1893 அன்று திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில், பாபு சுரேந்திரநாத் பானர்ஜி படிப்பகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்கண்ட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது:

> "ஐ. சி. எஸ். தேர்வுகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரேசமயத்தில் நடத்துவது குறித்து இங்கிலாந்து மக்கள் சபையில் ஜுன் 2இல் நிறைவேறிய தீர்மானத்தை இந்தக் கூட்டம் முழுமனதுடன் ஆதரிக்கிறது. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரேசமயத்தில் நடத்தும் தேர்வுகள் நடைமுறையில் ஒரே தன்மையுடையவை; இத்தேர்வுகளில் இரு நாடுகளிலும் போட்டியிடுகின்றவர்கள் இறுதியில் ஒரே பட்டியலில் இடம்பெறுகின்றார்கள். எனவே, சாசனங்களிலும், பிரகடனங்களிலும் அடிக்கடி வலியுறுத்தியபடி, இத்தேர்வுகளை இருநாடுகளிலும் ஒரேசமயத்தில் நடத்துவதுதான் நியாயமானது; பொருளியல், அறநெறிக் கொள்கையின்படி இன்றியமையாதது என்பதை இந்தக் கூட்டம் மீண்டும் வலியுறுத்துகின்றது. மக்கள் சபையின் தீர்மானத்தை இந்திய அரசாங்கம் நடைமுறையில் செயலாக்கவேண்டும் எனவும், இத்தீர்மானத்திற்கு ஆதரவாகச் சென்னை அரசாங்கம் தனது கருத்தினைத் தெரிவிக்கவேண்டும் எனவும் இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது."[1]

நாகப்பட்டினத்தில் 28—7—1893 அன்று நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், "இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் தேர்வுகள் நடத்துவதை ஆதரித்து மக்கள்சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளமைக்கு இக்கூட்டம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்தியாவிலும், இங்கிலாந்திலும் போட்டித் தேர்வுகளை ஒரேசமயத்தில் நடத்துவதன் மூலம் இந்நாட்டின் குடிகளுக்கு ஐ. சி. எஸ். பணிகளில் பங்கு பெற வாய்ப்பளித்தாலொழிய பேரரசியாரின் 1858ஆம் ஆண்டுப் பிரகடனத்தை

1. Vide — G. O. No. 639-40, Pub, Dept., dated 14th Aug. 1893, pp. 2-3.

உயிருள்ளதாகக் கருத இயலாது என்று இக்கூட்டம் உறுதியாக நம்புகிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றியது.[1]

மதுரையில் ஐக்கியக் கழகம் (Union Club) என்ற நிறுவனத்தின் 25—7—1893ஆம் தேதிக் கூட்டத்தில், "இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஐ. சி. எஸ். தேர்வுகளை ஒரேசமயத்தில் நடத்தவேண்டுமென மக்கள்சபையில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை இந்திய அரசாங்கம் உடனடியாகவும் முழுமையாகவும் செயலாக்கவேண்டும் என இக் கழகத்தின் உறுப்பினர்கள் வேண்டிக் கொள்கிறார்கள்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.[2]

சென்னையில் 1894ஆம் ஆண்டில் நடந்த பத்தாவது காங்கிரசு மாநாட்டிலும் இந்தப் பிரச்சினைக் குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "ஒரேசமயத்தில் தேர்வுகள் நடத்துவது குறித்து 2—6—1893 அன்று மக்கள் சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை, இந்திய மக்களுக்கு நியாயம் வழங்கும் ஒரு நடவடிக்கையாகக் கருதி அரசாங்கம் உடனடியாக அமுலாக்கவேண்டும் என இந்தக் காங்கிரசு மாநாடு வலியுறுத்துகிறது" என்று அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.[3]

## ஏட்டளவில் நின்ற திட்டம்

இத்தீர்மானத்தின்மீது, இந்தியாவிலுள்ள மாகாண அரசுகளின் கருத்துக் கோரப்பட்டிருந்தது. இந்தியாவிலும், இங்கிலாந்திலும் ஒரேசமயத்தில் தேர்வுகள் நடத்தும் திட்டத்தை, சென்னை மாகாண அரசு ஒன்றைத் தவிர, மற்ற மாகாண அரசுகள் ஆதரிக்கவில்லை. அதனால், "இத்தீர்மானத்தைச் செயலாக்குவதற்குச் சட்டம் எதுவும் கொண்டுவரப்படவில்லை. ஆகவே, ஏதோ ஒரு முற்போக்கான மனநிலையில் இருந்தபோது நாடாளுமன்றம் தெரிவித்த ஒரு கருத்தாக ஏட்டளவிலேயே இந்தத் தீர்மானம் நின்று விட்டது."[4]

இந்தத் தீர்மானம் இவ்வாறு புறக்கணிக்கப்பட்டதைக் கண்டு இந்திய மக்களிடையே பெருங்கொதிப்பு உண்டாயிற்று. தமிழகமெங்கிலும் பல பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டத்தின்வாயிலாகத் தமிழக மக்கள் தங்கள் மனக்கொதிப்பையும் வெறுப்புணர்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள். இந்தத் தீர்மானத்தை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். 15—9—1894 அன்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் ரங்கையா நாயுடு

1. Ibid, p. 4.
2. Ibid, p. 6.
3. Res. No. VId — Vide Mrs. Annie Besant — *op. cit*-p. 200.
4. P. E. Roberts — *op. cit.* — p. 500.

தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. ஐ. சி. எஸ். தேர்வுகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரேசமயத்தில் நடத்தும் யோசனையைக் கைவிட்டு இந்தியா அமைச்சர் கடிதம் எழுதியிருப்பது கண்டு நாடெங்கும் ஏற்பட்டுள்ள மனக்கொதிப்பையும் ஏமாற்றத்தையும் இந்தக் கூட்டமும் தெரிவித்துக்கொள்கிறது.

2. 1833ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்திலும், பேரரசியாரின் 1858ஆம் ஆண்டுப் பிரகடனத்திலும் இந்திய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளுக்கு இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ள பிற்போக்கான, நியாயமற்ற, சிறிதும் இரக்கமற்ற விளக்கங்களை இந்தக் கூட்டம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. மக்கள் சபையின் தீர்மானத்தைப் புறக்கணித்துவிடுவதற்கு இந்திய அரசாங்கத்தை அனுமதிப்பதால் இந்நாட்டில் ஏற்படும் விளைவுகள் மிகப் பயங்கரமானவைகளாக இருக்கும் என. இக்கூட்டம் எச்சரிக்க விரும்புகிறது.[1]

## சிறுபான்மையோர் கருத்து

இவ்வாறு, இருநாடுகளிலும் ஒரேசமயத்தில் தேர்வுகள் நடத்துவதற்கு அரசாங்கம் மறுத்தமைக்கு நாடெங்கிலும் பெரும் எதிர்ப்பு தோன்றியபோதிலும்கூட, முஸ்லீம்கள், அரிசனங்கள் போன்ற சில சிறுபான்மைச் சமூகத்தினர் தற்போதைய நிலை நீடிப்பதையே ஆதரித்தனர். சென்னையிலிருந்து வெளிவந்த 'பறையன்' என்ற தமிழ்ப் பத்திரிகையின் 22—9—1894ஆம் தேதி இதழில்,

"ஐ. சி. எஸ். தேர்வுகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரேசமயத்தில் நடத்தும் யோசனையை எதிர்த்து, 3412 பறையர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்று, தளபதி செஸ்னி (Ceneral Chesney) மூலமாக நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவை, காருண்ய மிக்க ஆங்கில நாடாளுமன்றம் கருணையுடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, ஐ. சி. எஸ். தேர்வினை இந்தியாவில் நடத்தினால், அதனால் பிராமணர்கள் மட்டுமே தேர்வுபெற்று உயர்பதவிகளைப் பிடிக்க நேரிடும் என்ற முடிவுக்கு வந்துள்ளது. மேலும், பிராமணர்கள் சுயநலம் கருதும் ஒரு வர்க்கம் என்பதையும், அவர்கள் தங்களுடைய சொந்த நலனையே கவனிப்பவர்கள் என்பதையும், மற்ற வகுப்பினரின் நலனில் சிறிதும் அக்கறை இல்லாதவர்கள் என்பதையும் நாடாளுமன்றம் நன்கு உணர்ந்துள்ளது. இந்தியாவின் நலனுக்காகப் பாடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும்

1. Newspaper Report (Conf.) dated, 30th Sep., 1894; p. 366.

பறையர்களின் மனுவைப் படித்த பிறகு, காங்கிரசின் செயல்களை ஒருபோதும் நம்புவதில்லை எனத் தீர்மானித்துள்ளார்கள்''

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடந்த கூட்டத்தைப்பற்றி இந்த இதழ் குறிப்பிடுகையில், ''இந்தக் கூட்டத்தில் பறையர்களோ இந்தியக் கிறிஸ்தவர்களோ யாரும் கலந்துகொள்ளவில்லை. தென்னகத்தைச் சேர்ந்த பல சமூகங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்திற்குச் செல்லவில்லை. சென்னைப் பச்சையப்பன் கல்லூரி, கிறிஸ்தவக் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களே பெரும்பாலும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்'' எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் சில பெரியோர்கள் பேசிய பேச்சுகள்பற்றிக் குறிப்பிட்டு, ''இக்கூட்டத்தில் பேசியவர்களில் திவான்பகதூர் எஸ். சுப்பிரமணிய ஐயர் மட்டுமே ஓரளவு அறிவுநலத்தோடு பேசினர். 'இந்துக்கள் கோருகின்ற சலுகைகளை வழங்குவதற்குரியகாலம் வருவதற்கு நீண்டகாலம் பிடிக்கும்; அந்தக் காலம் வந்தவுடன் நீதிநிருவாகத்திற்குரிய திறமையை இந்நாட்டுமக்கள் பெறுவார்கள்' என்று அவர் கூறினர். அவர் கூறியது முற்றிலும் உண்மை. இந்நாட்டு மக்கள் அனைவரும் சமயம், சாதி முதலியவற்றின் பெயரால் பேதங்கள் பாராட்டுவதைக் கைவிட்டு, நாட்டுமக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வுடன் ஒரே சமுதாயமாக வாழ்வதற்குப் பாடுபட முன் வருகின்ற பொழுது, பிரிட்டிஷ் அரசினர் நம்முடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, இந்நாட்டை நம்மிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறி விடுவார்கள். நம் நாட்டவர்கள், காங்கிரசு உறுப்பினர்கள் என்ற பெயரில், பிராமணர்களின் சூழ்ச்சிகளுக்கெல்லாம் உடந்தையாகக் குரல் எழுப்பிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? இந்து அரசர்கள் ஆண்டபோது, அவர்களின் ஆட்சியில் பிராமணர்கள் உயர்ந்த பதவிகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியிலும் இந்த உயர்ந்த நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் பிராமணர்கள் இத்தகைய தந்திரங்களைக் கையாண்டு வருகின்றார்கள். இதனை மற்றச் சமூகத்தினர் ஏன் உணர்ந்துகொள்ளாமல் நடந்துகொள்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. மற்றச் சமூகத்தினர் யாவரும் இப்பொழுதுதான் உயர்கல்வியின் பலன்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள்; இன்னும் சிறிது காலத்திற்குள் இச்சமூகத்தினர் உயர்நிலையை எட்டி, பிராமணர்களின் பதவிகளையெல்லாம் பிடித்துக்கொண்டுவிடுவார்கள் என்று பிராமண சமூகத்தினர் அஞ்சுகிறார்கள். அதனால்தான், கீழ்ச்சாதி மக்கள் உயர்பதவிகளைப் பெறுவதற்குரிய தகுதிகளைப் பெறுவதற்கு முன்னதாக, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அந்த உயர்பதவிகளையெல்லாம் தங்களுடைய ஏகபோகமாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில். ஐ. சி. எஸ். தேர்வுகளை ஒரேசமயத்தில் இருநாடுகளிலும் நடத்தவேண்டுமெனப் பிராமணர்கள் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், இப்பிரச்சினை குறித்து நமது ஆட்சியாளர்கள் எடுத்துள்ள

முடிவே நியாயமானது; சரியானது'' என்று அந்த இதழ் குறிப்பிட்டுள்ளது.[1]

சென்னை நகரிலிருந்து வெளியான 'காசிம்-உல்-அக்பர்' (Khasim-ul-Akbar) என்ற உருதுப் பத்திரிகையின் 31—5—1894ஆம் தேதி இதழில், ''ஐ. சி. எஸ். தேர்வுகளை ஒரேசமயத்தில் நடத்தவேண்டுமென வற்புறுத்தி நடத்திவரும் கிளர்ச்சியை நாடாளுமன்றம் முற்றிலுமாக நிராகரித்துவிட்டது. காங்கிரசுவாலாக்களின் நம்பிக்கை கடைசியில் சிதறடிக்கப்பட்டுவிட்டது; லிபரல் கட்சியினர் தங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டுவிடுவார்கள் என்ற காங்கிரசாரின் எண்ணம் பொய்த்துப் போய்விட்டது'' என்று எழுதியிருந்தது.

இவ்வாறு, இப்பிரச்சினை குறித்துப் பொதுமக்களின் பெரும்பான்மைக் கருத்துக்குச் செவிசாய்க்க அரசாங்கம் பிடிவாதமாக மறுத்து வந்தது. எனினும், தங்கள் கோரிக்கையை மக்கள் தளராமல் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். இறுதியில் அவர்கள் கோரிக்கை ஏற்கப்பட்டது. 1922ஆம் ஆண்டில் இருநாடுகளிலும் ஒரேசமயத்தில் ஐ, சி. எஸ். தேர்வுகளை நடத்தும் முறையை அரசு அமுலாக்கியது.

## ஆயுதச் சட்டம்

படையினர் பெரும்புரட்சிக்குப் பின்னர், இந்திய மக்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்து ஆங்கில அரசினரிடம் அவநம்பிக்கை வளர்ந்துகொண்டே வந்தது. நாட்டுமொழிப் பத்திரிகைச் சட்டம் நிறைவேறிய அதே ஆண்டில் (1878), ஆயுதச் சட்டம் (Arms Act) ஒன்றை லிட்டன் பிரபு கொண்டு வந்தார். பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாணத் தலைநகர்களில் காவல்துறை ஆணையாளர்களிடமும், மற்ற இடங்களில் மாவட்ட நடுவர்களிடமும் உரிமம் (Licence) பெறுமல் யாராவது ஆயுதங்கள் வைத்திருந்தாலும், ஆயுதங்களை எடுத்துச் சென்ருலும் அது இந்தச் சட்டப்படிக் குற்றமாகும். ஆயுதங்களுக்கான உரிமங்கள் வழங்குவதற்கு ஆணையாளர்களுக்கும், மாவட்ட நடுவர்களுக்கும் இச்சட்டம் அதிகாரம் வழங்கியது. உரிமம் பெறுவதற்கு, அதற்குரிய கட்டணம் செலுத்தி, விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்தவரின் முன்நடத்தைகளையெல்லாம் தீரவிசாரித்த பிறகு, அவருக்கு உரிமம் வழங்கலாமெனக் கருதினுல், அதிகாரி உரிமம் வழங்குவார்.

இந்தச் சட்டத்திலிருந்து ஐரோப்பியர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்தியர்களுக்குமட்டுமே இச்சட்டம் அமுலாக்கப்பட்டது. இந்த ஓரவஞ்சகத்தை எதிர்த்து நாடெங்கிலும் பெரும் எதிர்ப்புக் குரல் எழுந்தது. இந்திய தேசீயக் காங்கிரசின் பல மாநாடுகளில், இந்தச் சட்டத்தை ஒழிக்கவேண்டுமென

Newspaper Report (Conf.), 1894, p. 369.

வற்புறுத்தப்பட்டது. ஆனால் அரசினர் அதற்குச் செவிசாய்க்க வில்லை. 'விவேகவர்த்தனி' என்ற தமிழ் மாதப் பத்திரிகையின் 1881ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இதழில், இந்த ஆயுதச் சட்டம் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

"இந்திய வரலாற்றில் பல்லாண்டுகள் மறக்க முடியாத ஓர் ஆட்சியாளர் (லிட்டன் பிரபு), ஆயுதச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இந்தச் சட்டத்தின் கொடூரத் தன்மையை எத்தனையோ முறை எடுத்துரைத்துள்ளோம். ஆயுதங்களின் இறக்கு மதியையும் போக்குவரத்தையும் சீராகக் கட்டுப்படுத்துவதற்காகவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ள தாகவும், எவ்விதமான புகார்களுக்கும் இடந்தராத வகையில் தாராளப் போக்குடன் இச்சட்டம் செயல்படுத்தும்படித் தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் மேன்மைதங்கிய லிட்டன் பிரபு கூறி இருக்கின்றார். ஆனால், லிட்டன் பிரபுவின் இந்த உத்தரவு நாடு முழுவதும் தெரிவிக்கப்படவில்லை என்றும், இவ்வுத்தரவு முறையாகச் செயலாக்கப்படவில்லை என்றும், நாம் அஞ்சு வதற்குத் தக்க காரணங்கள் உள்ளன. சென்ற வாரம் நம் நகரில் நடந்த ஒரு விநோதமான நிகழ்ச்சியை இதற்கு ஆதார மாகக் குறிப்பிடலாம். சிவபெருமானை வழிபடும் நெசவாளர்கள் சிலர், ஒரு நாளிரவு சிவபெருமானை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். சில பூர்வாங்கச் சடங்குகளுக்குப் பிறகு ஊர்வலம் தொடங்கியது. சிவனுக்குரிய சில ஆயுதங்களைச் சப்பரத்தில் வைப்பது வழக்கம். ஆயுதச் சட்டம்பற்றி அறிந்திராத அப்பாவி நெசவாளர்கள், அன்றிரவு ஊர்வலத்திற்காக, துருப்பிடித்த மூன்று வாள்களையும், ஒன்றுக்கும் உதவாத ஒரு கத்தியையும் எங்கிருந்தோ தேடிக் கொணர்ந்து சப்பரத்தில் வைத்திருந்தனர். ஊர்வலம், காவல் நிலையத்தைக் கடந்து சென்றபோது, அந்த ஆயுதங்களுக்குரிய உரிமத்தைக் காட்டத் தவறியமைக்காக, அவ்வாயுதங்களைப் போலீசார் 'பறிமுதல்' செய்துவிட்டனர். போலீசாரின் இந்தத் திடீர் நடவடிக்கையினால் அதிர்ச்சி யடைந்த நெசவாளர்கள், தங்களுடைய சமய உணர்வு புண் பட்டு, உற்சாகம் குன்றி, மிகுந்த வருத்தம்கொண்டு, ஊர்வலம் இவ்வாறு தடைப்பட்டமையால் எத்தகைய தீய விளைவுகள் ஏற்படுமோ என்ற அச்சத்துடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றார்கள்."[1]

இந்த ஆயுதச் சட்டத்தை ஒழித்துவிடும்படி பொதுமக்கள் இடைவிடாமல் கிளர்ச்சி செய்துவந்தபோதிலும்கூட, இக் கொடிய சட்டம் தொடர்ந்து நீடித்து வந்தது.

### நீதி-நிருவாகப் பிரிவினை

இந்திய மக்களிடையே கிளர்ச்சியை உண்டாக்கி வந்த மற் றொரு முக்கியமான பிரச்சினை, மாவட்ட ஆட்சித் தலைவர் (Collector),

1. Newspaper Report (Conf), 1881-p. 3.

மாவட்ட நடுவர்கள், அவர்களின்கீழ் அதிகாரிகள் ஆகியோரின் நீதி-நிருவாக அலுவல்களைப் பிரிவினை செய்வது பற்றியதாகும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய நாள் முதலே நிலவருவாய் வசூல் பணியினையும், நடுவர் பணியினையும் ஒருவரே கவனித்து வந்தார். 1772ஆம் ஆண்டில் வங்காளத்தின் நிருவாகத்தையும், நிலவரி வசூல் பொறுப்பையும் கிழக்கிந்திய வாணிகக் குழு மேற்கொண்டபொழுது, அப்போது வங்காள ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்த முறையைப் புகுத்தினர். அவருக்குப்பின் வங்காளத்தின் தலைமை ஆளுநராக இருந்த கார்ன் வாலிஸ் பிரபு (1786-1793), மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவல்களையும், மாவட்ட நீதிபதியின் அலுவல்களையும் தனித்தனியே பிரித்தார். இவ்விரு அலுவல்களையும் ஒருவரே கவனிப்பதால், வருவாய் அதிகாரி என்ற நிலையில் ஒருவருக்குத் தீங்கிழைக்கப்பட்டிருக்குமாயின், அந்தத் தீங்கிற்கு அந்த அதிகாரியிடமிருந்தே நீதிபதி நிலையிலிருந்து பரிகாரம் கிடைக்குமென எவராலும் எதிர்பார்க்க இயலாது என்று கார்ன் வாலிஸ் கருதினர். எனவே, இவ்விரு அலுவல்களும் ஒருவரிடமே இருப்பது சரியல்ல என எண்ணி அவற்றை அவர் தனித்தனியே பிரித்தார்.

ஆனல், இந்த உன்னதமான கொள்கையிலிருந்து தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813-1823) விலகிச் சென்ருர். ''வாணிகக் குழுவின் ஊழியர்களில் புதிய தலைமுறையினர் உயர்ந்த பாரம்பரியங்களை உடையவர்களாக இருப்பதால், அவர்கள் தங்களுக்கு முந்தைய அதிகாரிகளைப்போல் வீண் சபலங்களுக்கு ஆளாகிவிடமாட்டார்கள்'' என ஹேஸ்டிங்ஸ் பிரபு கருதினர். அவருடைய இந்தக் கருத்து, நீதி-நிருவாகப் பிரிவினைக் கொள்கைக்கு விரோதமானதாகவும் பிற்போக்குத் தன்மையுடையதாகவும் இருந்தது.

நீதி-நிருவாக அலுவல்கள் ஒருவரிடமே இணைந்திருக்கக் கூடாதென்பதற்குப் பலவிதக் காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர் நிருவாகப் பணியைக் கவனிக்கும்பொழுது தனிப்பட்டவர்களுடனே அல்லது நிறுவனங்களுடனே முரண்பாடு கொள்ள நேரிடலாம். அதனல், அவர் நீதி வழங்கும் பொறுப்பை நிறைவேற்றும்பொழுது, நீதி அதிகாரங்களை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடும். எனவே, நிருவாக அதிகாரங்களும், நீதி அதிகாரங்களும் ஒருவரிடமே இணைந்திருப்பது பாதுகாப்பானதல்ல. நீதி வழங்கும் பொறுப்பில் உள்ளவர்களுக்கு சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல அமைந்து ஒருபாற்கோடாத சான்ருண்மை வேண்டும்; தக்காரையும் தகவிலாரையும் அறிந்து நடுவுநிலை பிறழாமல் முறை வழங்கும் உயர்ந்த மனப்பண்பும் அவர்களுக்கு அமைந்திருத்தல் வேண்டும். மாவட்டத்தில் அமைதியைக் காக்கும் பொறுப்பையும் கவனித்துவரும் மாவட்ட நடுவர், இத்தகைய நடுவுநிலைமையோடும் விருப்பு வெறுப்பற்ற மனத்தோடும் நீதிவழங்க இயலாது. ஏனெனில், அவர் நிருவாக அதிகாரி என்ற முறையில், தன்னிடம் நீதி கோரி வருபவர்களிடம் ஏதாவது ஒரு

வகையில் முரண்படாக நடந்து அவர்கள்மீது வெறுப்புணர்ச்சி கொண்டவராக இருத்தல்கூடும். எனவே, அவரால் ஒருபாற் கோடாமல் நீதி வழங்க முடியாது. மேலும், துணை நடுவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருப்பதால், அவர் ஒருசார்பின்றி நடந்துகொள்வதற்கான சூழ்நிலை உருவாகவும் வழியில்லை. "துணை நடுவர்களைப் பதவியில் நியமிக்கவும், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கவும் மாவட்ட நடுவர் அதிகாரம் பெற்றுள்ளமையால், அத்துணை நடுவர்கள் நடுவு நிலையோடு சுதந்திரமாக நீதிவழங்குவதென்பது இயலாத காரியம்" என்று சர் ஹென்றி காட்டன் (Sir Henry Cotton) என்ற மூத்த ஐ. சி. எஸ். அதிகாரி குறிப்பிட்டுள்ளார். "தண்டனை போதுமானதல்ல; இனிமேல் இதுபோல் நடந்துகொண்டால், உம்முடைய தவறான நடத்தையை அரசாங்கத்திற்குத் தெரிவிப்பேன்" என்று மாவட்ட நடுவர்கள், துணை நடுவர்களை அடிக்கடி அச்சுறுத்தும் நிகழ்ச்சிகளையும் ஹென்றி காட்டன் சுட்டிக் காட்டியுள்ளார்.[1]

## நிலவரி வசூலில் சித்திரவதை

நிலவரி வசூலிப்பதில் சித்திரவதை முறையைப் பயன்படுத்துவதை எதிர்த்து 1853ஆம் ஆண்டில், தமிழக மக்கள், இந்தியா அமைச்சருக்கு ஒரு மனு அனுப்பியிருந்தனர். இந்தக் குற்றச்சாட்டு பற்றி விசாரிப்பதற்காக அப்போது சென்னை மாகாண ஆளுநராக இருந்த ஹாரிஸ் பிரபு, 9—9—1854 அன்று ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். சென்னை மாகாணத்தில் நிலவரி வசூலிப்பதற்குச் சித்திரவதை முறையை அதிகாரிகள் பெருமளவில் பயன்படுத்துவது உண்மையே என்று அக்குழு உறுதி செய்தது. காவல் பொறுப்பும், நடுவர் பணியும் வரிவசூல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என அக்குழு சுட்டிக் காட்டியது. "இவ்விரு அதிகாரங்களும் ஒருவரிடமே இணைந்திருப்பதனால் வரிவசூலிப்பதற்குச் சித்திரவதை முறையைக் கையாளும் அதிகாரிகள் அந்தக் குற்றங்களிலிருந்து தப்பிவிட முடிகிறது" என்று இக்குழு குறிப்பிட்டிருந்தது.[2]

நீதி-நிருவாகப் பிரிவினையை இந்திய தேசீயக் காங்கிரசு தனது முக்கியமான கோரிக்கைகளுள் ஒன்றாக எடுத்துக்கொண்டது. 1886ஆம் ஆண்டில் நடந்த காங்கிரசின் இரண்டாவது மாநாட்டில் நீதி-நிருவாகப் பிரிவினையை வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "நிருவாக அலுவல்களும், நீதி வழங்கும் அலுவல்களும் எந்த வகையிலும் ஒரே அதிகாரியிடம் இணைந்திராதவகையில், நீதி-நிருவாகப் பணிகளை முழுமையாகப் பிரிவினை செய்யவேண்டி

---

1. M. R. Palande — *Indian Administration* — p. 366.
2. Vide-Report of the Commissioners of the Investigation of Alleged Cases of Torture in the Madras Presidency, dated 16th April, 1855.

யது அவசியமானதும் அவசரமானதுமாகும். இவ்வாறு பிரிவினை செய்வதால், சில மாகாணங்களில் ஓரளவு கூடுதல் செலவு ஏற்படு மென்றாலும், இப்படிப் பிரிவினை செய்வதற்கு இனியும் அரசாங்கம் காலத்தாமதம் செய்யக்கூடாதென இம்மாநாடு கேட்டுக்கொள் கிறது'' என்று காங்கிரசு மாநாட்டின் தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டிருந்தது.[1]

நீதி-நிருவாகப் பிரிவினையைக் கோரிவந்தது பொதுமக்கள் மட்டுமல்ல. இந்தியாவில் நீதித்துறையில் உயர்ந்த பதவிகளை வகித்து ஓய்வுபெற்ற ஐ. சி. எஸ். அதிகாரிகள் சிலரும் இப்பிரி வினையை வலியுறுத்தி வந்தார்கள். நீதி-நிருவாகப் பணிகளை முழு யாகப் பிரிவினை செய்யவேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி இவர்கள் 1899ஆம் ஆண்டில் இந்தியா அமைச்சருக்கு மனு ஒன்றை அனுப்பினார்கள்.

> ''இந்தியாவில் தற்சமயம் இவ்விரு பணிகளும் பெரும் பாலும் இணைந்தே உள்ளன. முக்கியமாக ஒழுங்குமுறை மாகாணங்களிலுள்ள மாவட்டங்களில் இவ்விரு பணிகளையும் ஒருங்கே கவனிக்கும் அதிகாரிகள் யாவரும் ஆட்சித் தலைவர்-நடுவர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். ஓர் அதிகாரி நிரு வாகப் பொறுப்பில் இருந்துகொண்டு நடவடிக்கை மேற் கொண்டு தொடர்ந்த வழக்குகளை, விசாரித்து நீதி வழங்கும் பொறுப்பும் அவரிடமே இருக்கும் வரையில் இந்தியாவின் நீதி நிருவாகம் மக்களின் நம்பிக்கையையும் மரியாதையையும் பெற முடியாது.

என்று அவர்கள் தங்கள் மனுவில் கூறியிருக்கிறார்கள்.[2]

இந்த மனுவை இந்திய அரசாங்கத்தின் பரிசீலனைக்கு, இந்தியா அமைச்சர் ஜார்ஜ் ஹாமில்ட்டன் (George Hamilton) அனுப்பினார். அப்போது, இந்தியாவில் தலைமை ஆளுநராக இருந்தவர் கர்சான் பிரபு. அவர், இம்மனுவின்மீது கருத்துத் தெரிவிக்கும்படி மாகாண அரசுகளுக்கு அதை அனுப்பி வைத்தார். இப்பிரச்சினை குறித்து உயர்நீதிமன்றத்திடமும், வருவாய் வாரியத்திடமும், வருவாய்த்துறை, நீதித்துறை ஆகியவற்றைச் சேர்ந்த உயர் அதிகாரிகளிடமும் சென்னை அரசாங்கம் கருத்துத் தெரிவிக்கும்படி கேட்டது. சிலர், நீதி-நிருவாகப் பிரிவினைக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தார்கள்; வேறு சிலர் இப்பிரிவினையை எதிர்த்தார்கள்.

## தலைமை நீதிபதி எதிர்ப்பு

நீதி-நிருவாக அலுவல்கள் ஒருங்கிணைந்திருப்பதற்குச் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எதிர்ப்புத் தெரிவித்தார். ''இவ்

1. Resolution No. XI, Mrs. Annie Besant — *op. cit.* p. 33
2. G. O. No. 694-695-Judicial (Conf.) dated 8—5—1901, p. 11.

வாறு இணைந்திருப்பதின் காரணமாகக் குற்றவியல் சட்டத்தைத் திறமையாகச் செயலாக்கப் பெரும் இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதற்குப் பல வழக்குகள் சான்றாக உள்ளன'' என்று அவர் சுட்டிக்காட்டினார். ''இந்தக் குறைபாட்டிற்கு, இந்த முறையிலுள்ள குறைபாடுதான் காரணமேயன்றி, தனிப்பட்டவர்கள் காரணமல்ல'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.[1]

இதற்கு நேர்மாறாக, வருவாய் வாரியத்தின் முதல் உறுப்பினராக இருந்த ஜே. தாம்சன் (J. Thomson) என்பவர், மனுவில் கண்ட கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ''நீதி-நிருவாக அலுவல்கள் இம் மாகாணத்தில் இணைந்திருப்பதால், தவறாகப் பயன்படுத்தப்படவில்லை; அவ்வாறு தவறாகப் பயன்படுத்துவதற்கும் இங்கு வழி ஏற்படுவதில்லை'' என்று அவர் கருதினார்.[2]

நீதித்துறையின் துணைச்செயலாளராக இருந்த ஏ. ஆர். நாப் (A. R. Knapp) என்பவர், ''இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில் தற்போதைய முறை, தவறான வழியில் பயன்படுத்தப்படவில்லை என்று பெரும்பாலான அதிகாரிகள் கருதுகின்றார்கள்'' எனக் கூறியுள்ளார்.[3]

நிருவாகப் பணியும், நீதி வழங்கும் பணியும் இணைந்திருப்பதால், நிருவாக நிலையிலிருந்து ஒரு வழக்கின் நுட்பங்களையெல்லாம் நடுவர் அறிந்துகொள்ள முடியுமாதலால், நீதிவழங்கும்பொழுது அவரால் நடுநிலையுடன் நடந்துகொள்ள இயலாது என்று மனுவில் குறிப்பிட்டிருந்த வாதம் பற்றிக் குறிப்பிடுகையில், ''ஒரு நடுவர் அல்லது துணை நடுவர், நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் சொல்லுவனவற்றை மட்டுமே அறிந்துகொள்ளவேண்டுமென்றால், அவர் குருடராகவோ, செவிடராகவோ, ஊமையாகவோதான் இருக்கவேண்டும். மேலும், அவருக்கு உறவினர்கள் யாருமே இருக்கவும் கூடாது'' என்று நாப் கூறியுள்ளார்.[4] சென்னை அரசாங்கத் தலைமைச் செயலாளராக இருந்த காப்ரியல் ஸ்டோக்ஸ் (Gabriel Stokes) என்பவர் இப்பிரச்சினை மீது கருத்துத் தெரிவிக்கையில், ''நிருவாக அதிகாரமும் நீதி அதிகாரமும் ஒருவரிடமே இணைந்திருக்கக் கூடாதென்பது முழுக்க முழுக்கச் சட்டமுறைக்கோட்பாடேயாகும்; இந்தக் கருத்தை வலியுறுத்தும் அறிஞர்கள் அனைவரும் சட்ட நிபுணர்களே யாவர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.[5]

---

1. G. O. Letter No. 695 (Judicial) Dept. (Conf.) dated 8th May, 1901-p-1 of the Minute.
2. Ibid-p. 11.
3. Notes to G. O. Nos. 694-695 (Judicial) Dept. (Conf.) dated 8th May, 1901.
4. Ibid — p. 11.
5. Ibid —p. 17.

சென்னை மாகாண ஆளுநர் ஆம்ஃபில் பிரபு (Lord Amphil) தமது கருத்துரையில், "மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இந்த அதிகாரத்தைப் பறிப்பதால், மாவட்டத்தில் அவருடைய ஆணைக்கு வலிமை குன்றும்; அவருடைய செல்வாக்கும் குறைந்துவிடும். இதனால் நாட்டில் அமைதியும் ஒழுங்கும் சீர்குலைந்துபோகும். நீதி நிருவாக அதிகாரங்களை முற்றிலுமாகப் பிரிவினை செய்வதற்கு உருப் படியான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை. இத்தகையப் பிரிவினை ஏற்படுமானால், அதனால் நீதி மறுக்கப்படுவதுடன், பொது அமைதிக்கும் ஆபத்து உண்டாகும்" என்று இந்திய அரசாங்கத் திற்கு எச்சரிக்கைவிடுத்துள்ளார்.[1] தலைமை ஆளுநர் கர்சான் பிரபுவின் அரசாங்கம், வேறுபல நெருக்கடியான பிரச்சினைகளைச் சமாளிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்த நேர்ந்தமையினால், இந்தப் பிரச்சினை குறித்து மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## *தமிழகம் வழிகாட்டி*

எனினும், நீதி-நிருவாகப் பிரிவினையைத் தமிழக மக்கள் இடை விடாமல் வலியுறுத்தி வந்தார்கள். இதைப் பற்றிய மக்களின் கருத்துகளை **'இந்து'** போன்ற செய்தி இதழ்கள் அடிக்கடி வெளியிட்டு இக்கோரிக்கைக்கு உயிரூட்டி வந்தன. நீதி-நிருவாக அலுவல்களைச் சென்னை அரசாங்கம் *1892*ஆம் ஆண்டில் ஓரளவு பிரிவினை செய் திருந்தது. பெரும்பாலான தாலுகாக்களில், தாசில்தார்களிடமிருந்து நீதிவழங்கும் அதிகாரம் நீக்கப்பட்டு, முன்னர் தாசில்தார்களினால் விசாரிக்கப்பட்டுவந்த வழக்குகளில் குற்றவழக்குகளை (Criminal-Cases) மட்டும் விசாரிப்பதற்குத் தனித் துணை நடுவர்கள் நியமிக்கப் பட்டனர்.

தாசில்தார்களின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காகவே இந்த மாறுதல் செய்யப்பட்டது என்பதை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்.[2] மேலும், இந்தத் துணை நடுவர்கள், முக்கியமாக நடுவர் களாகப் பணியாற்றி வந்தபோதிலும் இவர்கள் வருவாய் அதிகாரி களாகவும் இருந்து வந்தார்கள். இந்த இருநிலையிலும் இவர்கள் தாசில்தார்களுக்கு முற்றிலும் கீழ்ப்பட்டவர்களாகவே இருந்தனர். நடுவர் அதிகாரங்கள் தாசில்தார்களிடமே இருந்துவந்தன; ஆயினும் அவர்கள் அவ்வதிகாரங்களை மிக அரிதாகவே பயன்படுத்தினர்கள்.[3]

**1906**ஆம் ஆண்டில் நடந்த சென்னை மாகாண மாநாடு, விண்ணப்பம் ஒன்றைத் தயாரித்து இந்தியா அமைச்சருக்கு அனுப் பியது. நீதி-நிருவாகப் பிரிவினை குறித்து **1899**ஆம் ஆண்டு

---

1. G. O. No. 694-695, Judicial (Conf.), 8th May, 1901 — Letter to the Government of India — p. 2.
2. G. O. No. 239 Rev., 26th March, 1891 — p. 557.
3. G. O. No. 239 Rev., 26th March, 1891 — p. 534.

விண்ணப்ப மனுவில் கூறப்பட்டிருந்த அதே வாதங்களையே இந்த மனுவிலும் பெரும்பாலும் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருந்தன. இந்த மாநாட்டிற்கு வி. கிருஷ்ணசுவாமி ஐயர் தலைமை தாங்கினர். "துணை நடுவர்களை நியமித்ததன் மூலம் தாலுகாவின் தலைமை வருவாய் அதிகாரியிடமிருந்து நடுவர் அலுவல்கள் பிரிக்கப்பட்டு, அவருடைய வேலைப் பளு குறைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய முறை கடந்த 15 ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயலாகி வருகின்றது. துணை நடுவர்களுக்கான ஊதிய விகிதங்களை இன்னும் சற்று உயர்த்தி, அவர்கள் மீதான மாவட்ட நடுவரின் கட்டுப்பாடுகளையும் நீக்கி விட்டால், இப்பதவிகளுக்குத் தகுதியும் திறமையும்வாய்ந்தவர்கள் அதிக அளவில் முன்வருவார்கள். அப்பொழுது, இப்புதிய முறை இன்னும் அதிக வெற்றியுடன் செயலாகும். இந்தத் துணை நடுவர்கள் தற்பொழுது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் இரண்டாம்தர, மூன்றும் தர அதிகாரங்களைத்தான் பயன்படுத்த முடிகிறது. குற்ற வியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள முதல் தர, இரண்டாம் தர, மூன்றும் தர அதிகாரங்களைப் பயன்படுத்தி வரும் நடுவர்கள் எல்லோரையும், மாவட்டக் குற்ற விசாரணை நீதிபதியின் கீழ் கொண்டுவந்துவிட வேண்டும். அந்த மாவட்டக் குற்ற விசாரணை நீதிபதியை உயர்நீதிமன்றத்தின்கீழ் கொண்டு வந்துவிட வேண்டும். இதன் மூலம் நடுவர் அலுவல்களைக் கவனிக்கும் அதிகாரிகளின் மேலுள்ள வருவாய் அதிகாரிகளின் மேலதிகாரத்தை அறவே நீக்கிவிடவேண்டும்" என்று இந்த மாநாட்டின் விண்ணப்ப மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது.[1]

## முக்கிய நடவடிக்கைகள்

சென்னை மாகாணத்தில் நீதிவழங்கும் அதிகாரிகளின்மீது நிருவாக அதிகாரிகள் எந்த அளவுக்கு மேலதிகாரம் செலுத்து கிறார்கள் என்பது குறித்தும், இத்தகைய மேலதிகாரத்திலிருந்து நீதி வழங்கும் அதிகாரிகளை விடுவிப்பதற்கு அண்மை ஆண்டுகளில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பது குறித்தும், இது தொடர்பாக அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் பற்றியும் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமைக்கும் தற் போதைய நிலைமைக்குமுள்ள ஒப்புமை குறித்தும் விவரங்களைத் தெரிவிக்கும்படி சென்னை அரசாங்கத்திடம் 7—5—1907 அன்று இந்திய அரசு கேட்டது.[2]

இதற்குச் சென்னை அரசாங்கம் அளித்த பதிலில், குற்றவழக்கு களில் நீதி வழங்கும் பொறுப்பிலிருந்து மாவட்ட நடுவர்களை விடு விக்கவும், நிருவாக அலுவல்கள் ஏதுமின்றி துணை நடுவர்களை

---

1. G. O. No. 1812-1813 Judicial Dept. (Conf.) dated 25th Oct. 1907, pp. 2-3.
2. G. O. No. 1812-1813 Judicial Dept. (Conf.) dated 25 th Oct. 1907-p. 2.

நியமிக்கவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது.[1]

மாவட்ட நடுவரின் குற்றவழக்கு விசாரணைப் பணி பற்றிக் குறிப்பிடுகையில், "குற்ற வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் பணி முதலில் மாவட்ட நடுவரிடமே இருந்து வந்தது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையில் இந்தப் பணியை அவர் செய்வதில்லை. 30 ஆண்டுகளுக்கு முன் வரையில் மாவட்டத்தின் துணைப்பிரிவிற்குட்பட்ட பகுதிகளில், துணைப்பிரிவு நடுவரின் சாதாரணக் குற்றவியல் அதிகாரங்களையெல்லாம் மாவட்ட நடுவரே செலுத்தி வந்தார். ஆனால், இப்பொழுது அவர் அவ்வதிகாரங்களைச் செலுத்துவதில்லை. மாவட்ட நடுவரின் மூலமுதல் பணியைப் பொறுத்தவரையில், ஒரு வழக்கைத் தன்னுடைய கைக்கு மாற்றிக் கொள்வதற்கும், சில தனிப்பட்ட காரணங்களுக்காக உயர்நீதிமன்றத்தினால் இவருடைய விசாரணைக்கு மாற்றப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கும் மட்டுமே இவர் இப்பொழுது தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்" என்று சென்னை அரசு தெரிவித்துள்ளது.[2]

"ஒரே அதிகாரியிடம் இணைந்திருந்த நிருவாக அலுவல்களையும், நீதி வழங்கும் அலுவல்களையும் பிரிவினை செய்வதில் துணை நடுவர்கள் நியமனம் மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். இந்த முறை, 1892ஆம் ஆண்டில் புகுத்தப்பட்டது.[3] தற்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரி ஆறு துணை நடுவர்கள் உள்ளனர். எனினும் ஒரு சில தாலுகாக்களில், நிலவரி வசூல் பணியும், நீதிவழங்கும் பணியும் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதால், அத் தாலுக்காக்களில் இன்னும் இத்தகைய துணை நடுவர்கள் நியமிக்கப்படவில்லை. இத் துணை நடுவர்கள், சாதாரணமாக, இரண்டாம் தர அதிகாரங்களையே செலுத்தி வருகிறார்கள். தாசில்தார்களிடமிருந்து நீதிவழங்கும் பொறுப்பை நீக்கி, அவர்கள் வரிவசூல் பணியில் அதிகநேரம் செலவிட வழி செய்வதற்காகவே இந்தத் துணை நடுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தாசில்தார்கள் இன்னும் நடுவர்களாக இருக்கின்றனர். 6—5—1893 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையின்படி, இரண்டாம் வகுப்பு நடுவர்க்குரிய எல்லா அதிகாரங்களும் தாசில்தார்களுக்கு வழங்கப்பட்டுள்ளன" என்றும் சென்னை அரசு தனது மறு மொழியில் குறிப்பிட்டுள்ளது.[4]

ஆளுநரின் ஆலோசனை சபையில் உறுப்பினராக இருந்த ஃபோர்பஸ் (Forbes) என்பவர் தம்முடைய கருத்தைத் தெரிவிக்கையில், "குற்றவழக்கு விசாரணை அலுவல்களை நிருவாக அதிகாரி

1. G. O. No. 1813 Judicial Dept. (Conf.) dated 25th Oct. 1907, p. 2.
2. G. O. No. 1813 Judicial, 25th Oct. 1907-p. 2.
3. See Supra, p. 84.
4. G. O. No. 1813 Judicial, 25th Oct. 1907-p. 2.

களின் மேலாண்மையிலிருந்து விடுவிப்பதற்குக் கடந்த 30 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரே நடவடிக்கை, துணை நடுவர்களை நியமித்தது ஒன்றுதான். இந்த நடவடிக்கைகூட முழு வெற்றி பெற்றதாகக் கூறமுடியாது. இந்நடவடிக்கைகூட, நீதி-நிருவாக அலுவல்களைப் பிரிவினை செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப் படவில்லை. தாசில்தார்களின் வேலைப் பளுவைக் குறைத்து, வரி வசூல் நிருவாகத்தைச் சீர்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த முறை புகுத்தப்பட்டது. இந்த முறையின் மூலம் தாசில்தார்களிடமிருந்த நீதிவழங்கும் பணி மிகுதியும் குறைக்கப்பட்டுவிட்டமையால், தாசில் தார்களின் செல்வாக்கு, 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது வெகுவாகக் குறைந்துபோய்விட்டது'' என்று கூறியுள்ளார்.[1]

## ஆடம்சன் திட்டம்

துணை நடுவர் நியமனம் போன்ற சில்லரை நடவடிக்கைகள் பொதுமக்கள் கருத்தை நிறைவு செய்யவில்லை. 1908ஆம் ஆண்டில் 'ஆடம்சன் திட்டம்' (Adamson's Scheme) என்னும் பெயரில் ஒரு திட்டத்தை இந்திய அரசாங்கம் வகுத்தது. தலைமை ஆளுநர் ஆலோசனை சபையில் உள்விவகார உறுப்பினராக இருந்த சர் ஹார்வி ஆடம்சன் (Sir Harvey Adamson) என்பவர் இத் திட்டத்தை வகுத்து, 27—3—1908 அன்று சட்டசபையில் உரையாற்றும்பொழுது வெளியிட்டார். இத்திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டது. ஆடம்சன் பெயரிலேயே அழைக்கப்பட்ட இத் திட்டத்தை முதலில் வங்காளத்தில் செயலாக்கவும், அங்கு வெற்றி பெறுமானால் பின்னர் இந்தியாவின் மற்றப் பகுதிகளில் செயல்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்தது. இத்திட்டத்தின்படி,

> ''காவல்பணிகள் அல்லது நிருவாகப் பணிகளோடு தொடர்புடைய எந்த அதிகாரிக்கும், குற்றங்களை விசாரிக்கவும், அவ்வழக்குகளை விசாரிக்கும் அதிகாரிகள்மீது மேலதிகாரம் செலுத்தவும் அதிகாரம் இருத்தல்கூடாது. மாறாக, மாவட்டத்தில் அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்புடைய மாவட்ட அதிகாரியும் அவருடைய நிருவாகத் துணை அதிகாரிகளும் குற்றங்களைத் தடுக்கும் பணிக்குப் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.''[2]

இந்தப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்படாமல் இழுபறியாகவே இருந்து வந்தது. நம்முடைய ஆய்வுக்குட்பட்ட காலம் வரையில் இப்பிரச்சினைக்கு எவ்விதத் தீர்வும் ஏற்படவில்லை. பொதுமக்களின் கிளர்ச்சிக்குரிய ஒரு பிரச்சினையாகவே இது தொடர்ந்து

---

1. Ibid-Note dated 7th Oct. 1907–p. 3.
2. G. O. No. 3370, Revenue Dept. (Confidential), dated 8th Dec. 1909-page 40 of the notes.

நீடித்தது. இந்தியா விடுதலை அடைந்த பிறகே, இப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு ஏற்பட்டது.

### வரிச்சுமை

அரசாங்கத்தின் வரிவிதிப்பு நடவடிக்கைகளும் பொதுமக்களின் கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகின. பெருமளவு ஊதியங்களைப் பெறும் ஐரோப்பிய அதிகாரிகள் உயர்ந்த அதிகார பீடங்களில் அமர்ந்திருப்பதாலும், கட்டிடங்களுக்காகவும், ஆதிபத்திய விரிவுக்காக அவசியமற்ற போர்களிலும் பெருஞ்செலவுகள் செய்து நிதிகளை விரயமாக்குவதாலும் பொதுமக்களைக் கசக்கிப் பிழியும் அளவுக்கு அபரிமிதமாக வரிகளை விதிக்க நேரிடுகிறது என்று அடிக்கடிச் சுட்டிக் காட்டப்பட்டு வந்தது. கடுமையான நிலவரி விதிப்பினுல் குடியானவர்கள் வறுமைக்குள்ளாகி வந்தார்கள்; உப்பு வரி, வருமானவரி போன்ற பிற வரிகளினுல் மற்றவர்க்கத்தினர் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இந்தப் பிரச்சினைகள் குறித்துப் பொதுமக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதில் பத்திரிகைகள் பெரும்பங்கு கொண்டன.

1857ஆம் ஆண்டில் நடந்த படையினர் பெரும்புரட்சியினுல் இந்திய அரசின் கருவூலம் வறண்டது. நாட்டில் நிதிப் பற்ருக்குறை தலைவிரித்தாடியது. நிதியியல், அனைத்திந்தியப் பிரச்சினையாக இருந்தமையால், நிதியியல் பற்றிய கொள்கைகளை அறிவிக்க இந்திய அரசுமட்டுமே அதிகாரமுடையதாக இருந்தது. சென்னை போன்ற மற்ற மாகாணங்கள், சில ஆலோசனைகளைமட்டுமே தெரிவிக்கக் கூடிய நிலையிலிருந்தன. அந்த ஆலோசனைகளைக்கூட, அவற்றிடம் இந்திய அரசு கேட்டால்தான் தெரிவிக்கவேண்டும். நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கென, அப்பொழுது தலைமை ஆளுநர் ஆலோசனை சபையில் நிதி உறுப்பினராக இருந்தவரும், நிதியியல் வல்லுநருமாகிய ஜேம்ஸ் வில்சன் (James Wilson), பலவிதமான வரிகளை விதிப்பதற்குத் திட்டமிட்டார். இவற்றுள், உப்புக்கான ஏகபோக விலையை உயர்த்துதல், ஆண்டுக்கு ரூ. 200க்கு மேற்பட்ட எல்லா வருமானங்களின்மேல் வருமான வரி விதித்தல் ஆகிய இரு திட்டங்களையும் பொதுமக்கள் மிகக் கடுமையாக எதிர்த்தார்கள்.

### உப்பு வரி

உப்புவரி விதித்தது நியாயமே என்று இந்தியா அமைச்சர் ஆர்கைல் கோமகன் (Duke of Argyle) வாதிட்டார்.

> "எல்லாப் பொதுக்கொள்கைகளின் அடிப்படையிலும், உப்பின்மீது வரி விதிப்பது சட்டப்படி முற்றிலும் பொருத்தமுடையதேயாகும். நேர்முக வரிகளின் மூலம் பொதுமக்களிடமிருந்து வரி வசூலிப்பது முற்றிலும் இயலாத காரியம். அரசாங்கத்தின் செலவுகளுக்கு, பொதுமக்களிடமிருந்து நிதிவசூலிக்க வேண்டுமானுல், அது பொதுமக்கள் பெருமளவில் பயன்படுத்

தும் பொருள்களின்மீது வரிவிதிப்பின் மூலமாகவே இயலும். இத்தகைய வரிகளை நியாயமான அளவில் விதிப்பதன் வாயிலாக பொதுமக்களுக்கு அதிகச் சங்கடம் ஏற்படாத வகையிலும், அவர்கள் வரி செலுத்துவதைச் சுமையாகக் கருதாத வகையிலும் அதிக அளவு வருமானத்தைப் பெற இயலும். இவ்விதமாக வரி விதித்து வருமானம் பெறுவதற்குப் பொருத்தமான ஒரு பொருள் இந்தியாவில் உப்பைத் தவிர வேறு எதுவுமில்லை. அரசுக்குப் பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய ஒரே நுகர்பொருளாக இந்தியாவில் தற்சமயம் விளங்குவது உப்பு ஒன்றுதான். இந்தியாவில் உப்புவரியை, அரசினரின் சட்டபூர்வமான, முக்கியமானதொரு வருவாய்த் துறையாகக் கருதவேண்டும் என்று நான் கருதுகின்றேன். எனினும், இத்தகைய வரிகள், பொதுமக்களின் செலவினத்தில் பெருஞ்சுமையை உண்டாக்கக் கூடியதாக இல்லாமல், நியாயமான அளவில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அரசினரின் கடமையாகும்''

என்று ஆர்கைல் கோமகன் கூறியுள்ளார்.[1] ஆயினும், அன்றுட உணவுக்காகப் போராடி வந்த கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு இந்த உப்புவரி பெருஞ்சுமையாகவே இருந்து வந்தது.

சென்னை மாகாணத்தில் 1805ஆம் ஆண்டில் உப்பை அரசின் ஏக போக பொருளாக்கப்பட்டது. அதற்கு முன்பு, இந்திய அரசர்களின் ஆட்சியின்கீழ் சில இடங்களில் உப்பங்கழிகளில் உப்புத் தயாரிக்கப் பட்டு வந்தது. ஆனால், இதற்கென திட்டவட்டமான வரைமுறைகள் ஏதும் இருக்கவில்லை. மற்ற இடங்களில் கட்டணம் ஏதுமின்றி உப்புத் தயாரிப்பதற்குரிய உரிமை சிலருக்கு வழங்கப்பட்டது. உப்பு அரசினரின் ஏகபோகமாக்கப்பட்டதன் பின்னர், முதலில் உப்பின் விலை மணங்கு 9⅓ அணா என்று நிருணயிக்கப்பட்டது. இந்த விலையை அரசாங்கம் படிப்படியாக உயர்த்தியமையால், 1890ஆம் ஆண்டில் மணங்கு விலை ரூ. 2—11—0 என்ற அளவை எட்டியது.

உப்புவரியை உயர்த்துவதற்கு 1859ஆம் ஆண்டிலேயே அப்போது சென்னை ஆளுநராக இருந்த சர் சார்லஸ் டிரவிலியான் (*1859-1860*) (Sir Charles Trevelyan) எதிர்ப்புத் தெரிவித்தார். ''உப்பு வரியை உயர்த்துவது, சர்ச்சைக்கு இடமளிக்கும் என்பதில் ஐயமில்லை. எந்தவித நியாய காரணங்களின்படி பார்த்தாலும், உப்பு வரியை உயர்த்துவது சிறிதும் அறிவுடைமையாகாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். உப்புவரி விதிப்பது தலைவரி (Poll Tax) விதிப்பதைப் போன்றதாகும். இந்த உப்புவரி ஏற்கெனவே அளவுக்குமீறி விதிக்கப்படுகிறது. இதனால், நுகர்வோரில் பெரும்

1. As quoted in S. Srinivasa Raghavaiyangar — *Memo. on the Progress of the Madras Presidency during the last Forty years of British Administration* —pp. 117-118.

பான்மையினராக உள்ள ஏழை எளிய மக்கள் இந்த வரியைத் தாங்க முடியாமல் தவிக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் போதிய அளவில் உப்பைப் பெறுவதற்குப் பெரிதும் சிரமப்படுகிறார்கள்" என்று டிரவிலியன் குறிப்பிட்டுள்ளார்.[1]

'சுதேசமித்திரன்' பத்திரிகை தனது *24—1—1886*ஆம் தேதி இதழில் உப்புவரியை வன்மையாகக் கண்டித்துள்ளது. "இந்நாட்டில் பொதுமக்களின் மிக முக்கியமான உணவுப்பொருளாக விளங்கும் உப்பின்மீது வரிவிதித்திருப்பதால், ஏழை எளியோர் மிகவும் சங்கடத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இந்தியாவில் இதுகாறும் விதிக்கப்பட்டுள்ள வரிகள் அனைத்திலும் மிகவும் அநியாயமானதும் கொடுமையானதும் இந்த உப்புவரியேயாகும்" என்று 'சுதேசமித்திரன்' கூறியுள்ளது.[2]

உப்புவரியை வசூலிப்பதற்குப் பெருமளவில் அரசு அலுவலர்கள் தேவைப்பட்டனர். அவர்களைப் பராமரிப்பதற்கும் பெருந்தொகை செலவாகி, அரசின் நிதி வீண்விரயமாகியது. மேலும், உப்புவரி விதிப்பினால், பல்வேறு இடங்களில் பாறை உப்புகளைத் தோண்டி எடுப்பதை ஒடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் வெடியுப்புத் தொழில் நலிவடையலாயிற்று. காரம் தயாரிப்பதிலும், கண்ணாடித் தொழிலிலும் முக்கியமான மூலப்பொருளாக விளங்கும் கண்ணாடி உப்பு தயாரிக்கும் தொழிலும் நசிந்து போகலாயிற்று. சீனிவாசராகவையங்கார், உப்புவரிக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். "இந்த உப்புவரியின் விளைவாக, பொதுமக்களின் உடல் ஆரோக்கியம் சீர்கெடும். உப்புவரி தற்போதுள்ள உயர்ந்த அளவிலேயே நீடிக்குமானால், பொதுமக்களின் பொதுச்சுகாதார நிலையினையும் உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுவரும் இந்த நேரத்தில், அந்த முயற்சிகளினால் ஒரு பலனும் ஏற்படாமல் போய்விடும். ஆகவே, இந்த உப்புவரியைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியில் இந்த வரியை அடியோடு ஒழித்துவிடவேண்டும் என இந்திய அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சீனிவாசராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார்.[3]

இவ்வாறு பலவகையிலும் வலியுறுத்தப்பட்ட பொதுமக்கள் கருத்துக்கு இணங்க, இந்திய அரசாங்கம், உப்புவரியை 1903இல் ரூ. *1—8—0* என்றும் *1907*இல் ரூ. *1/*—என்றும் குறைத்தது.[4] ஆயினும்,

---

1. G. O. No. 1774-Revenue Dept., dated 11th June of 1859 — pp. 6-7.
2. Newspaper Report (Conf.), 1886-p. 4.
3. Op. cit. — pp. 119-120.
4. *Tinnevelly Dist. Gazetteer*, Vol. I, p. 322.

உப்புவரியை அறவே ஒழித்துவிடவேண்டும் என்ற கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த வரியின் மூலம் கிடைத்த பெருமளவு வருமானத்தை இழக்க அரசு தயாராக இல்லை. 1881 முதல் 1890 வரையிலான பத்தாண்டுகளில் உப்புவரியின்மூலம் அரசுக்கு ஆண்டுக்குச் சராசரியாக ரூ. 1.49 கோடி வருமானம் கிடைத்தது; இந்த வருமானம், 1891 முதல் 1900 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் சராசரி ஆண்டுக்கு ரூ. 1.81 கோடி அளவுக்கு உயர்ந்தது. அதே காலங்களில் பயன்படுத்தப்பட்ட உப்பின் அளவு முறையே 2,37,000 டன்களாகவும் (1881-1890), 2,76,000 டன்களாகவும் (1891-1900) இருந்தன. 1903-04ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட உப்பின் அளவு 3, 07, 000 டன்களாக உயர்ந்தது. 1881-82, 1891-92, 1903-04 ஆகிய ஆண்டுகளில் தலா ஒருவருக்குச் செலவாகிய உப்பின் அளவு முறையே 12.49 இராத்தல்; 15.18 இராத்தல்; 17.79 இராத்தல் ஆகும்.[1]

## உப்புச் சத்தியாக்கிரகம்

உப்புவரியை நீக்குவதற்கு அரசாங்கம் பிடிவாதமாக மறுத்து வந்ததைத் தொடர்ந்து, காந்தியடிகள் 1930ஆம் ஆண்டில் உப்புவரியை மீறுகின்ற வகையில் உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினர். 1930 மார்ச் 12இல் காந்தியடிகள் 79 தொண்டர்களுடன் உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துத் தண்டி என்னும் ஊருக்குக் கால்நடையாகச் சென்று, அங்கே கடற்கரையில் அரசாங்கத்தின் அனுமதியின்றி உப்பெடுத்தார். இதைப் பின்பற்றி நாடெங்கும் காங்கிரசுத் தொண்டர்கள் உப்புச் சத்தியாக்கிரகம் செய்தனர். அரசினர், காந்தியடிகளையும் ஆயிரக்கணக்கான தொண்டர்களையும் கைதுசெய்து சிறையிலடைத்தனர். தமிழ்நாட்டில் சக்கரவர்த்தி சி. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் வேதாரணியத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் நடந்தது. அவரும் பல நூறு தொண்டர்களும் சிறை புகுந்தனர். உப்புவரிக்கு எதிராக நாடெங்கும் இத்தனை பெரிய கிளர்ச்சி நடந்தும், அரசாங்கத்தின் பிடிவாதம் சிறிதும் தளரவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, சுதந்திர அரசாங்கமே உப்புவரியை ஒழித்தது.

## வருமான வரிக்கு எதிர்ப்பு

உப்புவரியைப் போலவே, வருமானவரியும் நாட்டுமக்களின் ஒருமனதான கண்டனத்திற்கு உள்ளாகியது. உப்புவரிக்கு எதிராகக் கூறப்பட்ட காரணங்களினின்றும் முற்றிலும் மாறுபட்ட காரணங்களால் வருமானவரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

வருமானவரி முதன்முதலில் 1860ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டது. தொடக்கத்தில், ரூ. 500-க்கும், அதற்கு அதிகமாகவும் உள்ள ஆண்டு வருமானங்களின் மீது 4 சதவிகிதமும், ரூ. 200க்கும்

1. Vide — *Imperial Gazetteer of India* — Madras, Vol. I, p. 104.

ரூ. 500க்கும் இடைப்பட்ட ஆண்டு வருமானங்களின்மீது 2 சதவிகிதமும் வருமானவரி வசூலிக்கப்பட்டது. இந்த வருமானவரி 1865ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்டது. ஆனால் இரண்டாண்டுகளுக்குப் பிறகு, திருந்திய முறையில் வாணிகங்கள், தொழில்கள்மீது உரிமவரி (Licence Tax) என்ற பெயரில் வருமானவரி மீண்டும் விதிக்கப்பட்டது. 1869ஆம் ஆண்டில் பொது வருமானவரி ஒன்று விதிக்கப்பட்டு, மீண்டும் நீடிக்கப்பட்டது. இறுதியில் 1886ஆம் ஆண்டில் மீண்டும் வருமானவரி புகுத்தப்பட்டது. வேளாண்மை வருவாய் தவிர, மற்ற எல்லா வருமானங்களின் மீதும் இந்த வருமானவரி வசூலிக்கப்பட்டது. இந்த வரி இதே வடிவத்தில் இன்னும் நீடிக்கின்றது.

வருமானவரியினால் பொதுமக்களில் மிகச் சிறு சதவிகிதத்தினரே பாதிக்கப்பட்டனர். எனினும், பொதுமக்கள் கருத்து ஒருமனதாக இந்த வரிக்கு எதிராக இருந்து வந்தது. வருமானவரி விதிப்புக்குள்ளானவர்களிடமிருந்து இயன்ற அளவில் அதிக வரியை வசூலிப்பதிலேயே வரிவசூல் அதிகாரிகள் கவனமாக இருந்தார்கள். இதனால் அவர்கள், வருமானவரி கொடுப்போரைப் பலவிதமான விசாரணைகளுக்குட்படுத்தி வீண் தொல்லைகளுக்குள்ளாக்கி வந்தார்கள். எனவே, இவ்வரியை எல்லா மக்களும் கடுமையாக எதிர்த்தார்கள்.

வருமானவரி விதிக்கும் திட்டம் ஜேம்ஸ் வில்சனின் பரிசீலனையில் இருக்கும் பொழுதே, இவ்வரிவிதிப்பதற்குச் சென்னை ஆளுநர் சர் சார்லஸ் டிரவிலியான் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். "இந்திய மக்கள், இங்கிலாந்து மக்களைப் போலன்றி, எல்லாப் புதிய வரிகளையும் எதிர்க்கின்றவர். எனவே, இந்தப் புதிய வரியினால் இந்திய மக்களிடையே வெறுப்புணர்ச்சியும், அச்சமும், அவநம்பிக்கையும் வளரும்" என்று டிரவிலியான் அரசாங்கத்தை எச்சரித்தார்.[1] அவர் முன்னெச்சரிக்கை செய்தபடியே, பொதுமக்களின் கருத்து இந்த வரிக்கு எதிராக உருவெடுத்தது.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு அபாயத்திலிருந்து இந்தியப் பகுதிகளைக் காப்பாற்றுவதற்கு ஒரு படையைத் திரட்டுவதற்கு ஆகும் செலவுகளுக்காகவே வருமானவரி விதிக்கப்படுவதாக இந்திய அரசினர் ஒரு காரணத்தைக் கூறினர். இந்தக் காரணத்தைச் சுட்டிக் காட்டியே இவ்வரியை இந்திய மக்கள் வன்மையாக எதிர்க்கலாயினர். **"இந்து சுமித்திரா"** என்ற பத்திரிகை,

> "இந்தியாவைப் பாதுகாப்பதற்கு ஆகும் செலவுகளுக்காக வருமான வரியை விதிப்பதாயின், அந்த வரியை யார் கொடுக்க வேண்டும்? ரஷ்யர்கள் படையெடுப்பார்கள் என்று அஞ்சுவது யார்? இந்தியாவா, இங்கிலாந்தா? அப்படி அஞ்சவேண்டியது நிச்சயமாக இங்கிலாந்துதான். இந்தியாவின் சொந்த மன்னர்

---

1. Minutes of 1st Dec. 1859, G. O. Revenue Dept., dated 9th of Dec. 1859 No. 1660-A-para I.

யாரும் இன்று இந்நாட்டை ஆண்டுகொண்டிருக்கவில்லை. எனவே, அந்நியப் படையெடுப்பு குறித்து இந்தியர்களுக்குச் சிறிதும் கவலை இல்லை. இந்தியாவை ஆள்வது அந்நியராகிய ஆங்கிலேயர்தாம். ஆகவே, ஆங்கிலேயரிடமிருந்துதான் இந்தியாவை அந்நியப் படையெடுப்பாளர் கைப்பற்றுவார்களேயன்றி, இந்திய ஆட்சியாளர்களிடமிருந்து அல்ல. அவ்வாறிருக்க, ஆங்கிலேயருக்கு நாம் எதற்காக உதவவேண்டும்? இந்தியாவில் வருமானவரி வசூலிக்கப்படுகின்றது என்ருல், முக்கியமாக ஆங்கிலேயரின் நலனுக்காகத்தான் வசூலிக்கப் படுகிறதேயன்றி, இந்துக்களின் நலனுக்காக வசூலிக்கப்பட வில்லை. ஆகவே, இந்த வரியை இங்கிலாந்தில் ஆங்கிலேயரிடமிருந்துதான் வசூலிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு நிதி தேவைப்படுமானுல், அதைத் திரட்ட இன்னொரு சிறந்த வழி உண்டு. மாதம் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாகச் சம்பளம் வாங்கும் அரசாங்க அதிகாரிகளின் ஊதியத்தில் 10 சதவிகிதத்தைக் குறைத்துவிடவேண்டும். மேலும், மத்திய மாகாண அரசுகள் ஆண்டுதோறும் கோடைகாலத்தில் கோடைவாசத் தலங்களுக்குக் குடிபெயர்வதையும் நிறுத்திவிட வேண்டும். இவ்விரு நடவடிக்கைகளினுலும் அரசுக்கு நிறையப் பணம் மீதமாகும்''

என்று குறிப்பிட்டுள்ளது.[1]

சென்னையில் காங்கிரசின் மூன்ருவது மாநாடு 1887ஆம் ஆண்டில் நடைபெற்றபோது, வருமானவரியினுல் குறைந்த வருவாய் பெறுவோருக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கருத்தில்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வருமானவரி விலக்கு வரம்பை ரூ. 1000/-க்கு உயர்த்தும்படி இந்தத் தீர்மானம் அரசினரைக் கேட்டுக்கொண்டது.[2] இறுதியில், பொதுமக்களின் கிளர்ச்சிக்கு இந்திய அரசாங்கம் பணிய நேர்ந்தது. வருமானவரி விலக்கு வரம்பை ஆண்டுக்கு ரூ. 500/- லிருந்து ரூ. 1000-க்கு அரசு உயர்த்தியது.

வருமானவரி விதிப்பினுல் ஆங்கில அரசின்மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியும், அதன் விளைவாக அரசியல் முறையில் உண்டான மனக் கசப்பும், அரசாங்கத்தில் மக்களுக்குரிய பங்கு வலுவடைவதற்கு வழி வகுத்தன. இதுபற்றிப் பேராசிரியர் எம். இரத்தினசாமி குறிப்பிடுகையில்,

''பிரதிநிதித்துவம் கொடுக்காவிட்டால் வரி கொடுக்க மாட்டோம் என்ற குரலுக்கு, வருமானவரி விதிப்பு மேலும் வலுவேற்றியது. இந்தக் குரல், இந்த நாட்டில் அரசியலமைப்பின் முன்னேற்றத்திற்கும் ஆணிவேராக அமைந்தது. வருமான

1. Newspaper Report (Conf.), 1886-p. 4.
2. Vide—Res. No. VI-Mrs. Annie Besant — *op.cit.* p. 53.

வரி செலுத்தியவர்கள் மிகச் சிறிய எண்ணிக்கையினராக இருந்த போதிலும், இந்நாட்டில் அரசியல் கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் அவர்களே யாவர். வருமானவரியும், அரசியல் கிளர்ச்சியும் ஒருங்கே வளர்ந்தன எனலாம். இந் நாட்டில் பிரதிநிதித்துவ அரசும், பொறுப்பாட்சி ஏற்படுவதற்கும், வருமானவரி வழிவகுக்கும் என்று, அந்த வரியை இந்நாட்டில் புகுத்தியவர்கள் கனவில்கூட கருதி இருக்கமாட்டார்கள்''

என்று கூறியுள்ளார்.[1]

அபரிமிதமான நிலவரி விதிப்பும், நாட்டுமக்களை வாட்டி வதைத்தது. நிலவரியை உயர்த்தும் ஒரே நோக்கத்துடன், குடிவாரங்களை அரசினர் அடுத்தடுத்து அடிக்கடி மாற்றிக்கொண்டே இருந்தனர். இதனல், நிலவரி மூலம் அரசின் வருமானம் பெருகியதே யன்றி, குடியானவர்களின் நிலை சிறிதும் உயரவில்லை. சொல்லப் போனல், குடியானவர்களை மேன்மேலும் வறுமையில் ஆழ்த்து வதற்கே அரசினரின் இந்த நடவடிக்கைகள் வழி வகுத்தன எனலாம்.

1. *Op.cit.* pp. 520-521.

## *அத்தியாயம் — 4*

# பொதுமக்கள் கருத்தும் பொருளியல் பிரச்சினைகளும்

அரசியல் குறைபாடுகளில் மட்டுமே இந்தியப் பொதுமக்கள் கருத்தின் முழுக்கவனமும் செலுத்தப்பட்டது எனக் கருதுவது தவருகும். நாட்டின் பொருளியல் துறையிலும் பலவிதப் பெருங் குறைபாடுகள் நிலவி வந்தன. இக் குறைபாடுகளுக்குப் பரிகாரம் காண்பதற்காகவும் பல பெருங்கிளர்ச்சிகள் தோன்றின. நாட்டில் நிலவிய பொருளியல் பிரச்சினைகளுக்கெல்லாம் சீரான முறையில் தீர்வுகண்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நல்வாழ்வை மேம்படுத்துவதற்குப் பொதுமக்களின் முழு ஆதரவைப் பெற்ற ஓர் அரசாங்கத்திஞல்தான் இயலும் எனப் பெரும்பான்மையான இந்தியத் தலைவர்கள் மனப்பூர்வமாக நம்பினர்கள். எனவேதான், அவர்கள் அரசியல் சீர்திருத்தங்களுக்குத் தலையாய முக்கியத்துவம் கொடுத்து, அவற்றைப் பெறுவதிலும் தனிக் கவனம் செலுத்தி வந்தார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு பொருளியல் துறையில் இந்தியா அடைந்துள்ள துரிதமான முன்னேற்றத்தைக் காணும் பொழுது, அன்றையப் பெருந்தலைவர்களின் எண்ணம் எத்துணை சரியானது என்பதை உணர முடிகின்றது.

தீவிரமான அரசியல் கிளர்ச்சிகளுக்கிடையில் வேளாண்மை, தொழில், வாணிகம் முதலிய பொருளியல் பிரச்சினைகளுக்காகவும் அவ்வப்பொழுது கிளர்ச்சிகள் நடந்து வந்தன. இவற்றுள் வேளாண்மைத் துறையின் பிரச்சினைகள் பற்றிய கிளர்ச்சிகளை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.

### *1. வேளாண்மை*

பாரதத்தில் பன்னெடுங்காலமாக வேளாண்மையே மக்களின் தலையாய தொழிலாக விளங்கி வந்துள்ளது. ஆனல், வாணிக நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்து, நாட்டாட்சியைக் கைப்பற்றிய கிழக்கிந்திய வாணிகக் குழுவினர், இந்நாட்டு மக்களின் பாரம்பரிய வேளாண்மைத் தொழிலை மேம்படுத்துவதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. குடியானவர்களிடமிருந்து நிலவரியை வசூலிப்பதில் அக்கறை காட்டியது ஒன்றைத்தவிர, அவர்களின் நலனுக்காக ஆங்கில ஆட்சியாளர்கள் ஒரு துரும்பைக்கூட அசைக்கவில்லை. ''பண்டைத்

தமிழ்மன்னர்கள் தென்னகத்தில் எத்தனையோ குளம் வெட்டி வளம் பெருக்கினார்கள்; கல்லணைகளும் பேரணைகளும் கட்டினார்கள்; கால்வாய்கள் வெட்டினார்கள்; ஏரிகள் ஏற்படுத்தினார்கள். இவற்றை யெல்லாம் கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் மீண்டும் புதுப்பித்து பராமரித்திருந்தாலே போதும்; ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குள் இந்நாட்டின் தோற்றத்தையே அடியோடு மாற்றியமைத்திருக்கலாம்; பாதுகாப்பானதொரு வேளாண்மைத் தொழிலையுடைய, பஞ்சம் என்றால் என்னவென்றே அறியாத மக்களுடன் கூடிய ஒரு தென்னிந்தியாவை இங்கிலாந்தின் அரசியாருக்கு வாணிகக் குழுவினர் காணிக்கையாகச் சமர்ப்பித்திருக்கலாம். ஆனால், தீவினைப் பயனாக, இந்த நல்ல காரியங்களை வாணிகக் குழுவினர் செய்யவில்லை. மாறாக, நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தும் பணியை அவர்கள் அடியோடு புறக்கணித்துவிட்டனர். ஏதாவது ஒரு பழைய அணையைப் புதுப்பிப்பதில் யாராவது ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர் அரிதாகக் கவனம் செலுத்தினார் என்றால், அந்த மாவட்டத்தில் நிலவரியை மேலும் உயர்த்தும் ஒரே நோக்கத்துடனேயே அவர் அவ்வாறு செய்தார்."[1]

## கொள்ளிடம் மேலணை

எனினும், வாணிகக்குழு நிருவாகிகளில் ஒரு சிலர், *19*ஆம் நூற்றாண்டிலேயே காவிரி, கிருஷ்ணா, கோதாவரி போன்ற பெரிய ஆறுகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும், கழிமுகப் பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுப்பது பற்றியும் சிந்தித்துப் பார்த்திருக்கிறார்கள். "வட இந்தியாவில் முதல் பெருங்கால்வாயை வெட்டிய பெருமைக்குரியவர் பெய்ர்டு ஸ்மித் (Baird Smith) என்றால், தென்னிந்தியாவில் முதல் பெருங்கால்வாயை உருவாக்கிய பெருமைக்குரியவர் சர் ஆர்தர் காட்டன் (Sri Arthur Cotton) ஆவார்.[2] கொள்ளிடத்தின் குறுக்கே *1834*ஆம் ஆண்டில் 'மேல் அணைக்கட்டு' என்ற பெயரில் ஓர் அணையை சர் ஆர்தர் காட்டன் கட்டினார். இந்த மாபெரும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தது வாணிகக் குழுதான் என்றாலும், இந்தத் திட்டத்தை முதன் முதலில் வகுத்து, அதற்குரிய பணியைப் பெரும் எதிர்ப்புகளுக்கிடையில் தொடங்கி வைத்தவர் சர் ஆர்தர் காட்டனே ஆவார்.

கோதாவரி அணையைக் கட்டும் வேலையையும் *1846*ஆம் ஆண்டில் ஆர்தர் காட்டனே தொடங்கினார். அதேபோன்று, *1853*இல் கிருஷ்ணா அணையையும், *1855*இல் பெண்ணாறு அணையும் தொடங்கப்பட்டன. இந்தியாவில் வாணிகக் குழுவின் ஆட்சி முடிவடைந்த *1858*ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்நாட்டில் வாணிகக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்கள் இவையேயாகும். இந்தத் திட்டங்களும், நிலவிரியை உயர்த்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டனவேயன்றி, குடியானவர்களுக்கு

1. R. C. Dutt: *India in the Victorian Age*-p. 171.
2. Ibid-b. 171.

உதவிபுரியும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படவில்லை. "இந்தத் திட்டங்களினுல், நிலவரி இயன்றவரை அதிக அளவுக்கு உயர்ந்தது; அப்பாவிக் குடியானவர்கள் நிரந்தரமாக வறுமைக்கடலில் தள்ளப் பட்டார்கள்."[1]

## தாமிரபருணி அணை

இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இங்கிலாந்து அரசி நேரடியாக ஏற்றுக்கொண்ட பின்னர், நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கு மேலும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. காவிரி, கிருஷ்ண, கோதாவரி ஆறுகளின் மீதான அணைகள் மேலும் சீர்படுத்தப்பட்டு, வேளாண்மை விளைச்சல் பெருகுவதற்கு வசதி செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடலிலிருந்து 16 மைல் தொலைவில் தாமிரபருணி ஆற்றின் குறுக்கே ஸ்ரீவைகுண்டத்தில் ஓர் அணைகட்டும் வேலை தொடங்கியது. இந்த அணையின் பலனுக, தாமிரபருணி ஆற்றின் இருமருங்கிலும் பாசன வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன. இவ்வணையிலிருந்து வாய்க்கால்கள் மூலம் வயல்களில் நீர் நேரடியாகப் பாய்ந்ததுடன், குளங்களில் தேக்கிவைத்துக் கொள்வதற்கு அணையிலிருந்து நீரைக் கொண்டு செல்வதற்கும் வாய்க்கால்கள் பயன்பட்டன. இந்த அணை 1878ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

பாசனத்திற்கான நீரைத் தேக்கிவைப்பதற்காக அமைக்கப்பட்ட மற்ருெரு நீர்த்தேக்கம், செம்பரம்பாக்கம் ஏரியாகும். இது சென்னையிலிருந்து சுமார் 14 மைல் தொலைவிலுள்ளது. ஏற்கெனவே இருந்து வந்த ஒரு பழைய குளத்தைச் சீர்த்திருத்தி விரிவுபடுத்தி இந்த ஏரி அமைக்கப்பட்டது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வெள்ளாற்றின் குறுக்கே பெலாந்துறை அணை நீர்ப்பாசனத்திற்கெனக் கட்டப்பட்டது. இதைக் கட்டும் வேலை 1870இல் தொடங்கி 1878இல் முடிவடைந்தது.[2] வட ஆர்க்காடு மாவட்டத்தில், ஆர்க்காடு நகருக்கு அருகில் பாலற்றின் மீது ஓர் அணை இருந்து வந்தது. 1878ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின்போது, பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், இந்த ஆற்றின் வடகரையிலிருந்த பல கால்வாய்களைச் சீர்த்திருத்தி அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.[3]

## கிணறுகள்

இதுபோன்று, சென்னை மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களில் கிணறுகளும் தோண்டப்பட்டன. 1880ஆம் ஆண்டில் இம்

---

1. Ibid — p. 294.
2. C. D. Maclean — *Standing Information Regarding the official Administration of the Madras Presidency* — p. 293.
3. Ibid — p. 294.

மாகாணத்தின் பல மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து வனவள நிருவாகம் குறித்து அறிக்கை ஒன்றைத் தயாரித்த டாக்டர் பிராண்டிஸ் (Dr. Brandis) என்பவர் தமது அறிக்கையில், ''பெல்லாரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் பல மாவட்டங்களிலும் 1878ஆம் ஆண்டுப் பஞ்சத்திற்குப் பிறகு பல கிணறுகள் புதிதாகத் தோண்டப் பட்டிருப்பதையும், பழைய கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டிருப் பதையும் கண்டு பெருமகிழ்வு கொண்டேன். நீர்ப்பாசனத்திற்குக் கிணறுகள் எவ்வளவு உதவியாக இருக்கின்றன என்பதைப் பொது மக்கள் நன்கு உணர்ந்து பாராட்டுவதையும் கண்டேன்'' எனக் குறிப் பிட்டுள்ளார்.[1]

நீர்ப்பாசனத் துறையில் இத்தகைய சீர்த்திருத்தங்களை அரசு மேற்கொண்டபோதிலும், அவை பொதுமக்களுக்கு மனநிறைவைத் தரவில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் கண்ணோட்டம் முழுவதும் நிதி திரட்டும் நோக்கம் கொண்டதாகவே இருந்தது; அதனால், குடியானவர்களின் வறுமைக்குத் தீர்வுகாணும் வகையில் அரசினரின் நடவடிக்கைகள் எதுவும் அமையவில்லை. ''குடியானவர்களின் வாழ்க்கையை அதிக வசதியுடையதாகவும், பஞ்சத்திலிருந்து அதிகக் காப்புடையதாகவும் ஆக்குவதற்கான நோக்குடன் சாகுபடி விரிவு படுத்தப்பட்டதாக உழவர்களின் சொந்த வாழ்க்கையை ஓரளவு அறிந்துகொண்ட ஒருவர்கூடக் கூறமாட்டார்கள்.''[2]

## குடியானவர் அவலநிலை

இங்கிலாந்து அரசியின் நேரடி ஆட்சியின்கீழ் இந்தியா வந்த பிறகுகூட, இந்நாட்டுக் குடியானவர்களின் பொருளாதார நிலையில் எவ்விதமான முற்போக்கான மாறுதலும் ஏற்படவில்லை. 1853ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக் குடியானவர்களின் பொதுவான நிலைமையை பூர்டில்லான் (Bourdillon) என்பவர் விவரித்துள்ளார். அவர் அக் காலத்தில் சென்னை மாகாணத்தில் புகழ்வாய்ந்த அதிகாரிகளுள் ஒருவராக விளங்கியவர். வடஆர்க்காடு மாவட்டத்திலும் வேறு மாவட்டங்களிலும் ஆட்சித் தலைவராகப் பணியாற்றி மக்களின் வாழ்க்கை நிலையை நன்கறிந்தவர். தமிழகக் குடியானவர்களைப் பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள், ''நடுவு நிலைமையானவை; சிந்தனைத்திறன் வாய்ந்தவை; மிகையில்லாதவை; குடியானவர்கள் எத்துணை கடுமையான வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உள்ளம் உருக்கும் வகையில் படம்பிடித்து காட்டு பவை.''[3]

''குடியானவன் அன்றாடங்காய்ச்சியாய் இருக்கிறான்; கிஸ்தியைக் கட்டுவதற்குச் செட்டியாரிடம் வட்டிக்குக் கடன் வாங்கும்பொழுது

1. As quoted in S. Srinivasa Raghava Iyangar — *op.cit.* p. 55.
2. R. C. Dutt: *op. cit.* — Preface — p. VII.
3. *Ibid* — p. 71.

மட்டும்தான் அவன் பணத்தைக் கண்ணால் பார்க்கிறான்; மற்றக் கிராமத்தினருடன் அவன் கொடுக்கல் வாங்கல் நடத்துவது மிக அரிது; அதுவும் பண்டமாற்றாகவே நடைபெறுகிறது. அவன் உழவுக்குப் பயன்படுத்தும் மாடுகள் எலும்பும்தோலுமாய்க் காட்சி யளிக்கின்றன; அவை ஒவ்வொன்றும் மூன்றரை ரூபாய்க்குமேல் ஆறுரூபாய்க்கு அதிகமாக விலைபெறாதவை; அவைகூட அவனுக்குச் சொந்தமானவை அல்ல; ஏனென்றால் அவற்றை அவன் கடனாகவே வாங்கி இருப்பான். அவன் பயன்படுத்தும் வேளாண்மைக் கருவிகள் அனைத்தும் ஆதிகாலத்தவை; பயனற்றவை. மண்சுவர் களில் ஓலைக்கூரை வேய்ந்த ஒரு சிறு மண் குடிசைதான் அவன் குடி யிருக்கும் இடம். சிறிதளவு புழுங்கலரிசியை வேகவைத்துப் பெரு மளவு நீர் கலந்து காய்ச்சிய கஞ்சிதான் குடியானவனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் அன்றாடம் உணவு. அக்கஞ்சியைக் காய்ச்சு வதற்குக்கூட அவனிடம் உலோகப் பாத்திரம் இல்லை; மண்சட்டி யில் காய்ச்சி, மண்சட்டியில் வைத்தே அதை அவன் குடிக்கிறான்."[1] "குடியானவர்களின் அவலநிலை குறித்து டூர்டில்லான் கூறியுள்ள விவரங்கள் பெரும்பாலும் உண்மை" என்று ஆங்கிலேய ஆட்சி யாளரை ஆதரிக்கும் சீனிவாசராகவையங்கார் போன்றவர்கள்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.[2]

### கடன் சுமை

குடியானவர்களின் கடன்சுமை, இந்தியாவில் நெடுங்காலமாக நிலவிவரும் ஒரு தீராத பிரச்சினையாகும். கிராம மக்கள் பெருமளவில் நிலத்தை நம்பியே வாழ்கிறார்கள்; சாகுபடி நிலங்களும் துண்டு பட்டுக் கிடக்கின்றன; கிராம வாசிகளின் குடிசைத் தொழில்கள் நசிந்துப் போய்விட்டன; சாகுபடி வேலைகள் இல்லாத காலங்களில் வேலை செய்து பொருளீட்டுவதற்குத் துணைத் தொழில்கள் ஏதும் இல்லாமையால் குடியானவருக்கு வருமானம் குறைகின்றது; மகசூல்கள் காலாகாலத்தில் தவறாமல் கிடைப்பதும் நிச்சயமற்றதாக இருக்கிறது. கிராம மக்கள் கடன்தொல்லையில் உழல்வதற்கு இவை முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன. பொதுவாக இந்திய வேளாண்மையை, "பருவகாலத்தின் சூதாட்டம்" என்பார்கள். "இந்தியாவில் ஐந்தாண்டுகால வேளாண்மைச் சுழற்சியில், ஓராண்டு நல்ல மகசூல் காலமாக இருக்கும்; ஓராண்டு மகசூல் மோசமாக இருக் கும்; மூன்றாண்டுகள் மகசூல் மோசமாகவும் இராது; நன்றாகவும் இராது. நல்ல அறுவடை கிடைக்கும் ஆண்டுகளில்தான் குடியான வன் கடனில்லாமல் கழிக்க முடியும்" என்று கணித்திருக்கிறார்கள்.[3]

---

1. *Remarks on the Ryotwari System of Land Revenue in the Madras Presidency in* 1853-pp. 50-51.
2. *Op. cit.*—p. 164.
3. Jathar & Beri—*Indian Economics,* Vol. I—p. 253.

திருமணத்திற்கும் மற்றும் சமூக, சமயச் சடங்குகளுக்கும் மிகுதியாகச் செலவழிப்பதனுலும் குடியானவர்களின் கடன்சுமை அதிகமாகியது. குடியானவர்களின் கடன்சுமைக்கு நிலவரி மட்டுமே காரணமாகவில்லையெனினும், நிலவரி மிகுதியாக விதிக்கப்பட்டமையும், அதனைக் கடுமையாக வசூலித்தமையும், குடியானவர்களை லேவாதேவிக்காரர்களிடம் கடன் வாங்கவேண்டிய காட்டாயத்தை ஏற்படுத்தின. இந்த லேவாதேவிக்காரர்களைத் தவிரக் கடன்வாங்குவதற்குக் குடியானவர்களுக்கு வேறு போக்கிடமும் இருக்கவில்லை.

சென்னை மாகாணத்தில் குடியானவர்களுக்கு வழக்கமாகக் கடன்கொடுத்து வந்த லேவாதேவிக்காரர்களை பலவகையாகப் பிரிக்கலாம். அவர்கள் பணம் படைத்த நிலச்சுவான்தார்கள்; தெலுங்கு மாவட்டங்களைச் சேர்ந்த கோமுட்டி; மைசூர் எல்லையோரக் கிராமங்களில் வாழ்ந்த லிங்காயத்துகள்; கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளிலிருந்த முகமதிய லெப்பைகள்; வட மலபார் பகுதியிலிருந்த மாப்பிளா முஸ்லீம்கள்; தமிழகத் தென்மாவட்டங்களைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் என்போராவர். கடன் நிபந்தனைகளும் வட்டிவிகிதங்களும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டன. ரூ. 100 முதல் ரூ. 500 வரையிலான கடன் தொகைக்கு சாதாரணமாக 12% வட்டி வசூலிக்கப்பட்டது. ரூ. 500 முதல் ரூ. 1000 வரையிலான தொகைக்கு 12% முதல் 9% வரை வட்டி வசூலித்தார்கள். ரூ. 1000க்கு அதிகமான தொகைக்கு 9% முதல் 6% வட்டி. இவ்வாறு கடன்தொகை அதிகமாவதற்கு ஏற்ப வட்டி விகிதம் குறைவாக இருந்தது. கடன் தொகை குறையக் குறைய வட்டி விகிதம் கூடுதலாக இருந்தது. ரூ. 100க்குக் குறைந்த தொகைக்கு 12% முதல் 18% வரை வட்டி வசூலிக்கப்பட்டது.

## *கொள்ளை வட்டி*

கடன் கொடுப்போருக்கும் வாங்குவோருக்குமிடையே வழக்கமாக எவ்வாறு கொடுக்கல் வாங்கல் நடைபெற்று வந்தது என்பதைச் சேலம் மாவட்டப் பொதுவிவரத் தொகுதி (Salem District Gazetteer) பின்வருமாறு விவரிக்கின்றது :

> "பணம் கடன் கொடுப்பதுடன் தானிய வாணிகத்தை நடத்துவது இந்த மாவட்டத்தில் (சேலம்) மிகவும் ஆதாயமான தொழிலாகக் கருதப்படுகிறது. குடியானவர்கள் முதல் கிஸ்தி தீர்வையை டிசம்பர் மாதத்தில் கட்டவேண்டும். இந்தச் சமயத்தில் வயல்களில் பயிர்கள் இளம்பருவத்தில் இருக்கும். ஜனவரி மாதத்திற்குமேல்தான் அவற்றை அறுவடை செய்ய முடியும். இந்த நேரத்தில் குடியானவர்கள் கையில் பணமில்லாமல் திண்டாடுவார்கள். இந்நெருக்கடியை முதலாளிகள் முழு அளவில் பயன்படுத்திக் கொள்வார்கள். அறுவடையாகப் போகும் மகசூல்களின் மீது அவர்கள் குடியானவர்களுக்குத் தாராளமாகக் கடன்களைக் கொடுப்பார்கள். அறுவடைச் சமயத்தில்,

அன்றைய நடப்பு விலையின்படி, தம்முடைய கடன் பணத்திற்குச் சமமான அளவுக்குத் தானியங்களை வாங்கிக்கொள்வார்கள். அசலுக்குத் தானியங்களை வாங்கிக்கொள்வார்கள். அசலுக்கு மட்டுமின்றி, வட்டிக்காகவும் ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தை அவர்கள் வசூலித்துக் கொள்வார்கள். ஒரு மாவட்டத்திலுள்ள பெரிய தானிய வாணிகர்கள் அனைவரும் ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருப்பதால், அறுவடைச் சமயத்தில் தானியங்களின் விலைகளை மிக குறைவாக நிருணயித்து, தங்களுக்கு மிகவும் சாதகமான முறையில் கடன்களைத் திரும்ப வசூலித்துக்கொள்வது எளிதாகின்றது. குடியானவர்கள் தங்களுடைய தானியங்களை அறுவடை முடிந்தவுடனேயே விற்றுவிட வேண்டியிருக்கிறது. ஏனெனில், அவர்களுக்குக் கிஸ்தி செலுத்துவதற்குப் பணம் வேண்டும். இவ்வாறு வாணிகர்கள் குடியானவர்களிடமிருந்து தங்களுக்குச் சேர வேண்டிய கடனுக்காகத் தானியங்களை வசூலித்துக்கொண்டு விலை ஏறும் வரையில் காத்திருந்து அதிக விலையில் விற்பனை செய்து பெரும் இலாபம் சம்பாதிக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சம்பாதிக்கும் இலாபம், அவர்கள் வசூலிக்கும் வட்டி விகிதத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிகம். பொதுவாகக் கடன் கொடுப்பவர் ஒருவர் தன்னுடைய அசலின்மீது 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் இலாபம் சம்பாதித்து விடுகிறார்."[1]

இவ்வாறு கடும் வட்டி வசூலித்துக் கொள்ளை இலாபம் அடித்த லேவாதேவிக்காரர்கள் மக்களின் வெறுப்புக்குள்ளானதில் வியப்பில்லை. அவர்களின் இரக்கமற்ற அநியாய நடவடிக்கைகளைக் கண்டு பொதுமக்கள் மனங்குமுறிக் கொண்டிருந்தார்கள். லேவாதேவிக்காரர்களின் கொடுமைகளுக்கு எதிராக அடிக்கடிக் கூக்குரல்கள் எழுந்தபின், அவர்களின் கொடுமைகளிலிருந்து குடியானவர்களைப் பாதுகாப்பதற்குச் சில அரைகுறை நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்தது.

## அரசின் அரைகுறை நடவடிக்கை

இந்திய அரசு, *1883*ஆம் ஆண்டில் நிலவளக் கடன் உதவி சட்டம் (Land Development Loans Act, 1883) ஒன்றை இயற்றியது. கிணறுகள் தோண்டுதல், குளங்கள் வெட்டுதல், பாசனக் கால்வாய்கள் அமைத்தல் போன்ற நிலத்தின் மதிப்பை அதிகரிக்கும் சீர்திருத்தப் பணிகளுக்கு 20 முதல் 30 ஆண்டுகளுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் நீண்டகாலக் கடன்களை வழங்க இச்சட்டம் வழி செய்தது.[2] விவசாயிகள் கடன் உதவிச் சட்டம் (Agriculturist's Loans Act) என்ற சட்டம் *1884* ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. விதை, உரம், மாடுகள், தீவனம், நீர் இறைக்கும் எந்திரங்கள்

1. Vide — *Salem District Gazetteer* — p. 279.
2. B. S. Baliga — *Tanjore Dist. Hand Book* — p. 206.

முதலியவற்றை வாங்குவதற்குக் குடியானவர்களுக்குக் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குவதற்கு இந்தச் சட்டம் வகை செய்தது.[1] இவ்விரு சட்டங்களின்கீழ், குடியானவர்களுக்கு வழங்கப் பட்ட கடன்கள் போதுமானவையாக இல்லை; அவை மிகவும் கால தாமதமாகக் கிடைத்தன; மேலும், இக் கடன்களைத் திரும்ப வசூலிப் பதில், நிலவரி வசூலைவிட மிகவும் கடுமையாக அதிகாரிகள் நடந்து கொண்டனர். இதனால், இக்கடன் உதவிகள் பொதுமக்களின் ஆதரவைப் பெறவில்லை.[2]

இந்தச் சட்டங்களின்படி, குடியானவர்களுக்கு வழங்கப்பட்ட அற்பமான பாதுகாப்புகள், பொதுமக்கள் கருத்தை நிறைவு செய்ய வில்லை. இதனால், வேளாண்மை மற்றும் நிலவள வங்கி முறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராயும்படி *1892*ஆம் ஆண்டில் நிக்கல்சன் (Nicholson) என்பவரைச் சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டது. அவர் தம்முடைய அறிக்கையை *1897*ஆம் ஆண்டில் அரசிடம் அளித்தார். கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங் களை நிறுவவேண்டும் என அவர் தமது அறிக்கையில் வன்மையாக வலியுறுத்தி இருந்தார்.

> "இந்தியா போன்ற ஒரு நாட்டில், குடியானவர்களுக்குப் போதிய அளவு கடன் உதவி கிடைக்கும்படி செய்யும் பிரச் சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய ஒரே வழி கூட்டுறவு முறை ஒன்றுதான். பிரிட்டனிலுள்ள நட்புறவு, மற்றும் கட்டிடச் சங்கங்களுடன் ஒப்பிடக்கூடிய நிதி நிறுவனங்கள் பல சென்னை மாகாணத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. எனவே ஐரோப்பாவில் கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங்கள் இயங்கு வதற்குச் சாதகமாக எத்தகைய சூழ்நிலை நிலவி வருகின்றதோ, அதைவிடச் சிறிதும் குறைவில்லாத அளவுக்குச் சாதகமான சூழ்நிலை சென்னை மாகாணத்தில் இருந்து வருகின்றது. ஆகவே, சட்டம் இயற்றுவதன் மூலமாகவும், மறைமுகமான ஊக்க நட வடிக்கைகள் வாயிலாகவும் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்குவதற்கு அரசினர் ஊக்கமளிக்கவேண்டும்"

என்று நிக்கல்சன் தம்முடைய அறிக்கையில் வலியுறுத்தி இருந்தார். இவருடைய அறிக்கையை *1899*ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கம் பரிசீலனை செய்தது. ஆனால், கிராமக் கடன் உதவியானது ஓர் அவசரப் பிரச்சினை அல்ல எனக் கருதி, இந்த அறிக்கைமீது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் அரசாங்கம் ஒதுக்கி வைத்து விட்டது.[3] மக்களின் உண்மையான தேவைகளை உணர்ந்துகொள்

1. *Ibid* — p. 207.
2. *Ibid* — p. 207.
3. Vide — Govt. of India Memorandum accompanying the Co-Operative Credit Societies Act of 1904.

வதில் அதிகாரிகள் எத்துணை அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டார்கள் என்பதற்கு இது ஒரு சான்று. "அண்மை ஆண்டு களில் உழவர்களின் கடன் சுமை, பணமதிப்பின்படி அதிகரித்திருப் பது உண்மைதான்" என்று ஒப்புக்கொண்ட எஸ். சீனிவாசராக வையங்கார், ஆங்கிலேய அதிகாரிகளின் கண்ணோட்டத்தில் அதற்கு ஒரு சமாதானமும் கூறியுள்ளார். "பல்வேறு சட்டங்களினால், சொத்துக்களின்மீது கடன்கள் வாங்குவதற்குப் பாதுகாப்பு ஏற்பட் டுள்ளமையினால், அண்மைக் காலமாக எல்லா வகைச் சொத்துக் களின் மதிப்பும் பெருமளவில் உயர்ந்துள்ளன. மேலும், பணப்புழக்க மும், பணப் பொருளியல் வளர்ச்சியும் பெருகியுள்ளன. எனவே, அதற்கேற்ப குடியானவர்களின் கடன் சுமை அதிகரித்திருப்பது இயற்கையே" என்று சீனிவாசராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார்.[1] இக்கருத்து, அக்கால ஆங்கில அதிகார வர்க்கத்தினரின் மனப் போக்கை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதாகும்.

### கடன் உதவிச் சங்கம்

கர்சான் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது, 1981 ஆம் ஆண்டில் மக்டோனல்டு (MacDonald) தலைமையில் பஞ்சநிவாரண விசாரணைக் குழு ஒன்றை (Famine Commission) நியமித்தார். இக்குழு, "ராய்ஃபெய்சென்" (Raiffeissen) மாதிரியில் அமைந்த கிராம வங்கி களை அமைக்க வேண்டுமெனப் பலமாகப் பரிந்துரைத்தது. கர்சான் பிரபு மீண்டும் 1901இல் எட்வர்டு லா (Edward Law) என்பவர் தலைமையில் மற்றொருக் குழுவை அமைத்தார். அதன் பலனாக, 1904 ஆம் ஆண்டில், "கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங்கள் சட்டம்" இயற்றப்பட்டது. இதன்படி அமைந்த கடன் உதவிச் சங்கங்கள். கிராமக் கடன் உதவிச் சங்கங்கள் என்றும், நகரக் கடன் உதவிச் சங்கங்கள் என்றும், இருவகையாகப் பகுக்கப்பட்டன். மொத்த உறுப்பினர்களில் குறைந்தது ஐந்தில் நான்கு பகுதியினரைக் குடி யானவர்களாகக் கொண்ட சங்கங்கள், கிராமக் கடன் உதவிச் சங் கங்கள் எனப்பட்டன. மற்றச் சங்கங்கள், நகரக் கடன் உதவிச் சங்கங்கள் என்றழைக்கப்பட்டன. கிராமக் கடன் உதவிச் சங்கங் களுக்கு "வரையறையில்லாப் பொறுப்பு" (Unlimited limit) நிருண யிக்கப்பட்டது. நகரக் கடன் உதவிச் சங்கங்களைப் பொறுத்தவரை யில் இதனை நிருணயிக்கும் பொறுப்பு அந்தந்தச் சங்கத்திடமே விடப்பட்டது.

கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங்களை ஊக்குவிப்பதற்காக, இச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த சங்கங்களுக்குச் சில சலுகைகளையும் உரிமைகளையும் அரசாங்கம் வழங்கியது. இவற்றுள் வருமானவரி, முத்திரைக்கட்டணம், பதிவுக்கட்டணம் ஆகியவற்றி லிருந்து விதிவிலக்கு அளித்தல் முக்கியமானது. இச்சங்கங்களுக்கு முதல் மூன்றாண்டுகளுக்கு ரூ. 2000 வரை வட்டியில்லாமல் கடன்

1. Op.cit., p. 258.

வழங்கவும் அரசு உறுதி கூறியது. இவ்வாறு அரசு வழங்கும் கடன் தொகைக்குச் சமமான அளவு தொகையைச் சங்கமும் திரட்டிக்கொள்ள வேண்டும்.

இன்றைய கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, அக்காலத்தில் கூட்டுறவுத் துறையில் மிகமிக மெதுவாகவே முன்னேற்றம் ஏற்பட்டது என்று சொல்லவேண்டும். உண்மையைக் கூறுவதெனில், இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் இன்னும் குழவிப் பருவத்திலேயே இருந்ததெனலாம். வேளாண்மைக் கூட்டுறவென்பது இன்றுகூட கடன் உதவும் அளவிலேயே நிற்கின்றன. மேலும், சாதாரணமாகப் பருவ மழை பொய்க்காமலிருக்கும் காலத்திலேயே கூட்டுறவுக் கடன் உதவிகள் பெருமளவில் நடைபெற்றன. நீர்வசதி குறைந்து விளைச்சல் ஏற்படுவது ஐயத்திற்கிடமாகவுள்ள பகுதிகளில் கடன் பாக்கிகளும், கடன்களைத் திரும்பக் கொடுக்காமலிருப்பதும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன.

## பஞ்சக் கொடுமை

பஞ்சங்களினாலும், கொள்ளைநோய்களினாலும் ஏற்கெனவே பரிதவித்துவந்த கிராம மக்களை, அளவுக்கு மீறிய நிலவரிச் சுமை மேலும் வருத்தியது. பஞ்சத்தின் கொடுமையால் மக்கள் மாண்டு மடிவதுமட்டுமின்றி, குடியானவர்களின் வேளாண்மைத் தொழிலுக்கு இன்றியமையாத துணைகளாக விளங்கும் மாடுகளும் இறந்து போயின. பஞ்சத்தின் காரணமாக மக்களின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து, அடிக்கடிக் கொள்ளைநோய்களால் பீடிக்கப்பட்டார்கள்; பஞ்சத்தைத் தொடர்ந்து கொள்ளைநோய்கள் பரவுவது அடிக்கடிக் காணப்படும் காட்சியாகும். பஞ்சத்திற்குப் பின் மலேரியா அல்லது பிளேகு போன்ற தொற்றுநோய்கள் பரவும். அவற்றைத் தொடர்ந்து மீண்டும் பஞ்சம் வரும். இவ்வாறு பஞ்சமும் நோயும் மாறிமாறித் தொடர்ந்து மக்களைப் பிடித்து, அவர்களின் உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்து வந்தன.

ஒவ்வொரு சமயத்திலும் பருவமழை பொய்ப்பதே பஞ்சத்திற்கு உடனடிக் காரணமாக இருந்து வந்தபோதிலும், பஞ்சங்கள் ஏற்படுவதற்கு வேறு சில முக்கியக் காரணங்களும் இருந்தன. "குடியானவர்களுக்கு வளவசதிகள் இல்லாமலிருப்பதும், வாழ்க்கைக்கு அவர்கள் முழுக்க முழுக்க நிலத்தையே நம்பியிருப்பதால் நிலத்தின் மண்வளம் குன்றிப்போய் விளைச்சல் குறைந்து குடியானவர்கள் கடும் வறுமையில் வாடுவதும் பஞ்சங்களுக்கு வேறு முக்கியக் காரணங்கள் எனலாம்."[1]

இந்தியாவுக்கு வாணிகம் செய்ய வந்த வாணிகக் குழுவினர், இந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு திடீரென ஆட்சிப்பொறுப்பை

---

1. R. C. Dutt: *op. cit.*—p. 17.

ஏற்றமையால், நிலவரி நிருவாகத்தில் அவர்கள் பல பெருந்தவறு களைச் செய்தார்கள். இத்தவறுகளின் விளைவுகளும் பொதுமக்களுக்கு வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போல் மேலும் வேதனை தந்தன. வாணிகக் குழுவின் ஆட்சியின்போது *1783*க்கும் *1854*க்குமிடையில் சென்னை மாகாணத்தில்மட்டும் ஆறுமுறை கடும்பஞ்சம் தோன்றி யது. அப்பஞ்சங்களின்போது, பஞ்சநிவாரணத்திற்கென வாணிகக் குழுவினர் எவ்விதமான திட்டத்தையும் சிந்தித்து வகுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[1] சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட இப் பஞ்சங்கள் குறித்துச் சற்று விரிவாக அறிந்துகொள்வது, பொது மக்கள் கருத்து வளர்ச்சியில் அவற்றின் விளைவுகளை உணர்ந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

இந்தியாவில் இங்கிலாந்து அரசியின் நேரடி ஆட்சி ஏற்பட்ட பிறகு, முதன் முதலாக *1866-67*ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் பஞ்சம் உண்டாயிற்று. இந்தப் பஞ்சம் ஒரிசாவிலும், கிழக்குக் கடலோரத்தில் கல்கத்தா முதல் சென்னை வரையுள்ள பகுதிகளிலும் பரவி ஏராளமான மக்களைப் பலிகொண்டது. இப்பஞ்சம் ஏற்பட்ட பத்தாண்டுகளுக்குள், *1876-78*ஆம் ஆண்டில், இதைவிடப் பல மடங்கு கொடியதொரு பஞ்சம் தோன்றியது. இப்பஞ்சம் நெடு நாட்கள் நீடித்தது. இதனால் ஏற்பட்ட அழிவுக்கும் அளவில்லை. சென்னை, மைசூர், ஐதராபாத், பம்பாய், ஐக்கிய மாகாணம் ஆகிய மாகாணங்களை இப்பஞ்சம் பீடித்தது. சென்னை மாகாணத்தில் மட்டும் *1.6* கோடி மக்கள் வாழ்ந்த *74,000* சதுர மைல் பரப்பளவில் பஞ்சம் ஏற்பட்டது.[2] வடஆர்க்காடு, சேலம், பெல்லாரி மாவட்டங் களிலும் இவற்றின் அண்டை மாவட்டங்களிலும் பஞ்சம் மிகவும் கடுமையாக இருந்தது. எனினும், அங்கெல்லாம் எவ்வித உதவிப் பணிகளையும் அரசு தொடங்கவில்லை. "சோதனைமிகுந்த அந்தப் பஞ்சக்காலத்தில், காலரா, பட்டினி, அம்மை, வாந்திபேதி, வயிற்றுப் போக்கு, மகோதரம், காய்ச்சல் முதலிய கொடிய நோய்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகி வந்தனர். கூடார மருத்துவ மனைகளில் இறந்தோரும் இறந்துகொண்டிருப்போரும் அருகருகே கிடந்தனர். உயிருள்ள உடலையும், உயிரற்ற உடலையும் பிரித்தறிந்து கொள்வது கடினமாக இருந்தது. அவ்வுடல்களை இடராமல் நடமாடுவது முடியாத காரியமாக இருந்தது. இறந்துபோனவர்களின் உடல்கள், கூடார மருத்துவமனைகளுக்கு அருகிலேயே மொத்தமாக எரிக்கப்பட்டன. ஒரு கூடாரத்தின் அருகில் சிலசமயம் ஒரே நேரத்தில் 24 சடலங்கள் ஒன்றாக எரிக்கப்பட்டன. மனிதர்களின் நிலையே இவ்வாறென்றால், கால்நடைகளின் பரிதாபத்தைச் சொல்லவே வேண்டாம். அவை உணவின்றித் தவித்தன; உண வென்று கருதிப் புழுதியை நக்கித் தின்று ஏமாந்தன; குடிக்க நீரின்றி வாடின. எலும்பும் தோலுமாக மூச்சுவிடவே திணறின. பல மைல் தூரம்வரை ஒரு சொட்டு நீரைக்கூடக் காண்பது அரிதாக இருந்தது.

---

1. 1783, 1792, 1807, 1823, 1833, 1854 ஆகிய ஆண்டுகளில் பஞ்சம் ஏற்பட்டது.

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள்கூட, உணவுக்காகத் தங்கள் மானத்தை விலைகூற வேண்டிய இழிநிலை ஏற்பட்டது.''[1] மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறிக் கூட்டங் கூட்டமாக நகரங்களுக்குச் சென்றார்கள். இப்பஞ்சத்தின் கொடுமையை வில்லியம் திக்பி (William Digby) என்பவர் பின்வருமாறு விவரித்துள்ளார் :

> ''இளைத்து மெலிந்து எலும்பும் தோலுமாய்க் காட்சியளிக்கும் ஏராளமான மக்கள் கடற்கரையில் கூடியிருக்கிறார்கள். அவ்வழியே செல்லும் அரிசிவண்டிகளிலிருந்து மிக அரிதாகச் சிந்திச்சிதறும் அரிசிமணிகளைச் சேகரித்து அவற்றைச் சோறாக்கி உண்டு உயிர்வாழ்கின்றார்கள். சென்னை நகரத் தெருக்களில் அந்தச் சமயத்தில் (நவம்பர் 1876) அதற்கு ஏழெட்டு மாதங்கள் வரையிலும் காணப்பட்ட காட்சிகள் இரத்தக் கண்ணீரை வரவழைக்கக்கூடிய அவலம் நிறைந்தவை. நகரின் சந்தடி மிகுந்த தெரு ஒன்றில் நடந்த பட்டினிச் சாவு குறித்துப் பத்திரிகையில் செய்தி வந்ததும் நகரெங்கும் பெரும் பரபரப்பு உண்டாயிற்று. ஒரு கிராமவாசி தன் ஊரில் உணவின்றிப் பல நாட்கள் உழன்ற பின், தன் குடும்பத்தினருடன் நகருக்கு வந்தார். இங்கும் அவர்கள் உணவின்றிப் பல நாட்கள் பட்டினி கிடந்தனர். அவருடைய இரண்டு குழந்தைகள் பசி தாங்காமல் இறந்து விட்டன. அவற்றைப் புதைத்த சில நாட்களிலேயே அந்தக் கிராமவாசியும் பட்டினியால் மாண்டுவிட்டார். இந்த உள்ள முருக்கும் செய்தியை வெளியிட்ட ஒரு பத்திரிகை இத்தகைய மனிதப் படுகொலைக்கு அதிகாரிகளே காரணம் எனக் குற்றஞ் சாட்டியது.''[2]

### கண்டனக்குரல்

பஞ்சத்தின் கோரப் பிடியில் சிக்கி வாடிவதங்கிய மக்களின் துயர் துடைக்காமல் நெடும்காலம்வரை வாளா இருந்த அரசினர், இத்தகைய கண்டனக் குரல்கள் எழுந்த பின்னர், மக்களின் அவலத்தைப் போக்குவதற்கென ஒருசில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பஞ்சநிவாரணப் பணியின் ஒரு பகுதியாக கிழக்குக் கடற்கரையோரமாகக் கால்வாய் ஒன்று வெட்டப்பட்டது. இதுதான் பக்கிங்காம் கால்வாயாகும். இது பெத்தகஞ்சம் முதல் மரக்காணம் வரையில் 261 மைல் நீளமுடையது. இந்தக் கால்வாயைத் தோண்டும் வேலை 1801ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பெற்றது. ஆனால் ரூ. 5½ இலட்சம் வரைச் செலவழித்த பின்னர் இதன் வேலை தொடராமல் கிடந்தது. 1876–1878 பஞ்சத்தின்போது, இக்கால்வாயைத் தோண்டும் வேலை மீண்டும் தொடங்கப்பட்டது. ரூ. 30 இலட்சம் வரையில் செலவழித்து இது வெட்டி முடிக்கப்பட்டது. இத்தொகை

---

1. *Salem Dist. Gazetteer* — p. 306.
2. *The Famine Campaign in Southern India*, Vol. I, 1871 — p. 13.

யில் ரூ. 22 இலட்சம் வரைத் தொழிலாளர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டது.[1] "இந்தப் பஞ்சத்தின் விளைவாக அரசாங்கத்திற்கு 80 இலட்சம் பவுன்வரை இழப்பு ஏற்பட்டது; 40 இலட்சம் மக்கள் உயிரிழந்தார்கள்" என்று எஸ். சீனிவாசராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார்.[2]

இதன் பிறகு லிட்டன் பிரபு தலைமை ஆளுநராக வந்தார். அவர், பஞ்சங்களுக்கான காரணங்கள் குறித்து ஆராய்ந்து, அவை ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் கூறுவதற்கென தளபதி சர் ரிச்சர்டு ஸ்டிராச்சி (Sir Richard Strachey) என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். இக்குழு 1880ஆம் ஆண்டில் தனது அறிக்கையை அளித்தது. இந்திய அரசாங்கம் 1883ஆம் ஆண்டில் பிறப்பித்த பஞ்ச நிவாரணச் சட்டத்திற்கு (Famine Code) இந்த அறிக்கையே அடிப்படையாக அமைந்தது. இதனைப் பின்பற்றி மாகாண அரசுகளும் பஞ்ச நிவாரணச் சட்டங்களை இயற்றின.

### பஞ்ச நிவாரணம்

பஞ்சத்தின்போது அவதியுறும் மக்களுக்கு உதவியளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்னும் அடிப்படைக் கொள்கையை இந்தக் குழு வலியுறுத்தியது. உடல் உரம் உள்ளவர்களுக்கு வேலையளித்தல், முதியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உணவு அல்லது பணம் வழங்குதல் போன்ற உதவிப் பணிகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என இக்குழு கூறியது. பெரிய வேலைகளுக்கென கிராமத்திலிருந்து வெளியே செல்ல இயலாதவர்களுக்கு வேலையளிப்பதற்காகக் கிராமத்திலுள்ள குளம் குட்டைகளை ஆழப்படுத்துதல் அல்லது அவற்றின் கரைகளை உயர்த்துதல்போன்ற வேலைகளைத் தொடங்கவேண்டும் எனத் தெரிவித்த இக்குழு, பட்டினியால் மக்களின் உடல் உரம் குன்றுவதற்குமுன்னுல் அவர்களுக்கு வேலை கொடுக்கும் பணிகளைத் தொடங்கிவிட வேண்டும் என வலியுறுத்தியது. நிலவரி வசூலைத் தள்ளிவைத்தும், தள்ளுபடி செய்தும், விதைகளும், மாடுகளும் வாங்குவதற்குக் கடன் வழங்கியும் உதவிபுரியவேண்டும்; இந்தப் பணிகளில் மக்களுக்கும் பொறுப்புணர்வு ஏற்படும்படி செய்வதற்காக, அரசு நிதியின் பெரும் பகுதியை வரிகளாகக் கொடுக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகளின் மூலமாக இந்தப் பணிகளை நிருவகிக்க வேண்டும் எனவும் இக்குழு ஆலோசனை கூறியிருந்தது.

திடீரென உண்டாகும் பஞ்சத்தினுல் ஏற்படும் எதிர்பாராத பெருஞ் செலவுகளைச் சமாளிப்பதற்கென பஞ்சநிவாரண மற்றும் காப்பீட்டு நிதி (Famine Relief and Insurance Fund) ஒன்றைத்

---

1. C. S. Srinivasachari—*op. cit.*. p. 268.
2. *op. cit.*, pp. 42-43.

தொடங்குவதென்றும் அதற்கு ஆண்டுதோறும் ரூ. 1.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்வதெனவும் அரசு முடிவு செய்தது.

சென்னை மாகாணத்திலும், பீகார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பம்பாய் போன்ற மற்ற மாகாணங்களிலும் 1896-1897 ஆம் ஆண்டில் மற்றொரு பயங்கரப் பஞ்சம் ஏற்பட்டது. இதுபற்றி ஆராய்வதற்கென சர் ஜே. பி. லியால் (J. B. Lyall) என்பவரின் தலைமையில் குழு ஒன்றை கர்சான் பிரபு நியமித்தார். 1880ஆம் ஆண்டுக் குழு கூறியிருந்த கொள்கைகளை இந்தக் குழு மீண்டும் வலியுறுத்தியதுடன், நிலவரி, குடிவாரங்கள் இவற்றின் வசூலைத் தாமதமின்றித் தள்ளிவைப்பதனாலும், விதைகளும் மாடுகளும் வாங்குவதற்கான கடன்களை விரைவாக வழங்குவதனாலும் உண்டாகும் நன்மைகளையும் நன்கு வலியுறுத்தியது. பஞ்சநிவாரணப் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளவேண்டியதிருக்கும் மாகாணத்தில் பஞ்சநிவாரண ஆணையாளர் (Famine Commissioner) ஒருவரை நியமிக்கவேண்டும் எனவும் இக்குழு பரிந்துரைத்தது. உதவியைப் பகிர்ந்தளிப்பதில் அதிகாரச் சார்பற்றவர்களின் உதவியினையும் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், வேளாண்மை வங்கிகளை நிறுவவேண்டுமெனவும், நீர்ப்பாசன வசதிகளை விரிவுபடுத்தும் பணிகளைப் பெருமளவில் தொடங்கவேண்டுமென்றும் இந்தக் குழு மேலும் ஆலோசனை தெரிவித்தது.[1]

பஞ்சத்தைச் சமாளிப்பதில் அரசாங்கத்திற்குரிய பெரும் பொறுப்பை இக்குழு மீண்டும் பலமாக வலியுறுத்தியது.

> "பஞ்சத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடும்பொழுது, உயிர்களைக் காப்பதுதான் அரசினரின் தலையாய நோக்கமாக இருக்கவேண்டும்; மற்ற நோக்கங்கள் அனைத்தும் இதற்கு அடுத்தபடியாகவே இருத்தல் வேண்டும். இத்தகைய நெருக்கடியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் உதவிப் பணிகளின் வெற்றியையோ தோல்வியையோ நிதியில் கணக்குகளை வைத்துக்கொண்டு கணித்தறிய இயலாது; மரணப்பட்டியல்தான் உண்மை நிலையை உணர்த்தும் நம்பகமான ஆதாரமாகும்"

என்று இக்குழு குறிப்பிட்டுள்ளது.[2]

### *காங்கிரசின் தீர்மானம்*

அரசினர் மேற்கொண்ட இத்தகைய பஞ்ச உதவி நடவடிக்கைகள், பொதுமக்கள் கருத்தை நிறைவு செய்வதற்குப் போதுமானவையாக இல்லை. அந்நியர்களின் கொடுமையான நிருவாகத்தினாலேயே கடும் பஞ்சங்கள் அடிக்கடி ஏற்படுவதாக மக்கள் கருதினார்கள். கல்கத்தாவில் 1896ஆம் ஆண்டில் நடந்த காங்கிரசு

---

1. Vide-*Madras Famine Code,* 1904-Chapter IX, p. 26.
2. *Madras Famine Code,* 1904 — Introduction-p. 1.

மாநாட்டில், அரசாங்கத்தின் பஞ்சநிவாரணக் கொள்கை குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

> "இந்தியா முழுவதிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டுள்ளது கண்டு இம்மாநாடு மிகவும் கவலை கொள்கின்றது. பல்லாண்டு காலமாக அந்நிய ஆட்சியில் இந்நாட்டின் செல்வமெல்லாம் இந் நாட்டிலிருந்து சுரண்டிச் செல்லப்படுவதால், இந்நாட்டு மக்கள் மீளாத வறுமையில் ஆழ்ந்திருக்கிறார்கள். அத்துடன், அரசினர் தங்களின் ஊதாரிச் செலவுகளுக்காக அபரிமிதமான அளவில் மக்கள்மீது வரிகளை விதித்து அவற்றை அவர்களைக் கசக்கிப் பிழிந்து வசூலித்துக் கொண்டு அவர்களை ஏழ்மைச் சுழலில் தள்ளிவிடுகிறார்கள். இதனால், சிறிதளவு பற்றாக்குறை ஏற் பட்டாலும், அதனைச் சமாளிக்க முடியாமல் மக்கள் தவிக் கிறார்கள்; அன்றாட உணவுக்காக அரசாங்கத்தையோ தனி யாரின் பிச்சையையோ அவர்கள் எதிர்பார்த்திருக்க வேண்டிய வர்களாகிறார்கள். இக்காரணங்களினாலேயே அண்மை ஆண்டு களில் இந்தியாவில் அடிக்கடிப் பயங்கரப் பஞ்சங்கள் தோன்று கின்றன. இத்தகைய பஞ்சங்களுக்கு நிரந்தரமாகத் தீர்வுகாண வேண்டுமானால், நாட்டின் பொருளாதாரத்தை வலிமையான அடிப்படையில் சீர்திருத்தி அமைக்கவேண்டும்; அரசின் வசதி களை ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தவேண்டும்; இந்நாட்டில் நாளுக்குநாள் நலிந்து கொண்டுவரும் உள்நாட்டுத் தொழில் களையும், கலைகளையும் ஊக்குவித்து அவை ஓங்கி வளர உதவி புரியவேண்டும்; நவீன நுட்பங்களையும் தொழில்களையும் இந் நாட்டில் புகுத்துவதற்கு ஊக்கமளிக்கவேண்டும்"

என்று இத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.[1] அரசினரின் பஞ்சநிவாரணக் கொள்கை குறித்து அக்காலத்தில் பொதுவாக மக்களிடம் நிலவிய கருத்தை இத்தீர்மானம் பிரதிபலிக்கிறது.

மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஒன்றுதான், பஞ்சத்திற்குத் தீர்வு காண்பதற்குரிய ஒரே வழியாக இருந்தது. ஆனால், பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் இதில் கவனம் செலுத்தப்படவில்லை. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர்தான் இதற்கான திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

## *தொழில்-வாணிபம்*

தொழில்வளம் மிகுந்த நாடாக இந்தியா ஒருபோதும் இருந்த தில்லை என்று பொதுவாக ஒரு கருத்து நிலவி வருகிறது. இது மிக வும் தவறானதொரு கருத்து என்பதைத் திட்டவட்டமாகக் கூறலாம். பாரதத்தின் பண்டைக்காலச் செல்வச் செழிப்புக்கு, பன்னெடுங் காலமாக இந்நாட்டின் கலைகளும் கைத்தொழில்களும் தலையாய

1. Res. No. XII-Annie Besant — *op.cit.*, p. 247.

காரணமாக இருந்து வந்துள்ளன. இந்தியத் தொழில்களில் தயாரான வினை முற்றிய பொருள்களும், முத்து, நறுமணப் பொருள்கள், சாயங்கள், இலவங்கம், மிளகு, சர்க்கரை முதலிய ஏராளமான இயற்கை விளைபொருள்களும் இந்நாட்டிலிருந்து நெடுந்தொலைவிலுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதியாகி வந்தன. அந் நாடுகளிலிருந்து தங்கம், செம்பு, துத்தநாகம், வெள்ளீயம், ஈயம், மதுவகைகள், குதிரைகள் முதலியவற்றை இந்தியா இறக்குமதி செய்து வந்தது. வெளிநாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதி செய்த பொருள்களின் அளவைக்காட்டிலும் பல மடங்கு அதிக மதிப்புள்ள பொருள்கள் இங்கிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின. எனவே, அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு ஏராளமான அளவில் தங்கம் வந்து குவிந்துகொண்டிருந்தது முதல் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வந்த ஆடம்பரப் பொருள்களை உரோமானியர்கள் பெருமளவில் பயன்படுத்தி வந்தமையால், உரோமப் பேரரசிலிருந்து இந்தியாவுக்குப் பெருமளவில் தங்கம் செல்வதாக பிளினி என்பவர் குறைகூறி இருக்கிறார். இதேபோன்று, 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரும் குறைகூறினார்கள்.

இங்கிலாந்தில் 1688ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்குப் பிறகு, மேரி அரசி இங்கிலாந்துக்கு வந்தபொழுது, அவர் இந்திய வண்ணத் துணிகளை மிகவும் விரும்பி அணிந்து வந்ததாகவும், அவரைப் பார்த்து எல்லா மக்களும் இந்தியத் துணியை அணியும் நாகரிகத்தைக் கொண்டதாகவும் இங்கிலாந்து வரலாறு கூறுகின்றது.[1] இவ்வாறு இந்தியத் துணிகளின்மீது ஆங்கிலேயருக்கு மோகம் ஏற்பட்டதை அக்காலத்திய ஆங்கிலப் பிரமுகர்கள் சிலர் விரும்பவில்லை. இந்தியப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டுமென அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள்.

"பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில், காலிக்கோ, மஸ்லின் போன்ற மனங்கவரும் நேர்த்தியான இந்தியத் துணிகள் மலிவான விலையில் ஏராளமான அளவில் இங்கிலாந்துக்கு இறக்குமதியாயின. அவற்றுக்கு ஆங்கிலேய மக்களிடையே ஏற்பட்ட பேராதரவினைக் கண்டு, இங்கிலாந்திலிருந்து கம்பளி, பட்டுத் துணித் தயாரிப்பாளர்கள் பெரிதும் அச்சமடைந்தார்கள். உடனே, மிகச் சிலவகைத் துணிகளைத் தவிர, மற்ற எல்லா வகையிலான துணிகளையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதைத் தடைசெய்து 1700ஆம் ஆண்டிலும், 1721ஆம் ஆண்டிலும் இங்கிலாந்து நாடாளுமன்றம் சட்டங்கள் இயற்றியது."[2]

### உள் நாட்டுத் தொழிகள் நலிவு

இந்தியாவின் உள்நாட்டுத் தொழில்கள் 19ஆம் நூற்றாண்டில் நலியலாயின. இதற்கு, எந்திரங்களினால் தயாரான மலிவான

---

1. Lecky — *History of England in the Eighteenth Century* — Vol. II-p. 158.
2. *Ibid* — vol. VII, pp. 255-56.

பொருள்களால் ஏற்பட்ட போட்டியும், இந்தியக் கலைகளையும் கைத் தொழில்களையும் பாதுகாக்க அரசினர் விரும்பாமையுமே முக்கியக் காரணங்களாகும். ஆகவே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொழில் வளத்திலும் வாணிகச் சிறப்பிலும் உலகிலேயே தலைமை யான இடத்தை வகித்துவந்த இந்தியாவை, 19ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில், அந்த உயர்நிலையிலிருந்து தாழ்த்தி, மூலப் பொருள் களை உற்பத்தி செய்யும் தோட்டமாகவும், மேலைநாடுகளில் உற்பத்தி யான மலிவான உற்பத்திப் பொருள்களைக் கொண்டுவந்து குவிக்கும். சந்தையாகவும் வாணிகக் குழுவினர் படிப்படியாக மாற்றிவிட்டனர்.

அரசியாரின் நேரடி ஆட்சியில்கூட நிலைமை சிறிதும் முன்னேற வில்லை. தொழில்புரட்சியின் காரணமாகப் பிரிட்டிஷ் தொழில்களும் வாணிகமும் செழித்தோங்கி வந்தன. இந்தியாவில் உள்நாட்டுத் தொழில்கள் வளர்ச்சியடையுமானல், இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சியும் வாணிகமும் பெரிதும் பாதிக்கப்படும் என இங்கிலாந்து அரசு கருதியது. எனவே, இந்தியத் தொழில்களை வளர்ப்பதிலும், அவற்றுக்கு உதவி செய்வதிலும் ஆங்கில அரசினர் சிறிதும் அக்கரைக் காட்டவில்லை. பொருளியல் விவகாரங்களில் அரசு தலையீடு கூடாதென்ற 'தலையிடாமைக் கொள்கை'யை (Laissez Faire) அரசினர் தங்களுடைய இத்தகைய போக்குக் காரணம் காட்டினர். இந்தியா போன்ற வளர்ச்சியடையாத நாடுகளின் மூலப் பொருள்களையும், இயற்கை வளங்களையும் சுரண்டிச் சென்று தங்க ளுடைய சொந்த நாட்டின் நலனுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு இந்தத் தலையிடாமைக் கொள்கை மிகச் சிறந்த சாதனமாக இருந்தது. அதைப் பிரிட்டிஷ் தொழில் முதலாளிகளும், வாணிகர்களும் முழு அளவில் பயன்படுத்திக் கொண்டனர்.

அயல்நாட்டுத் துணிகளின் போட்டி காரணமாக இந்தியாவின் நூற்பு நெசவுத் தொழில்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன, பருத்திபோன்ற மூலப்பொருள்கள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய் யப்பட்டன. அங்கு அவை துணிகளாகத் தயாரிக்கப்பட்டு, இந்தி யாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு, இந்தியத் துணிகளுக்குப் போட்டியாகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. இதனல் இந்தியப் பருத்தித் தொழில் நசிந்துப்போய், நெசவாளர்கள் வேலை யின்றித் தவிக்கலாயினர். "எந்திரசாதனங்களின் துரிதமான வளர்ச்சி யினலும், இங்கிலாந்தில் துணிகள் மிகவும் மலிவான விலையில் உற்பத்தி செய்யப்பட்டதினலும், மாஞ்செஸ்டரிலிருந்து இந்தி யாவுக்குத் துணிகள் வெள்ளம்போல்வந்து குவிந்தவண்ணமிருந்தன. இதனல் நெசவாளர் வர்க்கத்தினர் வாழ்விழந்தனர்."[1]

## இரும்புத் தொழில் நலிவு

அயல்நாட்டினர் போட்டியினல் நலிவுக்குள்ளான மற்றொரு இந்தியத் தொழில் இரும்பு உற்பத்தித் தொழிலாகும். "இந்தியாவின்

1. Srinivasa Raghavaiyangar — *op.cit.*, p. 98.

இரும்புத் தொழில், உள்நாட்டின் தேவைகளுக்கான இரும்புப் பொருள்களை வழங்கி வந்ததுடன், வினைமுற்றிய இரும்புப் பொருள்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வந்தது. இந்திய இரும்புப் பொருள்களின் தரம், உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது. டில்லி அருகே சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டதெனக் கருதப்படும் இரும்புத்தூண் ஒன்று, சிறிதும் துருப்பிடிக்காமல் இன்றும் இருந்து வருகிறது. இது இன்றைய உலக அதிசயங்களில் ஒன்ருகக் கருதப்படுகின்றது. துருவேருத இரும்பைத் தயாரிப்பதில் இந்தியர்கள் எத்துணை தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதற்கு இந்த அதிசய இரும்புத்தூண் தக்க சான்ருகும். இங்கிலாந்திற்குக் கூட இரும்புக்கருவிகள் செய்வதற்கு ஒரு காலத்தில் இந்திய எஃகு பெருமளவில் சென்று கொண்டிருந்தது. எஃகும், துருவேரு இரும்பும் தயாரிக்கும் கலையில் இந்தியர்கள், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முழுத் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்'' என்று ''இந்தியப் பொருளியல்'' என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் நீதிபதி ரானடே குறிப்பிட்டிருக்கிருர்.[1]

''இரும்பை உருக்குதல், சேலம் மாவட்டத்தில் மிகப் பழங் காலத்திலிருந்தே நடைபெற்றுவரும் ஒரு கலையாகும். பண்டைக் காலத்தில் இரும்பை உருக்குவதற்குப் பயன்பட்ட தூளைகள், உலைகள் ஆகியவற்றின் சிதைவுகள் இம் மாவட்டத்தில் ஆத்தூர், சேலம், ஓமலூர், திருச்செங்கோடு ஆகிய தாலுகாக்களில் பல கிராமங்களில் மட்டுமின்றி, ஹோசூர், கிருஷ்ணகிரித் தாலுகாக்களை ஒட்டிய அண்மைப் பகுதிகளிலும் அஞ்செட்டிக் காடுகளிலும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவை, அக்காலத்தில் இரும்புத் தொழில், இம்மாவட்டத்தில் எந்த அளவுக்கு முக்கியத் தொழிலாகப் பரவி இருந்தது என்பதை விளக்குகின்றன'' என்று சேலம் மாவட்டப் பொது விவரத் தொகுதியில் கூறப்பட்டுள்ளது.[2]

இவ்வாறிருந்தும், இரும்புத் தொழிலைப் பிரிட்டிஷார் வளர்க்கவில்லை. 19ஆம் நூற்ருண்டின் இறுதிப் பத்தாண்டுகளில், சேலம் மாவட்டத்திலுள்ள இரும்புத் தாதுவை வாணிப முறையில் பயன்படுத்த இயலுமா என்பது குறித்து விரிவான ஆய்வுகள் நடத்தப் பெற்றன. ஆயினும், எரிபொருளுக்காக மிகுந்த செலவாகும் என்ற காரணத்தைக் காட்டி, இந்தத் திட்டத்தை அரசினர் கைவிட்டு விட்டனர்.

### தொழிலாளர் வறுமை

உள்நாட்டுத் தொழில்கள் இவ்வாறு நசித்துப் போனமையால் அவற்றில் ஈடுபட்டிருந்த கைவினைஞர்கள் வேலையிழந்து வறுமை

1. As quoted in B. D. Basu — *The Ruin of Indian Trade and Industries* — pp. 3-4.
2. *Salem District Gazetteer* — p. 272.

யுற்றார்கள். அவர்கள் வேறு வழியில்லாமல், ஏற்கெனவே பருவ காலத்தில் கண்ணுமூச்சியினால் நிலையற்றதாக இருந்து வந்த வேளாண்மைத் தொழிலின் நெருக்கடி மிகுந்தது. மொத்தத்தில் நாட்டுமக்கள் அனைவரும் நாளுக்குநாள் ஏழைகளாகிக் கொண்டு வந்தார்கள். அவர்களின் உடல் உரமும், உழைக்கும் திறமும் குறைந்து கொண்டே வந்தன. இவ்வாறு அரசியாரின் ஆட்சியில் இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமை படுமோசமடைந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவில் உள்நாட்டுத் தொழில்கள் மட்டுமின்றி, உள்நாட்டு வாணிகமும் வீழ்ச்சியடைந்தது. நமது ஆய்வுக்குரிய காலத்தில், அயல்நாட்டு வாணிகம் மிக விரைவாகப் பெருகியது. போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியவற்றில் ஏற் பட்ட பெரும் முன்னேற்றத்தின் காரணமாக, உள்நாட்டு வாணிகமும் துரிதமாக நடைபெறலாயிற்று. போக்குவரத்து வசதிகளும், செய்தித் தொடர்பு வசதிகளும் பெரிதும் முன்னேற்றமடைந்ததன் பலனாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் வாணிகத்தில் உண்டான புரட்சிகர மான மாறுதல்களை அம்மாவட்டப் பொதுவிவரத் தொகுதியில் அதைத் தயாரித்த நிக்கல்சன் என்பவர் விரிவாகக் கூறியுள்ளார்.

"இம்மாவட்டத்தில் 1800ஆம் ஆண்டில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாகச் சாலைகள் எதுவுமே இல்லை; ஒருசில வண்டித் தடங்கள்மட்டுமே இருந்தன; இம்மாட்டத்தில் ஒரு வண்டிகூட இல்லை. மாடுகளின் முதுகிலும், மட்டக் குதிரைகளிலும் சரக்கு களைப் பொதிகளாக ஏற்றிப் பொருள்களைக் கொண்டு சென் றார்கள்; காவிரிஆற்றில் இருந்த கூடைபோன்ற சிறுசிறு ஓடங்கள் சரக்குகளை ஏற்றிச்செல்ல ஓரளவு பயன்பட்டன. இதன் காரண மாக, இறக்குமதியான பொருள்கள் யாவும் அகவிலையில் விற்கப் பட்டன. இங்கிருந்து மிகமிகக் குறைந்த அளவிலேயே பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. நெய்,நறு மணப் பொருள்கள்போன்ற விலையுயர்ந்த பொருள்கள்மட்டுமே ஏற்று மதியாயின. உணவுதானியங்களை இடம்விட்டு இடம் கொண்டு செல்ல இயலாமலிருந்தது. இதனால், அந்தந்த ஊர்களில் நிலவும் பற்றுக்குறை அல்லது செழுமையைப் பொறுத்து உணவு தானியங்களின் விலைகள் அமைந்தன. ஆகவே, குடியான வர்கள், விளைச்சல் குறைந்திருக்கும் காலங்களில் உணவுப் பற்றுக்குறையால் அவதியுற்றார்கள்; விளைச்சல் அதிகமாக இருந் தாலோ தானியங்களைத் தக்க முறையில் பாதுகாப்பாகச் சேமிக்க வசதியில்லாமல் அவற்றை இழந்தார்கள். இதனால், குறைவாக மகசூல் ஏற்பட்ட ஆண்டுகளில் உண்டாகும் பற்றுக்குறையை, அதிகமாக விளையும் ஆண்டுகளில் உபரித் தானியங்களைக் கொண்டு ஈடு செய்யவோ அல்லது அதிக விலையில் விற்று இலாபம் பெறவோ குடியானவர்களால் இயலவில்லை. அதிக விளைச்சல் ஏற்படும் ஆண்டுகளில், குறிப்பாக அடுத்தடுத்து பல ஆண்டுகள் மகசூல் மிகுதியாக இருக்கும் ஆண்டுகளில், சந்தை களில் தானியங்கள் வந்து வந்து குவிந்த வண்ணமிருக்கும்.

இதனால் விலைகள் மிகவும் குறைந்துவிடும். அரசாங்கத்திற்கு வரிகொடுக்கவும், மற்றத் தேவைகளுக்காகவும் பணம் தேவைப் படும் குடியானவர்கள், கிடைத்த விலைக்குத் தானியங்களை விற்றுவிட நேர்ந்தது. இவ்வாறு தானியங்களை அதிகமாக விளைவிக்கும்பொழுதும் குடியானவர்கள் பேரிழப்புக்குள்ளா னார்கள். இந்த நிலை பல்லாண்டு காலமாக நீடித்து வந்தது. ஆனால், இப்பொழுது (1887) இம்மாவட்டத்தில் சுமார் 1500 மைல் நீளமுள்ள நல்ல நிலையிலுள்ள கப்பிச்சாலைகள் உள்ளன. இவை தவிர, ஏராளமான குறுக்குச் சாலைகளும், கிராம ஊடுவழிகளும் இருக்கின்றன. 147 மைல் நீளத்திற்கு இருப்புப் பாதையும் உள்ளது. இந்த நவீன முன்னேற்றத்தின் காரணமாக, வாரச் சந்தைகள், நகரங்கள்போன்ற பல்வேறு வாணிக மையங் களிடையே உள்நாட்டுப் போக்குவரத்து வசதிகள் பெருமள வில் பெருகியுள்ளன. இரயில்வேக்களின் மூலமாகவும் ஏராள மான அளவு ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் நடைபெறுகின்றது. இரயில் நிலையங்களுக்குச் சரக்குகளைக் கொண்டுபோகவும் அங்கிருந்து கொண்டுவரவும் ஆயிரக்கணக்கான வண்டிகள் இப்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.''[1]

## போக்குவரத்து வசதிகள்

ஆய்வுக்குரிய காலத்தில் பல சாலைகள் போடப்பட்டன; படிப் படியாக இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன; அஞ்சல்-தந்தி போன்ற செய்தித் தொடர்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் காரணமாக, வாணிகத்தின் அளவு பெருகியது. ஆனால், இந்நாட்டில் உண்மையில் தொழில் முன்னேற்றம் ஏற்படாமையால், இவ்வாணிக வளர்ச்சியினால் பயன்பெற்றவர்கள் மேலைநாட்டுத் தொழிலதிபர்களேயாவர். இந்தியாவிலிருந்து மேலைநாடுகளுக்கு மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும், மேலைநாடுகளில் தயாரானப் பொருள்களை இந்நாட்டில் இறக்குமதி செய்து குவிப் பதற்கும் இந்த வசதிகள் அவர்களுக்கு உதவியாக இருந்தன.

இந்தச் சமயத்தில்தான் சூயஸ் கால்வாய் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. இக்கால்வாயில் போக்குவரத்துத் தொடங்கியதும், இந்தியாவின் ஏற்றுமதி வாணிகம் ஏராளமாகப் பெருகியது. 1855 முதல் 1860 வரையிலான ஆண்டுகளில், இந்திய ஏற்றுமதி வாணிகத் தின் அளவு சராசரி ஆண்டுக்கு ரூ. 52 இலட்சம் என்ற அளவில் இருந்தது. 1869ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்ட பிறகு, ஐந்தாண்டுகளில் ஏற்றுமதி இறக்குமதி பொருள்களின் ஆண்டுச் சராசரி ரூ. 90 கோடி என்ற அளவை எட்டியது. 1900ஆம் ஆண்டில் இந்தச் சராசரி அளவு ரூ. 200 கோடியைத் தாண்டி விட்டது. எனினும் இதனால், பொதுமக்கள் கருத்து நிறைவடைய வில்லை. ஏனென்றால், இந்நாட்டு மண்ணின் மைந்தர்களை இந்

1. Vide — *Manual of the Coimbatore District* — Vol. III, p. 131.

நாட்டுத் தொழில்களிலிருந்து விரட்டியடித்த அயல்நாட்டவர்களின் ஏகபோகமாகவே ஏற்றுமதி இறக்குதி வாணிகம் நடைபெற்று வந்தது. மேலும், இந்திய மக்கள் மேன்மேலும் சுரண்டி வறுமையில் ஆழ்த்துவதற்காகவே இந்த நவீன வசதிகளை ஆங்கிலேயர்கள் பயன் படுத்தி வந்தார்கள். தமிழகத்தின் மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் மூலப்பொருள்களை வாங்கி, அவற்றைத் தங்கள் நாடுகளுக்கு ஏற்று மதி செய்து, அங்கு அவற்றை வினைமுற்றிய பொருள்களாகத் தயாரித்து, மீண்டும் இந்நாட்டில் இறக்குமதி செய்வதற்கு அவர் களுக்கு இப்போக்குவரத்து வசதிகள் உதவியாக இருந்தன.

உதாரணமாக, இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகளில், தயாரிப்புப் பொருள்களின் விகிதம் 1879இல் 8 சதவிகிதத்திலிருந்து 1892இல் 16 சதவிகிதமாகவும், 1907-08இல் 22 சதவிகிதமாகவும் உயர்ந்தது. அதேசமயம், மொத்த இறக்குமதிகளில் தயாரிப்புப் பொருள்களின் விகிதம் 1879இல் 65 சதவிகிதத்திலிருந்து 1892இல் 57 சதவிகிதமாகக் குறைந்து, 1907இல் 53 சதவிகிதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு எந்திரங்களினால் தயாரித்த பொருள்களை இறக்குமதி செய்தமையால் உள்நாட்டுத் தொழில்கள் அழிந்துபோனதுடன், வாணிகம் முழு வதும் ஐரோப்பியர்களின் கைக்குப் போய்விட்டது. மிகவும் மோச மாகப் பாதிக்கப்பட்ட இந்திய உள்நாட்டுத்தொழில்களில் கப்பல் தொழிலும் ஒன்றாகும். தமிழக தேசபக்தர் வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கியதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

### கப்பல் தொழில்

இருபதாம் நூற்றாண்டு வரையிலும் இந்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஆங்கில அரசினர் சிறிதும் அக்கறை காட்டவில்லை. சென்னை மாகாணத்தில் தொழில்நுட்பக் கல்வியை முன்னேற்றவும், தொழில் வளர்ச்சித் துறை (Department of Industries) ஒன்றை நிறுவ வும் ஆல்பிரடு சாட்டர்ட்டன் (Alfred Chatterton) 1906ஆம் ஆண்டில் திட்டமிட்டார். கைத்தறி நெசவு, தோல் பதனிடுதல், அலுமினியம் தொழில் போன்ற தொழில்களுக்கு ஊக்கமளிக்கப் பட்டன. இத்துறைகள் முன்னோடியான அரசுத் தொழில்கள் சில வும் நிறுவப்பெற்றன. இதனைக் கண்டு ஐரோப்பியத் தொழிலதிபர் களும், வாணிகர்களும் அச்சம் கொண்டனர். தொழில்வளர்ச்சித் துறையை மூடிவிடும்படி அப்போது இந்தியா அமைச்சராக இருந்த மார்லிப் பிரபு உத்தரவிட்டார். தொழிகள் பற்றிய சில தகவல்களைச் சேகரிப்பதிலும் சிறிதளவு தொழில்நுட்பக் கல்வி போதிப்பதிலும் மட்டுமே அரசாங்கம் அக்கறை காட்டி வந்தது. இந்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஆங்கிலேயர்கள் எத்துணை அலட்சியப் போக்குடன் நடந்துகொண்டார்கள் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சான்று.[1]

---

1. T. K. Venkataraman — *History of India* — Vol. II, p. 303.

குடியானவர்களின் நிலையை உயர்த்துவதற்குக் கூட்டுறவு முறையை வளர்ப்பதற்காக பிரடரிக் நிக்கல்சன் தெரிவித்த ஆலோசனைகள் எவ்வாறு செயலாக்கப்படாமல் ஒதுக்கிவைக்கப்பட்டன என்பதை ஏற்கெனவே கண்டோம். அதேபோன்றே, உள்நாட்டுத் தொழில்களை மேம்படுத்துவதற்கு ஆல்பிரடு சாட்டர்ட்டன் மேற்கொண்ட முயற்சிகளும் ஊக்குவிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் இந்தத் தேசவிரோதப் பொருளாதாரக் கொள்கையைப் பொது மக்கள் கடுமையாக வெறுத்தார்கள். இந்த வெறுப்புணர்ச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம்தோன்றியது.

## வ. உ. சி. யின் இயக்கம்

தென்னிந்தியாவில் சுதேசி இயக்கத்தின் தீவிர ஆதரவாளராக விளங்கியவர் 'கப்பலோட்டிய தமிழன்' எனப் புகழ்பெற்ற வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆவார். இவர் தம்முடைய தேசபக்த நண்பர்களின் உறுதுணையோடு சுதந்திரக் குறிக்கோளையும், சுதேசி இயக்கத்தையும் தென்னகமெங்கும் தீவிரமாகப் பரப்பினர். இக் கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பொதுக்கூட்டங்களில் பேசுவதுடன் இவர் நின்றுவிடவில்லை. இக்குறிக்கோள்களை அடைவதற்கு நடைமுறையில் தீவிர முயற்சிகளிலும் இவர் இறங்கினர். தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் நிறுவனம் ஒன்றை இவர் தொடங்கினர்.

1906ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் தேதியன்று இந்தக் கப்பல் நிறுவனம் பதிவுசெய்யப்பட்டது. ஒவ்வொன்றும் ரூ. 25 மதிப்புள்ள 40,000 பங்குகள் மூலம் திரண்ட ரூ. 10 இலட்சம், இந்த நிறுவனத்தின் ஆரம்ப மூலதனமாக அமைந்தது. வ. உ. சி. இந்நிறுவனத்தின் செயலாளரானர். இந்நிறுவனத்தைப் பதிவு செய்தவுடன் இரண்டு கப்பல்களை வாங்குவதற்காக வ. உ. சி. பம்பாய் சென்ருர். அங்கு 'காலியா' (Gallia) என்ற கப்பலை வாங்கினர். அக்கப்பல் 1907 ஏப்ரல் 16இல் தூத்துக்குடி வந்து சேர்ந்தது. 'லாவோ' (Lawoe) என்ற இரண்டாவது கப்பல் 1907 ஜூன் 11 அன்று தூத்துக்குடிக்கு வந்தது. அதே ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்நிறுவனத்தின் பதிலாண்மை அலுவலகம் (Agency) ஒன்றைச் சென்னையில் திறந்தார்.

தூத்துக்குடியில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய வ. உ. சி. அயல்நாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ச்சி பொங்க விளக்கினர்.

> "நம் நாட்டுப் பருத்தியை அந்நியர்கள் ஏன் கொள்முதல் செய்யவேண்டும்? எதற்காக அவர்கள் அதிக இலாபத்திற்கு அதை ஏற்றுமதி செய்யவேண்டும்? பருத்தி நம்முடையது; அதைப் பயிரிடுபவர்கள் நம்மவர்கள். எனவே, நம்முடைய பருத்தியை ஏன் நாமே கொள்முதல் செய்து, நாமே ஏற்றுமதி செய்யக்கூடாது? நம்முடைய உழைப்பின் மூலம் அந்நியர்கள் இலாபம் சம்பாதிக்க நாம் ஏன் அனுமதிக்கவேண்டும்? சுதேசிக் கப்பல் நிறுவனத்தை ஏற்கெனவே தொடங்கிவிட்டோம். ஆனல்,

பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படத்தொடங்கிவிட்டது. இனிஆங்கிலேயர் நிறுவனம் நாளடைவில் நலிந்து மெலிந்து மறைந்துவிடும். அடுத்து பருத்தி வாணிகம். அதை நாம் கைப்பற்றுவது மிக எளிது. இத்தொழிலை நடத்துவதற்குத் தேவையான மூலதனத்தில் கால்பகுதியையும், உழைப்பாளர்களையும் வழங்கத் தூத்துக்குடி மக்கள் முன்வருவார்களானால், மீதமுள்ள முக்கால் பகுதி மூலதனத்தை முதலீடு செய்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக மதுரையிலிருந்தும் சேலத்திலிருந்தும் பலர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். இந்நகரப் பெருமக்களாகிய நீங்கள் எனக்கு உதவிபுரிவீர்களானால் நான் இங்கு ஒரு பெரிய பஞ்சாலையை நிறுவி, நூலையும் எல்லா வகைத் துணிகளையும் தயாரிக்கத் தொடங்கிவிடுவேன். சுதேசிக்கப்பல் நிறுவனம் உறுதியான அடிப்படையில் நிறுவப்பட்டிருப்பதைப்போல், ஒரு பஞ்சாலையையும் வெற்றிகரமாக உருவாக்கிவிடலாம்''

என்று வ. உ. சி. ஆழ்ந்த நம்பிக்கையுடன் கூறினார்.[1]

இவ்வகையில் பொதுமக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் தலையாய சாதனங்களாகப் பத்திரிகைகள் விளங்கின. வ. உ. சி. யின் சுதேசிக் கப்பல் நிறுவனம் பற்றி **''இந்து''** நாளிதழ் தனது **2—4—1908**ஆம் தேதி இதழில் கருத்துத் தெரிவிக்கையில், ''பொருள் வசதிமிக்கதும் அரசின் ஆதரவைப் பெற்றதுமான வலிமைவாய்ந்த ஐரோப்பிய நிறுவனத்திற்குப் போட்டியாகச் சுதேசிக்கப்பல் நிறுவனம் தொடங்கப்பெற்றுள்ளது. இந்நிறுவனத்திற்குப் பொதுமக்களின் ஆதரவு பெருமளவு கிடைத்துள்ளது இம்மாகாணத்தின் தமிழ் மாவட்டங்கள் முழுவதிலுமுள்ள ஏராளமான பணக்காரர்கள் இதற்கு ஆதரவு நல்கி வருகிறார்கள். வாணிகர்கள், வழக்கறிஞர்கள், நிலக்கிழார்கள் ஆகியோரும் மற்றும் ஏராளமான நடுத்தர வகுப்பினரும் இந்நிறுவனத்தில் பங்குகள் வாங்கியுள்ளனர். இதை ஒரு தேசீய நிறுவனமாக எல்லோரும் கருதுகிறார்கள். இந்நிறுவனம் வெற்றிபெறுமானால், புதிய சுதேசி இயக்கத்தின் வீரியமும் ஆற்றலும் வெளிப்படும்'' என்று குறிப்பிட்டுள்ளது.[2]

### *சங்கங்கள்*

மேற்கண்ட பிரச்சினைகள் குறித்துப் பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் சில சங்கங்களும் அமைக்கப்பட்டன. சென்னையில் 1906ஆம் ஆண்டில் 'தேசீய நிதி மற்றும்தொழில் சங்கம் (National Fund and Industrial Association) என்ற அமைப்புத் தோன்றியது. ''உள்நாட்டுத் தொழில்களைச் சீர்திருத்தி வளர்க்கப் பாடுபடுதல், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பக் கல்வியை வளர்த்தல், தொழில் பற்றிய அறிவினையும் தகவல்களையும் நேர்விளக்கம்,

1. Vide G. O. No. 1542, Judicial (Conf.) Dept., dated 3rd Oct. 1911-pp. 19-20.
2. News paper Report (Confidential), 1908-p. 191.

சொற்பொழிவுகள், துண்டு வெளியீடுகள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களிடையே பரப்புதல், இந்தியாவில் அல்லது வெளிநாடு களில் தொழில்கள் பற்றிக் கல்வி பெறுவதற்கு உதவிச் சம்பளங்கள் வழங்குதல், அவ்வாறு கல்விப்பெற்றுத் திரும்பும் மாணவர்களுக்குத் தொழில்கள் தொடங்க உதவிபுரிதல், இந்தியாவில் தொழில்கள், வாணிகம்பற்றிய தகவல்களைச் சேகரித்து வழங்குவதற்கென நிலையம் ஒன்றை நிறுவுதல் ஆகியவை இந்தச் சங்கத்தின் நோக்கங்களாகும்.''[1]

சென்னை ஜன சங்கம் என்ற ஓர் அமைப்பு *1908* ஜனவரி *11* இல் நிறுவப்பட்டது. தேசீய நிதி மற்றும் தொழில் சங்கத்தைப் போன்றே இந்தச் சங்கத்தின் பெரும்பாலான நோக்கங்களும் செயல்திட்டங் களும் அமைந்திருந்தன. தவிரவும், சுதேசி இயக்கம், அந்நியப் பொருள்கள் புறக்கணிப்பு ஆகியவை குறித்து சொற்பொழிவுகள் நடத்தி நகரில் தேசீய உணர்ச்சியை வளர்த்தல், உடல் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவுதல், நூலகம் ஒன்றைநிறுவுதல், சுதேசி இயக்கத் தைப்பிரசாரம் செய்வதற்கு இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியனவும் இச்சங்கத்தின் தனிக் குறிக்கோள்களாக அமைந்தன.[2] சென்னை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இத்தகைய சங் கங்கள் எழுந்தன.

## *தேசீய எழுச்சி*

சுதேசிக் கப்பல் நிறுவனத்தை வ. உ. சி. தொடங்கியதைக் கண்டு பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்தார் பெரிதும் கிலியடைந்தனர். சுதேசி நிறுவனத்தை ஒழித்துக்கட்டுவதற்கு எல்லா வகைத் தந்திரங் களையும் கையாளலாயினர். தூத்துக்குடியில் நடுவராக இருந்த விஞ்ச் துரை என்ற ஆங்கிலேயர் பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு ஆதர வாக இருந்தார். ஆங்கிலேயரின் இந்தச் சூழ்ச்சிபற்றி **''இந்து''** நாளிதழின் 2—4—*1908*ஆம் தேதி இதழ் குறிப்பிடுகையில்,

> "சட்டமின்மையையும் ஒழுங்கின்மையையும் அடக்கியாக வேண்டும். ஆனல், சென்னையில் தன்கையே தனக்குதவி என்ற புதிய உணர்வு பெருகி வருவதைப் பெரும் குற்றமாகக் கருதுவது அரசியல் அறிவுடைமையாகாது. சுதேசி இயக்க உணர்ச்சி என்பது ஏதோ இன்று தோன்றி நாளை மறைந்துவிடும் ஒன்றல்ல. தற்காலிகத் தோல்விகளைத் தாங்கிக்கொண்டு மேன் மேலும் வீறுபெற்று எழக்கூடிய ஆற்றலும் வலிமையும் சுதேசி இயக்க உணர்வை ஒழித்துவிடலாம் என யாராவது கருதினல், அது வெறும் மனமயக்கமே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை''

என்று கூறியிருக்கிறது.[3]

---

1. *Madras Year Book*, 1924-p. 344.
2. Vide C. I. D. Report (Secret), Madras, dated 19th of June, 1909-p. 4
1. News paper Report (Confidential), 1908-p. 193.

பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் "இந்து" இதழ் பின்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது:

"இத்தகைய அபாய நிலையிலிருந்து சுதேசி இயக்கத்தைக் காப்பாற்ற வேண்டியதின் அவசியத்தைப் பொதுமக்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். இது மிகவும் நெருக்கடியான தொரு நேரம். மக்களுடைய மனோதிடத்தைச் சோதித்துப் பார்த்து, அவர்களுக்கு உதவியளிக்கவேண்டியது அவசியந் தானா என்பதை அறிந்துகொள்வதற்காகவே இத்தகைய சோதனையை ஆண்டவன் உண்டாக்கியிருப்பதுபோல் தோன்று கிறது. அதிகார வர்க்கத்தினரின் தலையீடு இல்லையெனில், பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்தைச் சுதேசிக் கப்பல் நிறுவனம் நசுக்கிவிடும். மக்கள் தலையிடாவிடில், சுதேசிக் கப்பல் நிறு வனம் தானே நசுங்கிவிடக்கூடிய நிலையில் இப்பொழுது இருக் கிறது. பிரிட்டிஷ் நிறுவனத்தை ஒதுக்கிவைப்பதன் மூலம் சுதேசி நிறுவனத்தைப் பொதுமக்கள் காப்பாற்றிவிடலாம். அந்நியக் கப்பலில் தங்கள் சரக்குகளை அனுப்ப வாணிகர்கள் மறுத்துவிடு வார்களானால், அந்நியக்கப்பலில் பயணம் செய்யப்பொது மக்கள் மறுத்துவிடுவார்களானால், அதிகார வர்க்கத்தினர் என்ன தான் முயன்றாலும், நீதி வழங்கும் நடுவர்கள் எத்தகைய அநியா யங்களில் ஈடுபட்டாலும், போலீசார் என்னதான் அடக்கு முறை யில் இறங்கினாலும், பிரிட்டிஷ் நிறுவனத்தை மரணத்திலிருந்து காப்பாற்ற இயலாது. தமிழகத் தேசபக்தர்கள் இதைச் சாதித்து விடுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். திருநெல்வேலி மாவட்ட மக்கள் அனைவரையும் சிறையில் அடைத்துவிடும் அளவுக்கு பிரிட்டிஷாரின் சிறைச்சாலைகள் அவ்வளவு பெரிதாக இல்லை. ஒவ்வொரு தமிழ் மகனும் சிதம்பரம்பிள்ளை காட்டும் வழியைப் பின்பற்றி நடக்கட்டும்; மற்றதை ஆண்டவன் தீர்மானித்துக் கொள்வார்."[1]

பொதுமக்களின் பேராதரவு வ. உ. சி. க்கு இருந்தபோதிலும், அவருடைய முயற்சிகளைச் சீர்குலைப்பதற்குரிய வலிமை அரசி னருக்கு இருந்தது. அரசாங்கத்தின் எதிர்நடவடிக்கைகளினாலும் வேறுபல காரணங்களினாலும், வ. உ. சி. யின் சுதேசிக் கப்பல் இயக் கமும் தோல்வி கண்டது. சுதேசி நிறுவனத்தைத் தொடங்கியவர்கள் அனைவரும் இலக்கிய கல்வி கற்றவர்களேயாவர். அவர்கள் தொழில் கல்வி கற்றிருக்கவில்லை. தொழில் கல்வி கற்பதற்கான வசதியும் நாட்டில் இல்லை. அதனால் நாட்டில் தொழில் வளர்ச்சியும் ஏற்படவில்லை. இதனால் தொழில் அனுபவம் பெறவும் அவர் களுக்கு வழியில்லை. இவ்வாறு வாணிகத் திறமையும், அனுபவமும் அவர்களுக்கு இல்லாதிருந்தமையால், சுதேசிக் கப்பல் நிறுவனம் தோல்வியுற்றது. இத்தோல்விக்கு மற்றொரு முக்கியக் காரணம் போதிய அளவு மூலதனம் இல்லாதிருந்தமையாகும். தொழில்களில்

1. Newspaper Report (Confidential), 1908-p. 195.

முதலீடு செய்வதற்கு ஆரம்பத்தில் இந்திய முதலாளிகள் மிகவும் தயங்கினார்கள். பின்னர்தான் அவர்கள் தங்களின் தயக்கத்தைச் சிறிது சிறிதாகக் கைவிட்டு, தொழில்களில் முதலீடு செய்வதற்கு முன்வந்தார்கள்.

இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் அரசினர் இயல்பாகவே அக்கறையின்றி இருந்து வந்தனர். அத்துடன், இந்தியாவில் தொழில்வளம் பெருக விரும்பாத ஐரோப்பிய வாணிகர்களும் தொழிலதிபர்களும், தொழில் வளர்ச்சி முயற்சிகளில் அரசினர் சிறிதும் ஈடுபடாதபடி மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டனர். இந்தியாவில் தொழில்கள் வளராமல் போனதற்கு இந்தப் போக்குத்தான் மிகமுக்கியமான காரணமாகும்.

இத்தகைய பொருளியல் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களிடையே நிலவிவந்த மனக்கசப்பு, இந்திய மக்களின் தேசீய உணர்ச்சியைத் தூண்டி, அவர்களின் உள்ளத்தில் அரசியல் விடுதலை வேட்கைக் கனலை மூட்டிவிட்டது.

## அத்தியாயம் - 5

# பொதுமக்கள் கருத்தும் சமுதாயமும்

ஆங்கில ஆட்சியாளர்களுக்கு எதிரான முறையில்மட்டுமே இந்தியாவில் பொதுமக்கள் கருத்து இயங்கி வந்தது என்பது பொருந் தாக் கருத்தாகும். மேலைநாட்டார் தொடர்பினாலும், மேனாட்டு நாகரிகத்தின் தரக்குறைவினாலும் இந்நாட்டின் சமுதாயப் பிரச் சினைகள் குறித்து பலவித விவாதங்கள் எழுந்தன. சமூகச்சீர்திருத்தங் களுக்கு ஆதரவாகப் பெரும்பான்மைக் கருத்து வலுவாக உருவா கியதுபோலவே, தற்போதையச் சமுதாய அமைப்பில் யாரும் தலை யிட்டு எவ்வித மாறுதலையும் செய்வதைச் சிறிதும் விரும்பாத தீவிர வைதீக கருத்தும் உருவாகியது. சமுதாயம் தொடர்பான பல்வேறு கருத்துப் போக்குகளையும், அவற்றுக்கு முரணான கருத்தோட்டங் களையும் அறிந்துகொண்டாலன்றி பொதுமக்கள் கருத்து பற்றிய எந்த ஓர் ஆராய்ச்சியும் முழுமைபெறாது.

உலகிலேயே மிகவும் சிக்கலான சமூக அமைப்பைக் கொண்ட நாடு இந்தியாதான். இந்தியச் சமூகத்தில் வியப்பூட்டும் அம்சங் களும் உண்டு; திகைப்பூட்டும் பிரச்சினைகளும் உண்டு. காலந் தோறும் அடுத்தடுத்து வெவ்வேறு அந்நிய ஆதிக்கவாதிகளின்கீழ் இந்தியா அரசியல் அடிமையாக இருக்க நேர்ந்தமையே இந்திய சமுதாயத்தில் காணப்படும் இத்தகையமுரண்பாடுகளுக்கும் சிக்கல் களுக்கும் காரணமாகும். அரசியல், பொருளியல் துறைகளில் பொதுமக்களின் கருத்து வெளிப்பட்டு வந்ததுபோன்றே, சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் பொதுமக்கள் கருத்து அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டு வந்தது.

கிழக்கிந்திய வாணிகக்குழுவின் ஆட்சிக்காலத்தில், இந்தியச் சமுதாய விவகாரங்களில் தலையிட அரசினர் தயக்கம் காட்டி வந்த னர். வாணிகம் புரிவதற்காக வந்து, ஆட்சியாளர்களாக மாறிவிட்ட அந்நிய வாணிகர்களைக் கொண்ட ஒரு நிறுவனம், இந்தியச் சமூக வாழ்க்கை பற்றிய சிக்கல்களைக் கையாளும் பொழுது மிகவும் எச்சரிக்கையோடும் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. "ஒழுங்கை நிலைநாட்டி, நிருவாகத்தை நிலையாக அமைக்க வேண்டியிருந்தால் மட்டுமே, ஒரு தேசீய சமூகச் சடங்கு அல்லது மரபை ஒழிப்பதற்கு அரசினர் தலையிட்டனர்."[1] வாணிகக் குழுவின் ஆட்சி ஏற்பட்ட

1. M. Ruthnaswamy: *op. cit.* — pp. 608-609.

ஆரம்பக் காலத்தில், இந்திய மக்களின் சமய விவகாரங்களில் வாணிகக் குழு தலையிட்டால், அக்குழுவினரின் ஆட்சிக்கே முடிவு காலம் ஏற்படக்கூடிய அபாயம் நிலவி வந்தது. எனவே, சமய விவகாரங்களில் தலையிடுவது குறித்து வாணிக்க் குழு மிகவும் விழிப் போடு நடந்துகொண்டது; இயன்ற வரையில் சமய விவகாரங்களில் தலையிடுவதை வாணிகக் குழுவினர் தவிர்த்து வந்தனர். இந்துக் களின் சமூகப் பழக்கவழக்கங்களில் ஓர் அந்நிய நிறுவனம் தலையிடு மானால், அதனால் மக்களிடையே கடுமையான மனக்கசப்பு உண் டாகும் என்ற அச்ச உணர்வு வாணிகக் குழுவிடம் எப்பொழுதும் இருந்துகொண்டிருந்தது.

இரயில்வேக்கள், சாதிமுறையின் புனிதத்தைச் சீர்குலைப்பதாக இந்திய மக்களில் ஒருசாரார் கருதினார்கள். 1857ஆம் ஆண்டு படை யினர் பெரும் புரட்சி மூண்டதற்கு, இதுபோன்ற சமுதாயக் காரணங் களும் முக்கியத் தூண்டுதலாக விளங்கின. அந்தப் புரட்சி, இந்தியா வில் வாணிகக் குழுவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற் குக் காரணமாக இருந்தது என்பதையும் இங்குக் குறிப்பிடவேண்டும்.

ஆங்கில ஆட்சியாளர்கள் பொதுவாகச் சமூக விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருந்தபோதிலும், சில கொடிய சமூகப் பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்கு சில நிருவாகிகள் துணிவோடு நட வடிக்கைகள் எடுத்தார்கள். மேலைநாட்டுக் கல்வியும், மேலைநாட்டுப் பண்பாடும் ஏற்படுத்திய மாறுதல்கள், அவர்களுடைய இந்த முயற்சிகளுக்கு ஓரளவு உதவியாக இருந்தன. மேலைநாட்டுக் கல்வி யும் நாகரீகமும்தான் இந்தியாவில் முற்போக்குக் கருத்துகள் பரவு வதற்கும், இந்திய மக்களை விழிப்படையச் செய்வதற்கும் உரிய சாதனங்களாக விளங்கின. இந்நாட்டு மக்களிடையே இவ்வாறு ஏற்பட்ட புதிய விழிப்புணர்ச்சியினால், கடந்த காலத்தைத் திறனாய் வுக் கண்கொண்டு நோக்கவும், எதிர்காலம் குறித்துப் புதிய வேட்கைகளை உருவாக்கவும் தேவையான பரந்த கண்ணோட்டம் உண்டாகியது. "கண்மூடித்தனமான கொள்கைகளின் இடத்தைப் பகுத்தறிவு பற்றிக்கொண்டது; சமய நம்பிக்கையைத் திறனாய்வுப் பண்பு பிடித்துக்கொண்டது; விஞ்ஞானத்திற்கு வழிவிட்டு மூட நம்பிக்கை ஒதுங்கிக்கொண்டது; தேக்கநிலை பின்னணிக்குச் சென்றது; முன்னேற்றம் முன்னணிக்கு வந்தது; காலங்காலமாக நிலவிவந்த மடமை, மெத்தனம், சோம்பல் அத்தனையையும் சீர்திருத்தவேட்கை என்னும் புதுப்புனல் அடித்துச் சென்று விட்டது."[1]

சமூகச் சீர்கேடுகளை ஒழித்துக் கட்டுவதற்கு ஆதரவாகப் பொது மக்கள் கருத்தை ஒன்றுதிரட்டும் நோக்கத்திற் கொண்டு, சமுதாயத் தின் அறிவார்ந்த பெருமக்கள் சங்கங்களை அமைத்தார்கள். இவர்

1. R. C. Majumdar, Raychaudhuri & K. Datta — *An Advanced History of India* — p. 812

களிடையே நிலவி வந்த முயற்சிகள், இந்நாட்டில் நெடுங்காலமாக நிலவிவந்த 'சதி' என்னும் உடன்கட்டை ஏறுதல் போன்ற கொடிய பழக்கங்களை வாணிகக் குழுவினர் ஒழிப்பதற்கு உதவியாக அமைந்தன.

## *பிரமசமாஜம்*

சமுதாயக் கேடுகளை அகற்றுவதற்கான இந்தியாவில் தோன்றிய நிறுவனங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கியது பிரமசமாஜம் ஆகும். இதனை 1828ஆம் ஆண்டில் ராஜாராம் மோகன்ராய் நிறுவினார். இவர் "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" எனப் புகழ் பெற்றவர்; இந்தியாவின் புகழை அயல்நாடுகளில் நிலைநிறுத்தியவர்களுள் ஒருவர்; இந்தியச் சமூகச் சீர்திருத்தவாதிகளுள் முதன்மையானவர்; பெண்களுக்குச் சம உரிமை கிடைக்கப் பாடுபட்டவர். சமயம் மற்றும் சமூக முன்னேற்றத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். பெண்கள் உடன்கட்டை ஏறுவதை ஒழிக்கவும், பெண்கள் விடுதலைக்காகவும், விதவை மறுமணத்திற்காகவும், சாதி முறையை ஒழிக்கவும் இவர் அயராது பாடுபட்டார்.

ராம்மோகன் ராய் நன்கு கற்றறிந்த பேரறிஞர். பல சமயநூல்களையும், இவர் ஆராய்ந்து, அவற்றிலுள்ள நல்ல கருத்துகளையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு புதிய சமயத்தை அமைக்க விரும்பினார். "ஓருருவம் ஒரு நாமம்" இல்லாத ஆண்டவனை ஆயிரம் திருநாமங்களாலும் வடிவங்களாலும் வணங்குவதை விரும்பாமல், அருவமான நிலையில் பரம்பொருளை வணங்குவதற்கென்று 'பிரமசமாஜம்' என்னும் சமய வழிபாட்டு இயக்கத்தை இவர் 1828ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்; உலகில் தோன்றிய மானிடர் யாவரும் ஒரு தாய்மக்கள்" என்ற உயர்ந்த குறிக்கோளை பிரமசமாஜத்தின் உயிர்க்கொள்கையாக அமைத்தார்.

பிரமசமாஜ இயக்கத்தின் விளைவாகப் பம்பாயில் பிரார்த்தனை ச்மாஜம் என்னும் அமைப்புத் தோன்றியது. இதனை மகாதேவ கோவிந்த ரானடே (1842-1901), கோபால கிருஷ்ண கோக்கலே (1866-1915), ஆர். ஜி. பண்டார்க்கர் (1837-1925) ஆகியோர் தோற்றுவித்தனர். இந்த அமைப்பிலிருந்து தோன்றியதே 'இந்திய ஊழியர் சங்கம்' (Servants of India Society) ஆகும். இதனைக் கல்வி வளர்ச்சிக்காகவும் மற்றும் சமூக சேவைக்காகவும் கோக்கலே தொடங்கினர்.

## *ஆரிய சமாஜம்*

தயானந்த சரசுவதி (1824-1883) என்ற மகான் 1875ஆம் ஆண்டில் சான்றோர் கழகம் எனப் பொருள்படும் 'ஆரிய சமாஜம்' என்ற நிறுவனத்தை நிறுவினார். "வேதங்கள் இறைவனுடைய அருள்வாக்கு. வேதங்களுக்கு மாறுபட்டவை நம்பத் தக்கனவல்ல. சகல மக்களையும் ஒரே சமுதாயமாக இணைக்கவல்ல சாதனம் வேத உபதேசமே. வேத சம்மதமின்மையால் உருவ வழிபாடு தவறு.

கடவுள் ஒருவரே. அவர் குண, கரும சுபாவங்கட்கு ஏற்பப் பல பெயர்களால் அழைக்கப்படுகிருர். கடவுள், சீவன், இயற்கை ஆகிய மூன்றும் நித்தியமானவை. இவற்றின் கூட்டுறவால் ஆக்கல், அழித்தல், அளித்தல் நடைபெறுகின்றன. வேதவாழ்க்கையே விமோசனம் அளிப்பதால் மற்ற மதத்தினரைச் சுத்தி செய்து இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். மக்கள் அனைவரும் ஒரே இனமாக ஒன்று சேர்ந்து வாழவேண்டும்" என்பன ஆரிய சமாஜத்தின் முக்கிய சமயக்கொள்கைகளாகும்.[1]

ஆரியசமாஜம் மதவேற்றுமைகளை ஒப்புக்கொள்வதில்லை. இளம்பெண் மணத்தையும் பலதார மணத்தையும் இச்சமாஜம் கண்டிக்கிறது; இளங்கைம்பெண் மணத்தையும் ஏகதார மணத்தையும் ஆதரிக்கிறது; பழங்காலக் குருகுலக்கல்வி முறையைப் பரவும்படி செய்ய விரும்புகிறது. பல இடங்களில் அத்தகைய குருகுலங்களை நடத்தி வருகிறது.

## *இராமகிருஷ்ண இயக்கம்*

இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர், சுவாமி விவேகாநந்தர் (*1863-1902*). தம் குருநாதர் பெயரில் 'இராமகிருஷ்ண சங்கம்' (Ramakrishna Mission) என்ற நிறுவனத்தை 1897ஆம் ஆண்டில் நிறுவினர். "சுயமுத்திக்காகவும். உலக நலனுக்காகவும்" வாழ்தலே இச் சங்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும். "ஒன்றே மெய்ப்பொருள்; ஒன்றே மெய்ந்நெறி; ஒன்றே மெய்ப்பயன்" என்ற ஆழ்ந்தகன்ற சமத்துவ சமரச ஞானமே இதன் சமயத் தத்துவம். துறவின்றி முத்தியில்லையாதலின், அகவாழ்வில் பரம்பொருளைப் பற்றிய தியானமும், பற்றறுத்தலாகிய துறவும், புறவாழ்வில் மன்னுயிர்க்குத் தொண்டும், இராமகிருஷ்ண இயக்கத்தின் உயிர் நிலையான்வை. உண்மையில் எல்லாம் கடவுள் மயமாதலின், துயருறும் மக்களைச் சாதி, மதம், நிறம் முதலிய எவ்வித வேறுபாடுமின்றி இறைவன் வடிவங்களாகக் கருதி, அவர்களுக்குச் செய்யும் செயல்களையும் உபகாரச் செயல்களாக எண்ணுமல், கடவுள் வழிபாடாகக் கருதுவதே இச்சங்கத்தின் குறிக்கோளாகும். இச்சங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப சுவாமி விவேகாநந்தர், இந்து மதத்தின் பேருண்மைகளை, அமெரிக்காவில் சிக்காகோ நகரில் 1893ஆம் ஆண்டில் நடந்த சமயப் பெருமன்றத்தில் (Parliament of Religions) விதைத்து, மேலைநாடுகளில் ஞானப்புரட்சியை உண்டுபண்ணினர். அதன்பின், ஐரோப்பாவிலும், இந்தியாவில் பல மாநிலங்களிலும் இராமகிருஷ்ண சங்கத்தின் கிளை மடங்களை விவேகாநந்தர் நிறுவினர். வெள்ளம், பஞ்சம், நிலநடுக்கம், கொள்ளை நோய் முதலியவற்ருல் துயருறும் மக்களுக்குப் பணி செய்தும், மருத்துவமனைகள், அனாதை விடுதிகள், தொழிற்சாலைகள், குருகுலங்கள், கல்வி நிறுவனங்கள்

1. கலைக்களஞ்சியம் — தொகுதி 1, பக்கம் 420.

முதலியவற்றை அமைத்தும் இராமகிருஷ்ண சங்கம் மக்களுக்குக் கல்வி மற்றும் சமூகத் தொண்டாற்றி வருகின்றது.

## பிரமஞான சபை

இந்தியாவில் படித்தவர்களிடையே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவும் போக்கு காணப்பட்டது. இந்நாட்டில் புதிதாகத் தோன்றிய சமய இயக்கங்கள் யாவும் இந்தப் போக்கினைத் தடுத்து நிறுத்திய துடன், கீழ்நாடுகளிலும் மேனாடுகளிலும் படித்தவர்கள் எல்லாச் சமயங்களையும் மதித்து நடப்பதற்கும் உதவிபுரிந்தது. 'எம்மதமும் சம் மதம்' என்னும் மனப்போக்கு பிரமஞானசபை (Theosophical Society) உருவாவதற்கு வழிவகுத்தது. இந்தச் சமயச் சீர்திருத்த நிறுவனத்தை *1875*ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் பிளவாட்ஸ்க்கி (Madame Blavatsky) அம்மையாரும், கர்னல் எச். எஸ். ஆல்க்காட் (Col. Olcott) என்ற அறிஞரும் சேர்ந்து நிறுவினார்கள். எல்லாச் சமயங்களின் ஒருமைப்பாட்டை இந்த சபை வலியுறுத்துகிறது. சமயங்களின் உட்கருத்தை உணர்ந்து, அதன்படி ஒழுகவேண்டும் என்பது இச் சபையின் நோக்கம். இந்தச் சபையின் கொள்கை பௌத்த மதத்தை ஒருவாறு தழுவியிருக்கிறது.

பிளவாட்ஸ்க்கி அம்மையாரும், ஆல்க்காட்டும் *1879*ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து, சென்னையிலுள்ள அடையாறில் *1883*இல் பிரமஞான சபையின் தலைமை அலுவலகத்தை அமைத்துத் தம் கருத்துக்களைப் பரவச் செய்தார்கள். இந்தச் சபையை ஓங்கி வளரச் செய்தவர்களில் மிகச் சிறப்புற்றவர் அன்னிபெசன்ட் அம்மையார் ஆவார். மதிநுட்பமும், நாவன்மையும், நிருவாகத் திறமையும் பெற்றிருந்த இவர், *1889*ஆம் ஆண்டில் இச் சபையில் சேர்ந்த பின், *1893*இல் இந்தியாவிற்கு வந்து தம் வாழ்நாள் முழுவதும் இச்சபை யின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

## தேசீயச் சமூக மாநாடு

இந்திய தேசீயக் காங்கிரசு *1885*ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தைத் தொடர்ந்து, மக்களின் சமூக மேம்பாட்டுக்கென ஒரு நிறுவனம் தோன்றியது. இதன் பெயர் 'இந்திய தேசீய சமூக மாநாடு' (Indian National Social Conference) என்பதாகும். "நாட்டின் அரசியல் பிரச்சினைகளுக்காகப் பாடுபடுவதற்கு — இந்திய தேசீயக் காங்கிரசு இருப்பது போல், நாட்டுமக்களின் சமூக நிலையை மேம் படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக அனைத்திந்திய அடிப்படையில் ஒரு தனி நிறுவனம் தேவை என்ற கருத்து வளர்ந்து வலுப்பெற்று இந்திய தேசீயச் சமூக மாநாடு என்ற நிறுவனம் தோன்றுவதற்கு வழி செய்தது."[1]

---

1. C. Y. Chintamani (Ed.) — *Indian Social Reform* — Appendix —p. VI.

இந்திய தேசீயக் காங்கிரசை நிறுவுவதற்கு ஏ. ஓ. ஹியூம் முதலில் திட்டமிட்டபோது, இந்தியாவில் கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற இடங்களிலும் வேறு பல பகுதிகளிலும் அங்கீகரிக்கப் பெற்ற அரசியல் நிறுவனங்கள் சில இயங்கி வந்தன. எனவே, அரசியல் பிரச்சினைகளுக்காக மட்டுமே இந்திய தேசீயக் காங்கிரசு பாடுபடவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருக்கவில்லை.[1] சமுதாயப் பிரச்சினைகளுக்காகவும் காங்கிரசு பாடுபடவேண்டுமென அவர் விரும்பினார்.

இந்தியாவில் சமூகச் சீர்திருத்த இயக்கத்தின் தந்தை என ஆர். ரகுநாதராவும், அதன் செவிலித் தாயாக ரானடேவும் போற்றப் படுகிறார்கள்.[2] இந்திய தேசீயச் சமூக மாநாடு தோன்றிய இடமெனப் போற்றப்படும் பெருமை சென்னைக்குக் கிடைத்தது. சென்னையில் 1887ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அக்காலத்தில் இந்தியாவின் தலைசிறந்த அரசியல் மேதையாகத் திகழ்ந்த ராஜா சர் டி. மாதவ ராவின் தலைமையில் இந்த நிறுவனத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. நமது சமுதாயத்தின் மேம்பாட்டுக்கான வழிவகைகளை ஆராய்வதற்கென இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆண்டுதோறும் மாநாடுகள் நடத்துவதென சென்னை மாநாட்டில் கூடிய உறுப்பினர்கள் தீர்மானித்தார்கள். 1887ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் காங்கிரசு மாநாடு நடந்த அதே இடத்தில் சமூக மாநாடும் நடைபெற்றது. சென்னையில் 1892ஆம் ஆண்டில், சென்னை இந்து சமூகச் சீர்திருத்தச் சங்கம் தோன்றியது. பெண் கல்வி, திருமண வயதுக் கட்டுப்பாடுகளை நீக்குதல், விதவை மறு மணம், சாதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், தனிப்பட்டவர்கள் சமுதாயத்தினர் அனைவரின் நல்வாழ்வுக்குத் தீங்கு பயக்கக்கூடிய சமூகப் பழக்கவழக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் ஒழித்தல் முதலிய சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை இந்துக்களிடையே பரப்புவதற்கென இந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.[3]

மேற் குறிப்பிட்ட சங்கங்களேயன்றி, 19ஆம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளிலும், இந்நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகளிலும் சென்னை மாகாணத்தில் கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்டோர், முகமதியர்கள் ஆகியோரின் நலனுக்கெனத் தனித்தனிச் சமூகச் சங்கங்களும் தோன்றின. கிறிஸ்தவ இளைஞர் சங்கம் (Young Men's Christian Association) என்ற நிறுவனம் முதலில் 1873ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்தில் நிறுவப்பெற்றது. கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாதவர் அனைவருடைய அறிவார்ந்த ஆன்மீக மேம்பாட்டுக்காகப் பாடுபடுவது இந்தச் சங்கத்தின் நோக்கமாகும். 1880 முதல் 1890 வரை இந்தச் சங்கத்தின் கிளைகள் தென்னகமெங்கும் தொடங்

1. G. A. Natesan (Ed.) — *op. cit.* — Introduction by W. V. Banerjee — p. VI.
2. C. Y. Chintamani (Ed.) — *op. cit.* — Appendix, p. 365.
3. *The Madras Year Book*, 1924 — p. 338.

கப் பெற்றன. இச்சங்கத்தின் முதல் தேசீய மாநாடு 1891 பிப்ரவரி மாதத்தில் சென்னையில் நடந்தது. இந்த மாநாட்டில்தான் முதலாவது இந்திய தேசீய சபை அமைக்கப்பட்டது. இச்சபையின் தலைமைச் செயலகம் சென்னையிலேயே நிறுவப்பெற்றது. கிறிஸ்தவ இளைஞர் சங்கம் முக்கியமாகக் கிறிஸ்தவர்களின் நலனுக்காகவே நிறுவப் பெற்றதெனினும், பெண்ணடிமைக் கொடுமை, சாதிமுறை போன்ற சமுதாயச் சீர்கேடுகளுக்கெதிராகப் பொதுமக்கள் கருத்தை ஒன்று திரட்டி மகத்தான தொண்டு ஆற்றியுள்ளது.

பெண்களின் ஆன்மிக அறிவார்ந்த வாழ்க்கையை முன்னேற்று வதையும், பெண்களிடையே நட்புணர்வை வளர்த்து, தொண்டு செய்தலே தூயவாழ்க்கை என்ற உணர்வை உண்டாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட கிறிஸ்தவ இளம் மகளிர் சங்கம் (Young Women's Christian Association) 1892ஆம் ஆண்டில் சென்னையில் தொடங்கப்பெற்றது.

பல ஐரோப்பியர் சங்கங்களும், ஆங்கிலோ—இந்தியர் சங்கங் களும் இயங்கி வந்தன. சென்னை எழும்பூரில் 1879ஆம் ஆண்டில் தென்னிந்திய ஆங்கிலோ — இந்தியர் சங்கம் என்ற நிறுவனம் அமைக்கப்பட்டது. "ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள் ஆகியோரின் பொருளியல், சமூகவியல், அறிவியல் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது இச்சங்கத்தின் நோக்கமாகும்." இதே குறிக்கோளைக் கொண்ட ஐரோப்பியர் சங்கம் ஒன்றும் 1883ல் சென்னையில் நிறுவப்பெற்றது. இந்தச் சங்கங்கள் யாவும், தங்கள் பெயருக்கேற்ப, அந்தந்த வகுப்பினரின் நலனுக்காகப் பாடுபட்டு வந்ததுடன், பல்வேறு சமூகப் பிரச்சினைகள் குறித்து அந்தந்த வகுப்பினரின் கருத்துகளை அரசினருக்குத் தெரிவிக்கும் அமைப்பு களாகவும் பணிபுரிந்து வந்தன.

ஆதிதிராவிடர் சமூகத்தினரின் சமூக, அறிவியல் நிலையினை எல்லா வழிகளிலும் உயர்த்துவதற்கென 1892ம் ஆண்டில் சென்னை யில் சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபை என்ற நிறுவனம் அமைக்கப்பட்டது. தென்னகத்தில் தீண்டத் தகாதவர்கள் எனக் கருதப்பட்ட பல்வேறு சமூகத்தினர் "ஆதிதிராவிடர்" என்னும் பெய ரால் குறிக்கப்பட்டனர். இந்தச் சபையில் ஆதிதிராவிடர்கள் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தென்னகமெங்கும் இந்தச் சபைக்குக் கிளைகள் இருந்தன.

தென்னிந்திய முகமதியர் கல்விச் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பு சென்னையில் 1901ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. முஸ்லீம் மக்களிடையே கல்வியறிவை வளர்ப்பதும், உருது, பார சீகம், அரபு ஆகிய மொழிகளைக் கற்பதை ஊக்குவிப்பதும், சமயச் சார்பற்ற கல்வியோடு சமயக்கல்வி போதிக்கவும் வசதிகள் செய் வதும், ஆற்றலும் திறமையும் வாய்ந்த ஏழை மாணவர்களுக்கு உதவிச் சம்பளங்கள், நூல்கள் முதலியன வழங்கி ஊக்குவிப்பதும்

முஸ்லீம் குழந்தைகளுக்கு மேலைநாட்டுக் கல்வியைக் கற்பிக்க வேண்டியதன் அவசியத்தைப் பொதுக்கூட்டங்கள், சொற் பொழிவுகள் மூலம் முஸ்லீம் மக்களுக்கு உணர்த்துவதும் இந்தச் சங்கத்தின் நோக்கமாகும்.

இந்தியாவில் பிரிட்டிஷார் ஆட்சி நீங்கிவிட்டதால், தங்கள் சமூகத்தினரின் தனிநலன்கள் பாதிக்கப்படும் என ஆதிதிராவிடர், முஸ்லீம்கள், ஆங்கிலோ-இந்தியர், ஐரோப்பியர் ஆகிய சமூகத் தினர் அஞ்சினர்கள். அதனல் அவர்களுடைய சமூகச் சங்கங்கள் தேசீய விடுதலை இயக்கத்தில் பங்குபெருமல் ஒதுங்கியே இருந்து வந்தன. இத்தகைய வகுப்புவாத அமைப்புகளின் நடவடிக்கை களினல், இந்திய அரசியலில் ஏற்பட்ட தீய விளைவுகளை முன்னரே கண்டோம்.

### *மகளிர் நிலை*

மேலைநாட்டினருடன் இந்தியர்க்கு ஏற்பட்ட தொடர்பினல், ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என்ற மேனுட்டாரின் முற் போக்குக் கொள்கை இந்தியாவில் பரவலாயிற்று. இதனல், இந்துச் சமுதாயத்தில் தாழ்வுற்றுக் கிடந்த மகளிர் நிலை உயர்வதற்கு வழி ஏற்பட்டது. மகளிர்க்கான பல்வேறு சமுதாயக் கட்டுப்பாடுகளை அகற்றவேண்டுமென்ற கோரிக்கைகள் அடிக்கடி பொதுமக்கள் கருத்தாக வலியுறுத்தப்பட்டு வந்தன.

வைதீக இந்துச் சமுதாயத்தில் பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளும், சடங்குகளும் மிகவும் அண்மையில் ஏற்பட்ட னவேயாகும். பண்டைய இந்தியாவில் மகளிர் எல்லாச் சுதந்திரங் களையும், உரிமைகளையும் அனுபவித்து வந்தனர். சமூகத்தில் மதிப் புக்கும் உரியவர்களாகப் பெண்கள் போற்றப்பட்டு வந்தனர்.

பண்டைத் தமிழ்மக்கள் குடும்ப வாழ்வில் பெண்களுக்குத் தலையாய இடம் கொடுத்து மதித்து வந்தனர். இல்லறத்தை நல்லற மாக நடத்தும் பெண்ணை 'இல்லாள்' என்றும் 'மனைவி' என்றும் போற்றினர். கற்புநெறியில் நின்று இல்வாழ்க்கை நடத்தி, விருந் தோம்பி, நன்மக்களைப் பெற்று வளர்த்திடும் மனைவி, குடும்பத் தலைவியாக மதிக்கப்பெற்ருள். ''மனைக்கு விளக்கு ஆகிய வானுதல்'' என்றும் பாராட்டப்பட்டாள்.

''கற்புங் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்த ருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்''

என்று ஓர் இல்லத்தரசிக்கு அமைந்திருக்கவேண்டிய மாண்புகளைத் தொல்காப்பியம் வரையறுத்துக் கூறுகிறது. இத்தகைய மாண்புகள் அனைத்தும் அமைந்த மனைவியை 'வாழ்க்கைத் துணை'யாகப் பெற்று

வாழும் நெறியே ஒருவன் வாழ முயலும் நெறிகளுள் தலையானது என்று கருதப்பட்டது. இக்கருத்தினை,

''மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

''பெற்ருற்பெறிற் பெறுவர் பெண்டிர் பெருச்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு''

என்னும் வள்ளுவர் வாய்மொழிகளும் வலியுறுத்தும்.

வேதகாலத்தில் மகளிர்க்கு இருந்துவந்த பெரும்மதிப்பு குறித்து வேத நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. பெண்களுக்கு எல்லா உரிமைகளும் இருந்தனவென்று இருக்கு வேதம் கூறுகின்றது. தாங்கள் விரும்பிய கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகூட அக்காலத்தில் பெண்களுக்கு இருந்ததாக இருக்கு வேதத்தில் காணப்படுகிறது.

மகாபாரதம் பெண்ணின் பெருமையைப் பலவாருகப் போற்றிப் புகழ்கின்றது.

''ஆணின் சரிபாதி பெண்;
நண்பருள் சிறந்தவள் பெண்;
அறம்பொருள் இன்பம் வீடுஎன்ற
இம்மைமறுமைப் பேறுகள் அனைத்தும்
கணவன்எய்தி உய்ந்திட என்றும்
நன்றே உறுதுணைபுரிபவள் பெண்''

''வெப்பத்தால் வதங்கிடும் ஒருவனுக்குத்
தண்ணீரின் குளுமைதரும் சுகம்போல்
துயரக்கனல் வாட்டும் உள்ளத்திற்குக்
குளிர்தரும் தண்புனல் பெண்,
நோய்தரும் வேதனையை நீக்கிக்
குணமாக்கும் அருமருந்து பெண்''

என்னும் பொருள்பட எத்தனையோ சூத்திரங்கள் மகாபாரதத்தில் காணப்படுகின்றன.

''ஆடவன் வீரசாகசங்கள் புரிந்திடத் தூண்டுகோல் பெண்;
அவனுக்கு ஊக்கம்கொடுப்பவளும் பெண்ணே;

என்ற மகாபாரதக் கருத்து,

''காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே''

என்ற அமரகவி பாரதியாரின் பாடலை நினைவுறுத்துகிறது. இன்னும்,

"கோபத்தின் கொடுமுடியில் இருப்பவன்கூடப்
பெண்ணிடம் கொடுஞ்சொல் கூறமாட்டான்"

"மனிதனுக்குப் பாதுகாப்பான புகலிடம் பெண்ணே"

"அன்புடைமை, செல்வவளம், கற்புநலம் ஆகியவற்றினால்
எய்தும் இன்பங்களுக்கெல்லாம் காரணம் பெண்ணே"

"உள்ளுயிர் தோன்றும் அழியா விளைநிலம்பெண்"

என்றெல்லாம் மகாபாரதம் பெண்டிரின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

இவ்வாறு சமுதாயத்தில் தலையாய நிலையில் வைத்துப் போற்றப்பட்ட மகளிர் நிலை, மனுவின் காலத்தில் தாழ்நிலையை அடைந்தது. ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலை தோன்றியது.

"கணவன் ஒழுக்கங் கெட்டவனாக, பரத்தையரிடம் இன்பங் காண்பவனாக, நற்குணங்கள் எதுவும் இல்லாதவனாக இருந்தாலுங்கூட, அவனை, விசுவாசமுள்ள மனைவி, கடவுளாகக் கருதி, இடைவிடாமல் வழிபடல் வேண்டும்"[1]

என்கிறது மனு. பெண்ணுக்குச் சிந்திக்கவோ, செயல்படவோ தனிச் சுதந்திரம் கிடையாது என்று மனு கூறுகிறது.

"குழந்தைப் பருவத்தில் தந்தையிடமும், இளமையில் கணவனிடமும், கணவன் இறந்துவிடின் புதல்வர்களிடமும் பெண் அடிபணிந்து நடக்கவேண்டும். ஒரு பெண் ஒரு போதும் சுதந்திரமாக நடத்தல் கூடாது"[2]

என்று மனு தர்மம் கூறுகிறது. இத்தகைய மனு தர்மத்தின் விளைவாகத்தான் இந்து சமுதாயத்தில் மகளிர் சொத்துரிமை இழந்தனர்; உடன்கட்டை ஏறும் பழக்கம் உண்டாயிற்று; விதவைகள் மறுமணம் செய்துகொள்ளத் தடை வந்தது; குழந்தை மணம் போன்ற கொடிய பழக்கங்கள் தோன்றின. மகளிர் எத்தகைய இழிநிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதற்கு இவையெல்லாம் சான்று.

இந்தியப் பெண்கள் எத்தகைய கேவலமான நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை அறிந்து உயர்த்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொள்வதற்கு மேனாட்டார் தொடர்பினால் பரவிய முற்போக்குக் கொள்கைகள் துணைசெய்தன. இந்தியத் தலைவர்கள் பலர் பெண்ணுரிமைக்காகக் குரல் எழுப்பலாயினர். மகளிர்க்கு உயர்நிலை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திய ஜி. சுப்பிரமணிய ஐயர், "தன்னலமும் தரக்குறைவான

1. Max-Mullar (Ed.) *Laws of Manu* (translated by G. Buhler — V. 154, p. 196.
2. *Ibid* — V. 148 — p. 195.

நடத்தையும், குறுகிய மனப்பான்மையுமே ஆணுக்குப் பெண் அடிமையெனக் கருதுவதற்குக் காரணம். பெண்களின் நிலை எந்த அளவுக்கு உயர்வாக உள்ளது என்பதைக் கொண்டுதான் ஒரு நாகரிகம் உயர்ந்திருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள முடியும். வெளியில் சொல்வதொன்றும், வீட்டில் செய்வதொன்றுமாக முரண் பட்ட போக்கில் நடந்துகொள்வதை விடுத்து, நம்முடைய சொல் லும் செயலும் ஒன்றாக இருக்கும்படி படிப்படியாக வளர்த்துக் கொள்ளவேண்டும். பெண்களின் கல்வியறிவை ஆண்களுக்குச் சரிநிகர் சமானமான அளவுக்கு உயர்த்தப் பாடுபடவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.[1]

## *பாரதியின் புதுமைப்பெண்*

அமரகவி பாரதியார், தேச விடுதலைக்காக மட்டுமின்றி, பெண்கள் விடுதலைக்காகவும் அரும்பாடுபட்டார். பெண் ணுரிமையை வலியுறுத்தி அவர் பல்வேறு பாடல்கள் பாடியுள்ளார்.

''மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமைமாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே''

என்று முழங்கிய பாரதியார், 'பெண்கள் விடுதலைக் கும்மி' என்னும் பாடலில்,

''கற்புநிலை யென்று சொல்ல வந்தால் இரு
கட்சிக்கும் அஃதுபொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித் திடுவோம்''

என்று எச்சரிக்கை விடுத்தார். மேலும், மாட்டை அடித்து வசக்கித் தொழுவில் மாட்டுதல்போல், வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதரைப் பார்த்து,

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி''

என இடித்துரைத்து அவர்கள் தலை கவிழும்படி செய்தார். பெண் களைச் சிவசக்தியின் வடிவமாகவே கண்டார் பாரதியார்.

---

1. C. Y. Chintamani (Ed.) — *op. cit.*, Part IV—p. 356.

''பூணுநல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்''

எனவே, அவர்,

''பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா''

என முழங்கினர்.

''போற்றிதாய் என்றுதோள் கெட்டியாடுவீர்
புகழ்ச்சி கூறுவீர் காதற்கிளிகட்கே
நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே''

என்று பரவசமாய் அறைகூவல் விடுத்தார் அமரகவி. ''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டும்'' என்ற பாரதியார் நவபாரதத்தின் புதுமைப் பெண்ணுக்கு,

''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மைமாதர் திறம்புவ தில்லையாம்''

எனப் பெருமைப்பட்டார்.

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையந் தழைக்குமாம்''

என வாழ்த்தினர் பாரதியார்.

பெண்களுக்கு விடுதலை வழங்குவதை எதிர்த்த மதிகெட்டவர்களை நோக்கி,

''பெண்ணுக்கு விடுதலை யென்றிங்கோர் நீதி பிறப்பித்தேன்;
அதற்குரிய பெற்றி கேளீர் மண்ணுக்குள் ளெவ்வுயிருந் தெய்வ
மென்றால் மனையாளுந் தெய்வமன்றோ? மதிகெட்டீர்,
விண்ணுக்குப் பறப்பதுபோன்ற கதைகள் சொல்வீர்,
விடுதலையென்பீர், கருணை வெள்ள மென்பீர்,
பெண்ணுக்கு விடுதலை நீரில்லையென்றால்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கையில்லை''

என்று திட்டவட்டமாக அறிவித்தார் பாரதியார். மனைவியை அடிமைப் படுத்தவேண்டி பெண்குலத்தையே அடிமைப்படுத்தும் மடமையைக் கடிந்துரைத்த பாரதியார்,

''பெண்டாட்டி தனையடிமைப்படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
கண்டார்க்கு நகைப்பென்னுமு லகவாழ்க்கை
காதலெனுங் கதையினுடைக் குழப்பமன்றோ?

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவ ளென்றறியீரோ? உணர்ச்சி கெட்டீர்?
பண்டாய்ச்சி ஔவை, "அன்னையும் பிதாவும்"
பாரிடை "முன்னறி தெய்வ" மென்றாளன்றே"

என்றுப் பெண்களையெல்லாம் தெய்வத் தாய்மார்களாகப் போற்றிப் புகழ்கின்றார். மேலும்,

"தாய்க்குலமே லிங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய் பெண்ணெ யல்லவோ? தமக்கை தங்கை
வாய்க்கும் பெண்மகவெல்லாம் பெண்ணேயன்றே?
மனைவி யொருத்தியை யடிமைப்படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
தாயைப்போலே பிள்ளை யென்று முன்னோர்
வாக்குளதன்றோ? பெண்மை யடிமையுற்றால்
மக்களெலா மடிமையுறல் வியப்பொன்றாமோ?"

என்று நம் நாடு அடிமையுற்றதற்கு பெண்குலத்தை நாம் அடிமைப் படுத்தியதே காரணம் என இடித்துரைத்தார்.

### விதவை மறுமணம்

இந்து விதவைகள் மறுமணம் புரிவதற்கு அனுமதி வழங்குவது குறித்தும் தீவிரமான சர்ச்சைகள் நடந்து வந்தன. விதவைகள் மறுமணத்தை அனுமதிக்க வேண்டுமென வலியுறுத்தியவர்கள், இருக்குவேத காலத்திலேயே குழந்தையில்லாத விதவை, தன் கணவனின் சகோதரனை மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் பட்டதை எடுத்துக்காட்டி வாதிட்டார்கள். இருக்குவேதத்தில் விதவையை மணந்துகொண்ட ஆடவன் "திதிஷு" என்றும், இரண்டாம் கணவனை மணந்து கொண்ட பெண் "பரபுருவா" என்றும், இரண்டாம் கணவன் மூலம் ஒரு பெண்ணுக்கு பிறந்த மகன் "பௌனர்பவா" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். அந்தக் காலத்தில் விதவைகள் மறுமணத்திற்கு தடையேதும் இருக்கவில்லை என்பதை இந்தச் சொற்கள் புலப்படுத்துகின்றன.

விதவை மறுமணத்திற்காகப் போராடிய பெருந்தலைவர்களுள் பி. அனந்தாச்சார்லுவும் ஒருவர். "இருக்கு வேதகாலத்தில், விதவை மறுமணம் செய்துகொள்வது ஒழுக்கக்கேடாகக் கருதப்படவில்லை. கூடா ஒழுக்கமுடைய பெண்ணை "ஸ்வாய்ரினி" என்று அழைத்தனர். கணவனை இழந்த பெண்ணை "விதவை" என்றனர். இவ்விரு சொற் களிலிருந்தும் வேறான "புனர்பூ" என்னும் சொல்லால் இருமுறை மணம்புரிந்த பெண்ணைக் குறித்தனர். மேலும், திருமணமான ஒரு பெண் கூடா ஒழுக்கம் மூலம் பெற்ற மகனைக் "குண்டன்" என்றும், விதவையொருத்தி சோரம்போய் பெற்ற மகனை "கோலக்கண்" என்றும் இழிசொற்களால் குறித்தார்கள். ஆனால், இரண்டாம் மணம் செய்துகொண்ட ஒரு பெண் பெற்ற மகனை "பௌனர்பவா" என்று

மரியாதையாகவே அழைத்தனர். இதிலிருந்து, நம் நாட்டு வரலாற்றில் ஒரு காலத்தில் பெண்கள் மறுமணம் செய்துகொள்ளும் பழக்கம் பெருவழக்காக இருந்து வந்துள்ளது என்பது தெளிவாகிறது'' என்று அனந்தாச்சார்லு குறிப்பிட்டுள்ளார்.[1]

நாளடைவில் விதவை மறுமணம் இழிவானதாகக் கருதப்படலாயிற்று. இந்து விதவைகளின் நிலை பெரும் அவலம் வாய்ந்ததாயிற்று. விதவைகளுக்குப் பல கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் சாத்திர விதிகள் தோன்றின. அவற்றின்படி, விதவை நாள்தோறும் ஒரு வேளைதான் உணவு உண்ணவேண்டும்; படுக்கையில் அவள் படுக்கக்கூடாது; நல்ல ஆடைகளை அவள் அணியக்கூடாது; வெண்ணிற ஆடையே விதவைக் கோலத்திற்கு உரியதாயிற்று; சில வகுப்பைச் சேர்ந்த விதவைகளின் தலைமுடி மழிக்கப்பட்டது; குடும்பத்தின் மங்கல விழாக்களில் அவள் பங்குபெறுதல் கூடாது; இத்தகைய இழிவான அவல வாழ்க்கை வாழ்வதற்குப் பதில், இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறி உயிர்விடுதல் மேல் எனக் கருதிச் சில பெண்கள் உடன்கட்டை ஏற இசைந்தலும் உண்டு.

சமூகச் சீர்திருத்தங்களைத் துணிவோடும் செயலாற்றுபவர் எனப் புகழ்பெற்ற டல்ஹௌசிப் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது (1848-1856), விதவைகள் மறுமணம் செய்து கொள்வதைச் சட்ட பூர்வமாக அனுமதிக்கக் கூடியவகையில் 1856ஆம் ஆண்டில் விதவை மறுமணச் சட்டம் (Widows Remarriage Act) ஒன்றை இயற்றினர். இந்தச் சட்டத்தை நவீன வங்காளத்தின் தந்தை என்று புகழ்பெற்றவரும், சிறந்த சீர்திருத்தவாதியாய்த் திகழ்ந்தவருமாகிய ஈசுவரசந்திர வித்தியாசாகரர் (1820-1891) வரவேற்றார். இவர் பெண் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்; பெண்களுக்காகப் பல பள்ளிகளை நிறுவியவர்; விதவை மறுமணத்தை ஏற்கவும், பலதார மணத்தைத் தடுக்கவும் சட்டம் செய்ய முனைந்து நின்று இயக்கம் நடத்தியவர். இவர் பல விதவைகளுக்குத் தாமே முயன்று மறுமணம் செய்து வைத்தார். தம்முடைய மகனுக்கும் ஒரு இளம் விதவையையே வாழ்க்கைத் துணையாக்கினர். ஆனால், இதுபோன்ற சமூகச் சீர்திருத்தங்களைச் சட்டத்தின் மூலம் செயலாக்குவது எளிதாக இல்லை. விதவை மறுமணத்திற்குச் சட்டத்தின் வாயிலாக அனுமதி கிடைத்துவிட்ட போதிலும், அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள யாரும் முன்வரவில்லை. சட்டத்தின் கட்டாயத்தினாலன்றி, மன மாற்றத்தின் மூலமாகவே இதைச் சாதிக்க வேண்டியிருந்தது.

விதவை மறுமணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மக்கள் உணரும்படி செய்வதற்கு ஜி. சுப்பிரமணிய ஐயர், கே. வீரேசலிங்க பந்தலு போன்ற தலைவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். சுப்பிரமணிய ஐயர், விதவை மறுமணத்தை வலியுறுத்திப் பிரசாரம் செய்ததுடன் நிற்கவில்லை;

1. *Ibid* — Part I — pp. 57-58.

தம்முடைய சொந்த மகள் கணவனை இழந்தபோது, அவளுக்கு மறுமணம் செய்துவைத்து வழிகாட்டியாக விளங்கினர்.

### *வீரேசலிங்க பந்தலு*

பெண்கள் விடுதலைக்காக தீவிரமாகப் பாடுபட்ட தலைவர்களுள் ஒருவர் வீரேசலிங்க பந்தலு ஆவார். இவர் ஆந்திர மாநிலத்தில் இராஜ மகேந்திரபுரத்தில் சைவ பிராமணக் குடும்பத்தில் 1848ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி பிறந்தார். இவர் 1880 முதல் 1890 வரை பத்தாண்டுக் காலம் விதவை மறுமணத்திற்காக உழைத்தார். இவர் சமூக ஊழல்களை எதிர்த்தபோது இவருடைய மனைவியார் இராஜலட்சுமி அம்மையார் இவருக்கு உற்ற துணையாக இருந்தார். பெண்களுக்குச் சமூக உரிமைகளைப் பெற்றுத் தரவும், பெண்ணடிமையை ஒழிக்கவும், பெண்களின் அறியாமையைப் போக்கி அவர்களின் கல்வியறிவை வளர்க்கவும், மூடைநாற்றம் வீசுகின்ற மூடத்தனத்தை அகற்றவும் வீரேசலிங்கம் பெரும் ஊக்கத்துடன் இடையருது பாடுபட்டார். பெண்கல்வி, சமூகச் சீர்திருத்தம் என்று எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அந்நாட்களில் இவர் அத்துறையில் ஆற்றிய தொண்டு இணையற்றதாகும். பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு என்றும், குழந்தைப் பருவத்திலேயே பெண்களுக்கு மணம் செய்வது குற்றம் என்றும், விதவைகள் மறுமணம் செய்துகொள்வதை அனுமதித்தும் சட்டங்கள் இயற்றுவதற்கு இவர் நடத்திய இயக்கம் வழிவகுத்தது. "சஞ்சீவினி" என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் இவர் நடத்தி வந்தார். கொடுமையான சமூகப் பழக்க வழக்கங்களை இப்பத்திரிகை மூலம் இவர் வன்மையாகக் கண்டித்து வந்தார். இவருடைய அரிய சேவை தமிழ்நாட்டுப் பெருங்கவிஞரான சுப்பிரமணிய பாரதியாரை வெகுவாகக் கவர்ந்தது. விதவை மறுமணத்திற்காக அவர் ஆற்றிய அருந்தொண்டினைத் தம்முடைய 'சந்திரிகை' என்ற நாவலில் பாரதியார் உளமாரப் பாராட்டியிருக்கிருர்.

வீரேசலிங்கத்தின் பெருஞ்சேவையைப் பாராட்டி அரசாங்கம் 1893ஆம் ஆண்டு ஜனவரியில் இவருக்கு "ராவ் பகதூர்" என்ற பட்டத்தை வழங்கியது. 1898ஆம் ஆண்டில் இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தெலுங்கு பேராசிரியராக நியமனம் பெற்ருர். நான்காண்டுகள் அப்பணி புரிந்தார். இராஜமகேந்திரபுரம் சென்று 1906ஆம் ஆண்டில் அங்கு 'ஹித்தாகரின் சமாஜம்' என்ற அனாதை ஆச்சிரமத்தை நிறுவினர். விதவைகள் நல விடுதிகள், அனாதை இல்லங்கள், ஆண்-பெண் பள்ளிகள், தொழில் பயிற்சி, தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் முதலிய கல்வி மற்றும் சமூக சேவை நிறுவனங்களை நிறுவுவதற்கென "அறக்கட்டளை" (Trust) ஒன்றை இவர் அமைத்தார். இந்த அறக்கட்டளைக்குத் தம்முடைய சொத்துகள் அனைத்தையும் எழுதி வைத்தார். விதவை மறுமணத்திற்காக இவர் செய்துள்ள சேவைபற்றிக் குறிப்பிடுகையில், "சமூகச் சீர்திருத்தத்திற்காகத் தமது உடல், பொருள், ஆவி

அனைத்தையும் அர்ப்பணித்த இவரைப்போல் வேறொருவரை இந்தியா முழுவதிலும் வேறெங்கும் காண இயலாது. இவரைத் தென்னாட்டு ஈசுவரசந்திர வித்தியாசாகர் என்பது சாலவும் பொருந்தும்" என்று டபிள்யூ. எம். கல்காட்கர் (W. M. Kalhatkar) பாராட்டியுள்ளார்.[1]

இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும், இன்றுகூட விதவை மறுமணத்திற்குப் பொதுமக்களிடையே போதிய ஆதரவு கிடைக்கவில்லை. விதவை மறுமணத்தை எதிர்ப்பவர்கள் பெரும்பாலும் பெண்களேயாவர். பழைய கோட்பாடுகளில் ஊறித்திளைத்துவிட்ட அவர்களின் மனம், விதவை மறுமணத்தை எளிதில் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

> "நாம் பிறப்பது ஒருமுறை; இறப்பதும் ஒரு முறை;
> மணப்பதும் ஒரு முறை"

என்ற கொள்கையை அவர்களால் எளிதில் கைவிட இயலவில்லை. இந்துக்களின் பொதுக்கருத்து பொதுவாக விதவை மறுமணத்தை ஆதரிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். விதவை மறுமணத்திற்கு ஆதரவளித்தவர்களில் பலர் வாயளவில் பேசினர்களேயன்றி தங்களுடைய ஆதரவை செயலில் காட்டத் துணியவில்லை.

## குழந்தை திருமணம்

இந்து சமுதாயத்தில் நிலவிவந்த குழந்தை திருமணம் பற்றியும் பொது மக்கள் கருத்து வெளியாகி வந்தது. இந்தப் பிரச்சினை குறித்து பலவகை மாறுபட்ட கருத்துகள் நிலவின.

தாங்கள் விரும்பிய கணவன்மாரைத் தேர்ந்தெடுத்து, மணந்து கொள்ளப் பெண்களுக்கு உரிமை இருந்தது என்றும், சதந்திரமாக நடமாடுவதற்குப் பெண்கள் உரிமை பெற்றிருந்தனர் என்றும் இருக்குவேதத்தில் கூறப்பட்டுள்ளது. பெண்கள் தாங்கள் விரும்பும் கணவரைத் தேர்ந்தெடுப்பதற்காகச் சுயம்வரங்கள் நடந்தது பற்றிக் காவியங்கள் பேசுகின்றன.

ஆனல், மனு தர்மத்திலும், பிற்கால சுமிருதிகளிலும், "பெண்களுக்கு அவர்கள் பருவமடைவதற்கு முன்னரே திருமணம் செய்துவிடவேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்து படிப்படியாக வளர்ந்து, நாளடைவில் குழந்தை திருமணம் பெருவழக்காகிவிட்டது. பருவமடைந்தபின் திருமணம் நடைபெறுவது மிகவும் அரிதாகிவிட்டது. சிலசமயங்களில், ஓராண்டு ஈராண்டுக் குழந்தையாக இருக்கும்பொழுதே பெண்களுக்கு மணம் முடித்துவிடுவதுண்டு.

---

1. *Indian Social Reform*: C. Y. Chintamani (Ed.) — Part IV — p. 308.

விதவை மறுமணத்தை ஏற்பதற்கு பெரிதும் பாடுபட்ட ஈசுவர சந்திர வித்தியாசாகர், குழந்தைமணத்தை ஒழிப்பதற்கும் உழைத்தார். அவர் தம்முடைய புதல்விகளுக்கு, அவர்கள் 15 வயதடைந்த பின்னரே திருமணம் செய்துவைத்தார்.

பம்பாயில், 1889ஆம் ஆண்டில் நடைபெற்ற மூன்றாவது சமூக மாநாடு, குழந்தை திருமணத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

> "குழந்தைப் பருவத்திலேயே மணமுடித்து வைப்பதால், கணவன் மனைவி இருவருடைய உடல்நலமும் கெடுகின்றது; அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வலிமை குன்றியவர்களாக அமைகின்றனர். எனவே, குழந்தை மணத்தைத் தடுக்கும் வகையில், 12 வயதடைவதற்கு முன்னர் மனைவியுடன் மண உறவு கொள்வதைத்தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கவேண்டும். பெண்களுக்குத் திருமணம் செய்வதற்கு ஏற்ற வயது 14 என்று நம்நாட்டுப் பண்டைய மருத்துவ நூல்கள் கூறுகின்றன; இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகளும் இதையே வலியுறுத்துகின்றன. நம்நாட்டில் பன்னெடுங்காலமாக 14 வயதிற்குப் பிறகே பெண்களுக்கு மணமுடிக்கும் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. எனவே, 14 வயதிற்கு முன் திருமணம் செய்வதால் உண்டாகும் அபாயங்களைப் பொதுமக்களுக்கு உணர்த்துவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். இந்தச் சமூகச் சீர்திருத்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேரும் ஒவ்வொருவரும், தனக்கோ அல்லது தனது புதல்வர்களுக்கோ, 14 வயதடைந்த பெண்ணைத்தான் மணமகளாக ஏற்றுக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்று அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.[1]

குழந்தை திருமணத்தைத் தீவிரமாக எதிர்த்தவர்களுள் குருஜாடா வெங்கட அப்பாராவ் (1861-1916) ஒருவர். இவர் 1896ஆம் ஆண்டில் "கல்யாசுல்கம்" என்னும் தெலுங்கு நாடகத்தை இயற்றினார். இதில், தெலுங்குநாட்டில் நிலவிவந்த தீய பழக்க வழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் கடுமையாக நையாண்டி செய்திருந்தார். முக்கியமாக, குழந்தை மணத்தையும், பணம் பெற்றுக் கொண்டு கிழவர்களுக்கு இளம் பெண்களைத் திருமணம் செய்துகொடுக்கும் கொடுமையையும் அவர் இந்நாடகத்தில் வன்மையாகக் கண்டித்திருந்தார். இத்தகைய நாடகங்களை வீரேசலிங்க பந்துலு ஏற்கனவே எழுதியிருந்தார். எனவே, அப்பாராவின் இந்த நாடகம், இக்கொடிய வழக்கத்திற்கு எதிரான பொதுமக்கள் கருத்துக்கு மேலும் வலுவேற்றியது.

---

1. Vide Res. No. 1 — C. Y. Chintamani (Ed.) *op. cit* Part IV— p. 368.

### *சீனிவாச சாஸ்திரியார்*

தமிழ்நாட்டில் சிறந்த அரசியல் மேதையாகத் திகழ்ந்த வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் தம் காலத்தில் தீவிர சமூகச் சீர்திருத்தவாதியாகவும் விளங்கினுர். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகிலுள்ள வலங்கைமானில் 1869ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதி பிறந்த சாஸ்திரியார் ஆங்கிலத்தில் பெரும்புலவராகத் திகழ்ந்தார். கேட்கக் கேட்கத் தெவிட்டாத நாவன்மையும் குரலினிமையும் உடையவராய் விளங்கினுர். இவர் பிராமணர்களுள் பெண்களைப் பருவமடைவதற்கு முன்பு மணம் செய்விப்பது தவறு, சாஸ்திர விரோதம் என்று பிரசாரம் செய்து அதைப்பற்றி ஆதாரங்களுடன் ஒரு நூலும் எழுதி வெளியிட்டார்.

இச் சமயத்தில், புனுவில் தேசபக்தரான கோபாலகிருஷ்ண கோக்கலே ஏற்படுத்திய இந்திய ஊழியர் சங்கத்தைப் (Servants of India Society) பற்றிக் கேள்விப்பட்டு, தாம் ஆற்றிவந்த ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு, 1907ஆம் ஆண்டில் அச்சங்கத்தில் ஆயுள் உறுப்பினராகச் சாஸ்திரியார் சேர்ந்தார். சென்னையில் 1908ஆம் ஆண்டில் நடந்த காங்கிரசு மாநாட்டிற்குச் செயலாளராகவும் பணியாற்றினுர். 1915ஆம் ஆண்டில், கோக்கலே காலமானதும், சாஸ்திரியார் இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவரானுர். இவர் 1946ஆம் ஆண்டில் காலமாகும் வரையில், இந்திய அரசியல் வாழ்வில் தீவிரப் பங்கு கொண்டு வந்தார். அரசியலில் மிதவாதியாக இருந்தபோதிலும், சமூகச் சீர்திருத்தத்தில் இவர் தீவிரவாதியாகத் திகழ்ந்தார். 1913ஆம் ஆண்டில், சென்னைச் சட்டசபைக்குச் சாஸ்திரியாரை ஓர் உறுப்பினராக ஆளுநர் பென்ட்லாண்டு பிரபு நியமித்தார். அப்போது பெண்கள் பருவமடைந்த பிறகே மணம் செய்ய வேண்டும் என்ற மசோதாவைச் சட்டசபையில் இவர் கொண்டு வந்தார். அது சட்டமாகவில்லை. எனினும், சாஸ்திரியார் தம் மகளுக்குப் பருவமடைந்த பின்னரே மணம் செய்வித்தார். இந்தியப் பெண்களின் உரிமைகளை வலியுறுத்திப் பல நூல்களும் எழுதினுர்.

குழந்தைமணம் பற்றிய பிரச்சினையை இந்தியப் பத்திரிகைகளும் விரிவாக விவாதித்து வந்தன. "சுதேசமித்திரன்" பத்திரிகையின் 18—7—1890ஆம் தேதி இதழில், 11 வயதான ஒரு வங்காளிப் பெண்ணுடன் மணஉறவு கொள்ள அவளுடைய கணவனை அனுமதித்ததால், அப் பெண் காயமடைந்து மரணமடைந்த செய்தி ஒன்று வெளியாகி இருந்தது. இதுபோன்ற கொடிய பழக்கங்களை இந்நாட்டிலிருந்து மக்கள் ஒழித்துக்கட்ட வேண்டும் என அச்செய்தியில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஒரு பெண் தன் கணவனுடன் மண உறவு கொள்வதற்குரிய வயதை 10இலிருந்து 12ஆக உயர்த்தித் தனிச்சட்டம் இயற்றும்படி அரசாங்கத்தை வலியுறுத்தி பொது நிறுவனங்களும், சங்கங்களும் அரசுக்கு உடனடியாக மனுக் கொடுக்கவேண்டும் எனவும் அச்செய்தியில் ஆலோசனை கூறப்

பட்டிருந்தது.[1] ஈசுவரசந்திர வித்தியாசாகரின் வற்புறுத்தலுக்கிணங்க, 1860ஆம் ஆண்டில் பெண்களின் திருமண வயது 10 எனச் சட்டத்தின் மூலம் நிருணயிக்கப்பட்டதென்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

"விருத்தாந்த சிந்தாமணி" என்னும் பத்திரிகையில் தனது 28-1-1891ஆம் தேதி இதழில், மைசூரில் நடந்த ஒரு கோர நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டு, குழந்தை மணத்தைத் தடைசெய்ய வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியது. "மைசூரில் சில நாட்களுக்கு முன்பு 9 வயதுப் பெண்ணுக்குப் பருவமெய்தியதற்கான அறிகுறிகள் இருந்தாலும், அவள் உருவத்தில் ஆறு வயதே மதிக்கத் தக்கவளாக இருந்தாள். அவளை மணந்த கணவன் நன்கு வளர்ந்த முரட்டு இளைஞனாகக் காணப்பட்டான். அவனுக்கு அருகில் அவள் சிறு குழந்தைபோல் தோன்றினாள். எனினும், அவர்கள் இருவருக்கும் மண உறவுச் சடங்கை உடனடியாக நடத்திவிடக் கணவனின் உறவினர்கள் துடித்தார்கள். 12 வயதை அடைவதற்கு முன்னர் பெண்ணுடன் மண உறவு கொள்பவர்களைச் சமூகத்திலிருந்து விலக்கிவைத்துவிடுவதை ஒரு விதியாக மக்கள் கொள்ளவேண்டும்" என்று அந்த இதழ் குறிப்பிட்டிருந்தது.[2]

## *பொருந்தா திருமணம்*

குழந்தை மணத்தை மட்டுமின்றி, பொருந்தா மணங்களையும் பத்திரிகைகள் வன்மையாகக் கண்டித்து வந்தன. பொருந்தா மணத்தை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தையும் பொதுமக்கள் கருத்து தீவிரமாக வலியுறுத்தி வந்தது, "கர்நாடகப் பிரகாசிகா" என்ற பத்திரிகை தனது 11—8—1890ஆம் தேதி இதழில் பொருந்தா மணம் பற்றி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. வங்காளத்தில் 35 வயதான ஒருவனுக்கு ஒன்பது மாதக் குழந்தையை மண முடித்துள்ளதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுவிட்டு, அரசாங்கம் தலையிட்டு திருமணத்திற்கு மேல்வரம்பு வயது ஒன்றை நிருணயிக்கவேண்டும் என வலியுறுத்தியிருக்கிறது.[3]

அமராவதியில் 1897ஆம் ஆண்டில் 11ஆவது இந்தியச் சமூக மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில், பொருந்தாமணம் குறித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது. "50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 12 வயதுக்குட்பட்ட பெண்களைத் திருமணம் செய்வது சாஸ்திர விரோதமான செயலாகும். இது சமூகத்தின் நலனுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் பழக்கமாகும். இத்தகைய பொருந்தா மணங்களைச் சட்டமும் அனுமதிக்கவில்லை. எனவே, மணமக்களின் வயது வித்தியாசம் 30 ஆண்டுகளுக்குமேல் போகுமானால், அத்தகைய மணங்களை நடக்கவிடாமல் தடுக்கவேண்டியது அவசியம்

---

1. Newspaper Report (Confidential), 1890—p. 159.
2. Ibid., 1891—p. 19.
3. *Ibid.*, 1890—p. 169.

என இந்த மாநாடு வலியுறுத்துகிறது'' என்று தீர்மானத்தில் கூறப் பட்டிருந்தது.[1]

பொருந்தாத் திருமணத் தடுப்புக் கோரிக்கையினையும் வைதிகர்கள் எதிர்த்தார்கள். **''இந்து ஜன பூஷணி''** போன்ற வைதிகப் பத்திரிகைகளும் இந்தச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ''இந்தப் பிரச்சினை குறித்துப் படித்த இந்தியர்கள் சிலர் எழுப்பியுள்ள கோரிக்கைகள் மீது, அரசினர் தமது நடுநிலைக் கொள்கையினின்றும் பிறழ்ந்து, நடவடிக்கை எடுக்க முன்வந்திருப் பது முற்றிலும் தவறானதாகும். இப்பிரச்சினையின்மீது, மக்கள் அனைவருடைய கருத்தையும் அறிந்துகொள்ளாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முனையுமானால், மக்கள் மனவெறுப்புக் கொண்டு, அரசுக்கு விரோதமாக மாறிவிடுவார்கள் என்பது உறுதி'' என்று **''இந்து ஜனபூஷணி''**யின் *15—11—1890*ஆம் தேதி இதழ் எச்சரித்திருந்தது.[2]

மதுரையிலிருந்து வெளியான **''கோமாளி''** என்ற பத்திரிகையும் இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இதன் *24—11—1890*ஆம் தேதி இதழில், ''பெண்களின் திருமண வயதை உயர்த்துவதற்காகக் கொண்டுவரவிருக்கும் சட்டத்தினால், தற் போதுள்ள தீங்குகள் நீங்குவதற்குப் பதில், அத்தகைய தீங்குகள் பெருகுவதற்கே வழி ஏற்படும். இச்சட்டத்தினால், மணமக்களின் குடும்பத்திற்கு எதிராக அவர்களுடைய எதிரிகள் அடிக்கடிக் குற்றச் சாட்டுகளைக் கூறுவார்கள். அதனால், இந்தியப் பெண்கள் அனாவசிய மாக அடிக்கடி மருத்துவ சோதனைகளுக்குள்ளாக நேரிடும்'' என்று கூறப்பட்டிருந்தது.[3]

இவ்வாறு ஒருசாரார் எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், *1860*ஆம் ஆண்டில் **10** என நிருணயிக்கப்பட்டிருந்த திருமண வயதை, *12*ஆக உயர்த்தும் சட்டம் *1891*ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச் சட்டத்தை வைதிகர்கள் சிலர் எதிர்த்தாலும், முற்போக்கு எண்ணங் கொண்ட எல்லா மக்களும் இதை மனதார வரவேற்றார்கள். **''கேரள சஞ்சாரி''** என்ற பத்திரிகை தனது *25—3—1891*ஆம் தேதி இதழில் இச்சட்டத்தை வெகுவாகப் பாராட்டி எழுதியிருந்தது. ''மகளிர்குல நண்பர்கள் அனைவரும் இச்சட்டத்தைக் கண்டுகளிபேருவகை கொள்ள வேண்டும். 12 வயதிற்குட்பட்ட மனைவியுடன், அவளுடைய இசைவுடனோ இசைவின்றியோ, ஒரு கணவன் மண உறவு கொள்வதை வன்முறைக் கற்பழிப்புக் குற்றமாகக் கருதி, இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 375ஆவது பிரிவின்

---

1. Vide Res. No. VII—C. Y. Chintamani—*op.cit* — Part IV—p.. 370.
2. Newspaper Report (Confidential), 1890—p. 261.
3. Ibid—p. 278.

கீழ் தண்டனை வழங்குவதற்கு இந்தச் சட்டம் வகை செய்கிறது. இந்தத் தண்டனை கடுமையானது எனச்சிலர் குறைகூறலாம். ஆனால், குற்றவாளிகளைத் தண்டிப்பதில், சட்டம் ஒருசார்பாக நடக்கக் கூடாது. உடல்நலம் சீர்கெடுவதற்குக் காரணமாகவுள்ள குழந்தை மணங்களும், இந்து சமூகத்தில் காணப்படும் வேறுபல தீங்குகளும் குறைவதற்கு இந்தச் சட்டம் துணைபுரியும்'' என்று அப்பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.[1]

## *சாரதா சட்டம்*

இதன் பிறகு, திருமண வயது படிப்படியாக உயர்ந்தது. திருமண வயதை உயர்த்துவதற்கு ஆதரவாகப் பொதுமக்கள் கருத்து பெருகி வருவதைக் கண்டு துணிவுகொண்ட அரசினர், விரைவிலேயே திருமண வயதை 13ஆக உயர்த்தினர். மத்தியச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த ராவ் சாகிப் ஹர்பிலாஸ் சாரதா என்பவர், குழந்தைமணத் தடுப்புச் சட்டம் என்ற பெயரில் ஒரு தனிநபர் மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்தார். அவர் பெரும் பாடுபட்டு இம்மசோதாவை 1929இல் மத்திய சட்டசபையில் நிறை வேற்றி, சட்டமாகும்படி செய்தார். அவருடைய பெயரால், இந்தச் சட்டம் ''சாரதா சட்டம்'' என்றே வழங்கலாயிற்று. இச்சட்டத்தின் படி, குறைந்த அளவுத் திருமண வயது பெண்களுக்கு 14 என்றும், ஆண்களுக்கு 18 என்றும் நிருணயிக்கப்பட்டது.

குழந்தைமணம் இன்று இந்தியாவில் அறவே ஒழிந்துவிட்டது எனலாம். இந்தப் பிரச்சினையில், பொதுமக்கள் கருத்து எந்த அளவுக்குப் புரட்சிகரமான மாறுதலை அடைந்தது என்பதை இது காட்டுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் தாமதமாகத் திருமணம் செய்வது குடும்பத்தின் பொருளாதார நலனுக்கும் துணையாக இருந் தது. இந்தப் பொருளாதாரக் காரணங்களும் திருமண வயதை உயர்த்துவதற்கு ஆதரவாக மனமாற்றம் ஏற்படுவதற்கு உதவியாக இருந்தன.

## *பெண்ணுக்குச் சொத்துரிமை*

''பெற்றோரின் சொத்துக்கு வாரிசாகும் உரிமை இந்துப் பெண் களுக்கு இல்லை'' என்ற சர்ச்சைக் கிடமானதொரு கொள்கை இந்து சமுதாயத்தில் மரபாக நிலவி வந்தது. ''மனைவி, மகள், அடிமை ஆகிய மூவருக்கும் சொத்துரிமை இல்லை. இவர்கள் சம்பாதிக்கும் செல்வங்கள் யாவும், இவர்கள் யாருக்கு சொந்தமோ அவருக்கே உடைமையாக வேண்டும் என்று மனு தர்மம் திட்டவட்டமாகக் கூறு கிறது. ஆனால், அதே மனு தர்மத்தில், ''திருமணமான மகளுக்குத் தன் தந்தையின் சொத்தில் கால்பாகம் உரிமையாக வேண்டும். ஆனால், இந்தப் பங்கு அவளுடைய சகோதரனின் பொறுப்பில் இருக்கும். அதை அவருக்கு அவன் வரதட்சிணையாக வழங்குவான்''

---

1. Ibid—1891—p. 77.

என்றும் கூறப்பட்டுள்ளது.[1] எனவே, பெண்களுக்குச் சொத்துரிமையைச் சாத்திரங்கள் முற்றிலுமாக மறுத்துவிடவில்லை என்பதை இதன் மூலம் உணரலாம்.

சீதனம் என்ற பெயரில் நகைகளையும், துணிமணிகளையும் பெண்கள் தங்கள் சொந்த உடைமைகளாகப் பெற்றுக் கொள்வதற்கும் பெரும்பாலான சட்டங்கள் அனுமதிக்கின்றன. மனைவியின் சொத்துக்களின்மீது கணவனுக்கும் சில உரிமைகள் உண்டு. இன்றியமையாது தேவைப்படும் சமயங்களில், மனைவியின் உடைமைகளைக் கணவன் விற்றுக்கொள்ளலாம். அவற்றை அவள் வேறு யாருக்கும் கொடுப்பதை அவன் தடுக்கலாம். எனினும், நடைமுறையில், அந்த உடைமைகள் அனைத்தும் அவளுக்குச் சொந்தமானவை என்றே கருதப்படும். அவள் இறந்துவிட்டால், அவளது உடைமைகள் யாவும் அவளுடைய புதல்விகளுக்குச் சேருமேயன்றி, அவளுடைய கணவனுக்கு சேரா. இவ்வாறு, வரையறுக்கப்பட்டதாயினும், பெண்களுக்கு ஓரளவு சொத்துரிமைகள் இருந்தன. ஆனால், ஆணுக்குச் சரிநிகரான அளவுக்குப் பெண் சொத்துரிமை பெற்றிருக்கவில்லை.

பெண்களின் சொத்துரிமை குறித்தும் பலவிதக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வந்தன. பெண்களுக்கு வாரிசுரிமை வழங்கவேண்டுமென பி. அனந்தாச்சார்லு இடையருது வலியுறுத்தி வந்தார். பெண்களுக்கு வாரிசுரிமை வழங்குவதைச் சாஸ்திரங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன என அவர் வாதிட்டார். இதற்கு யஜ்ஜியவல்கியரின் கருத்தை அவர் ஆதாரம் காட்டினார். "தந்தை இறந்த பிறகு, அவருடைய சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்யும்பொழுது, அவருடைய புதல்வர்களுக்குச் சமமான அளவுப் பங்கு தாய்க்கும் சேரவேண்டும்" என்று யஜ்ஜியவல்கியர் குறிப்பிட்டுள்ளார்.

முற்போக்கு எண்ணம் படைத்த தலைவர்கள் பெண்களுக்கு வாரிசுரிமை வழங்குவதை ஆதரித்தார்களாயினும், பெரும்பான்மை இந்துக்களின் கருத்து பெண்களுக்கு வாரிசுரிமை வழங்குவதற்கு எதிராகவே இருந்து வந்தது. இதற்கு ஆதரவாகப் பொதுமக்கள் கருத்து மாற்றம் பெறுவதற்கு நெடுநாட்கள் பிடித்தன. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரே, பெண்களின் வாரிசுரிமையும், தந்தையின் சொத்துகளில் பெண்களுக்குரிய உரிமையும் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

### தேவதாசி முறை

தேவதாசி முறையின்மீதும் முற்போக்கான பொதுமக்கள் கருத்தின் கவனம் திரும்பியது. பெண்களைக் கோயில்களுக்குத் தானம் கொடுப்பதே தேவதாசி முறையாகும். **1901**ஆம் ஆண்டுச் சென்னை

---

1. Max-Muller (Ed.)—*op.cit* Translated by G. Buhler — VIII 416—p. 326.

மக்கள்தொகைக் கணிப்பு அறிக்கையில் (Madras Census Report) தேவதாசிகளைப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> ''தமிழ்நாட்டுக் கோயில்களில் நடனமாடும் பெண்களே தாசிகள் அல்லது தேவதாசிகள் எனப்படுவோராவர். இவர்கள் நடனமாடியும், பாட்டுப் பாடியும் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களுடைய தொழில், உலகிலேயே மிகத் தொன்மையான தொழில் எனக் கருதப்படுகிறது. தொடக்கத்தில் வேற்றுச் சாதிகளைச் சேர்ந்த ஆண்பெண்களின் கூடாவொழுக்கத்தின் மூலம் பிறந்த பெண்களே கோயில்களில் தேவதாசிகளாக்கப் பட்டனர். ஆனால், நாளடைவில், மற்ற வகுப்பினர்கள் கோயில்களுக்குப் பெண்களைத் தானமாக வழங்கியதாலும், பெண்களை அடிமைகளாக விலைக்கு வாங்கியதாலும் தேவ தாசிகள் குலம் உருவாகியது.''[1]

தென்னகமெங்கும் எல்லா வகுப்பினரிடையிலும் தேவதாசி முறை நிலவி வந்தது. தெலுங்கு மாவட்டங்களில் தேவதாசிகளைப் 'போகம்கள்' என்றும் 'சனிகள்' என்றும் அழைத்தனர். ஒரிசாவில் 'கூனி' என்றும், தென் கன்னடத்தில் 'மாய்வி' என்றும் தேவதாசிகள் அழைக்கப்பட்டனர்.[2]

''பெல்லாரி மாவட்டத்தில் கன்னட மேற்கு தாலுக்காக்களிலும் அதையடுத்துள்ள தார்வார், மைசூர்ப் பகுதிகளிலும் போயர்கள் முதலிய சில சாதியினரிடையே விசித்திரமானதொரு பழக்கம் நிலவு கிறது. ஒரு குடும்பத்தில் ஆண் வாரிசு இல்லையெனில், அக்குடும்பத் தினர் தங்களுடைய பெண்மக்களுள் ஒருத்தியைப் பாசவியாக அர்ப் பணித்துவிடவேண்டும். அந்தப் பெண்ணைக் கோயிலுக்கு அழைத் துச்சென்று, கடவுளுக்கு அவளை மணமுடித்துவிடுவார்கள். மணம் முடிந்ததற்கு அடையாளமாக அவள் கழுத்தில் ஒரு தாலியையும், காலில் ஒரு மிஞ்சியையும் அணிவித்துவிடுவார்கள். அன்றுமுதல் அவள் பொது மகளாகிவிடுவாள். ஆனால். அவள் தனக்குத் தாழ் வான சாதியைச் சேர்ந்த ஆண்கள் யாருடனும் உறவுகொள்ளக் கூடாது. இவ்வாறு பொதுமகளான பெண்ணை யாரும் இழிவாகக் கருதுவதில்லை. அவள் கடவுளுக்கு மனைவியாக விடுவதால், அவள் ஒருபோதும் கைம்பெண்ணாகமாட்டாள் எனக் கருதி அவளை எல்லோரும் மரியாதையுடன் நடத்துவார்கள். வீடுகளில் நடக்கும் மங்கலச் சடங்குகளில் அவளுக்கு முக்கிய மரியாதை கிடைக்கும். திருமணங்களின்போது, தாலியை அவள் கையால் எடுத்துக் கொடுப் பதையே புனிதமானதாகக் கருதுகிறார்கள்.''[3]

---

1. *Census of India*, 1901, Vol. XV — Part I, Chap. VII — p. 151.
2. *Census of India*, 1901, Vol. XV, Madras — Part I, p. 152.
3. *Census of India*, 1901, Vol. XV; Madras — Part I — p. 152.

தேவதாசிகள் கோயில்களில் பலவிதமான பணிகளைச் செய்தார்கள். விழாக்காலங்களில் சுவாமி ஊர்வலமாகச் செல்லும் பொழுது, உற்சவமூர்த்திகளுக்குத் தேவதாசிகள் வெஞ்சாமரங்கள் வீசிச் சென்றனர்; கும்பாராத்தி விளக்குகளை ஏந்திச் சென்றார்கள்; நடனமாடினார்கள்; இசைபாடினார்கள்; அவர்கள் பரதநாட்டியம் பயின்று, அக்கலையில் தேர்ந்தவர்களாக விளங்கினார்கள். இசை, நடனம் போன்ற நுண்கலைகளை வளர்த்துச் சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவர்கள் துணைபுரிந்தார்கள்.

தென்னிந்தியக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிவந்தங்களைப் பற்றிய இடைக்காலக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் தேவதாசிகளைப்பற்றி ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. முதலாம் இராசராசசோழன் தஞ்சையில் தான் எழுப்பிய பிரகதீசுவரர் கோயிலில் (இராசராசேச்சுரம்) பணிபுரிவதற்காக "பதியிலார்" (தேவதாசிகள்) நானூற்றுவரை வேற்றூர்களிலிருந்து கொணர்ந்து, கோயிலைச் சுற்றிக் குடியமர்த்தி, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும், ஆண்டுதோறும் 100 கலம் நெல் வருமானம் தரக்கூடிய ஒரு வேலி நிலமும் மானியமாக வழங்கியதாகத் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. சாளுக்கிய மன்னன் நான்காம் விக்கிரமாதித்தனின் தளபதிகளுள் ஒருவனாகிய மகாதேவன் என்பான், தன்னுடைய தாயின் நினைவாக ஒரு பள்ளிப்படைக்கோயிலை நினைவாக எழுப்பி, அங்கு சேவைபுரிவதற்கு நாட்டிலேயே மிகவும் அழகிய தேவதாசிப் பெண்களைக் கொணர்ந்து, அவர்கள் குடியிருக்க வீடுகள் கட்டிக்கொடுத்ததாக ஒரு கல்வெட்டில் காணப்படுகின்றது.[1] இத்தகைய தேவதாசி முறை பரத்தமைத் தொழில் பெருகுவதற்கு வழிசெய்தது. இதுபற்றி எட்கார் தர்ஸ்ட்டன் (Edgar Thurston) குறிப்பிடுகையில், "தேவதாசித் தொழிலை இந்து சாஸ்திரங்கள் யாவும் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றன. அதே சமயம் இந்துக் கோயில்கள் அத்தொழிலுக்கு எப்பொழுதும் ஊக்கமளித்து வந்துள்ளன. இது இந்து சமயத்தில் காணப்படும் பல முரண்பாடுகளில் ஒன்று" என்று கூறுகிறார்.[2]

காஞ்சீபுரம் கோயிலில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏராளமான நாட்டிய மகளிர் இருந்தனர். "இவர்கள் கோயில் தெய்வங்களின் நன்மதிப்பைக் கருதி அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் பக்தர்களை மகிழ்வித்து வந்தனர். இவர்களுடன் யாராவது ஓர் ஆடவன் எப்பொழுதாவது கூடா ஒழுக்கம் புரிந்துவிட்டால், அது பெரும்பழிச் சொல்லுக்கு இடமாகியது" என்று எப். புக்கானன் (F. Buchanan) குறிப்பிடுகின்றார்.[3]

---

1. *Epigraphica Indica* — XII — p.36.
2. *Castes and Tribes of Southern India,* Vol. II — p. 126.
3. *Journey from Madras through the Countries of Mysore, Canara and Malabar,* Vol. I — p. 9.

இதேபோன்று, மதுரை, தஞ்சாவூர் ஆகிய ஊர்களின் கோயில்களில் ஏராளமான தேவதாசிகள் இருந்தனர். அவர்களுக்குக் கோயில்களின் அறக்கட்டளைகளிலிருந்து மானியங்கள் வழங்கப்பட்டு வந்தன.

தேவதாசி முறைக்கு எதிராகப் பொதுமக்கள் கருத்து படிப்படியாக உருவாகி வந்தது. இந்த முறையைக் கண்டித்து முதன்முதல் குரல் எழுப்பியவர்கள் வெளிநாட்டுச் சமயப் பிரசாரகர்களேயாவர். அவர்களைத் தொடர்ந்து பிரமசமாஜத்தினரும், பிற சமூகச் சீர்திருத்தவாதிகளும் இம்முறையை வன்மையாகக் கண்டிக்கலாயினர். அரசாங்கத் தரப்பில், முதன்முதலாக நாட்டிய மாதர்களுக்கு ஆதரவளிக்க மறுத்தவர் சென்னை ஆளுநராக இருந்த (1891-1896) வென்லாக் பிரபு (Lord Wenlock) ஆவார். 1905ஆம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வருகை தந்தபோது, அவருக்காக ஏற்பாடு செய்த கலைநிகழ்ச்சிகளில் நடனமாதர்களுக்கு இடமளிப்பதில்லையென வரவேற்புக் குழுவினர் ஒருமனதாக முடிவு செய்தார்கள்.[1]

"கோயில்களிலிருந்து நடனமகளிரை வெளியேற்றுத வரையில், நம்முடைய கோயில்களை முன்னேற்றவே இயலாது" என்று பி. அனந்தாச்சார்லு ஒருமுறை கூறினர்.[2]

இந்திய சமூகச் சீர்திருத்த மாநாட்டின் தூய ஒழுக்க இயக்கத்தை ஆதரித்த சென்னை இந்து சமூகச் சீர்திருத்தச் சங்கம், தேவதாசி முறைக்கு எதிராகத் தன் உறுப்பினர்களிடம் பின்வரும் உறுதிமொழிகளைப் பெற்றுக் கொண்டது. "ஆண்டவன் துணையோடு, பின்கண்ட வாக்குறுதிகளைக் காப்பாற்றுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றேன்:

1. நடனமகளிர் பங்குகொள்ளும் எந்தக் கூட்டத்திற்கும் நான் செல்லமாட்டேன்; நடனமகளிரை ஊக்குவிக்கக் கூடிய எத்தகைய நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டேன்.
2. தூய்மையற்ற மொழிகளைப் பேசமாட்டேன்; மட்டரகக் கேலி மொழிகளைக் கூறமாட்டேன்; தரக்குறைவான பாடல்களைப் பாடமாட்டேன்; அத்தகைய இழிந்த மொழிகளுக்கும், கேலிகளுக்கும், பாடல்களுக்கும் செவிமடுக்கவும் மாட்டேன்.
3. மட்டமான படங்களையோ, ஓவியங்களையோ, காட்சிகளையோ பார்க்கமாட்டேன்.
4. இழிந்த உணர்ச்சிகளைத் தூண்டி, தூய்மையற்ற சிந்தனைகளை எழுப்புகின்ற தரங்குறைந்த நூல்களைப் படிக்கமாட்

---

1. E. Thurston — *Castes and Tribes of Southern India*, Vol. II — p. 133.
2. C. Y. Chintamani (Ed.) *op.cit.* — Foot Note, p. 263.

டேன்; அவற்றைப் பற்றிப் பேசவும் மாட்டேன். இயன்ற வரையில் இழிவான சிந்தனைகளுக்கு இடங்கொடுக்கவும் மாட்டேன்.

5. உடலாலும், உள்ளத்தாலும், செயலாலும் தூயவனாக இருக்கப் பாடுபடுவேன். அத்தகைய தூய ஒழுக்கத்தை வளர்க்க முனைந்து நிற்பேன்.''[1]

சென்னை இந்துச் சீர்திருத்தச் சங்கத்தின் நான்காம் ஆண்டுவிழா *1896*ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் தேதி நடைபெற்றது. இவ் விழாவிற்குத் தலைமை தாங்கிய என். ஜி. சந்தாவர்க்கார், இச்சங்கத் தின் சேவையை வெகுவாகப் பாராட்டினார். "உங்கள் சங்கத்தின் செயல்திட்டங்களிலும், சொற்பொழிவுகளிலும், பத்திரிகைகளிலும் தூயவாழ்க்கையினை பெரிதும் வலியுறுத்தி வருவதைக் கண்டு நான் பெருமகிழ்வு கொள்கிறேன். சமூகச் சீர்திருத்த இயக்கத்தின் உயிர் மூச்சாக இருக்கவேண்டியது தூயவாழ்க்கைதான். வாழ்வுக்கு விழுப் பம் தரக்கூடிய ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புதல் வேண்டும் என்ற உங்கள் குறிக்கோளைச் சிலர் இன்று இகழ்ந்துரைக்கலாம்; 'தேவ தாசிக் கட்சியினர்' என்றெல்லாம் உங்களைக் கேலிசெய்யலாம்; நடைமுறைக்குதவாத வெறுங் கற்பனைவாதிகள் என்று உங்களை அவர்கள் எள்ளிநகையாடலாம். ஆனால், அதனைக் கண்டு நீங்கள் மனந்தளர்ந்துவிட வேண்டாம். இது எள்ளிநகையாடுபவர்களையும் விரைவிலேயே தன்பக்கம் கவர்ந்திழுத்து ஆட்கொள்ளக்கூடிய நிகரில்லா மந்திரசக்தி, 'பொய்தீர் ஒழுக்க நெறிக்கு' உண்டு என்று கூறி அவர் உற்சாகமூட்டினார்.[2]

தேவதாசி முறையை ஒழிக்க பிரமசமாஜத்தினர் பெரும் முயற்சிகள் மேற்கொண்டபோதிலும், அந்த முறை தொடர்ந்து நீடித்து வந்தது. தமிழகத்தில் மிக அண்மைக்காலம் வரையிலும் தேவதாசி முறை நிலைபெற்றிருந்தது.

## தீண்டாமைக் கொடுமை

மேனாட்டுத் தொடர்பினால் ஏற்பட்ட புதிய கருத்துகளின் தரக் குறைவினால், இந்நாட்டில் பன்னெடுங்காலமாக வேரூன்றிப் போயி ருந்த சாதிமுறை கலகலக்கத் தொடங்கியது. "தீண்டத்தகாத வர்கள்" இழிவாக நடத்தப்படுவதைச் சமூகச் சீர்திருத்தவாதிகள் யாவரும் வன்மையாகக் கண்டித்து, தீண்டாமையை ஒழிக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வந்தபோதிலும், இக்கொடுமைக்கு எதிராகப் பொதுமக்கள் கருத்து உருவாவது மிகவும் மெதுவாகவே நடைபெற்று வந்தது.

---

1. Ibid, Part I — p. 281.
2. *Ibid* — Part IV — p. 341.

இந்நாட்டில் தீண்டத்தகாதவர்கள் இடத்திற்கு இடம் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டனர். சர்க்கார் மாவட்டங்களில் (ஆந்திரம்) "மாலர்கள், மாடிக்கர்கள்" என்றும் தமிழ்நாட்டில் "பறையர்கள்" என்றும், கன்னடத்தில் "ஹோலியர்கள்" எனவும், மலபாரில் "போலியர்கள்" என்றும், மராட்டியத்தில் "தீடர்கள்" என்றும் இவர்கள் குறிப்பிடப்பட்டனர். ஸ்மிருதிகளில் இவர்கள் "சாண்டாளர்" எனக் குறிப்பிடப்பட்டனர்.

ஆபி தூபாய் (Abbe Dubois) என்பவர் தம் காலத்தில் "தீண்டத்தகாதவர்கள்" நிலை குறித்துப் பின்வருமாறு விவரித்துள்ளார்:

> "சமுதாயத்தில் குற்றங்கள் செய்தமையால், கௌரவமானவர்களுடன் தொடர்புகொள்ளும் உரிமைகள் பறிக்கப்பட்டு, சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் நாளடைவில் தனி வகுப்பினராகிவிட்டார்கள். இவர்களே 'பறையர்' எனப்படுவோராவர். இவர்கள் தனிவகுப்பினராகிவிட்டமையால், எதற்கும் அஞ்சவேண்டிய அவசியமில்லாமல், எதையும் இழந்துவிடுவோமோ என்ற கவலையுமில்லாமல், எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றிப் பலவிதக் குற்றங்களில் ஈடுபடும் மனப்போக்குடையவர்களாகிவிட்டார்கள், இவர்கள் தற்பொழுது இத்தகைய குற்றங்களைச் செய்தே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்."[1]

பறையர்களுக்குச் சமூகத்தில் மிகவும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. மொத்தத்தில் இவர்கள் சபிக்கப்பட்ட "பாவி"களைப்போல் நடத்தப்பட்டனர். "யாராவது ஒருவரை ஒரு பறையன் தெரிந்தோ தெரியாமலோ தொட்டுவிட்டால், அவருக்குத் தீட்டுப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது; அவர் குளித்துவிட்டுத் தன் உடலைத் தூய்மையாக்கிக் கொள்ளாதவரை அவர் வேறு யாருடனும் பேசக்கூடக்கூடாது. இந்தச் சாதியைச் சேர்ந்தவர்களுடன் சாப்பிடக்கூடாது; இவர்கள் சமைத்த உணவைத் தொடவும் கூடாது; இவர்கள் இறைக்கும் நீரைக் குடிக்கவும் கூடாது; இவர்கள் கையில் ஏந்திய மண்சட்டியைப் பயன்படுத்தக் கூடாது; இவர்களுடைய வீட்டிற்குள் காலடி வைக்கக்கூடாது; இவர்களையும் வீட்டுக்குள் வரவிடக் கூடாது"[2] என்று ஆபி தூபாய் காலத்தில் சித்திரிக்கப்பட்ட இந்த நிலைமை நம்முடைய ஆய்வுக்குரிய காலத்திலும் பெருமளவில் அப்படியே நீடித்தது எனலாம்.

இந்தத் தீண்டாமைக் கொடுமைக்கு முடிவுகட்டச் சீர்திருத்தவாதிகள் பெரும் முயற்சிகள் எடுத்தார்கள். சென்னையில் 1894ஆம் ஆண்டில் நடந்த, இந்தியச் சமூகச் சீர்திருத்த மாநாட்டில் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

1. Henry K. Beauchamp's translation of Abbe Dubois: *Hindu Manners, Customs and Ceremonies*, vol. I, p. 53.
2. *Ibid*, pp. 52-53.

"ஒரே சாதியைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் 'சமபந்திபோஜனம்' செய்வதற்கு உள்ள தடங்கல்கள் அனைத்தையும் நீக்கும் வகையிலும், தற்போதைய விதிகளின்படி 'சமபந்தி போஜனம்' செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பிரிவினரிடையே கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையிலும் சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவரத் தீவிர முயற்சிகள் எடுக்கவேண்டும்"

எனத் இத் தீர்மானம் வலியுறுத்தியது.[1]

கல்கத்தாவில் 1896 ஆம் ஆண்டில் நடைபெற்ற பத்தாவது சமூகச் சீர்திருத்த மாநாட்டிலும் தீண்டாமையைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"இந்தியா முழுவதிலும் உள்ள பறையர்களுக்கும் மற்றத் தீண்டத்தகாத சாதியினருக்கும் கல்வி போதித்து, சமூக வசதிகள் அனைத்தையும் செய்துகொடுப்பதை, இந்நாட்டிற்கு நிரந்தரமான நன்மை செய்யவேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்ட அனைவரும் தங்களுடைய தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும். இவர்களுக்குள்ள தடைகளையெல்லாம் நீக்கி, இவர்கள் கல்வியால் உயர்ந்து, தொழில்களிலும் மேல்நிலை அடைவதற்கு இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும்"

என்று அத்தீர்மானம் வலியுறுத்தியது.[2]

### 'பறையருக்கும் விடுதலை'

தமிழ்நாட்டில் தீண்டாமைக் கொடுமையினையும், சாதி முறையினையும் வன்மையாகக் கண்டித்தவர்களுள் அமரகவி சுப்பிரமணிய பாரதியார் தலையாயவர். அவர் 'தொண்டுசெய்யும் அடிமை' என்னும் கவிதையில், ஆங்கில அதிகாரி ஒருவன், ஓர் இந்தியனைப் பார்த்து,

"சாதிச் சண்டைபோச்சோ? — உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்லிவந்தாய் — கண்முன்
நிற்கொணுது போடா?"

எனக் கூறுவதுபோல் பாடி, இந்நாட்டில் நிலவும் சாதிசமயப் பூசல்களைக் கண்டித்துள்ளார். சாதிகள் நிறைந்த நிகழ்கால பாரதத்தை,

"சாதிநூறு சொல்லுவாய்
போ போ போ"

என்று சபித்து விரட்டினர்.

---

1. Reso. No. X — C. Y. Chintamani — *op.cit.*, Appendix No. 19, p. 371.
2. Reso. XI of the 10th Congress of 1896-Vide C.Y. Chintamani, *op.cit.*, Appendix No. 31, p. 374.

''சாதிப்பிரிவுகள் சொல்லி — அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப்பிரிவுகள் செய்வார் — அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்''

என்று சாதி வெறியர்களைச் சாடிவிட்டு,

''சாதிக் கொடுமைகள் வேண்டாம் — அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதரவற்றிங்கு வாழ்வோம் — தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்''

என்று சாதிசமயப் பாகுபாடற்ற சமரச சமுதாயம் அமைப்பதற்கு அழைப்பு விடுத்தார்.

''சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''

எனக் குழந்தைகளுக்கு உபதேசித்த பாரதியார்,

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்''

என்று இளையபாரதத்தை நோக்கிச் சமரச முழக்கமிட்டார்.

''சாதி இரண்டொழிய வேறில்லை' என்றே
தமிழ்மகள் சொல்லிய சொல்அமிர்த மென்போம்;
நீதிநெறியினின்றும் பிறர்க் குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்''

எனப் பாரத தேசத்தவர்க்குப் பண்டைத் தமிழ் மக்களின் பரந்த பொது நோக்கினைச் சுட்டிக்காட்டிய பாரதியார், பாரதநாட்டின் விடுதலைக்காகச் 'சுதந்திரப்பள்ளு'ப் பாடும்பொழுது,

''பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே — வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே''

என்று ஆனந்தக் கூத்தாடி,

''பறையருக்குமிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை''

என 'விடுதலை'க் குரல் எழுப்பினர்.

கேரளத்தில் தங்கள் எழுத்து மூலம் சமூகச் சீர்திருத்தங்களுக் காகத் தீவிரமாகப் போராடியவர்களுள் குமாரன் ஆசான் (*1871-1924*)

வள்ளத்தோல் நாராயண மேனன் (*1878-1958*) ஆகியோர் தலையாயவர்கள் ஆவர். ஈழவர் என்ற தாழ்ந்த குலத்தவரான குமாரன் ஆசான் சமூகக் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்துப் பல நூல்கள் எழுதினர். இவருடைய 'துரவஸ்தா' என்ற நூல், சந்தர்ப்ப வசத்தால் ஒரு தீண்டத்தகாதவனை மணந்துகொண்ட பிராமணப் பெண் ஒருத்தியின் வாழ்க்கையைக் கூறுகிறது. 'சண்டாளபிக்ஷுணி' என்ற இவருடைய இன்னொரு நூலும், சாதிமுறையின் கொடுமையை விவரிப்பதாகவே உள்ளது. சாதி இந்துக்கள் தம் குலத்தருக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டபோது உண்டான உணர்ச்சிகளையெல்லாம் இவர் தம்முடைய கவிதைகளில் வடித்தார்.[1] இவ்வரைப்போலவே, வள்ளத்தோளும் சமூகத்திலுள்ள தீண்டாமை போன்ற தீமைகளைத் தம்முடைய கவிதைகளில் வன்மையாகக் கண்டித்தார்.

வழக்கம்போலவே தீண்டாமையை ஒழிப்பதற்குச் சமூகத்தில் ஒரு வைதீகப் பிரிவினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்கள். சாதி முறை என்பது சனதன தருமத்தினல் நிருணயிக்கப்பட்டதென்றும், அதை மாற்ற முடியாது என்றும், அப்படி முயன்ருல் சமய விவகாரங்களில் தலையிடும் முயற்சியாகும் என்றும் இவர்கள் வாதிட்டார்கள். மேலும், அடுக்கடுக்கான சமூக வகுப்புகள், சாதிப்பிரிவுகளாக உறுதியடைந்துவிட்டமையால், சாதி முறையில் மாறுதல் ஏற்படுத்துவது மிகவும் கடினமாகிவிட்டது. ஆகவே, இந்த ஆய்வுக்குரிய காலத்தில், தீண்டத் தகாதவர்களுக்கு எதிரான சமூகக் கொடுமைகளை அகற்றுவதற்கு உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆயினும், ''சட்டத்தின்முன் யாவரும் சமம்'' என்னும் கொள்கையை ஆங்கில ஆட்சியாளர்கள் கண்டிப்பாகச் செயல்படுத்தியதாலும், புதிதாக ஏற்பட்ட இரயில்வே போன்ற போக்குவரத்துச் சாதனங்களில் சாதி முறை அனுமதிக்காததாலும், சாதிமுறையின் தீவிரம் தாளுகவே தளர்ச்சியடையலாயிற்று. காந்தியடிகள் தோன்றி தீண்டாமையை ஒழிக்கவும், தீண்டத்தகாதவர்களின் சமூக நிலையை உயர்த்தவும் தீவிர முயற்சிகள் மேற்கொண்டார். தீண்டத்தகாதவர்களை ''கடவுளின் குழந்தைகள்'' எனப் பொருள்படும் ''அரிசனங்கள்'' என்னும் பெயரால் அழைத்தார். காந்தியடிகள் இத்தகைய முயற்சிகளில் இறங்கிய பிறகுதான், இச்சாதியினரின் நிலைமை முன்னேறலாயிற்று.[2]

## *அயல்நாட்டுப் பயணம்*

இந்துக்கள் கடல்கடந்து பயணம் செய்யக்கூடாதென்பது சாதி முறையோடு தொடர்புடைய மற்ருெரு பிரச்சினையாக இருந்தது.

1. Dr. Nagendra (Ed.) — *Indian Literature* — Malayalam by Dr. K. M. George, p. 228.
2. Vide M. K. Gandhi — *The Removal of Untouchability*, p. 16.

இதுபற்றியும் நம் ஆய்வுக்குரிய காலத்தில் பெரும் சர்ச்சை நடந்து வந்தது.

பண்டைக்காலத்தில் இந்துக்கள் அடிக்கடிக் கடல்கடந்து வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார்கள். ஆனால், 11ஆம் நூற்றாண்டு முதல் கடல் கடந்து பயணம் செய்வது சமய விரோத நடவடிக்கையாகக் கருதப்படலாயிற்று. அதனால், கடல்கடந்து பயணம் செய்தவர்கள், சமூக விலக்கம் செய்யப்பட்டனர்.

சாதிமுறை மேன்மேலும் உறுதிபெற்று வந்தமையாலும், அயல் நாடுகளுக்குச் செல்பவர்கள் விலக்கப்பட்ட உணவுகளை உண்டு, விலக்கப்பட்ட திருமண உறவுகளைக் கொண்டுவிடக்கூடும் என்ற அச்ச உணர்வாலும் கடல்கடந்து செல்வது சமயவிரோதம் என்ற எண்ணம் உருவாகியிருக்கக்கூடும். ஆயினும், மேனாட்டுக் கல்வி இந்தியாவில் பரவத் தொடங்கியதும், ராஜா ராம்மோகன் ராய் போன்ற இந்து அறிஞர்கள் இந்தியாவிற்கு வெளியே கடல்கடந்து செல்லலானார்கள்; அயல்நாட்டுப் பயணம் அதிகப் பயனுடையதாகவும் மதிப்புடையதாகவும் கருதப்படலாயிற்று. எனவே, அயல் நாட்டுப் பயணத்திற்கு ஆதரவாகப் பொதுமக்கள் கருத்து உருவாகியது.

சென்னை இந்து சமூகச் சீர்திருத்தச் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு விழாக் கூட்டம் 1897ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றபோது அக்கூட்டத்தில் உரையாற்றிய ஜி. சுப்பிரமணிய ஐயர்,

> " இந்துக்கள் கடல்கடந்து பயணம் செய்யக்கூடாது என்பதற்குச் சரியான காரணத்தை இதுவரை யாரும் கூறியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்துக்கள் தமக்குதாமே இத்தகையதொரு தடையை விதித்துக்கொண்டு, ஒதுங்கி வாழ்ந்ததன் காரணமாக, இந்துக்களின் பண்பியல்புகள் பெரிதும் மோசமடைவதற்கு வழி உண்டாயிற்று என்பதில் ஐயமில்லை. அவர்களை அறியாமை ஆட்கொண்டது; போலித்தனமும் தற்செருக்கும் அவர்களிடம் குடிகொண்டன. அயல்நாட்டாருடன் தாராளமாகத் தொடர்புகொள்வதால், நாகரிகக் கலைகளை நன்கு வளர்த்து வளப்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால், இந்துக்கள் அயல்நாட்டாரோடு தொடர்பு கொள்ளாதிருந்தமையால், இந்த அரிய வாய்ப்பை இழந்தார்கள். இதனால் நம்முடைய நாகரிகக் கலைகளை வளர்ப்பதிலும் அவர்கள் ஊக்கம் குன்றியவர்களானார்கள். வெளி உலக அறிவுகளையெல்லாம் அவர்கள் இழந்தார்கள்; ஆண்டவனின் பிரபஞ்சம் முழுவதுமே தங்கள் நாடும், அதில் வாழும் தாங்களுமே என்று அவர்கள் நம்பினார்கள். இந்த உலகில் மக்கள் அறிய வேண்டுவனவற்றையெல்லாம் தாங்கள் ஏற்கெனவே அறிந்துகொண்டுவிட்டதாகத் தற்பெருமையடித்தார்கள். தாங்கள் தற்போது அடைந்துள்ள நிலைக்குமேல்

> மனிதகுலம் முன்னேறுவதற்கு வேறொன்றுமில்லை என்று அவர்கள் கருதினார்கள்''

என்று இந்துக்களின் மூடத்தனத்தைச் சாடினார்.[1]

நாளடைவில் கடல்கடந்து பயணம் செய்வதைச் சமயவிரோதமாகக் கருதும் பழக்கம் மறைந்துவிட்டது. இலண்டன், பாரிஸ், நியூயார்க் முதலிய அயல்நாட்டு நகரங்களுக்குப் பல இந்துக்கள் அடிக்கடிச் சென்று வரலாயினர். நம்நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய பெருந்தலைவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலக்கல்வி கற்றவர்கள் மட்டுமின்றி, அயல்நாடுகளுக்கும் சென்று வந்தவர்கள் எனில் அது மிகையாகாது.

இக்காலத்தில், வெளிநாட்டுப் பயணம் சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. ஒரு காலத்தில், சமயம் காரணமாக வெளிநாட்டுப் பயணம் கடுமையாக எதிர்க்கப்பட்டது என்பதை இன்று நம்புவது கூட கடினமாக இருக்கிறது. நவீன வாழ்க்கை நிலைகளின் தரக்குறைவினால், பொதுமக்கள் கருத்து எந்த அளவுக்கு மகத்தான மாறுதலையடைகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும்.

## குடிக்கொடுமை

மிகப் பழங்கால முதலே மதுபானம் குடிக்கும் பழக்கம் இந்திய மக்களிடையே பெருமளவில் நிலவி வந்துள்ளது. வேதகாலத்தின் பிற்பகுதியில் குடிப்பழக்கம் கண்டிக்கப்பட்டது. மதுப்பழக்கத்தை ஐம்பெரும் பாவங்களில் ஒன்றெனச் சாத்திரங்கள் கண்டித்துள்ளன.

முஸ்லீம்களின் வேதமாகிய திருக்குரானில் மது அருந்துதல் கண்டிக்கப்பட்டுள்ளது. எனினும், முஸ்லீம்கள் பெருமளவில் மது அருந்தி வந்தார்கள். ஐரோப்பியர்கள் இந்தியா வந்தபின், அயல்நாட்டு மதுபானங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. அதனால், இந்நாட்டில் மது அருந்துவதும் அதிகமாயிற்று. அதே சமயத்தில், பல்வேறு சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பொதுமக்கள் கருத்தை உருவாக்கிய படிப்பறிவுமிக்க பெருந்தலைவர்களும், அறிஞர் பெருமக்களும் குடிப்பழக்கத்தை எதிர்த்துப் பிரசாரம் நடத்தி வந்தார்கள். பொருளியல், சமூகவியல் இரண்டின் அடிப்படையிலும் குடிப்பழக்கம் கொடுமையானது என்று அவர்கள் கருதினார்கள். நிதானமான நிலையில் உள்ளபோது செய்வதற்குத் தயங்குகின்ற குற்றங்களையெல்லாம், குடிப்பழக்கமுள்ளவர்கள் குடிபோதையில் செய்துவிடுகிறார்கள். குடிகாரர்களின் உடல் ஆரோக்கியமும் மதுபானங்களினால் சீர்கெடுகிறது. அனைத்திற்கும் மேலாக, குடிகாரர்கள் தாங்கள் அரும்பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் குடிப்பதற்காக வாரி இறைத்துவிட்டு நிரந்திரமாக வறுமைக் கடலில் ஆழ்ந்துவிடுகிறார்கள். ''தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பண்ணை

1. C. Y. Chintamani (Ed.) — *op.cit*. p. 348.

யாட்கள் என்றென்றும் வறுமையிலேயே வாடுகிருர்கள். ஈட்டும் பொருள்களையெல்லாம் குடித்துத் தீர்ப்பதில் அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவதும், மழைக்காலத்திற்குத் தேவையான நெல்லைச் சேமித்துப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் அவர்களுக்கு ஆர்வ மின்மையும் அவர்களை மீளாத வறுமைச் சேற்றில் சிக்கவைத்திருக் கின்றன. மிகவும் காட்டுமிராண்டித்தனமுடைய ஒரு சமூகம், பண்ணையாள் சமூகமேயாகும். இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களுள் பெரும்பாலோர் பறையர் சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நிலப் பிரபுகளுக்கு அடிமைகளைப்போல் பண்ணை வேலைகளைச் செய் கிருர்கள். இவர்களின் வாழ்க்கை மாடுகளைப்போன்ற அடிமை விலங்குகளின் வாழ்க்கையாகவே இருந்து வருகிறது" என்று தஞ்சாவூர் மாவட்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.[1] தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டுமின்றி, பொதுவாகத் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலுமே நிலைமை இவ்வாறுதான் இருந்தது.

மதுபானங்களை இந்துமதம், இஸ்லாம் மதம் இரண்டுமே வன்மை யாகக் கண்டித்தமையால், பொதுமக்கள் கருத்து குடிப்பழக்கத் திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவே இருந்தது. குடிப்பழக் கத்தை மக்கள் அறியாதிருந்த இடங்களில்கூட, உள்ளூர் மக்களின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், குடிப்பழக்கத்தை இந்திய அரசினர் புகுத்தி விட்டனர் என்றும், இதனுல் பொதுமக்களின் வாழ்வு அவலத்திற்கும் அழிவிற்கும் உள்ளாகிவிட்டதென்றும் இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய டபிள்யூ. எஸ். கெயின் (W. S. Caine), சாமுவேல் ஸ்மித் (Samuel Smith) ஆகிய இரு வரும் கடிந்துரைத்திருக்கிருர்கள். இங்கிலாந்து மக்கள் சபையில் ***30—4—1889*** அன்று, இந்தியாவில் மதுபானம், கள், கஞ்சாக் கடை களைத் திறப்பதைத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை சாமுவேல் ஸ்மித் கொண்டுவந்தார். இத்தீர்மானத்தில்,

> "இந்தியாவில் இதுவரையிலும் மதுபானங்கள் இல்லாதிருந்த இடங்கள் பலவற்றில் உள்ளூர் மக்களின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், சாராயம், கள், மதுபானம், கஞ்சாபோன்ற போதைப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகளைத் திறப் பதற்கு இந்திய அரசினரின் இன்றைய நிதியியல் முறை வழி செய்கிறது. இவ்வாறு மதுபானக்கடைகளைத் திறப்பதால், மது பானம் அருந்தும் பழக்கம் பெருகிவருகிறது. அதனுல், இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தினர் வாழ்வு, வறுமைக்கும் அழிவுக்கும் உள்ளாகின்றது. எனவே, இத்தகைய கடைகளைக் குறைப் பதற்கு இந்திய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும் என இந்தச் சபை கேட்டுக் கொள்கிறது"

என வலியுறுத்தப்பட்டிருக்கிறது.[2]

இந்த தீர்மானத்தை இங்கிலாந்து அரசாங்கமே வன்மையாக எதிர்த்தது. எனினும், இதற்கு ஆதரவாக ***113*** வாக்குகளும், எதிராக

1. Vide S. Srinivasa Raghavaiyangar — *op.cit.*, p. 145.
2. Vide C. Y. Chintamani (Ed.) — *op.cit.* — Part I, p. 91.

100 வாக்குகளும் கிடைத்தன. மக்கள் சபையில் தீர்மானம் நிறைவேறியது. இத் தீர்மானத்தை இந்தியா அமைச்சர் உடனே இந்திய அரசுக்கு அனுப்பினர். அதற்கிணங்க, இந்திய அரசினர், பல்வேறு மாகாணங்களிலும் கலால் வரித் துறையின் நிருவாகம்பற்றி விசாரணை நடத்த உத்திரவிட்டது. ஆனல் இந்த விசாரணையினல், பெரும் மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. மதுபானங்கள் மீதான கலால்வரியின் மூலம் கலால்வரித்துறைக்குக் கிடைக்கும் பெருமளவு வருமானத்தைச் சிறிதளவேனும் குறைப்பதற்குரிய எந்த நடவடிக்கையையும் எடுக்க அதிகாரிகள் தயாராக இல்லை. எனவே அரசாங்மும் இப்பிரச்சினை மீது சிறிதும் அக்கறையோ ஆர்வமோ காட்டவில்லை.

இந்தியாவில் மதுவிலக்கைக் கொண்டுவருவதற்காக கெயின், ஸ்மித் ஆகிய இருவரும் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நன்றியும் பாராட்டுதலும் தெரிவித்து 1896ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த பத்தாவது இந்தியச் சமூகச் சீர்திருத்த மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. “குடிப்பழக்கம் ஆதியிலிருந்தே தோன்றியதல்ல; மிகச் சிறுபான்மையினரே குடிப்பழக்கம் உடையவர்களாக இருக்கிறுர்கள். குடியை வெறுக்கும் பெரும்பான்மை மக்கள், உள்ளூர் மக்களில் கருத்தையறிந்துகொண்டு, தங்களின் மதுவிலக்குக் கொள்கையை நிலைநாட்டிக் கொள்வதற்கு அதிகாரம் பெறவேண்டும். ஆங்கில — அமெரிக்கக் குடியொழிப்புச் சங்கங்களின் ஒத்துழைப்பின்றி இதைப் பெறமுடியாது” என்றும் இத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.[1]

அரசினரின் வருவாயில் பெரும்பகுதி மதுபானங்களின் மீதான கலால்வரி மூலம் கிடைத்து வந்தது. *1881* முதல் *1890* வரையிலான பத்தாண்டுகளில் சாராயக்கடைகள் மூலம் அரசுக்குக் கிடைத்த சராசரி ஆண்டு வருமானம் ரூ. 46 இலட்சம்; *1891* முதல் 1900 வரையிலான பத்தாண்டுகளில் இத்தொகை ரூ. 5.65 இலட்சமாக உயர்ந்தது. *1903-1904*ஆம் ஆண்டில்மட்டும் ரூ. 72 இலட்சம் வருமானம் கிடைத்தது.[2] கள்ளுக் கடைகள் மூலம் அரசுக்குக் கிடைத்த சராசரி வருமானம் *1881-1890*இல் ரூ. *31* இலட்சம்; *1891-1900*இல் ரூ. 65.75 இலட்சம்; *1903-1904*இல் ரூ. *88* இலட்சம்.[3]

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான எல்லா மதுபானங்களின் வாயிலாகவும் (சுங்கவரி நீங்கலாக) அரசுக்கு *1881-1891*இல் ரூ. 4 இலட்சமும், *1891-1900*இல் ரூ. 3.5 இலட்சமும்; *1903-04*இல் ரூ. 4 இலட்சமும் சராசரி வருமானம் வந்தது.[4] கஞ்சாவின் மூலம் கிடைத்த

1. Vide C. Y. Chintamani (Ed.) — *op.cit.* Appendix No. 22 — p. 372.
2. *Imperial gazetteer of India* — Madras Presidency, Vol. I, p. 105.
3. *Ibid.*
4. *Ibid.*

சராசரி வருமானம் **1891-1900**இல் ரூ. **90,000; 1903-04**இல் ரூ, **3** இலட்சம்.[1]

**1909** முதல் **1910** வரையில் எல்லா மதுவகைகளின் வாயிலாகவும் அரசுக்குக் கிடைத்த மொத்த வருமானம் ரூ. **2,56,61,084.**[2]

## மதுவிலக்கு

இந்திய தேசீயக் காங்கிரசுக்குக் காந்தியடிகள் தலைமை ஏற்றவுடன் கள், சாராயம், மதுபானம் போன்ற போதை தரும் பொருள்களைப் பொதுமக்கள் பயன்படுத்துவதைத் தடைசெய்வதைக் காங்கிரசின் முக்கியமான சீர்திருத்தங்களுள் ஒன்ருகக் கொண்டார். காங்கிரசுக்காரர்கள் அனைவரும் இச்சீர்திருத்தத்திற்காக முனைந்து பாடுபடலாயினர். சென்னை மாகாணத்தில் **1937**ஆம் ஆண்டில் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் காங்கிரசு அமைச்சரவை அமைத்தபோது, சேலம் மாவட்டத்தில் அதே ஆண்டில் மதுவிலக்கு அமுலாக்கப்பட்டது. இந்தியா விடுதலையடைந்தவுடன், தமிழகம் முழுவதிலும் பூரண மதுவிலக்கைச் செயலாக்கிய பெருமையைத் தமிழகம் பெற்றது. மதுவிலக்குச் சட்டத்தை இயற்றுவதற்குப் பொதுமக்கள் கருத்துப் பெருந்துணைபுரிந்தது. அமெரிக்காவில் பரிசோதனை முறையில் மதுவிலக்கு செயலாக்கப்பட்டபோது, தோல்வி கண்டது. அங்குப் பொதுமக்கள் கருத்து, மதுவிலக்கிற்கு எதிராக இருந்தமையே தோல்விக்குக் காரணம். ஆனால், இந்தியாவில் மதுவிலக்கு கொண்டுவரப்பட்டபோது முழுவெற்றி பெற்றது. இங்குப் பொதுமக்கள் கருத்து குடிப்பழக்கத்திற்கு எதிராகத் தீவிரமாக இருந்தமையே இவ்வெற்றிக்குக் காரணம். ஒரு சட்டத்தின் வெற்றி தோல்விக்குப் பொதுமக்கள் கருத்து எந்த அளவுக்குக் காரணமாக இருக்கின்றது என்பதற்கு இது ஒரு சான்ருகும்.

தமிழக அரசு, நிதி நெருக்கடி காரணமாக **30—8—1971** முதல் மதுவிலக்கைத் தற்காலிகமாக விலக்கி வைத்தது. "தமிழக அரசு மதுவிலக்கைத் தற்காலிகமாகத்தான் விலக்கிவைத்திருக்கிறது; முற்றிலும் கைவிட்டு விடவில்லை. நிலைமைமாறி, அவசியம் நேரிடுமானல் மதுவிலக்கை மீண்டும் கொணர அரசு தயங்காது" என்று அன்றைய கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறிய கருத்து, அரசாங்கத்தின் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. பின்னர், மதுவிலக்கைப் பொதுமக்கள் ஆதரிப்பதாகத் தெரிந்ததும், **1—9—1973** முதல் மதுவிலக்கைப் படிப்படியாக அமுலாக்கத் தமிழக அரசு முடிவு செய்தது. **1—9—1974** முதல் தமிழக மாநிலம் முழுவதிலும் பூரண மதுவிலக்குக் கொண்டுவரப்பட்டது. பிறகு ஜூன் **1981** முதல் தமிழக அரசு மதுவிலக்கை விலக்கி வைத்தது. இன்றைய தமிழக அரசு தற்காலிகமாக மதுவிலக்கை மறுபடியும் சில கட்டுப்பாடுகளுடன் விலக்கி வைத்துள்ளது.

---

4. *Ibid.*
5. Report on the Administration of the Madras Presidency during the years 1910-1911, p. 71.

### *சமயப் பிரச்சினைகள்*

இந்தியாவிலும் சென்னை மாகாணத்திலும் பண்டைக்காலத்தில் சமயப்பிரச்சினைகளைச் சார்ந்தே, பொதுமக்கள் கருத்து உருவாகியது. பிற்காலத்தில்கூட, பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் சமயம் பெரும்பங்கு பெற்றது. ''இந்திய மக்களைப் போல் சமய உணர்வு மிகுந்த வேறு மக்களை ஐரோப்பியர்கள் கண்டதே இல்லை'' என்று பேராசிரியர் எம். இரத்தினசுவாமி குறிப்பிட்டுள்ளார்.[1]

கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் தொடக்கத்தில் இந்திய மக்களின் சமயப் பூசல்களில் தலையிட விரும்பவில்லை. ''இந்தியர்களின் சமயப்பூசல்களில் தலையிடுவது அறிவுடைமையாகாது என வாணிகக் குழுவின் நிருவாகக்குழு கருதுகிறது. முன்பின் தெரிந்திராத சமயப் பிரச்சினைகளில் தலையிட்டு முடிவுகளைக் கூறுவதால் குடிமக்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டு அமைதியின்மை உண்டாகும் என நிருவாகக்குழு கருதுகிறது'' என 1795ஆம் ஆண்டில் சென்னை ஆளுநர் ஹோபர்ட் பிரபு (Lord Hobart) கூறிய கருத்து அன்றைய ஆங்கில நிருவாகத்தினரின் கருத்தைப் பிரதிப்பலிப்பதாகும்.

எனினும், சமய உணர்ச்சிகள் மேலிட்டுச் சமயச் சண்டைகளாக உருவாகிப் பொது அமைதியைக் குலைத்தபோது, அரசாங்கம் அமைதியை நிலைநாட்டத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. 1786ஆம் ஆண்டில் சர் ஆர்ச்பால்டு காம்ப்பெல் -(Sir Archbald Campbell), சென்னை ஆளுநராகப் பதவியேற்ற சமயத்தில் சென்னை எஸ்பிளனேடுப் பகுதி வழியாக ஊர்வலம் செல்வது குறித்து ஒரு தகராறு எழுந்தது. ஊர்வலத்தில் வலங்கை சாதியினர் தாரைதப் பட்டை, சேகண்டி, மணி ஆகியவற்றை முழங்கிக்கொண்டு சென்றனர். இவ்வாறு தாரைதப்பட்டை, சேகண்டி, மணி முழங்குவது இடங்கைசாதியினருக்கேயுரிய தனியுரிமை என்றும், வலங்கை மொழிசாதியினர் தங்களுடைய உரிமையை மீறிவிட்டார் என்றும் டங்கைசாதியினர் ஆளுநரைச் சந்தித்து முறையிட்டார்கள்.[2]

இத்தகராறு குறித்து அரசாங்கம் விசாரணை நடத்தி பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> ''இனிமேல் இப்பகுதியில் கலவரங்கள் நிகழாமல் தடுப்பதற்காக, ஒவ்வொரு சாதியினரும் தங்கள் தங்கள் பழக்கவழக்கத்தின்படி சடங்குகளை நடத்திக்கொள்ள உரிமை உண்டு என அரசு தீர்மானித்திருக்கிறது. எனினும், எஸ்பிளனேடுப் பகுதியில் தங்களுக்கே தனி உரிமை உண்டு என உரிமைகொண்டாட எந்த சாதியினருக்கும் உரிமை கிடையாது. எஸ்பிளனேடுப் பகுதி எல்லா நாட்டவருக்கும், எல்லாச் சாதியினருக்கும் பொதுவான பகுதியாகும். கறுப்பு நகரிலும் அதையடுத்த கிராமங்

---

1. *Op. cit.*, p. 632.

2. H. D. Love — *Vestiges of Old Madras* — Vol. III, p. 390.

களிலும் வழக்கமாக அனுசரிக்கப்படும், விதிமுறைகளுக்குட்பட்டு, எஸ்பிளனேடுப் பகுதியிலும் எந்தப் பிரிவினரும் ஊர்வலங்கள் நடத்திக் கொள்ளலாம்''[1]

சமயப் பிரச்சினைகளில் தலையிட நேர்ந்தபோதுகூட, வாணிகக் குழுவினர் தன்னிச்சையாகத் தலையிடவில்லை. தகராறு செய்து கொண்ட தரப்பினருள் யாரேனும் ஒருவர் வேண்டிக்கொண்டாலன்றி, அரசாங்கமும், முற்றிலும் சமயம் சம்பந்தமான தகராறுகளில் தலையிடவில்லை. சென்னைத் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் எந்த வழிபாட்டு வாசகத்தை ஓதுவது என்பது குறித்து தென்கலை, வடகலைப் பிரிவினரிடையே நெடுங்காலமாக நிலவிவந்த பூசலைத் தீர்த்துவைக்கும்படி *1790*ஆம் ஆண்டில் திருவல்லிக்கேணிப் பிராமணர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள். இது பற்றி இருதரப்பினரின் வாதங்களையும் கேட்டறிந்த சென்னை ஆளுநர் சாண்டர்ஸ் (Saunders), இந்தக் கோயிலில் ஒரே சுற்றுப் பிரகாரத்தில் இரண்டு கோபுரங்கள் இருப்பதால், மேற்குக் கோபுரக் கோயிலில் வடகலையார் தங்கள் வழிபாட்டு வாசகங்களை ஓதி வழிபடலாம் என்றும் கிழக்குக் கோபுரக் கோயிலில் தென்கலையார் தாங்கள் விரும்பும் வாசகங்களை ஓதி வழிபடலாம் எனவும் உத்தர விட்டார்.[2] இதற்கு மாருக, **1795**ஆம் ஆண்டில், ஹோபார்ட் பிரபு சென்னை ஆளுநராக இருந்தபோது, அவர் சமயப் பூசல்களில் தலையிட அடியோடு மறுத்துவிட்டார்.[3]

### கிறிஸ்தவ மதப் பிரசாரம்

கிறிஸ்தவ மத போதகர்கள் இந்தியாவில் சமயப் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் நடவடிக்கைகளை இந்தியர்கள் ஐயக் கண்கொண்டு நோக்கலாயினர். கிறிஸ்தவப் பாதிரிமார்களின் சமயப் பிரசார நடவடிக்கைகளை வாணிகக் குழுவின் உயர் அதிகாரிகள் சிலர் தனிப்பட்ட முறையில் ஊக்குவித்தார்கள். இதுகண்டு இந்துக்களும், முஸ்லீம்களும் கொதிப்படைந்தார்கள். கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்களின் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதைப் பெரும்பாலான அதிகாரிகள் விரும்பவில்லை என்றும், எனினும் சில சமயப்பிரசாரகர்களின் சமயப் பணிகளுக்குப் பகிரங்கமாகவே அதிகாரப்பூர்வமான ஆதரவு அளிக்கப்பட்டு வந்ததெனவும் சென்னை ஆளுநர் சர் தாமஸ் மன்ரோ தமது குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். சமயப் பிரசாரத்தை ஆதரிக்கும் இத்தகைய நடவடிக்கைகளைத் தமது குறிப்பில் மன்ரோ வன்மையாகக் கண்டித்திருக்கிருர்.

"எந்த நாட்டிலும், குறிப்பாக இந்த நாட்டில், இந்நாட்டின் மக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இனத்தைச் சேர்ந்தவர்

1. P. C. Vol. CXXXIX, 5th of August, 1786.
2. *Ibid*, p. 389.
3. See Supra, p. 129.

களாகவும், மிகச் சிலராகவும் இருக்கும் ஆட்சியாளர்கள், சமய உணர்ச்சிகளைப் பாதிக்கும் எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடுவது மிகவும் ஆபத்தானதாகும். மேற்போக்காகப் பார்க்கும் பொழுது மக்களின் மனக்குமுறல் நமக்குத் தோன்ருமல் போகலாம். ஆனுல்; வேலூரில் நிகழ்ந்ததுபோன்று, நாம் சற்றும் எதிர்பாராத சமயத்தில், மக்களின் மனக்குமுறல், பொங்கும் எரிமலையாகப் பயங்கர வடிவில் வெடித்தெழக்கூடும். ஒரு சிறு தீப்பொறி ஒரு பெருந்தீவிபத்துக்கு வித்திடுவதுபோல், ஓர் அற்பமான நிகழ்ச்சி, பெரும்புரட்சியைத் தூண்டிவிட்டு விடலாம். அந்தப் புரட்சி ஓராண்டுக்காலத்தில் செய்யும் தீங்குகளைச் சமயப் பிரசாரகர்கள் நூருண்டுகள் பாடுபட்டாலும் போக்கிவிட இயலாது. நாம் விரைவில் அடக்கிவிடக்கூடிய சிறு கலவரம் மூண்டாலும்கூட, அதனுல் உண்டாகும் தீமை என்றும் அழிக்க முடியாத அளவுக்கு நிலைபெற்றுவிடும். அரசுக்கும் மக்களுக்குமிடையே அவநம்பிக்கை தோன்றிவிடும். அந்த அவநம்பிக்கையை ஒருபோதும் அடியோடு அகற்றிவிட இயலாது. கலவரம் மூண்ட மாவட்டம் அதன்பின் ஒருபோதும் பாதுகாப்புடையதாக அமையாது''

என்று தாமஸ் மன்ரோ தொலைநோக்குணர்வுடன் விடுத்த எச்சரிக்கை பின்னர் உண்மையாயிற்று.[1] ஆனுல், மன்ரோவின் இந்த எச்சரிக்கைக்கு ஐரோப்பிய அதிகாரிகள் செவிசாய்க்கவில்லை. அவர்கள் தொடர்ந்து கிறிஸ்தவ சமய போதகர்களின் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து வந்தார்கள். அவர்களின் நடவடிக்கைகள் மக்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்த்தன. ஆங்கில ஆட்சியாளர்கள் தங்களுக்கு அளித்த உறுதிமொழியை மீறிவிட்டதாக மக்கள் மனங்குமுறினர்கள்.

சென்னைச் சுதேசி சங்கமும், மற்றும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த இந்து, முகமதிய மக்களின் சங்கங்களும் ஒருங்கிணைந்து கிறிஸ்தவ சமயப் பிரசாரத்திற்கு எவ்வாறு அரசாங்க ஆதரவு அளிக்கப்படுகிறது என்பதை விளக்கி ஒரு நீண்ட மனுவைத் தயாரித்து இந்தியா அமைச்சர் ஸ்டான்லி பிரபுவுக்கு (Lord Stanley) அனுப்பி வைத்தன. இந்த மனுவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

''சென்னை ஆளுநர் ஹாரிஸ் பிரபு, 1856ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், சென்னை இராயப்பேட்டையில், அந்தப் பகுதியில் வாழ்ந்துவரும் முகமதிய சமூகத்தினரிடையே, கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன், ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்காக மிகவும் ஆடம்பரத்துடன் அடித்தளக்கல் நாட்டினர். இந்தப் பகுதி மக்களுக்குக் கல்வி போதிப்பதற்காக இக்கட்டிடம் கட்டப்படுவதாகக் காரணம் கூறப்படுகிறது. இந்தப் பகுதியைச் சேர்ந்த திருவல்லிக்கேணியில் மேதகு நவாப் அவர்களால்

1. John Bradshaw — *Rulers of India — Sir Thomas Munro*, p. 184.

நிறுவப்பட்ட முஸ்லிம் பள்ளி (Madrissa-i-Anzum) இயங்கி வருகிறது. நவாப் இறந்தபின், இப்பள்ளி அரசாங்கப் பொதுக்கல்வி இயக்குநரின் (Director of Public Instruction) நிருவாகத்தின்கீழ் நடந்து வருகிறது. இந்தப் பள்ளியில் தொடக்கத்திலிருந்து முஸ்லீம் மாணவர்களுக்குக் குர்ஆன் போதிக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்பள்ளி அரசின் நிருவாகத்தின்கீழ் வந்ததும் குர்ஆன் போதனை நிறுத்தப்பட்டுவிட்டது. இதன்மூலம் முஸ்லீம் இளைஞர்கள் தங்கள் சமயத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டார்கள். இந்த நிலையில், கல்வி போதனைக்கு என்ற காரணம் கூறி, இங்குப் புதிதாக கிறிஸ்தவர்கள் ஒரு நிறுவனத்தைத் தொடங்குகிறார்கள். இந்த நிறுவனம், சமயச் சார்பற்ற கல்வி போதனைக்காக அல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது"[1]

மேலும், இதே பகுதியில், கிறிஸ்தவ நிறுவனத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்திற்கு அடுத்த இடத்திலேயே வேறொரு கல்வி நிறுவனம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் இந்து, முஸ்லீம் ஐரோப்பிய சமூகங்களைச் சேர்ந்த 235 மாணவர்கள் படித்து வருகின்றார்கள்.

இராயப்பேட்டை இந்து, முஸ்லீம் மக்களின் இந்த எதிர்ப்பை அரசினர் பொருட்படுத்தவில்லை. ஆளுநர் ஹாரிஸ் பிரபுவின் ஆதரவுடன் கிறிஸ்தவக் கல்வி நிறுவனம் தொடங்கப்பெற்றது. அதற்கு ஹாரிஸ் பள்ளி என்றே பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பள்ளிக்கு ஹாரிஸ் பிரபுவின் உறவுக்கார அம்மையார் ஒருவர் கணிசமான தொகை ஒன்றை நன்கொடையாக வழங்கினார். ஹாரிஸ் பிரபுவும் ஆளுநருக்குரிய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்பள்ளிக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கென அரசு உதவி நிதியிலிருந்து ரு. 7000 மானியமாக வழங்கினார். இந்தச் சமயக் கல்வி நிறுவனத்தை நிருவகிக்கும் பொறுப்பு, தேவாலய நற்பணிக் கழகத்திடம் (Church Mission Society) ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம், பொதுக் கல்வி இயக்குநரின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டபொழுது இதன் பெயர் "திருவல்லிக்கேணி முகமதியர்களுக்குக் கல்வி போதிப்பதற்கான ஹாரிஸ் பள்ளி (Harris School for the instruction of Mohamedans in Triplicane) என வழங்கப்பட்டது. இப்பள்ளி தொடங்கிய ஆண்டில் இதில் ஆறு மாணவர்கள் சேர்த்தார்கள். 1857-58ஆம் ஆண்டில் இதில் 15 மாணவர்களே படித்தார்கள் எனக் கல்வி அதிகாரியின் அறிக்கை ஒன்று கூறுகிறது. இதிலிருந்து, அரசாங்கம் ஊக்கமளித்தபோதிலும்கூட, இந்தச் சமயப்பள்ளியை இப்பகுதி மக்கள் ஆதரிக்கவில்லை என்பதும், இந்தப் பள்ளி இப்பகுதிக்குத் தேவையானதாக இருக்கவில்லை என்பதும், மக்களின் வரிப்பணத்தை அரசாங்கம் இதுபோன்ற தேவையற்ற செலவுகளில் வாரி இறைத்து விரயமாக்கி வந்தது என்பதும் தெளிவாகின்றது.

---

1. G. O. No. 1044, Pub. Dept., dated 9-7-1859, para 8.

### ஆளுநர் சமயப் பிரசாரம்

கிறிஸ்தவச் சமயச் சார்புடைய இரண்டு பொதுக்கூட்டங்களில் ஆளுநர் ஹாரிஸ் பிரபு கலந்துகொண்டதையும், அக்கூட்டங்களின் விவாதங்களில் கலந்துகொள்ள அரசு உயர் அதிகாரிகளை அவர் அனுமதித்ததையும் மனுதாரர்கள் தங்கள் மனுவில் சுட்டிக் காட்டியிருந்தார்கள். "21—1—1858ஆம் தேதியன்று மவுன்ட் சாலையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் (Christ Church), குடியேற்றத் தேவாலயச் சங்கத்தின் (Colonial Church Society) கூட்டம் ஒன்று சென்னை மேற்றிராணியார் (Bishop) தலைமையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் ஆளுநர் ஹாரிஸ் பிரபு கலந்துகொண்டதுடன், அதில் உரையும்ஆற்றினார். அவர் தம்முடைய உரையில், "நம்முடைய கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகப் பாடுபடும் பணியை இனிமேலும் பின்னணியில் ஒதுக்கிவைத்திருக்கக் கூடாதென நம்நாட்டுப் பத்திரிகைகளும், கழகங்களும், சமயச் சங்கங்களும் தீவிரமாக வலியுறுத்திக் குரல் எழுப்பி வருகின்றது. நம்முடைய மதக் குறிக்கோள்களையும் அதன்பெருமைகளையும் மக்களிடையே நாம் தீவிரமாக எடுத்துரைக்க வேண்டும். இதைத்தான் இங்கிலாந்திலுள்ள நம்முடைய சோதரர்கள் பெரிதும் வலியுறுத்தி வருகிறார்கள். இப்பணியைச் செய்வதற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆகவே, நான் உங்களைக் கேட்கிறேன் — விவிலிய வேதநூலின் நண்பர்களாகிய நாம் இனியும் இந்நாட்டில் வாளா இருக்கலாமா? இல்லை; இருக்கக்கூடாது. இந்த அறப்பணியில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, நம்முடைய முயற்சிகள் அனைத்தையும் இந்தத் தெய்வீகப் பணியில் ஈடுபடுத்துவோமாக" என்று கூறியுள்ளார். அதே கூட்டத்தில் நிறைவேறிய முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவர் வால்ட்டர் எலியட் என்ற அரசாங்க அதிகாரியாவார்; இத்தீர்மானத்தை வழிமொழிந்தவர் சி. ஆர். பேய்ன்ஸ் (C. R. Baynes) என்ற நீதிபதியாவார். இத்தீர்மானத்தில், "இந்த நாட்டில் இருளடைந்த பகுதிகளில் கிறிஸ்துவின் ஆட்சியை விரிவுபடுத்துவதற்குத் தனி முயற்சிகள் மேற்கொள்ளவும் தியாகங்கள் செய்யவும் நாம் முன்வர வேண்டும். இச்சங்கத்தை ஆதரிக்கவும் இதன் அலுவல்களை விரிவுபடுத்தவும் புதிதாகத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது. இன்னும் அரசாங்க நிருவாக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் பலரும் இந்தக் கூட்டத்தின் விவாதங்களிலும் ஆலோசனைகளிலும் கலந்துகொண்டார்கள். மொத்தத்தில், அரசாங்கத்தின் தூண்டுதலோடும், ஆதரவோடும் இந்த நாட்டின் மதத்தைத் தாக்கவும் இழிவுபடுத்தவும் கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசாங்கத்தின் சார்பில் நடந்த ஒரு கிறிஸ்தவ பிரசாரகக் கூட்டம்போல் இந்தக் கூட்டம் காட்சியளித்தது" இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.[1]

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த மற்றொரு கூட்டம், 9—2—1858 அன்று நடந்ததாகும். இக்கூட்டம் வேப்பேரியில் புனித

1. Ibid, Para 2.

ஆண்ட்ரு தேவாலயத்தில் (St. Andrew's Church) விவிலிய சங்கத்தின் சார்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கும் ஹாரிஸ் பிரபுவே தலைமைதாங்கினர். இந்தக் கூட்டத்தைப் பற்றிய அறிக்கையில், "இந்த நாட்டின் பாவஞ்சூழ்ந்த மக்களிடையே உண்மை ஒளியைப் பரப்புவதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இதுவே தக்க தருணமாகும். இரத்தம் சிந்தி நாம் பெற்ற அனுபவத்திலிருந்து மனித மனத்தை மென்மையாக்கிச் சமனப்படுத்துவதற்கு வெறும் சமயச் சார்பற்ற கல்விமட்டும் போதாது என்பதை அறிந்துகொண் டிருக்கிறோம். இந்நாட்டுமக்கள் பின்பற்றிவரும் போலிச் சமயங்கள், சென்ற ஆண்டு நிகழ்ந்த கொடூரங்களை அனுமதிக்கின்றன என்பதை இந்நாட்டு மக்களுக்கு உணர்த்தி, அவர்களை கிறிஸ்தவ சமயத்தின் கருணை ததும்பும் பரந்த மனக்கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்தல்வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் அரசாங்க மதகுருவான டாக்டர் மர்ஃபி (Dr. Murphy) என்பவர் நீண்டதோர் உரை நிகழ்த்தினர். அவர் தமது உரையில், "நம் மகுடத்தை மனிதன் எடுத்துக்கொள்ளட்டும். எல்லாப் பணியினை யும் செய்யும் பெருமையினை நம் நாட்டு நண்பர்களுக்கு நாம் அளிக்கவேண்டாம். இங்கு பாடுபடுவதற்கு அவர்களை நாம் முன் மாதிரியாக கொள்வோம். இதுவரை இல்லாதவரையில் விவிலியத் தின் பெருமையை நாம் உயர்த்துவோம். நமது கொள்கையின் சின்னமாக விவிலியம் விளங்கட்டும். 'விவிலியம் உலகை வெல் லும்' என்பது நமது கொள்கை முழக்கமாக அமையட்டும்" என்று கூறியிருக்கிறார்.[1]

ஹாரிஸ் பிரபுவின் வாதம் இத்தகைய மதமாற்ற முயற்சிகளை ஆதரிப்பதாக இருந்தது. "அரசாங்கம் தன்னுடைய நடவடிக்கை களினல் மதமாற்றத்தை ஊக்குவிக்கிறது என்ற குற்றச்சாட்டை தவிர்க்க இயலாது. இந்தக் குற்றச்சாட்டை அல்லது ஐயத்தை எழுப்புகின்றவர்கள் பொதுமக்கள் அல்ல; கொள்கையற்ற ஐரோப் பியர்கள் சிலரால் தூண்டப்பட்ட ஒரு சிலர்தான் இவ்வாறு குரல் எழுப்புகின்றனர்கள்" என்று ஹாரிஸ் பிரபு கூறினர். அவருடைய இந்தக் கூற்றையும் மனுதாரர்கள் தங்கள் மனுவில் மறுதலித்திருந் தார்கள். "ஹாரிஸ் பிரபுவின் இந்தக் கூற்று முற்றிலும் தவருனது. மதமாற்ற முயற்சிகளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது என்ற ஐயத்தை தமிழகமக்கள் அனைவரும் பட்டிதொட்டிகளில் வாழும் மக்கள் எல்லோரும் எழுப்புகிறர்கள். அரசாங்கம் மேற்கொள்ளும் ஒவ் வொரு நடவடிக்கையும் இந்த ஐயத்தை எழுப்புகிறது. நாட்டின் பிற பகுதிகளில், துப்பாக்கிக் குண்டுகளில் கொழுப்புத் தடவுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மதமாற்ற முயற்சிகளில் அரசாங்கம் பகிரங்கமாகவே ஈடுபட்டு வந்துள்ளது. கட்டாயத்திலும் மோசடி யினலும் மதமாற்றம் செய்வதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்ற கருத்து தமிழகத்திலும் நிலவி வருகிறது. காலத்தின் அறிகுறிகளைக் கவனித்தறியும் திறமையுள்ள அரசாங்கமாக இருந்திருந்தால், அர

1. Ibid, para 3.

சாங்கத்தின் மதமாற்ற முயற்சிகள், பெரும்புரட்சிக்கு வழிவகுக்கும் என்பதை முன்னதாக உணர்ந்தறிந்திருக்க முடியும். ஆனல், புரட்சி மூள்வதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியவந்த போதிலும்கூட, மதமாற்றம் செய்வதில் ஹாரிஸ் பிரபுவுக்கு இருந்த அதிதீவிரமான ஆர்வம், அந்த முன்னெச்சரிக்கைகளுக்குத் திரையிட்டு அவருடைய கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவிட்டது. உண்மையை உணர்ந்துகொள்ள மறுத்துக் கண்மூடிக்கொண்டிருப்பவர்கள்தான் தாங்கள் விரும்பாத உண்மைகளை மறுத்துரைக்கும் மனப்போக்குடையவர்களாக இருக்கிருர்கள். ஹாரிஸ் பிரபு அந்த வகையைச் சேர்ந்தவரேயாவார்'' என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.[1]

## கட்டாய மதபோதனை

பஞ்சாப் தலைமை ஆணையாளராக இருந்த சர் ஜான் லாரன்ஸ் (Sir John Lawrence) என்பவர் கல்லூரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையொன்றில், ''கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் நூலகங்களிலும் விவிலிய நூல் இடம்பெறவேண்டும். அதைப் படிப்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களும், கற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களும் இருந்தால் விவிலிய நூலை வகுப்புகளில் கற்பிக்கவேண்டும்'' என்று உத்தரவிட்டிருந்தார். ''இதே நடவடிக்கையை இலங்கையிலுள்ள குடியேற்ற அரசாங்கம் எடுத்துள்ளது. இலங்கைத் தீவிலுள்ள பள்ளிகளில் விவிலிய நூல் கற்பிக்கப்படுகிறது. அதே முறையை இந்தியாவிலும் ஏன் புகுத்தக் கூடாது?'' என்று லாரன்ஸ் குறிப்பிட்டிருந்தார். லாரன்ஸின் இந்த உத்தரவையும் மனுதாரர்கள் வன்மையாகக் கண்டித்திருந்தார்கள். தமிழ் மக்களின் சமய உணர்வு பற்றிக் குறிப்பிடுகையில், ''இந்தியத் துணைக்கண்டத்தில், குறிப்பாகச் சென்னை மாகாணத்தில் நினைவுக் கெட்டாத காலம் முதலே இந்துமதம் வலுவாக வேரூன்றியுள்ளது. இங்கு உலகப் புகழ்பெற்ற தொன்மைவாய்ந்த கோயில்கள் பல உள்ளன. தமிழக மக்கள், மற்றப் பகுதி மக்களைப்போல் அயல் நாட்டார் படையெடுப்புகளால் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை தென்னகத்தில் மைசூர், திருவாங்கூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஆண்டுவரும் அரச குடும்பங்கள் அனைத்தும் இந்துமதத்தைச் சேர்ந்தவையாகும். சீக்கியர்களையோ சிங்களவர்களையோ போலன்றி, தமிழக மக்கள் சிறிதும் கலப்படமற்ற இந்துமதக் கோட்பாடுகளை அல்லது இஸ்லாமியக் கோட்பாடுகளைப் பின்பற்றி வருபவர்களாவர். அவர்கள் தங்கள் மதத்தையும், வேதநூல்களையும், கோயில்களையும், பழக்கவழக்கங்களையும் தங்களின் உயிர்மூச்சாகப் போற்றிக் காத்து வருகிருர்கள். எனவே, அரசினர் ஆணை பிறப்பித்தவுடனேயே, அவர்கள் தங்களின் உயிரினுமினிய சமயக் கொள்கைகளைக் கைவிட்டுவிட்டு, கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்களின் ஆக்கிரமிப்புக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவர்களின் பின்னல் ஓடிவந்து விடுவார்கள் எனக் கருதுவது தவருனதாகும். மேலும், தங்களுடைய

1. Ibid — para 19.

குழந்தைகளின் பச்சிளம் உள்ளங்களில் அரசினர் ஆசிரியர்களைக் கொண்டு கிறிஸ்தவக் கோட்பாடுகளைப் புகுத்துவதையும் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்” என்று மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது. விவிலிய வகுப்புகளுக்குச் செல்லவேண்டுமென இந்திய மாணவர்களைக் கட்டாயப்படுத்துவதையும் இந்த மனு வன்மையாகக் கண்டித்தது.

“இந்திய இளைஞர்களைக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கத்தின் ஆசியுடன் வலுக்கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. விவிலிய வகுப்புகளில் விரும்புகிறவர்கள் சேரலாம் என பஞ்சாப் தலைமை ஆணையாளரின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், விவிலிய வகுப்புகளை நடத்துவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அரசினரின் ஆதரவைப் பெறவேண்டுமென்ற ஆர்வத்தில், மாணவர்களைக் கட்டாயமாக இவ்வகுப்புகளில் சேர்த்து வருகிறார்கள்”

என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

“எந்தவொரு சமயத்தையும் சாராதவர்களிடமோ அல்லது சட்டையைக் கழற்றி எறிவதுபோல் அடிக்கடி மதம் மாறிக் கொண்டிருப்பவர்களிடமோ கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரம் செய்வதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நடவடிக்கையினையும் தங்கள் சமயம் போதிக்கும் புனிதச் சடங்காகக் கருதி அதன்படி வாழ்ந்து வருகின்ற — அந்தச் சடங்குகளைக் கடைப்பிடித்து வருவதுதான் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டுக்கும் நலம் பயக்கும் எனக் கருதிக்கொண்டிருக்கின்ற — அந்தச் சமயக் கடமைகளினின்றும் சிறிது வழுவினாலும் வாழ்வில் குழப்பமும், துன்பமும், பகைமையும், விரோதமும் சூழ்ந்து சமூக ஒற்றுமை குலைந்து, குடும்ப அமைதி அழிந்து, ஒழுக்க சீலங்கள் எல்லாம் உருக்குலைந்து, அறநெறிகள் எல்லாம் அறவே பாழாகி மக்களின் மகிழ்ச்சி ஒழிந்து துயரம் பெருகிவிடும் என்று உளமார நம்பிக் கொண்டிருக்கின்ற சமய உணர்வுமிக்க ஒரு நாட்டு மக்களின் குழந்தைகளின் கள்ளமில்லா உள்ளத்தைக் களங்கப்படுத்த முயல்வதை யாராலும் அனுமதிக்க இயலாது. இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது நியாயமும் அல்ல; பாதுகாப்பானதுமல்ல. இத்தகைய முயற்சிகளை அரசாங்கம் அனுமதித்தமையினால்தான், டுவீடேல் பிரபு (Lord Tweeddale) நிருவாகத்தில் பல இடங்களில் கலவரங்கள் மூண்டன. அவர் சென்னை ஆளுநராக இருந்தபோது, 1846ஆம் ஆண்டில் சென்னை உயர்நிலைப்பள்ளிகளில், விவிலிய வகுப்பு தொடங்க முயன்றார். இந்த முயற்சியை எதிர்த்து வாணிகக்குழுவின் இயக்குநர் குழுவிற்கு வன்மையான கண்டனக் கடிதம் ஒன்று எழுதப்பட்டது”

என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்த வாசகமும் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அந்த வாசகம் வருமாறு:

"பள்ளிகளில் விவிலிய போதனை வகுப்புகளை டுவிடேல் பிரபு தொடங்குவதற்கான ஒரே நோக்கம், தேசீயப் பள்ளி களில் பயிலும் இந்தியக் குழந்தைகளை அவர்களுடைய சொந்தச் சமயத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றுவதேயாகும். கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள், பிற மதத்தினரைத் தங்கள் மதத் திற்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளும் முதல் நடவடிக்கை தங்கள் வேதநூல் பாடபோதனையைத் தொடங்குவதுதான் என்பது எங்களுக்கு நன்ருகத் தெரியும். எனவே மதப் பிரசார கர்களின் அந்த நடவடிக்கையை டுவிடேல் பிரபு தாம் மேற் கொள்வதன் மூலம், அவரே ஒரு மதபோதகராக ஆகிவிடுகிருர். அதுமட்டுமின்றி, இயக்குநர் குழுவின் பிரதிநிதி என்ற முறையில் உங்களையும் அவர் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கவைக்கிருர்."

"டுவிடேலின் விவிலிய வகுப்புக்கு கடும் எதிர்ப்புத் தோன்றியுள்ளது. இவ்வெதிர்ப்பின் காரணமாக, இவ்வகுப்பு களைத் தொடங்குவதற்கு இயக்குநர் குழு தடை விதித்ததைத் தொடர்ந்து, எதிர்ப்புக்கிளர்ச்சிகள் யாவும் கைவிடப்பட்டு விட்டன. எனினும், அந்த எதிர்ப்பு நீருபூத்த நெருப்பாய் இன்னும் கனன்றுகொண்டே இருக்கிறது. சர் ஜான் லாரென் ஸின் புதிய விவிலிய வகுப்புத் திட்டம், டுவிடேலின் பழைய திட்டத்தின் புதிய வடிவமோ என்ற ஐயத்தை எழுப்புகின்றது. கனன்று கொண்டிருக்கும் எதிர்ப்புத் தீயை மீண்டும் கொழுந்து விட்டெரியச் செய்யும் பெருந்தீயாக மாற்றுவதற்கு இந்த ஐயம் தூண்டுகோலாக அமைந்துவிடும் என அஞ்சுகிருேம்."

மனுதாரர்களின் மனுவிலிருந்து இதுகாறும் குறிப்பிடப்பட்ட வாசகங்கள், இந்தப் பிரச்சினை தமிழகத்தில் எந்த அளவுக்கு மக் களின் உணர்ச்சியைத் தூண்டி எழுச்சியூட்டியிருந்தது என்பதற்குச் சான்ருகும். கிறிஸ்தவர்களின் சமயப் பிரசார நடவடிக்கைகளையும், அவற்றை அரசினர் ஆதரிப்பதையும் எதிர்த்துத் தமிழக மக்கள் இடைவிடாமல் கிளர்ச்சி செய்துகொண்டே இருந்தார்கள். **1—2—1861**ஆம் தேதியன்று சென்னை நகரவாசிகள், கிறிஸ்தவ மதப் பிரசாரத்தை எதிர்த்து மனு ஒன்றைத் தயாரித்து இந்தியா அமைச்ச ருக்கு அனுப்பினுர்கள். அந்த மனுவில் பின்வருமாறு கூறப் பட்டிருந்தது:-

"இந்திய குடிமக்கள், பலசாதிகளையும் வகுப்புகளையும் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் தங்கள் சாதி சமயத்திற்குரிய தனி உரிமைகளையும் சலுகைகளையும் உடையவர்களாக உள்ளனர். இந்த உரிமைகளும், சலுகைகளும் பன்னெடுங் காலமாகவே நிலைத்து நீடித்து வந்துள்ளன. முகமதி யர் ஆட்சியில்கூட, வேறு வகையில் அவர்களின் ஆட்சி கொடுமையாக இருந்தபோதிலும், இந்த உரிமைகளையும் சலுகை களையும் அவர்கள் பறிக்காமல் நாங்கள் அனுபவித்துவர அனுமதித்தார்கள். எங்களுடைய சமயக் கொள்கைகளை

முகமதிய அரசர்கள் எதிர்த்த போதிலும் கூட, எங்களுக்கு வழங்கிவந்த அரசு மானியங்களை அவர்கள் நிறுத்தவில்லை. கோயில்களைப் பராமரிப்பதற்கு சுதேச அரசர்கள் வழங்கிவந்த நிதி உதவிகளையெல்லாம் முகமதிய அரசர்கள் தொடர்ந்து வழங்கி வந்தார்கள். அதுமட்டுமின்றி, புதிதாக இந்துக் கோயில் களைக் கட்டுவதற்கும் முகமதிய அரசர்கள் தாராளமாக நன்கொடைகள் வழங்கினுர்கள். சமயச் சகிப்புணர்வுக் கொள்கை முழு அளவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. தங்களுடைய முகமதிய முன்னோர்கள் காட்டிய இந்த உன்னத வழியைப் பிரிட்டிஷ் அரசினரும் பின்பற்றி வந்தனர். இந்துக் களின் சமய விவகாரங்களிலும், சாதி உரிமைகள் சலுகைகளி லும் தலையிடாமல் நடுநிலையுடன் பிரிட்டிஷ் அரசினர் நடந்து வந்தார்கள்.''

''பிரிட்டிஷ் ஆட்சியில் 60 ஆண்டுகள் வரை நாங்கள் எங்களுடைய சமய உரிமைகளையும் சலுகைகளையும் எவ்விதத் தங்குதடையுமின்றி அனுபவித்து வந்தோம். எங்களுடைய சமய நம்பிக்கைகளிலும், சடங்குகளிலும் அரசினர் தலையிட மாட்டார்கள் எனப் பிரிட்டிஷ் அரசாங்கம் அடிக்கடி வாக்குறுதி அளித்து வந்தபோதிலும், அண்மைக்காலமாக, எங்களுடைய இந்தத் தனிஉரிமைகளிலும் சலுகைகளிலும் அரசாங்கம் படிப் படியாகத் தலையிட்டு வருகிறது. அரசாங்கம் நேரடியாகத் தலையிடாவிட்டாலும், கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்கள் நடவடிக் கைகளுக்கு அரசாங்கம் மறைமுகமாக ஆதரவும் ஊக்கமும் அளித்து வருகிறது.''

''மனச் சோர்வகற்றும் மாமருந்தாகச் சமயத்தை மதித்துப் போற்றி வரும் நாங்கள், கிறிஸ்தவ சமயத்தை மதிக்கிறேம்; போற்றுகிறேம். அதே சமயத்தில், எங்களுடைய சொந்த சமயத்தின் பெருமைகளை எங்கள் மக்களிடம் எடுத்துரைக்கவும் எங்களுடைய சமய உரிமைகளைப் பாதுகாக்கவும் எங்களுக்கு உரிமை உண்டு என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேம். எங்கள் சமயத்தை மற்றவர்கள்மீது வலுக்கட்டாயமாகப் புகுத்து வதை நாங்கள் விரும்பவில்லை; அதேபோல், அயல் சமயத்தை எங்கள்மீது வலுவில் திணிப்பதையும் நாங்கள் விரும்பவில்லை. சமயம் காரணமாக எந்த மதத்தினருக்கும் அரசாங்கம் தனி உரிமையோ சலுகையோ வழங்கக்கூடாதென நாங்கள் கருது கிறேம். அதேபோல், சமயம் காரணமாக எந்தச் சமயத்தினரின் உரிமைகளையும் சலுகைகளையும் பறிக்கக்கூடாதெனவும் நாங்கள் கருதுகின்றேம். எல்லாச் சமயத்தினருக்கும் சட்டப்படி சரிசமமான பாதுகாப்பும் உரிமைகளும் வழங்குதல் வேண்டும்; மேலும், எந்தச் சமயத்தினரின் வெறுப்புக்கும் உள்ளாகாத வகையில், எந்தச் சமயத்தினர் வழிபாடுகளிலும் சமய நம்பிக் கைகளிலும் தலையிடாத முறையில் ஆட்சியிலுள்ளவர்கள் நடு

நிலைக் கண்ணோட்டத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம்.''

''மேற்கண்ட உறுதிமொழியை 1858ஆம் ஆண்டுப் பேரரசியாரின் பிரகடனம் எங்களுக்கு வழங்கியுள்ளது. ஆனால், இந்த உறுதிமொழி ஏட்டளவில்தான் இருக்கிறதேயொழிய, நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் தங்கள் சமயப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்பைவிட இப்பொழுது அதிக அளவில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பிரசாரம் வெறும் அவதூறாகவும் இந்திய மக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்கள் எழுதி வெளியிடும் துண்டு வெளியீடுகள் எங்களை இழிவுபடுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன், எங்களுடைய சாதி, சமய உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் தாக்கி எழுதும்படி பத்திரிகை ஆசிரியர்களைத் தூண்டுகின்ற விதத்திலும் அமைந்திருக்கின்றன. இத்தகைய தாக்குதல்களில் ஈடுபடும் பத்திரிகை ஆசிரியர்களின் செயல்கள் அநியாயமானதென்றும், அவமானகரமானதென்றும் இங்கிலாந்தில் மதிப்பிற்குரிய அரசியல் மேதையாக விளங்கும் எல்லன்பரோ பிரபு, நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கடிந்துரைத்திருக்கிறார். கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களின் ஆசை வார்த்தைகளினால் மயங்கி மதம் மாறியவர்களும் எங்கள் மதத்தை இழிவாகவும் அவதூறாகவும் பேசிவருகிறார்கள்.''[1]

''தரங்கை நேசன்'' என்னும் பத்திரிகை தனது 7—9—1889ஆம் தேதி இதழில், சென்னை பெரம்பூரில் மாதா கோயில் ஒன்று கட்டப்பட்டு வருவது பற்றிக் குறிப்பிடுகையில், ''அரசாங்கத்தின் பல முக்கியமான துறைகளில் இன்றியமையாத சீர்திருத்தங்களைச் செய்வதற்கு நிதிநெருக்கடி எனக் காரணம் கூறி அரசினர் சாக்குப் போக்குச் சொல்லி வருகின்றனர். ஆனால், அதேசமயத்தில் சென்னை பெரம்பூரில் கிறிஸ்தவ மாதாகோயில் ஒன்றைக் கட்டுவதற்குப் பெருந்தொகையை மானியமாக வழங்கியுள்ளனர். இந்துக்கள் கொடுக்கும் வரிப்பணத்தைக் கிறிஸ்தவர்களுக்காக மாதா கோயில் கட்டுவதற்காகச் செலவிட்டு அரசாங்கம் மக்கள் பணத்தை வீண்விரயமாக்குவது வருந்துதற்குரியது'' என்று கண்டித்துள்ளது.[2]

பள்ளிகளில் விவிலிய நூலைப் போதிப்பதற்கான வகுப்புகள் நடத்துவது குறித்து எழுந்த சர்ச்சை பற்றிப் பத்திரிகைகளின் மூலமாகவும் பொதுமக்கள் கருத்து வெளியாகி வந்தன. 'சுதேச

1. Proceedings of the Madras Government — Public Department — No. 204, dated the 26th February, 1861 — pp. 203-204.
2. Newspaper Report (Confidential), dated 15th September, 1889 — p. 188.

*மித்திரன்'* பத்திரிகை தனது *9—1—1901*ஆம் தேதி இதழில் இப் பிரச்சினை குறித்து கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளது:

"அரசாங்கப் பள்ளிகளிலும் விவிலியநூலைக் கற்பிக்க வேண்டும் எனக் கல்கத்தா மேற்றிராணியார் வெல்டன், சென்ற ஞாயிறன்று நிகழ்த்திய சொற்பொழிவில் கூறியுள்ளார். அரசாங்க வருவாயிலிருந்து பராமரிக்கப்படும் கல்வி நிறுவனங் களில் அந்நிய மதம் ஒன்றைப் போதிப்பது என்பது, அந்த மதத்தைத் தழுவும்படி மக்களை அரசாங்கமே கட்டாயப் படுத்துவதற்கு ஒப்பானதாகும். இந்நாட்டுமக்களின் சமய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்னும் கொள்கையை இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இதுகாறும் கடைப் பிடித்து வந்திருக்கிறார்கள். இந்திய அரசின் ஆட்சித்தலை வர்கள் யாவரும் இந்தக் கொள்கைக்கு விரோதமாக நடப் பதற்கு இதுவரையில் மறுத்து வந்திருக்கிறார்கள். அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தில் (Religious Endowments Act) திருத்தம் செய்யவேண்டும் எனப் பொதுமக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தபோதிலும், அதுகுறித்து அரசினர் மௌனம் சாதித்து வந்தமை, மக்களுக்கும் நன்மை பயப்பதாக இருந் தாலும் சமய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற அரசினா ரின் போக்கை எடுத்துக்காட்டுவதாகும். மேலும், இந்திய மக்களின் மத விவகாரங்களில் இங்கிலாந்து அரசினரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ எந்த வகையிலும் தலையிட மாட்டார்கள் என்று பேரரசியாரின் 1858ஆம் ஆண்டுப் பிரகடனம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அவுரங்கசீப் போன்ற அரசர்கள் தங்களுடைய ஒரு சார்பான சமயக் கொள்கைளினால் தாங்களே அழிவைத் தழுவிக்கொண்ட தற்கும், அக்பர் போன்ற சமயப் பொறையும் சகிப்புணர்வும் கொண்ட பரந்த மனம் படைத்த பேரரசர்களின் கொள்கைகளி னால் அவர்களுடைய பேரரசு நிலையாகவும் வலுவாகவும் வளர்ந்து நீடித்ததற்கும் வரலாறு தக்க சான்று பகரும். மேற்றி ராணியார் வெல்டனின் ஆலோசனையைச் செயலாக்கினால், தற் பொழுது இந்தியாவில் ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கு மிடையே நிலவிவரும் சுமுகமான உறவு சீர்குலைந்துபோகும் என்று அஞ்சுகிறோம்."

**"இந்து"** பத்திரிகை தனது *18—2—1901*ஆம் தேதி இதழில் மேற்றிராணியார் வெல்டனின் கருத்துபற்றிக் குறிப்பிட்டு பின் வருமாறு எழுதியுள்ளது:

"இந்தியா இறுதியில் கிறிஸ்தவ நாடாகவோ அல்லது நாத்திக நாடாகவோ ஆகிவிடும் என்றும், நாத்திகத்திலிருந்து இந்நாட்டைக் காப்பாற்றுவதற்காகவே கிறிஸ்தவ சபையினர் பாடுபட்டு வருவதாக வும் அவர் (வெல்டன்) கூறியிருக்கிறார். எதிர்காலத்தில் இந்தியா எவ் வாறுமாறும் என்பதை ஊகிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை

உண்டு; இந்நாட்டைக் கிறிஸ்தவ மதம் ஆட்கொள்ளவேண்டும் என ஒரு கிறிஸ்தவர் ஆசைப்படுவதிலும் தவறில்லை. அரசாங்கத்தில் மிக உயர்ந்த மதபோதக அதிகாரி ஒருவர் அப்படி ஒரு ஊகத்தை வெளிப்படுத்தி இருப்பதில் வியப்பேதுமில்லை. ஆனால், டாக்டர் வெல்டன், இந்தியா கிறிஸ்தவ நாடாக வேண்டுமென்ற தனது விருப்பத்தைத் தெரிவித்ததோடு நில்லாமல், இந்தியாவில் கிறிஸ்தவத்தைத் தவிர வேறெந்த மதமும் இருக்கக்கூடாதெனத் திட்டவட்டமாக வலியுறுத்திக் கூறியிருப்பது வேதனைதருகிறது. “இந்தியாவைப் பிரிட்டனிடம் கர்த்தர் ஒப்படைத்திருக்கிறார்; இந்தியாவைப் பிரிட்டன் கர்த்தரிடம் ஒப்படைக்கும். இந்தியாவை கிறிஸ்தவ நாடாக மாற்றுவது, பிரிட்டிஷ் இனத்தவரிடம் ஆண்டவன் ஒப்படைத்துள்ள மகத்தான பொறுப்பு; கடமை’ என்று டாக்டர் வெல்டன் கூறியிருக்கிறார். இந்தக் கூற்றின் உட்பொருள் யாருக்கும் விளங்காமல் போகாது. இந்திய அரசாங்கத்தை அமைதியாக நிருவகிக்கும் பொறுப்புள்ள ஆட்சியாளர்களின் உள்ளத்தில் இத்தகையதொரு உள்நோக்கம் குடிகொண்டிருப்பதை அறியும்பொழுது வியப்பு உண்டாகிறது. இந்திய மக்கள் தங்களுடைய தொன்மைவாய்ந்த மதத்தை தங்களின் உயிருக்குயிராய் நேசிப்பவர்கள்; மதித்துப் போற்றுபவர்கள். வேறொரு அந்நிய மதத்திற்கு மாறுவது என்ற எண்ணமே அவர்களுக்கு பேரதிர்ச்சியை உண்டாக்கிவிடும். அவர்களை வெல்டனின் கூற்று எந்த அளவுக்குக் கடுமையாகப் பாதிக்கும் என்பதை அரசினர் நிச்சயமாக உணர்ந்திருக்கவேண்டும். இந்திய மக்கள் தங்களுடைய ஆருயிர் சமயத்தைப் பாதுகாப்பதற்காகத் தங்களுடைய சொத்து சுகங்களையெல்லாம் உதறி எறிந்தவர்கள்; நாட்டையே துறந்தவர்கள்; விலை மதிக்க இயலாத பொன்னையும் பொருளையும்கூடத் துச்சமென மதிப்பவர்கள். அந்நியர் படையெடுப்பினால் தங்கள் சமயத்திற்கு ஆபத்து ஏற்படும் என அறிந்த போது, அப்படையெடுப்பாளர்களை எதிர்த்துப் போரிடாமல், தங்கள் சமயத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய மக்கள் சொந்த நாட்டிலிருந்து தப்பியோடி அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். அத்தகைய ஆழ்ந்த சமய உணர்வுமிக்க மக்களிடம், ‘இந்தியர்களைக் கர்த்தர் பிரிட்டனிடம் கொடுத்திருக்கிறார்; அவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவது ஆங்கிலேயரின் கடமை’ என்று டாக்டர் வெல்டன் கூறுகிறார் என்றால், அதனால் எத்தகைய பயங்கரமான அரசியல் விளைவுகள் ஏற்படும் என்பதை அவர் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. இத்தகைய கூற்று எத்துணை அநியாயமானது; அறநெறிக்குப் புறம்பானது என்பதையும் அவர் நினைத்துப்பார்த்ததாகத் தோன்றவில்லை. இந்தியாவைக் கடவுள் இல்லாத நாடு என எண்ணிக்கொண்டு, இந்நாட்டைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுவதற்கு ஆங்கில ஆட்சியாளர்களிடம் ஆண்டவன் ஒப்படைத்திருப்பதுபோல் டாக்டர் வெல்டன் பேசியிருக்கிறார். ஆனால், அரசியல் தந்திரத்தினாலும், ஆயுதபலத்தினாலும்தான் ஆங்கிலேயர்கள் இந்நாட்டைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தார்கள் என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். ஆன்மீக வெற்றிகொள்ளும் உரிமை ஆங்கிலேயருக்கு ஆண்டவன் கொடுத்தது என்பது உண்மை

யானுல், படைபலம், பணபலம், அரசின் அதிகார பலம் ஆகிய வற்றைப் பயன்படுத்தி மதமாற்ற முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுதல் கூடாது. உலோக ஆயுத பலத்தின் துணைகொண்டு ஆன்மீக வெற்றிகளைக் கொண்டதாக உலக வரலாற்றில், குறிப்பாக இந்திய வரலாற்றில் சான்றுகளே இல்லை. கிறிஸ்தவம் இந்தியாவை இதுவரை வெற்றி காணவில்லை; இனியும் வெற்றிகாண இயலாது. 'இந்தியர்களின் சமயக் கோட்பாடுகளில் எவ்விதமான மாறுதலும் ஏற்படுத்தாத வகையில் இந்தியாவை பிரிட்டிஷ் அரசாங்கம் ஆண்டுவிடலாம் என இந்தியாவிலும், இங்கிலாந்திலும் உள்ள சில சிந்தனையாளர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறுர்கள். இந்திய மக்களின் இன்றைய வாழ்க்கைப்பற்றிய தெள்ளத்தெளிவான உண்மைகளை உணர்ந்துகொள்ள மறுப்பவர்கள்தான் இத்தகைய விந்தையான எண்ணத்திற்கு இடம் கொடுப்பார்கள்' என்று வெல்டன் கூறியிருக்கிறுர். தன்னுடைய விசித்திரமான கொள்கைகளுக்கும், ஒருநாளும் ஈடேருத நம்பிக்கைகளுக்கும் எதிரான கருத்துடையவர்களையெல்லாம் முட்டாள்கள் என்று வெல்டன் கருதிக்கொண்டிருக்கிறுர் என்பதைத்தான் அவருடைய இந்தக் கூற்று பிரதிபலிக்கிறது. ஒரு நாட்டை ஆளுகின்ற ஓர் இனம், அந்நாட்டுக் குடிமக்களின் வாழ்க்கை முறைகளையும், எண்ணங்களையும் ஓரளவு மாற்ற முடியும் என்பதை உணர்ந்துகொள்ள முடியாத அளவுக்கு நாம் முட்டாள்களல்ல. ஆனுல், வெல்டன் கூறுவதுபோல, ஆட்சியாளர்கள் மத மாற்றத்திற்குத் தங்கள் அதிகாரத்தை முழுமூச்சாகப் பயன்படுத்த வேண்டுமென அறிவுடைய எவரும் விரும்பமாட்டார்; வலியுறுத்தவும்மாட்டார்.''[1]

அக்கால விண்ணப்பங்களையும், பத்திரிகைகளின் கருத்துக்களையும் இன்றைய நிலையிலிருந்து நோக்கும்பொழுது, கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களின் நடவடிக்கைகள் பற்றிய அக்கருத்துகள் மிகைப்படுத்தப்பட்டனவாகத் தோன்றுகிறது. கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் கிறிஸ்தவ நிறுவனங்கள் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளை அக்கருத்துகள் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. எனினும், அக்காலத்தில் நிலவிய பொதுமக்கள் கருத்தின் தன்மையை அக்கருத்துகள் பிரதிபலிக்கின்றன.

### *கோயில் நிருவாக ஊழல்*

சமய நிறுவனங்களின் சொத்துக்களை நிருவகிக்கும் பொறுப்பேற்றிருந்தவர்கள், அச்சொத்துக்களைப் பலவழிகளிலும் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். இந்தப் பிரச்சினையும் மக்களின் கிளர்ச்சியைத் தூண்டும் முக்கியப் பிரச்சினையாக விளங்கியது. இதுபோன்ற ஊழல்களை எதிர்த்து அரசினருக்குப் பொது மக்கள் புகார் மனுக்கள் அனுப்பி வந்தார்கள். சுதேசிச் சங்கம் 1859ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு அளித்த மனு ஒன்றில் இந்த

1. Ibid., dated the 23rd Feb., 1901; pp. 76-77.

ஊழல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையங்களை அரசாங்கத்தின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவர வேண்டுமென சுதேசிச் சங்கம் அந்த மனுவில் வலியுறுத்தியிருந்தது.

"இந்து அறநிலையங்கள் சிலவற்றின் நிருவாகம் உள்ளூர் தர்மகர்த்தாக்களின் கையில் மாற்றப்பட்டிருக்கிறது. இன்னும் பலவற்றின் நிருவாகம் அவ்வாறே மாற்றப்படவிருக்கிறது. தர்மகர்த்தாக்களின் பொறுப்பில் அறநிலையங்களின் நிருவாகம் சீராக நடைபெறவில்லை. தர்மகர்த்தாக்களின் நிருவாகத்தின் கீழுள்ள கோயில் சொத்துக்கள், அரசாங்கமானியங்கள், தனிநபர்களின் நன்கொடைகள், உயில் சொத்துக்கள், பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகள் ஆகியவற்றைப் பொதுமக்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் வகையில் ஒரு சட்டத்தை இயற்றும்படி கல்கத்தா சட்டசபையிடம் வலியுறுத்தவேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். அறநிலையங்கள் சிலவற்றின் நிருவாகம் 19 ஆண்டுகளுக்கு முன்னர் தர்மகர்த்தாக்களின் பொறுப்புக்கு மாற்றப்பட்டது. அன்று முதல், கோயில் அறங்காவலர்கள், கோயில் நிதிகளைக் கையாடல் செய்து வருகிறார்கள். அவர்கள் கோயில் வருமானங்களைத் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கோயில் வருமானங்கள் குறித்துப் பொதுமக்களிடமோ அல்லது அரசினரிடமோ அவர்கள் எவ்விதக் கணக்கும் காட்டுவதில்லை. இத்தகைய பெரும் மோசடிகள் குறித்து பல சான்றுகளை அரசினரின் கவனத்திற்கு பல முறை நாங்கள் கொண்டு வந்துள்ளோம்; அத்துடன் இத்தகைய சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டுமெனச் சென்னை அரசினரிடம் நாங்கள் அடிக்கடி வலியுறுத்தியுள்ளோம்."[1]

கோயில் நிதிகளில் கையாடல்களும், மோசடிகளும், அளவுக்கு மீறிநடைபெற்றுவரத் தொடங்கவே, அவற்றைக் கட்டுப்படுத்தி கோயில்களின் நிதி நிருவாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கென 1863ஆம் ஆண்டில் சட்டம் ஒன்றை அரசாங்கம் இயற்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தச் சட்டத்திற்குப் பின்னரும் கோயில் நிருவாக ஊழல்கள் குறையவில்லை. எனவே, இவ்வூழல்கள் குறித்து அரசினருக்குத் தொடர்ந்து புகார் மனுக்கள் சென்றவண்ணமிருந்தன. இந்த மனுக்களை அரசுக்கு அனுப்புவதோடு பொதுமக்கள் நின்றுவிடவில்லை. இதுபற்றிக் கடுமையான சட்டங்களை இயற்றுவதற்கென பி. அனந்தாச்சார்லு போன்ற அரசியல் தலைவர்கள் பலர் தீவிர முயற்சி மேற்கொண்டார்கள். அறங்காவலர்களின் கணக்குகளை மேற்பார்வையிடவும், பொறுப்பின்றியும் தவறான முறையிலும் நடக்கும் அறங்காவலர்கள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கவும் அதிகாரம்கொண்ட குழு ஒன்றை அமைக்கும் வகையில் 1863ஆம் ஆண்டுச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யவேண்டுமெனக் கோரும் மசோதா ஒன்றை அனந்தாச்சார்லு கொண்டுவந்தார்.

---

1. Vide G. O. 1044, Public Department, dated 9th July, 1859; p. 7.

ஆனால், அனந்தாச்சார்லு போன்ற பெருந்தலைவர்களின் முயற்சிகளும் பயன்தரவில்லை. சமய விவகாரங்களில் தலையிட முடியாதென அரசாங்கம் பிடிவாதமாக மறுத்துவிட்டது. இறுதியில் அனந்தாச்சார்லு கூறிய திருத்தங்கள், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் ஏற்புடையனவாக இல்லாமையால், அவர் தம்முடைய திருத்த மசோதாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது. இதற்கு ஆந்திரபிரகாசிகா, சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்கள் வருத்தம் தெரிவித்து எழுதியிருந்தன.

ஆந்திரபிரகாசிகா தனது 24—3—1900ஆம் தேதி இதழில்,

"இந்தப் பிரச்சினை குறித்து வங்காளத்தில் மாறுபட்ட கருத்து நிலவியபோதிலும், சமய அறநிலையங்களைப் பாதுகாக்கவும், பழிபாவங்களுக்கு அஞ்சாத தருமகர்த்தாக்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் சட்டம் ஒன்று இன்றியமையாத தேவை எனத் தமிழக மக்கள் ஒருமனதாகக் கருதுகிறார்கள். எனவே அனந்தாச்சார்லுவின் மசோதவை இம்மாகாண மக்கள் ஒருமனதாக ஆதரிக்கிறார்கள். இம்மசேதாவை ஆதரித்துப் பல மனுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளும் ஒரே குரலில் இதை ஆதரித்து எழுதியுள்ளன. பல பொதுக்கூட்டங்களிலும் இம்மசோதாவுக்கு முழுமனதான ஆதரவு தெரிவிக்கப் பட்டுள்ளது. அப்படியிருந்தும், இம்மசோதாவுக்குள்ள ஆதரவு குறித்து மத்திய அரசாங்கம் ஐயம் கொள்வது விந்தையாக இருக்கிறது"

என்று குறிப்பிட்டுள்ளது.[1]

சுதேசமித்திரன் நாளிதழ் இந்தப் பிரச்சினைப்பற்றிக் குறிப்பிட்டு, "இந்திய அரசாங்கம் கூறும் வாதங்கள், சமய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையில் அதற்குள்ள உண்மையான ஆர்வத்தைக் காட்டுவதாக இல்லை. இந்தப் பிரச்சினையில் தனக்குரிய கடமையிலிருந்து தப்புவதற்காகவே, அரசாங்கம் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி வருகிறது. தங்களுடைய சமய விவகாரங்களில் அரசாங்கம் தலையிடவேண்டும் என இம்மாகாண மக்கள் ஒரு போதும் கோரவில்லை. கோயில் தேவஸ்தானங்களின் சொத்துகளைக் கையாடல் செய்வதிலிருந்து பாதுகாப்பதற்காக ஒரு சட்டத்தை இயற்றவேண்டும் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். சட்டப்படி உரிமை வயது அடையாதவர்களின் (Minors) சொத்துகளைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவரவில்லையா? அரசாங்கம் வாளா இருக்குமா? அப்போது அது தலையிடாமலிருக்குமா? நமக்குத் தேவையான சீர்திருத்தங்களை நாம் வலியுறுத்தும்போதெல்லாம், சமயத்தைக் காரணம் காட்டி அவற்றை இந்திய அரசாங்கம் நிராகரித்துக்கொண்டேயிருக்குமானால், இந்த நாட்டின் மக்களுக்கு ஏதேனும் நன்மை உண்டாகுமா? உடன்கட்டை ஏறுதல்

1. Newspaper Report (Confidential), 1900-pp. 99-100.

ஒரு சமயக் சடங்குதானே! அதைச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் ஒழிக்கவில்லையா?'' என்று வினா எழுப்பியிருந்தது.[1]

சமய விவகாரங்களில் தலையிடும்பொழுது ஓர் அந்நிய அரசாங்கம் எப்பொழுதும் அதிக முன்னெச்சரிக்கையுடன்தான் நடந்து கொள்ளும் என்பதை இங்கு நாம் நினைவில் கொள்ளவேண்டும். பொதுமக்களில் மிகச் சிறுபான்மையினர் எதிர்ப்புத்தெரிவித்தால் கூட, அரசாங்கம் தன்னுடைய தலையீட்டைத் தவிர்த்துவிடும். பக்தர்கள் பக்தி என்ற பெயரில் தங்கள் உடலை வதைத்துக்கொள்வதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன, சமயத் துறையில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் இருந்தன. ஆனால் அவை அனைத்தையும் பொதுமக்கள் வலியுறுத்தி வந்ததாகக் கூறமுடியாது. நாடு சுதந்திரம் அடைந்து, மக்கள் அரசுகள் அமைந்த பின்னர்கூட, பொதுமக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் தங்கள் விருப்பங்களைத் தெரிவித்து, ஆதரவு அளித்த பிறகுதான், சமயம் பற்றிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் துணிவதை நாம் இன்று கண்கூடாகக் காண்கின்றோம்.

1. Newspaper Report (Confidential), 1900-p. 99.

# SELECT BIBLIOGRAPHY


I தமிழ்

சோமலெ — தமிழ் இதழ்கள் (சென்னைப் பல்கலைக்கழகம், 1975)

பழநி. அரங்கசாமி — செய்தி உலகம் (மதுரை, 1975)

சேதுப்பிள்ளை R.P. (Ed) — பாரதியார் இன்கவித்திரட்டு, (சென்னை, 1957)

சுவாமிநாதசர்மா — நான்கண்ட நால்வர் (சென்னை, 1959)

II English :

(*A*) *OFFICIAL RECORDS: PRINTED BUT UNPUBLISHED*:

G.O. Public Department

G.O. Revenue Department

G.O. Judicial Department

C.I.D. Report (Secret)

Newspaper Report (Confidential)-weekly, fortnightly and monthly from the year 1878.

(*B*) *OFFICIAL PUBLICATIONS* :

*The Imperial Gazetteer of India*—Provincial Series, Vols I and II (Madras)

*Census of India*, 1901, Vol. XV, Madras, Part I

Government of India—*Rowlatt Sedition Committee Report*, 1918

Government of India—*Report on Indian Constitutional Reforms*, 1918

Government of India—*Report of the Indian Statutory Commission* Vol. I, 1930.

*Madras District Gazetteers*

*Madras Famine Code*, 1904.

*Madras District Manuals*

Arbuthnot, A.J. — *Selections from the Minutes of Sir Thomas Munro* (Madras, 1886)

Baliga, S., Dr. — *Studies in Madras Administration, Vols. I and II* (Madras, 1960)

— *Tanjore District Hand Book.*

Love, H.D. — *Vestiges of Old Madras,* Vol. III (London, 1913)

Maclean, C.D. — *Standing Information Regarding the Official Administration of the Madras Presidency* (Madras, 1879)

Richey, J.A., — *Selections from Educational Records* —Part II-1840-1859 (Calcutta, 1922)

Sharp, H. — *Selections from Educational Records* Part I, 1781-1839 (Calcutta, 1921)

Srinivasa Raghavaiyyangar — *Memorandum on the Progress of the Madras Presidency during the last forty years of British Administration* (1850-1890) (Madras, 1893)


(*C*) *GENERAL*


Annie Besant, Mrs. — *How India wrought for Freedom?*

Banerjea, Surendranath — *A Nation in Making* (Madras, 1925)

Basu, B.D. — *The ruin of Indian Trade and Industries* (Second Edition, Calcutta)

Boag, G.T. — *Madras Presidency*: 1881 - 1931 (Madras, 1933)

Bryce, J — *Modern Democracies,* Vols. I & II (London, 1923)

Buchanan, F. — *A Journey from Madras through the countries of Mysore, Canara and Malabar,* Vol. I (Madras, 1870)

Chintamani, C.Y. (Ed) — *Indian Social Reform* (Madras, 1901)

Dubois, A. — *Hindu Manners, Customs and Ceremonies* translated by Henry K. Beauchamp (Oxford, 1897)

Gopalaratnam, V.C. — A *Century Completed* (Madras, 1962)

Lippman, W. — *Public Opinion* (London, 1922)

Lovett, V. — *A History of the Indian National Movement* (London, 1920)

Natesan, G.A. (Ed) — *Indian Politics* (Madras, 1898)

Parameswaran Pillai, G. — *Representative Indians* (Worcester, United Kingdom, 1897)

Ruthnaswamy, M. — *Some Influences that Made the British Administrative System in India* (Madras, 1939)

Ranchhodas, R and Thakure, D. K. — *Indian Penal Code,* 12*th edition* (*Bombay*, 1930)

Sathianathan, S. *History of Education in the Madras Presidency* (*Madras*. 1894)

Satischandra Ray — *Economic causes of Famine in India* (*Calcutta,* 1909)

Sethu Pillai, R. P. (ed.) — *Bharatiar inkavi Thirattu* (Tamil), (*Madras*, 1957)

Singh, G. N. — *Landmarks in Indian Constitutional and National Development* (1600 1919), (*Calcutta*, 1933)

Srinivasachari, C.S. — *History of the City of Madras* (*Madas*, 1939)

-do- — *Social and Religious Movements in the Nineteenth Century;* (*Bombay*, 1947)

Swaminatha Sarma, V. — *Nan Kanda Nalvar* (Tamil) (*Madras*, 1959)

Thompson and Garratt — *Rise and Fulfilment of British Power in India* (*London*, 1935)

Thurston, E. — *Caste and Tribes of South India, Vol. II* (*Madras*, 1909)

Venkataraman, T. K. — *The Manual of Indian History, Vol. II* (*Madras*, 1962)

Venkata Rangayya — *The beginnings of Local Taxation in the Madras Presidency* (*Bombay*, 1928)

-do- — *Development of Local Boards in the Madras Presidency* (*Bombay* 1938)

Wedderburn, W. — *Allan Octavian Hume* (*London*, 1915)

Edwin R. A. Seligman (ed.) — *Encyclopaedia of the Social Sciences, Vols. XI and XII* (*New York*, 1951).

William Digby — *The Famine Campaign in Southern India, Vol. I* (1878).

(d) Journals and Periodicals, etc.:

*The American Review*, *January*, 1961.

*Asiatic Review*, *January*, 1932.

*The Madras High Court Centenary Volume* (1962)

*The Madras Maha Jana Sabha Diamond Jubilee Souvenir* (1946)

*Madras Tercentenary Commemoration Volume — Oxford University Press.*

*Madras Year Book*, 1923.

*Madras Year Book*, 1924.

# சொல் அகராதி


அ

அக்பர், 200
அடிசன், 11
அமிர்த பஜார் பத்திரிகா, 95
அயர்லாந்து 12
அவுரங்க சீப்பு 200
அறநிலைய பாதுகாப்புச் சட்டம், 200
அறிவுடை நம்பி, 9, 10
அன்னி பெசன்ட், 11. 47, 85
அனந்தாச் சார்லு, பி. 26 41, 48, 49, 166, 167, 175, 203, 204

ஆ

ஆங்கிலேயர் 14
ஆங்கிலோ-இந்தியர் சங்கம், 160
ஆங்கிலோ-இந்தியர்-ஐரோப்பியர் பாதுகாப்புச் சங்கம், 44
ஆடம்சன் திட்டம், 120
'ஆந்திர பிரகாசிகா', 204
ஆபி துாபாய், 180
ஆம்ஃபில் பிரபு, 117
ஆமெர்ஸ்ட் பிரபு, 92
ஆயுதச் சட்டம், 43, 73
ஆர்கைல் கோமகன், 121, 122
ஆர்ச்பால்கு காம்ப்பெல், சர். 189
ஆர்தர் காட்டன், சர், 129
ஆரிய சமாஜம், 17, 156. 157
ஆல்ஃபிரட் வெப், 61
ஆல்க்காட், எச். எஸ், கர்னல் 158
ஆல் பிரட் சார்ட்டர்ட்டன், 148, 149
ஆலன் ஆக்டேவியன் ஹியூம், 47
ஆனந்த், சி. எல். 21
ஆனந்த் மோகன் போஸ், 62
ஆஷ் துரை, 79

இ

இங்கிலாந்து, 11, 16
இட்லர், 11
''இந்திய அரசியல்'', 57
இந்திய ஊழியர் சங்கம், 17, 171
இந்திய தேசியக் காங்கிரசு, 17, 26, 40, 43, 49, 114, 158
'இந்தியா', 97
'இந்து', 40, 85, 88, 89, 95, 97, 117, 150, 151, 152, 200
இந்துச் சீர்திருத்தச் சங்கம், 179
'இந்து சமித்திரா', 125
'இந்து ஜன பூஷனி', 173
இப்பெஸ்டான், டி. சி. 102
இயக்கப் பொதுமக்கள் கருத்து, 3
இரத்தினசாமி, எம். 14, 189
இரகுநாத ராவ், திவான்பகதூர், 46
இரணியன், 13
இராசராச சோழன், 177
இராம கிருஷ்ண சங்கம், 157, 158
இராம கிருஷ்ண பரம ஹம்சர், 157
இராம கிருஷ்ண நற்பணி மன்றம், 17
இராமச்சந்திர ஐயர், ஏ, 88
இராமசாமி ஐயர், சர். சி. பி. 68
இராமசாமி முதலியார், சேலம், 55, 56
இராவணன், 78
இராஜ கோபாலாச்சாரியார், சக்ரவர்த்தி, 188
இராஜலட்சுமி அம்மையார், 168
இருக்கு வேதம், 166
இல்பர்ட், 44
இல்பர்ட் மசோதா, 43, 44
இலண்டன் பல்கலைக் கழகம், 22

ஈ

ஈசுவர சந்திர வித்யாசாகரர், 167, 170, 172
ஈழவர், 183

உ

உச்ச நீதிமன்றம், 35
உரோமப் பேரரசு, 16

எ

எட்கார் தர்ஸ்ட்டன், 177
எட்வார்டு லா, 136
எத்திராஜ சுரேந்திரநாத் ஆர்யா, 78
எர்ட்லி நார்ட்டன், 55, 62
எல்லன்பரோ பிரபு, 199
எலிசபெத் அரசி, 61

ஏ

ஏ. எல். முதலியார், 21

ஐ

ஐக்கியக் கழகம், 108
ஐதராபாத் நிஜாம், 14
ஐரோப்பியர் சங்கம், 160
ஐரோப்பிய வரலாறு, 16

க

'கமர்சியல் சர்குலேட்டர்', 87
கர்சான் பிரபு, 59, 65, 117, 136, 141
'கர்நாடகப் பிரகாசிகா', 172
கல்காட்கர், டபிள்யூ. எம். 169
கலைக்களஞ்சியம், 157
'கவர்ன்மென்ட் கெசட்', 87
கன்னிமரா பிரபு, 54, 57
கஸ்தூரிரங்க ஐயங்கார், 88

கா

காசிம்-உல்–அக்பர், 111
காசுலு இலட்சுமிநரசு செட்டி, 26, 28, 29, 41, 88
காஞ்சிபுரம் கோயில், 177
காந்தியடிகள், 13, 188
காப்ரியல் ஸ்டோக்ஸ், 116
கார்ராட், ஜி. டி. 46
கார்ன்வாலிஸ் பிரபு, 100, 113
கானிங் பிரபு, 93, 94

கி

'கிரசன்ட்', 27, 88
கிராண்ட் ட.ஃப், சர் 54
கிருஷ்ணசாமி ஐயர், வி. 68, 118
'கிருஷ்ணப் பத்திரிகா', 71
கிலே, சி. எச் 87
கிழக்கிந்திய வாணிகக் குழு, 14, 15, 16
கிறிஸ்தவ இளம் மகளிர் சங்கம், 160
கிறிஸ்தவ இளைஞர் சங்கம், 159
கிறிஸ்தவ நற்பணி மன்றம், 23

கு

குடவோலை, 34
குமாரன் ஆசான், 182, 183
குருஜாடா வெங்கட அப்பாராவ், 170
குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம், 78
குற்றவியல் நடைமுறைச்சட்டம், 43

கெ

கெயித், எ. பி 32
கெயின், டபிள்யூ. எஸ். 186, 187

கே

'கேரள சஞ்சாரி, 173
கேரளப் பத்திரிகா', 96

கோ

கோப்பெருஞ் சோழன், 9
கோபால கிருஷ்ண கோக்கலே, 17, 68, 156, 171
கோபாலரத்னம், வி. சி. 55
'கோமாளி', 173
கோல்டிங்காம், 87

ச

சங்கம், 10
சங்கரன் நாயர், சி. 61, 62
'சசி லேகா', 60
'சஞ்சீவினி', 168
சட்ட மன்றம், 8
சண்டாள பிக்ஷுணி, 183
சத்தியாக்கிரகம், 13,
சந்தா வர்க்கார், என். ஜி. 179
சப்பாத்தி (பூ), 12, 13
சமூக ஒப்பந்தம், 11

சா

சாசனச் சட்டம், 21
சாண்டர்ஸ், 190
சாண்டாளர், 180
சாமுவேல் ஸ்மித், 186, 187
சார், 12
சார்லஸ் ஆயிட்சிசன், சர், 109
சார்லஸ் ஆர்னல்கு ஒயிட், சர், 76
சார்லஸ் உட், சர், 31
சார்லஸ் கிராண்ட், 21

சார்லஸ் டிரவிலியான், சர், 122, 125
சார்லஸ் மெட்கா.ஃ.ப், சர், 92, 93

சி

சிங், ஜி. என். 67
சிதம்பரம் பிள்ளை, வ. உ. 69, 74, 76, 77, 79, 148, 149, 150, 152,
சிந்தாமணி, சி. ஒய், 158, 159 164, 174
சிவா, 75, 76, 77

சீ

சீதை, 78
சீனிவாச ஐயங்கார், எம். 97
சீனிவாச சாஸ்திரியார், வி. எஸ். 171
சீனிவாச ராகவையங்கார், எஸ். 122, 136, 140
சீனிவாசாச்சாரி, சி. எஸ். 140

சு

'சுதேசப் பொது மக்கள் கருத்து', 54
'சுதேசமித்திரன்', 40, 45, 50, 58, 72, 89, 97, 123, 171, 200, 204,
'சுதேசாபிமானி', 95
'சுதேசிப் பொதுக் கருத்து', 88
சுப்பாராவ், என். 67
சுப்பாராவ் பந்துலு, என். 61
சுப்பிரமணிய ஐயர், எஸ், திவான் பகதூர் 110
சுப்பிரமணிய ஐயர், ஜி. 26, 39, 40, 49, 63, 97, 163, 167, 184
சுப்பிரமணிய ஐயர், எஸ். 47, 49, 50
சுப்பிரமணிய சிவா, 69, 70, 76
சுப்பிரமணிய பாரதியார், சி. 71, 72, 73, 162, 164, 168, 181
சுரேந்திரநாத் பானர்ஜி, 40, 68, 102, 107.

செ

செம்ஸ்போர்டு பிரபு 83
சென்னை ஆதி திராவிடர் மகாஜன சபை, 160
சென்னை சுதேசிச் சங்கம், 17, 26, 40, 41
சென்னை மாகாணம், 13, 14
சென்னை மகாஜன சபை, 17, 39, 40, 41, 43, 55
சென்னை ஜன சங்கம்
சென்னைப் பல்கலைக்கழகம், 53
செஸ்னி, தளபதி, 109

சே

சேலிக்மான், ஆர், ஏ. 7
சோழர் காலம், 34

ட

ட.ஃ.பரின் பிரபு, 57, 58, 105
டட், ஆர். சி. 129, 131
டல் ஹௌசிப் பிரபு, 167
டாட்வெல், 99
டுவீடேல் பிரபு, 196
டெலாங், கே. டி. 50

த

தயானந்த சரசுவதி, 156
'தரங்கை நேசன்', 199
தனகோடிராஜூ நாயுடு 78

தா

தாக்கோஜி ராவ் ஹோல்கார், 53
தாதாபாய் நௌரோஜி, 50
தாம்சன், இ. 46
தாம்சன், ஜே. 116
தாமரைப் பூ, 12
தாமஸ் மன்ரோ, சர், 30, 91, 92, 100, 190, 191

தி

''திதிஷ-ஒ'', 166
திப்பு சுல்தான், 89
திருமதி பிரபு, 99

தீ

தீடர்கள், 180

து

துரவஸ்தா, 183

தெ

தென்னிந்திய ஆங்கிலோ இந்தியர் சங்கம், 160
தென்னிந்திய முகமதியர் கல்விச் சங்கம், 160

தே

தேசிய நிதி மற்றும் தொழில் சங்கம், 150
தேவதாசி முறை, 175
தேவாலய நற்பணிக் கழகம், 192

தொ

தொல்காப்பியம், 10, 161

ந

நடேசன், ஜி. ஏ. 42, 57

நா

நாட்டு மொழிப் பத்திரிகைச் சட்டம், 43
நாகேந்திரா, டாக்டர், 73
நாப், ஏ. ஆர். 116
நார்த்புருக் பிரபு, 101, 102
நாராயண மேனன், வள்ளத்தோல், 183
நாஞபர்ஞவிஸ், 90

நி

நிக்கல்சன், 135, 146
'நியூ இந்தியா', 97
நிலவளக் கடன் உதவிச் சட்டம், 134
நிலைத்த பொதுமக்கள் கருத்து, 3

நீ

நீலகண்ட சாஸ்திரி, கெ. ஏ. 34
நெடுஞ்செழியன், இரா. 188

ப

பச்சையப்பன் அறநிலையம், 30
பட்டாபி சீத்தாராமையா, 48, 61, 88
பண்டார்க்கர், ஆர். ஜி. 156
பத்திரிகைக் குற்றத்தூண்டல் தடுப்புச் சட்டம், 96
பத்ருதீன் தியாப்ஜி, 52
பதியிலார், 177
"பரபுருவா", 166
பரமேசுவரன் பிள்ளை, ஜி. 28
பறையர்கள், 180
பறையன், 109
பக்ஷிமா தாரகா, 96

பா

பாசு, பி. டி. 23
பாட்ரோ, ஏ. பி. 35
பாபு சுரேந்திரநாத் பானர்ஜி, 107
பார்த்தசாரதி கோயில், 190
பால கங்காதர திலகர், 66
பாலிகா, எஸ். 30
பானர்ஜி, டபிள்யூ. சி. 57
பானர்ஜி, ஏ. சி. 57, 58

பி

பிசிராந்தையார். 9, 10, 18
பிரகதீசுவரர் கோயில், 177
பிரகலாதன், 13
பிரபு, எஸ். எஸ். 99
பிரம்ம சமாஜம், 17, 78, 156, 178, 179
பிரம்மஞான சபை, 46, 158
பிராண்டிஸ், டாக்டர், 131
பிரார்த்தனு சமாஜம், 17
பிரான்ஸ், 11
பிரிட்டிஷ் இந்தியர் சங்கம், 27
பிரஞ்சுப் புரட்சி, 11
பிரைஸ் பிரபு, 2, 3
'பிலிப்ஸ் டேவிசன், டபிள்யூ. 4, 5
பிளன்ட், டபிள்யூ. எஸ். 40
பிளவாட்ஸ்க்கி அம்மையார், 158
பின்ஹே. ஏ. எ∴ப். 75

பு

புக்கானன், எ∴ப். 177
"புனர்பூ", 166

பூ

பூர்டில்லான். 131

பெ

பெயர்கு ஸ்மித், 129
பென்ட்லாண்டு பிரபு, 171

பே

பேய்ன்ஸ், சி. ஆர். 193

பொ

பொதுமக்கள் கருத்து, 1, 6, 7, 8, 11, 13, 18,

போ

போலியர்கள், 180

பௌ

"பௌனர்பவா", 166

ம

'மக்கள் நண்பன்', 88
மக்கே தோட்டம், 52
மக்டோனல்டு, 136
மகாத்மா காந்தி, 11
மகாதேவ கோவிந்த ரானடே, 156
மகாதேவன், 177

மகாபாரதம், 162, 163
மகாஜன சபை, 102, 103, 104 105
மண்டோதரி, 78
'மதராசி', 88
மர்.:.பி, டாக்டர், 194
மன்ரோ பிரபு, 19, 20
மன்ரோ, ஜே. எச். 19, 20, 97
மனு, 163

மா

மாக்கியவல்லி, 7
மாடிக்கர்கள், 180
மாதவராவ், டி. ராஜா சர். 53, 54, 88, 159
மார்க் கப்பான், சர். 31
மார்லிப் பிரபு, 80, 82, 83
மாலர்கள், 180
மான்டேகு, 83
மான்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கை, 84
மாஜினி, 73

மி

மில்லர், எல். வி. 76, 78
மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள், 81

மு

முசோலினி, 10
முல்ஹர் ராவ் கெய்க்வார், 54
முஸ்லிம் பள்ளி, 192
முஸ்லிம்கள், 51

மெ

மெக்காலே பிரபு, 20, 21, 22, 92
மெக்லீன், சி. டி. 130
மெட்ராஸ் கூரியர், 87
மெட்ராஸ் கெசட், 87
மெட்ராஸ் மெயில், 88, 89
மெட்ராஸ் டைம்ஸ், 88

மே

மேயோ பிரபு, 36
மேரி அரசி, 143

ய

யஜ்ஜிய வல்கியர், 175

ர

ரகுநாதராவ், ஆர். 47, 159
ரங்கநாத முதலியார், திவான் பகதூர், 88
ரங்கைய நாயுடு, பி. 26, 41, 47, 49, 55, 61, 108
ரமேஷ் தத், 86
ரஷ்யா, 12

ரா

'ராய்ஃபெய்சென்', 136
ரானடே, 145, 159
ராஜாராம் மோகன் ராய், 156, 184
'ராஷ் பிகாரி கோஷ், 66

ரி

ரிச்சர்டு ஸ்டிராச்சி, சர், 140
ரிப்பன் பிரபு, 23, 37, 44, 56, 96

ரு

ரூசோ, 11

லா

லால் மோகன் கோஷ், 63
லாலா லஜபதிராய், 66

லி

லின்டன் பிரபு, 94, 105, 111, 112
லியாஸ், சர். ஜே. பி. 141

வ

வந்தே மாதரம், 71
வரதராசனார், மு 73
வள்ளுவர், 162
வ. வே. சு. ஐயர், 73

வா

வாச்சா, டி. இ. 64, 68
வாரன் ஹேஸ்டிங்ஸ், 113
வால்ட்டர் எலியட், 193
வால்ட்டர் லிப்மேன் 1

வி

விக்கிர மாதித்தன், நான்காம். 177
விசுவநாத ஐயர், கெ. பி. 88
விஞ்ச் துரை, 151
விதவை மறுமணச் சட்டம், 167
விபின் சந்திர பாலர், 70, 71, 76, 79
'விருத்தாந்த சிந்தாமணி' 172
வில்லியம் உர்க்கர்ட், 87
வில்லியம் பெண்டிங் பிரபு, 20, 22
வில்லியம் திக்பி, 139
விவசாயிகள் கடன் உதவிச் சட்டம், 134
'விவேகவர்த்தனி' 112
விவேகானந்தர், சுவாமி, 157
'விஜயராகவாச்சாரியார், சேலம். 26, 39, 40, 49, 55

விரேசலிங்கம், 167, 168, 170
வில்லியம் பென்டிங்க் பிரபு, 92

வெ

வெடிமருந்துச் சட்டம், 73
வெங்கடராமன், டி. கே. 148
வெல்டன், மேற்றிராணியார், 200
201, 202
வெல்லெஸ்லி பிரபு, 89, 90
வென்லாக் பிரபு, 178

வே

வேல்ஸ் இளவரசர், 178

ஜ

'ஜல்வா-ஐ-சகுன்', 52

ஜா

ஜார்ஜ் ஹாமில்ட்டன் 115
ஜான் ஆடம், 55
ஜான் ஆடம்ஸ், 92
ஜான் டேவிட் நார்ட்டன், சர் 29
ஜான் புரூஸ் நார்ட்டன், 29
ஜான் லாரன்ஸ், சர். 195, 197

ஜே

ஜேம்ஸ் வில்சன், 121, 125
ஜோன்ஸ், 5

ஸ்

ஸ்டான்லி பிரபு 191
ஸ்டீல், 11
ஸ்பெக்டாக்குலர், 88
ஸ்மிருதி, 180
''ஸ்வாய்ரினி'', 166
ஸ்வி.ஃ.ப்ட், 11

ஷ

'ஷாம்ஸ் — உல். அக்பர்', 45, 70
ஷார்ப், எச். 22

ஹ

ஹர்பிலாஸ் சாரதா, ராவ் சாகிப்,
174
ஹார்வி ஆடம்சன், சர் 120
ஹாரிஸ் பள்ளி, 192
ஹாரிஸ் பிரபு, 114, 191, 192, 193,
194, 195
ஹித்தாகரின் சமாஜம், 168
ஹியூம், 48
ஹெர்பர்ட் பால், 106
ஹென்றி காட்டன், சர் 144
ஹேஸ்டிங்ஸ் பிரபு, 90, 92
ஹோபர்ட் பிரபு, 189, 190
ஹோலியர்கள், 180